ஸ்ரீ

மஹாபாரத விளக்கவிடை

(முதல் பாகம்)

ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக
பர்வங்களடங்கியது

மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல்
முதல் உதவிபோதகரான
ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி. ஏ., எல். டி.
அவர்கள் இயற்றியது.

(Approved by the Text-Book Committee.)

சென்னை:
வி. ராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்
292, எஸ்பிளனேட்.
1933

All Rights Reserved.

ஸ்ரீ மஹாபாரத வசனம்

பாரதப் பிரசங்கி யென்று பெயர் பெற்றவரும் வித்வச்சிரோமணி யெனச் சிறப்புற்றவருமாகிய தி. சண்முகக் கவிராயரவர்கள் இயற்றியது. பாலவிநோதினிப் பத்திரிகாசிரியர், வாகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி யவர்களால் பரிசோதிக்கப் பெற்றது. நல்ல உயர்ந்த இலேஸ் காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்[illegible]. இதுவரையில் இதுபோன்ற பதிப்பு வெளிவந்ததே யிடையாது. சாலைக்கும் லைப்ரெரிக்கும் உபயோகப்படக்கூடிய சிறப்புடைய[illegible] கெட்டி கலிகோ பயிண்டு செய்தது.

பாரதம் இதிகாஸத்தினமென்றும் ஐந்தாவது வே[illegible] றும் புகழத்தக்க பெருமை யுடையதென்றும் அதிலில்லாத [illegible] கிடையா வென்றும் ஆஸ்திக புத்தியைக் கொடுத்து ஒழுக்கத்[illegible] நிறுத்தக்கூடிய போதனைகளை அளிக்கக்கூடியதென்றும் பெ[illegible] களால் கொண்டாடப்படுவ தாகையினால் தமிழ் நாட்டில் ஒவ்[illegible] வருடைய வீட்டிலும் மக்கள் கையில் பூஷணமாக விளங்க[illegible] யது மிகவும் அவசியமாகும்.

ஆதிபர்வம்	3	0
சபா, ஆரண்ய, விராடபர்வங்கள்	5	0
உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண, சல்ய, சவுத்திகபர்வங்கள்	5	0
ஸ்ரீ, சாந்தி, அநுசாசனிக, அசுவமேத, ஆசிரமவாச, மௌசல, மகாப்ரஸ்தானிக, சொர்க்காரோ ஹண பர்வங்கள்	5	0
இவ் வால்யூம்களை சேர்ந்தாற்போல் ஒரேகாலத்தில் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா	17	0

ஸ்ரீமத் பகவத்கீதை

இதின் பிரபாவம் சொல்லாமலே விளங்கும். ஸ்ரீகிருஷ்[illegible] வானுல் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்ட இக்கீதா ரகஸ்[illegible] ஒவ்வொருவரும் எளிதில் வாங்கி, படித்து, அறிந்து, பக்திமே[illegible] ஸ்ரீ பகவானுடைய அநுக்கிரஹத்தை யடைய வேண்டி இப்[illegible] கத்தை வெளியிட்டுள்ளோம். நாகரி, தமிழ் லிபிகளில் மூலமுடனும், ஒவ்வொரு சுலோகத்திற்கும் தனித்தனியே தமிழில் சரியான உரை யுடனும் கூடியது. காலிகோ பயிண்டு செய்துள்ளது. விலை ரூ. 0-12

சங்கீத அப்யாசிகளுக்கும் உபாத்யாயர்களுக்கும் முக்கிய உதவி

வர்ணமாலிகை அல்லது தானவர்ணங்கள்

ராகக்குறிப்புகளுடன் கி. ராமசந்திரன், எம். ஏ.,
அவர்களால் இயற்றப்பட்டிருக்கிறது விலை ரூ. 0—12—0

பாரத மஹாபாரத விளுவிடை

(முதல் பாகம்)

ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக
பர்வங்களடங்கியது

204

மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல்
முதல் உதவி போதகரான
ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி. ஏ., எல். டி.
அவர்கள் இயற்றியது

(Approved by the Text-Book Committee)

சென்னை
வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்
292, எஸ்பிளனேட்
1933

All Rights Reserved.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1774
நன்கொடை எண்: 1774

PRINTED BY
V. RAMASWAMY SASTRULU & SONS,
AT THE 'VAVILLA' PRESS,
Madras—1933.

அவ்வை தி.க. சண்முகம் நூல்
நூல் வரிசை எண்: 1774
நன்கொடை எண்: 1774

முதற்பதிப்பு முகவுரை

வினவிடை ரூபமாகப் பாரதம், பாகவதம் ஆகிய இவைகளை எழுதுவதாக தீர்மானித்து, முதலில் சிறந்ததும், ஐந்தாம்வேதம் என்று பெயர் பெற்றதுமாகிய மஹாபாரதம் வெளியிடப்பட்டிருக்கிறது. பாரதத்தை மூன்று பாகமாக எழுதுவதாகத் துணிந்து இப்புத்தகத்தில் முதல்ஐந்து பர்வங்கள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு முன் எழுதப்பட்டுள்ள பீடிகையில், மஹாபாரதம் வெளிவந்தமாதிரி, பர்வங்களின் ஸாரம் முதலிய மஹாபாரதத்தைப் பற்றிய பொது விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இவ்வாறு பாரதம் முதலிய நூல்களை எழுதத் துணிந்ததற்குக் காரணம் பின்வருமாறு. வெகு நாளாக என்மனதில் சிறுவர்களும் எளிதில் உணரும்படியாக, பாரதம் முதலியவைகளை தமிழில் எழுதவேண்டும் என்ற ஒரு ஆவலிருந்தது. இதற்கு முன்பாக அச்சிட்டு வெளிவந்திருக்கும் பாரதம் முதலியவைகள் வெகுவாக விரிந்தும், வர்ணனை முதலியவைகள் நிறைந்தும் இருக்கின்றன. அவைகளிலிருந்து சிறுவர்கள் கதைகளின் ஸாரங்களை எளிதில் அறிவது கஷ்டம். மேலும், ஆதிபர்வம், உத்தரகாண்டம் முதலிய உற்பத்திகளைச் சொல்லும் பாகங்களில் சிறுவர்கள் படிக்காத வர்ணனைகளும் கதைகளும் இருக்கின்றன. ஆகவே இவைகளை விட்டுவிட்டு முக்கியமான விஷயங்களைமாத்திரம் தொகுத்து எழுதவேண்டியது எனக்கு அவசியமாகத் தோன்றியது. இவைகளை வேண்டியபடி தொகுத்து எளிய வசன ரூபமாக எழுதலாமா என்ற யோசனை வந்தபொழுது, அவ்வாறு எழுதத் தொடங்கினால் இவை மிக விரியும் என்று எண்ணி ஸாதாரண வசன ரூபமாக எழுதுவதிற் பயனில்லை என்று விட்டுவிட்டேன். இவ்வாறு இவைகளை எழுதும்வகை அறியாது இருக்கையில், ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி மானேஜர் ம-ரா-ரா-ஸ்ரீ திருநெல்வேலி ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் இயற்றப்பட்ட இராமாயண வினவிடையின் 'புரூப்' காகிதங்களை என்னிடம் கொடுத்து அவை

களைத் திருத்தும்படி சொன்னார். அந்த விஞ்விடையில் யுத்த காண்டம் முடியத்தான் இருந்தது. அப்பொழுது உத்தர காண்டத்தையும் நான் விஞ விடை ரூபமாகச் செய்து இராமாயண விஞ விடையைப் பூர்த்தி செய்வதாக ஒப்புக்கொண்டு அவ்வாறே செய்தேன். நான் எழுதிய உத்தரகாண்டத்தோடு அந்த இராமாயண விஞ்விடை வெளி வந்தது.* பாரதம் முதலியவைகளை எழுத ஆவல்கொண்டிருந்து, சுருக்கமாய் எழுதும் வழி தெரியாது மயங்கிக் கொண்டிருந்த எனக்கு உத்தரகாண்டம் எழுதிமுடித்ததும், பாரதம் முதலியவைகளையும் விஞ விடை ரூபமாகவே எழுதலாம் என்ற துணிவு பிறந்தது. இதற்குள் பாரதத்தை விஞ விடைரூபமாக எழுதினால் சுலபமாய் இருக்கும் என்று குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் தூண்ட இதை எழுதத் தொடங்கினேன்.

விஞ விடை ரூபமாய்க் கதைகளை எடுத்துச் சொல்லுவதில், சிறுவர்களுக்கு இரண்டுவிதப் பிரயோஜனங்கள் உண்டு. சிறுவர்களது மனத்தை மாற்றி ஸாரத்தை அறியவொட்டாது தடுக்கும் வர்ணனை முதலிய பாகங்களை விஞ விடையில் விட்டுவிடலாம். ஆகையால் இந்த ரூபமாகக் சொல்லும் கதையின் ஸாரத்தை, சிறுவர்கள் எளிதில்அறிய இடமுண்டு. மேலும், விஞ விடைரூபமாக ஒருகதையைச் சொல்லுங்கால் சிற்சில விடங்களில் கதையைத் தலைகீழாகச் சொல்லும்படியாக நேரிடும். அதில் முக்கிய விஷயங்கள் முன்னுகவும் மற்றைய விஷயங்கள் பின்னுகவும் வரும். இந்தரூபமாக ஒரு கதையைப் படித்த சிறுவனுக்கு ஒழுங்காக அக்கதையைச் சொல்லும் திறம் வந்துவிட்டால அவன் அக்கதையையும், அதன் முக்கிய பாகங்களையும் ஒருநாளும் மறக்கவேமாட்டான். விஞ விடை ரூபமாகப்படித்த கதையை ஒழுங்காக மாற்றிச்சொல்வது சிறுவர்களது மனதை ஒழுங்குப்படுத்தும் ஒரு சிறந்த அப்பியாஸமாகும். இந்த ரூபமாகக் கதைகளை எழுதுவதில் இவ்

---

*உத்தரகாண்டத்தைப்போல் மற்றைய காண்டங்களும் விஸ்தாரமாக எழுதப்பட்டு இராமாயண விஞ விடையின் மூன்றும் பதிப்பு கூட வெளிவந்திருக்கிறது.

விரண்டு உபயோகங்கள் இருப்பதால்தான் எனக்கு இவ்வாறு பாரதம் முதலிய கதைகளை எழுதுவது நலம் என்ற உறுதி உண்டாயிற்று.

இந்த உறுதியோடு எழுதி வெளியிட்டிருக்கும் இப்புத்தகத்தில் சொற்குற்றம் பொருட்குற்றம் இருப்பினும் இருக்கும். அவைகளில் பெரும்பிழையாய்த் தோன்றுபவைகளை இரண்டாம் பதிப்பிற்கு ஸகாயமாகும்படி செய்யும் அன்பருக்கு நான் எக்காலத்தும் நன்றியறிதல் உடையவனாய் இருப்பேன். இப்புத்தகம் சிறுவர்களுக்கு ஆனந்தததை விளைவிக்குமாயின், யான் எந்த எண்ணத்தோடு இதை எழுதத்தொடங்கினேனோ அந்த எண்ணம் பூர்த்தியானதாக எண்ணி மனத் திருப்தியோடு இருப்பேன்.

கடைசியாக இந்தப் புத்தகத்தை மிகுந்த ஜாக்கிரதையோடு அச்சிட்டு வெளிக்கொண்டு வந்திருக்கும் ஜனரல் ஸப்ளை ஸ் கம்பெனி, மானேஜர் வி. குப்புஸ்வாமி அப்பர் அவர்களுக்கு நான் மிகுந்த நன்றியறிதலுடையவனாய் இருக்கிறேன்.

இரண்டாம் பதிப்பு முகவுரை.

இவ்விரண்டாம் பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டுள்ளன. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்புச் செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் மூலமாக வாசிப்போருக்கு கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய சரிதம் வெளியாகி ஆனந்தத்தை விளைவிக்கும் என்ற கருத்தோடு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. மேலும் முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ் பாரதத்திலுள்ள புதிய கதைகளை சுருக்கமாக எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆ. ஹீ. க.

அட்டவணை

நெ.	விஷயம்.	விளக்கள்.	பக்கங்கள்.
	பீடிகை	30	vii
1	ஆதிபர்வம்	192	1
2	ஸபாபர்வம்	55	83
3	ஆரண்யபர்வம்	135	111
4	விராடபர்வம்	42	191
5	உத்தியோகபர்வம்	83	217
	அனுபந்தம்	———	267
	ஆக விளக்கள்	537	

சித்திரப்படங்கள்

1. சேஷசயனம்.
2. பீஷ்மர் சபதம்.
3. திரௌபதி மானஸம்ரக்ஷணம்.
4. கிராத ரூபியான பரமசிவனும், வில்லி ரூபமான பார்வதியும்.
5. திரௌபதி விராட ஸபையில் பிரவேசித்தல்.
6. கிருஷ்ண விச்வரூப அவஸரம்

ஸ்ரீ

ஸ்ரீமஹா பாரத விஞ்விடை

ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நமஃ

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்னநாள்
எடாக வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

பீடிகை

வினா 1.—முதலில் ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நமஃ என்று சொல்வானேன் ?

விடை.—கடவுளது பூரண அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானது அருளால் பாரதத்தில் யாவும் ஒழுங்காக நடந்தனவாதலால், முதலில் ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நமஃ என்றோம்.

வினா 2.—பாரதம் என்பது என்ன ? அது யாரால் செய்யப்பட்டது ?

விடை.—இது சந்திர வம்சத்தில் உண்டான பரதன் என்னும் அரசனது மரபில் தோன்றின பாண்டவர்கள் கௌரவர்கள் என்பவர்களது சரித்திரத்தைச் சொல்லும் இதிஹாஸம். இது வேதவியாஸமஹா ரிஷியால் செய்யப்பட்டு, தமது கொம்பை எழுத்தாணியாக உபயோகித்து மேருமலையில் விநாயகரால் எழுதப்பட்டது.

வினா 3.—இதற்கு மஹாபாரதமென்று பெயர் வருவானேன் ?

விடை.—அநேக அரிய விஷயங்களாகிய தர்மங்களும் ஞானங்களும் இச்சரித்திரத்தில் அடங்கி இருப்பதால் இதற்கு மஹாபாரதம் என்று பெயர் வந்தது. இதுபற்றியே இதற்கு ஐந்தாம் வேதம் என்று ஒரு பெயரும் உண்டு.

வினா 4.—இந்தச் சரித்திரம் யாருக்கு யாரால் சொல்லப்பட்டது ?

விடை.—பஞ்சபாண்டவர்களுள் ஒருவனுகிய அர்ஜுனனது கொள்பேரனுகிய ஜனமேஜய மஹாராஜனுக்கு வேதவியாஸ மஹரிஷியின் சிஷ்யர்களுள் ஒருவராகிய வைசம்பாயன மஹா முனிவரால் சொல்லப்பட்டது.

வினா 5.—ஜனமேஜய மஹாராஜனுக்கு வைசம்பாயனர் இந்த பாரதகதையைச் சொல்லக் காரணமென்ன ?

விடை.—ஜனமேஜய மஹாராஜன் ஸர்ப்ப யாகத்தை ஒரு வாறு பூர்த்திசெய்தான பின்னர், அவரைப்பார்க்க வியாஸ மஹாரிஷி அவரது ஸபைக்கு வந்தார். அவரைப் பார்த்து தனது மூதாதைகளாகிய பாண்டவ கௌரவரது சரித்திரத்தை விஸ்தாரமாய்க் கேட்க வேண்டுமென்று அரசன் வேண்டிக்கொள்ள அப்பொழுது வியாஸர் தனது சிஷ்யனுன வைசம்பாயனருக்குப் பாரதக்கதையைச் சொல்லும்படி உத்திரவு செய்தார்.

வினா 6.—ஸர்ப்பயாக மென்பது என்ன ?

விடை.—ஹோமம் செய்து மந்திர பலத்தால் ஸகல ஸர்ப்பங்களையும் ஹோமாக்கினியில் விழுந்து பிராணனை விடும்படி செய்யும் யாகமே ஸர்ப்பயாக மெனப்படும்.

வினா 7.—இந்தக் கொடிய யாகத்தை இவ்வரசன் செய்யக் காரணம் என்ன ?

விடை.—தனது தகப்பனார் ஒரு ரிஷியினது சாபத்தால் தக்ஷகன் என்ற பாம்பு தீண்ட இறந்தார் என்று கேள்விப்பட்டு இவ்வரசன் ஸர்ப்ப குலத்தை எல்லாம் நாசம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தயாகத்தை செய்ய ஆரம்பித்தான்.

வினா 8.—இந்த யாகம் ஒருவாறு பூர்த்தியாயிற்று என்று சொன்னோமே, ஏன் ?

விடை:—இந்த யாகத்தில் ஸகல பாம்புகளும் வந்து தீயில் விழுந்திறக்க, தக்ஷகன் பயம்கொண்டு இந்திரனது கட்டிற் காலில் சென்று சுற்றிக்கொண்டான். இவ்வாறு இருக்கையில், அஸ்தீகர் என்ற ரிஷி ஒருவர் வந்து அரசனைத் தனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டுமென்று கேட்டார். அப்படியே செய்வதாக அரசன் ஒப்புக்கொண்டான். அப்பொழுது மந்திரபலத்தால், இந்திரன் இருக்கும்பொழுதே அவனது கட்டில் ஹோமகுண்டத்திற்கு நேர் வந்து விட்டது. அரசனை நோக்கி இந்த யாகத்தை இப்படியே நிறுத்திவிட வேண்டும் என்று அஸ்தீகர் கேட்டுக்கொள்ள, அரசனுக்கு தன் வார்த்தைக்கு விரோதமாய் நடக்கமனம் வராமல், யாகத்தை நிறுத்திவிட்டான். ஆகையால் தான் இந்தயாகம் ஒருவாறு முடிந்தது என்று சொன்னது.

வினா 9.—இப்படி அஸ்தீகர் கேட்டுக்கொள்ளக் காரணம் என்ன ?

விடை.—இவர் வாஸுகி என்னும் ஸர்ப்ப ராஜனது ஸகோதரியும், தனது தாயுமாகிய ஜரத்காருவினுடைய குலத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த யாகத்திற்கு வந்தார்.

வினா 10.—ஸர்ப்ப வம்சத்தில் ரிஷி பிறக்கக் காரணம் என்ன ?

விடை.—ஜரத்காரு என்னும் ஒரு ரிஷி பிரம்மசாரியாயும், ஜிதேந்திரியராயும் உலகத்தில் உலாவுங்கால், ஒரு பாழுங் கிணற்றில் ஒருசிறிய கொடியில் மாட்டிக்கொண்டு தலை கீழாய்த் தனது பிதுருக்கள் தொங்குவதையும் அவர் களைத் தாங்கும் கொடியைக் கூட எலிகள் அறுப்பதை யும், அவர்கள் அலறுவதையும் கண்ணுற்றார். பின்பு அவரது வேண்டுகோளின்படி தான் விவாகம்செய்து வம்சவிருத்தி செய்வதாகவும், தனது பெயரையே உடைய ஒரு கன்னிகை கிடைத்தால்மாத்திரம் விவாகஞ் செய்துகொள்ளுவதாகவும் சொல்லிப் போனார். கொஞ்ச காலம் தேடிப்பார்த்து தனக்குப் பத்தினி அகப்படாதது கண்டு தனது எண்ணத்தை வாயால் உறக்க வெளியிட் டார். உடனே அதை தனது தூதரால் அறிந்து வாஸுகி தனது ஸோதரியான ஜரத்காருவை ரிஷி ஜரத்காருவுக் குக் கொடுத்தான். இந்த ரிஷிக்கு ஸர்ப்ப கன்னிகை யிடத்து அஸ்தீகர் உண்டானார்.

வினு 11.—இப்படி முன் சொன்ன காரணங்களுக்காக வை சம்பாயனர் ஜனமேஜய மஹாராஜருக்குச் சொன்ன பார தம் எத்தனை பிரிவுகளை உடையது ?

விடை.—பதினெட்டு பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரி விற்கும் பர்வம் என்று பெயர்.

வினு 12.—அப் பர்வங்களுக்கு முறையே பெயர் என்ன ?

விடை.—அவைகளின் பெயர் முறையே ஆதி பர்வம், ஸபா பர்வம், ஆர்ண்ய பர்வம், விராட பர்வம், உத்தியோக பர்வம், பீஷ்ம பர்வம், துரோண பர்வம், கர்ண பர்வம், சல்லியபர்வம், ஸௌப்திக பர்வம், ஸ்திரீ பர்வம், சாந்தி

பர்வம், அனுசாஸன பர்வம், அசுவமேத பர்வம், ஆசிரமவாஸ பர்வம், மௌஸல பர்வம், மஹாப் பிரஸ்தான பர்வம், ஸ்வர்க்காரோஹண பர்வம் ஆகிய இவைகளே.

வினா 13.—இவற்றுள் ஆதி பர்வத்திலடங்கிய கதையின் சுருக்கம் என்ன ?

விடை.—சந்திர வம்சத்தவரது உற்பத்தியும் பாண்டவர் கௌரவர்கள் பிறந்து, வித்தை பயின்று, விவாகம் செய்து கொண்டு, கௌரவரது கெட்ட குணத்தினால் இரு திறத்தாரும் வெவ்வேறு இடங்களில் சில காலம் ஸுகமாய் இராஜ்யம் ஆண்டதுமே இப்பர்வத்திலடங்கிய கதையாம்.

வினா 14.—ஸபா பர்வ கதைச் சுருக்கம் என்ன ?

விடை.—தருமபுத்திரரது இராஜதானியில் அமைக்கப்பட்ட ஸபையின் வைபவமும், அவர் செய்த இராஜஸூயயாக வைபவமும், அதைக் கண்ட துரியோதனாதியர் பொறுமை கொண்டு பாண்டவரைச் சூதாட அழைத்து அவர்கள் இராஜ்ய வைபவங்கள் யாவையும் தோற்கும்படி செய்ததும், பாண்டவர் காட்டிற்குச் சென்று பன்னிரண்டு வருஷம் வனவாஸம் செய்து ஒரு வருஷம் அஜ்ஞாத (எவராலும் கண்டுபிடிக்க முடியாதபடி மாறுவேஷம்பூண்டு பட்டணங்களில்) வாஸம்செய்தால் பின்பு இராஜ்யம் கொடுப்பதாக துரியோதனன் சொன்னதும் இப்பர்வத்தின் கதை.

வினா 15.—ஆரண்ய பர்வத்தின் கதை என்ன ?

விடை.—பாண்டவர்கள் பிராம்மண சிரேஷ்டர்களோடு வனவாஸம் செய்ததும், அப்பொழுது மார்க்கண்டேயர் முத

லிய மஹான்களிடத்திலிருந்து ஸத்விஷயங்களை யறிந்ததும், அர்ஜுனன் பரமசிவனைத் தரிசித்து பாசுபதம் பெற்று ஸ்வர்க்கத்தில் இந்திரனோடு சில காலம் வாஸம் செய்ததும், பாண்டவர்களுக்கு மலைபோல் வந்த ஆபத்துக்கள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கியதுமே இப் பர்வத்திலடங்கிய கதையாம்.

வினு **16**.—விராட பர்வத்திலடங்கிய கதை என்ன ?

விடை.—பன்னிரண்டு வருஷம் வனவாஸம் செய்த பின்பு ஒரு வருஷம் பாண்டவர்கள் விராடராஜன் பட்டணத்தில் அஜ்ஞாதவாஸம் செய்ததும், அவ்வரசனது மைத்துனனாகிய கீசகனைக் கொன்றதும், அவர்களைக் கண்டு பிடிக்க வந்த துரியோதனாதிபரைத் தோல்வி யடையும்படி செய்ததுமே இப்பர்வத்திலடங்கிய கதையாம்.

வினு **17**.—உத்தியோக பர்வத்தின் கதை என்ன ?

விடை.—ஸபா பர்வத்தில் சொன்னபடி வனவாஸமும், அஜ்ஞாதவாஸமும் செய்தபின்னர் துரியோதனாதிபரிடமிருந்து தாம் அடையவேண்டிய இராஜ்ய பாகத்தைப் பாண்டவர்கள் தூதர்கள் மூலமாய் அடைய முயன்றதும், கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்காகக் கடைசியாய் தூது சென்றதும், அப்பொழுது துரியோதனன் இராஜ்யம் கொடுக்கிறதில்லை யென்று பிடிவாதமாய்ச் சொன்னதைக்கேட்டு யுத்தத்திற்கு வேண்டிய உபாயங்கள் செய்ததுமே இப்பர்வத்திலடங்கிய கதையாம்.

வினு **18**.—பீஷ்ம பர்வத்திலடங்கிய கதை என்ன ?

விடை.—தனது உறவினரை அநியாயமாய்க் கொல்லவேண்டுமே என்று பரிதபித்த அர்ஜுனனை பகவத்கீதை சொல்லி

யுத்தம் செய்யும்படி ஸ்ரீகிருஷ்ண பகவான் ஏவிய பிரபாவமும், பீஷ்மர் கௌரவர் பக்கத்தில் ஸேனாதிபதிப் பட்டம்பெற்று அதிவிசித்திரமாய்ப் பத்து நாள் யுத்தம் செய்த வலிமையும், இப்பர்வத்திலடங்கிய கதையாம்.

வினா 19.—துரோண பர்வக் கதை என்ன ?

விடை.—பத்தாம் நாள் மாலை பீஷ்மர் அடிபட்டு யுத்தகளத்தில் யுத்தம் செய்யத் திறமின்றி விழுந்தவுடன் துரோணரை ஸேனாதிபதி யாக்கியதும், அவர் மேல் ஐந்துநாள் விசித்திர யுத்தம் செய்ததும், இரு பக்கத்திலும் சிறந்தவீரர்கள் இறந்ததும், 14-ம் நாள் இரவில் யுத்தம் நடந்ததும், கடைசியாய் 15-ம் நாள் தருமபுத்திரர் ஒரு பொய்சொன்ன காரணத்தால் துரோணர் இறந்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினா 20.—கர்ண பர்வத்தி லடங்கிய கதை என்ன ?

விடை.—மேல் இரண்டு நாள் கர்ணன் ஸேனாதிபதிப் பட்டம், பெற்று சண்டை செய்ததும், அப்பொழுது தைரியம் குறையும்படி அவனுக்கு ஸாரத்தியம் செய்த சல்லியன் அவனோடு ஸம்பாஷித்ததும், 17-ம் நாள் மாலை எல்லா அஸ்திரங்களையும் மறந்து, தத்தளித்துக்கொண்டு புதைந்திருக்கும் தன் தேரைத் தூக்கமுயலும் தருணத்தில் அர்ஜுனனது பாணத்தால் கர்ணன் இறந்ததுமே, இப்பர்வத்தின் கதை.

வினா 21.—சல்லிய பர்வத்தின் கதை என்ன ?

விடை.—18-ம் நாள் காலை முதல் உச்சி காலம் வரை சல்லியன் ஸேனாதிபதியாகிச் சண்டை செய்ததும், அவன் இறந்ததும், பின்பு, ஓர் குளத்தில் சென்று ஒளித்துக்

கொண்டு தன் பலத்தை விருத்திபண்ண முயன்றுகொண் டிருந்த துரியோதனனுக்கும், பீமஸேனனுக்கும் அக் குளக்கரையிலே கதாயுத்த முண்டாய்க் கடைசியாய் துரியோதனன் தன்தொடையில் அடிபட்டு யுத்தகளத் தில் விழுந்ததுமே இப்பர்வத்தின் கதையாம்.

வினா 22.—ஸௌப்திக பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—பதினெட்டாம் நாள் இரவில், பாண்டவர்கள் படை வீட்டில் புகுந்து அங்கு தூங்கிக்கொண்டிருந்த இளம் பஞ்சபாண்டவரையும், இதர பாண்டவ வீரரையும் அசு வத்தாமன் கொடுங்கொலை புரிந்ததும், பின்பு பகவான் ஏற்பாட்டால் அன்று வேறிடத்தில் தங்கியிருந்த பாண் டவரிடம் மிகுந்த அவமானத்தை அடைந்து அவன் ஓடிப் போனதும் மேலே அவன் அபாண்ட வாஸ்திரப் பிரயோ கம் செய்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினா 23.—ஸ்திரீ பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—பதினெட்டுநாள் யுத்தத்தில் மாண்ட வீரரது ஸ்திரீ கள்யாவரும் யுத்தகளம் வந்து பிரலாபித்ததும், பாண்ட வர் முதலியவர்கள் தமது உறவினர்களுக்குத் தர்ப்பணம் செய்ததும், அப்பொழுது குந்தியால் கர்ணன் தமக்கு தமையன் என்று தருமபுத்திரர் அறிந்து துக்கித்ததுமே இப் பர்வத்தின் கதையாம்.

வினா 24.—சாந்தி பர்வத்தின் கதை என்ன?

விடை.—தமது உறவினரை அநியாயமாய்க் கொன்றுவிட் டோமே என்ற துக்கத்தாலும், தமது தமையனாகிய கர்ணனைக் கொல்லும்படி வந்ததே என்ற துக்கத்தாலும், இராஜ்யமாள மனம் வராத தருமபுத்திரருக்கு நாரதர்

கர்ணன் சரித்திரங் கூறிப் பின்பு அர்ஜுனன் பகவான் முதலியோர் தெளிவுண்டாகும்படி செய்து அவருக்குப் பட்டாபிஷேகம் செய்ததும், இதற்கு மேலும் தருமபுத்திரர் மனம் தெளியாதது கண்டு சாந்தமும், திடமும் வந்து அவர் ஸுகமாய் இருக்கும்படி, யுத்தகளத்தில் பத்தாம் நாள் அடிபட்டு விழுந்து மரணமடைய உத்தராயணத்தை எதிர்பார்த்திருந்த பீஷ்மரால், பகவானது வேண்டுகோளின்படி தருமங்கள் உபதேசிக்கப்பட்டதுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினா 25.—அநுசாஸன பர்வத்தின் கதை என்ன ?

விடை.—சாந்தி பர்வம் சொல்லியும், தருமபுத்திரர் ஸமாதானமாகாததைக் கண்டு மறுபடியும் விசேஷ தருமங்களைச் சொன்னதே இப் பர்வத்தின் கதை.

வினா 26.—அசுவமேத பர்வத்தின் கதை என்ன ?

விடை.—தருமபுத்திரர் அசுவமேத யாகம் செய்ததும், பின்பு பகவான் கீதையில் சொல்லிய விஷயங்களை அர்ஜுனன் மறந்து போய்விட்டபடியால் அவனுக்கு அவர் கீதையின் ஸாரத்தை அநுகீதா ரூபமாகச் சொன்னதுமே இப் பர்வத்தின் கதையாம்.

வினா 27.—ஆச்ரமவாஸ பர்வத்தினது கதை என்ன ?

விடை—திருதராஷ்டிரர், காந்தாரி முதலியவர்கள் விதுரரது உபதேசத்தால் வைராக்கியமடைந்து குருக்ஷேத்திரத்தருகில் சென்று பர்ண சாலையில் தியானதிகள் செய்து கொண்டு கடைசியில் ஸ்வர்க்கமடைந்ததே இப் பர்வத்தின் கதையாம்.

வினா 28.—மௌஸல பர்வத்தின் கதை என்ன ?

விடை.—ஒரு ரிஷியின் சாபத்தால் யாதவர்கள் எல்லோரும் ஸமுத்திரக்கரையில் முளைத்திருந்த கோரைப்புற்களை பிடுங்கி அடித்துக்கொண்டு இறந்ததும், ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டத்திற் கேகியதுமே இப் பர்வத்தின் கதைகளாம்.

வினா 29.—மஹாப்பிரஸ்தான பர்வத்தி லடங்கிய கதை என்ன ?

விடை.—ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டம் அடைந்ததை யும் அர்ஜுனன் வலிகுறைந்ததையும், கலியுகம் ஆரம் பித்ததையும் அறிந்த யுதிஷ்டிரர் தமது தம்பிமார் திரௌபதி இவர்களோடு வடமேருவைநோக்கி மௌன மாகப் போக ஆரம்பித்ததும், வழியில் ஒவ்வொருவராய் தருமபுத்திரரும், ஒரு நாயும் தவிர மற்றையாவரும் இறந்து விழுந்ததுமே இப்பர்வத்தின் கதையாம்.

வினா 30.—ஸ்வர்க்காரோஹண பர்வத்தின் கதை என்ன ?

விடை.—தருமபுத்திரர் தமது தேகத்தோடு ஸ்வர்க்கத்திற் குப் போகும் வழியில் அவர் சொன்ன ஒரு பொய்க்காக நரகத்தைப் பார்க்கும்படி நேரிட்டதும், பின்பு ஸ்வர்க்கம் சென்று தமக்கு வேண்டியவர்களோடு ஸுகமாய் இருந் ததுமே இப் பர்வத்தி லடங்கிய கதைகளாம்.

ஆதி பர்வம்

முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் விளைவிக்கு மதயானைவதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரு
மொருகோடி பூதை வருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்.

வினா 1.—சந்திர வம்சத்தில் பரதன் என்ற ஓர் அரசனிருந்த தாகச் சொன்னேமே அவன் யாருடைய பிள்ளை ?

விடை.—அதே வம்சத்தில் உதித்த துஷ்யந்தன் என்ற அரசனுக்கும் கண்வரது தபோவனத்தில் வளர்ந்துகொண்டு வந்த சகுந்தலைக்கும் பிறந்த பிள்ளை.

வினா 2.—ரிஷியினுடைய பெண்ணை க்ஷத்திரியனுக்கு எப்படி விவாஹம் செய்துகொடுத்தார்.

விடை.—சகுந்தலை உண்மையில் ரிஷிப் பெண் அல்ல ; அவள் விசுவாமித்திரர் இராஜாவாயிருந்து பிரும்மரிஷிப் பட்டம் பெற தபஸ்செய்யுங்கால் அவரது தபஸைக் குலைக்க வந்த மேனகை என்னும் அப்ஸர ஸ்திரீக்கும் விசுவாமித்திர ராஜாவுக்கும் பிறந்தவள்.

வினா 3.—இவள் கண்வர் ஆசிரமத்தில் வளரக் காரணம் என்ன ?

விடை.—இவள் பிறந்ததும், மேனகை இக்குழந்தையை விசுவாமித்திரரிடம் கொடுக்க அதைப் பார்த்தவுடன் விசுவாமித்திரருக்குத் தம் தபஸ் கெட்டுப்போனது ஞாபகம் வந்தது. உடனே அதிக கோபத்தோடும் வெட்கத்தோடும்

அவர் குழந்தையைக் கவனியாமல் போக, மேனகையும் தான் வந்த வழியேபோயினள். ஆதலால் குழந்தை தனிமையாய்க் காட்டில்விடப்பட்டது. கண்வமஹாரிஷி, காட்டில் சகுந்த மென்னும் பறவைகளால் போஷிக்கப்பட்டு வளரும் இக்குழந்தையைக் கண்டு, அதற்குச் சகுந்தலை என்று பெயரிட்டுத் தமது ஆசிரமத்தில் கொண்டுவந்து வளர்த்துவந்தார்.

வினு 4.—துஷ்யந்தனுக்கும், இவளுக்கும் எப்படி விவாஹம் நடந்தது?

விடை.—துஷ்யந்தன் ஒருநாள் வேட்டைக்குப் போனபோது, தனது பரிவாரங்களை ஓரிடத்தில் விட்டுவிட்டு தனியே ரிஷி ஆசிரமங்களில் சென்று அங்குள்ள ரிஷிகளை தரிசிக்கப் போனான். சகுந்தலை தனிமையாய்க் கண்வர் ஆசிரமத்திலிருப்பதைக் கண்டான். அவளிடமிருந்தே அவள் பிறப்பு முதலியவைகளைத் தெரிந்துகொண்டு, அவளைக் காந்தருவ விவாஹமாக அங்கேயே விவாஹம் செய்துகொண்டு, இரண்டொரு நாள் அங்கேயே அவளோடு இருந்துவிட்டு, தன் ஸேனைகளை அனுப்பி அவளை சீக்கிரத்தில் இராஜ்யத்திற்கு அழைத்துக் கொள்வதாகச் சொல்லிப்போனான்.

வினு 5.—கண்வர் இதை அறிந்தவுடன் என்ன சொன்னார்?

விடை.—'என்னைக் கேட்காமல் நீ செய்தபோதிலும் நீ செய்தது நல்ல காரியம்தான்' என்று ஸந்தோஷமாய்ச் சகுந்தலை செய்த காரியத்தை ஒப்புக்கொண்டார்.

வினு 6.—அரசன் பிறகு சகுந்தலையை இராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டானா?

விடை.—இராஜ்யத்திற்குப் போனதும் தனக்கும் சகுந்தலைக்கும் நடந்த விஷயங்களை எல்லாம் அவன் மறந்துவிட்டான். ஆகையால் அவன் ஸுமார் ஏழுவருஷமட்டும் ஒருவரையும் சகுந்தலையிடம் அனுப்பவில்லை.

வினா 7.—இது வரையில் சகுந்தலை பொறுத்துக்கொண்டு எவ்வாறிருந்தாள்?

விடை.—முன்பு அரசன் விட்டுப் போகும்போது அவள் கர்ப்பமாயிருந்தமையால், கொஞ்சகாலத்திற்கெல்லாம் மஹாபலம், தேஜஸ் முதலியவைகள் அமைந்த ஒரு புத்திரனையடைந்தாள். அவனுக்கு ஆறு வயதாகும் வரையில் அவனது விளையாட்டுக்களையும், அவனது பல விசேஷங்களையும் பார்த்துக்கொண்டே, அரசன் ஆளனுப்புவதை அவ்வளவு ஆவலோடு எதிர் பார்க்காது, சீக்கிரத்தில் வந்து நம்மை இராஜ ஸேவகர்கள் அரசனிடம் கொண்டுபோவார்கள் என்று இருந்தாள்.

வினா 8.—இக் குழந்தை என்ன என்ன விளையாட்டுகள் விளையாடியது?

விடை.—காட்டிலுள்ள மிருகங்களைப் பயமின்றித் துரத்துவதும், தைரியமாய் புலி சிங்கம் முதலிய துஷ்ட ஜந்துக்களின் குட்டிகளை எடுத்துக்கொண்டு தாய் மிருகங்களை அதட்டி அடிப்பதுமே இக் குழந்தையினது விளையாட்டாம். ஆகையால் இக் குழந்தைக்கு **ஸர்வதமனன்** என்று பெயரிட்டார்கள்.

வினா 9.—அப்படியானால் சகுந்தலை அரசனைப் பார்க்காமலே தனது காலத்தை கழித்தாளா?

விடை.—இல்லை. இந்த ஸர்வதமனனுக்கு ஆறு வயது ஆனதும், கண்வர் தமது சிஷ்யர்களைக் கூப்பிட்டு இவளைக்

கொண்டுபோய் அரசனிடம் விட்டுவிட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டார்.

வினு 10.—அரசன் இவளை அங்கீகரித்துக்கொண்டானு?

விடை.—அரசனுக்கு இவள் விஷயமே மறந்து போய்விட்டமையாலும் அநேக காலமாய்விட்டபடியாலும், குழந்தையைப் பார்த்துங்கூட அவனுக்கு ஞாபகம் வராததால், நீ என் பெண்சாதி யல்லவென்று மறுத்துவிட்டான்.

வினு 11.—அப்பொழுது சகுந்தலை என்ன செய்தாள்?

விடை.—அரசன் மறுத்ததையும், ரிஷியின் சிஷ்யர்கள் தன்னைத் தனிமையாய் விட்டுப் போனதையும் கண்ட சகுந்தலை, தன்னுல் கூடியமட்டும் அரசனை ஞாபகப் படுத்த, தனது பிறப்பு, தனக்கும் அரசனுக்கும் நடந்த விஷயங்கள் முதலியவைகளைச் சொல்லிப்பார்த்தும், அரசன் ஒப்புக்கொள்ளாதது கண்டு, மிகுந்த துக்கத்தோடு திரும்பிக் காட்டுக்குப் போக யத்தனித்தாள்.

வினு 12.—அப்பொழுது என்ன விசெஷம் நடந்தது?

விடை.—உடனே ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று. அது சகுந்தலை துஷ்யந்தனது மனைவி என்றும், ஸர்வதமனனே அவன் பிள்ளையென்றும், யாவரும் கேட்கும்படி சொல்ல, அரசன் சகுந்தலையையும், குமாரனையும் அங்கீகரித்துக் கொண்டான்.

வினு 13.—இந்த ஸர்வதமனன் யார்?

விடை.—இவனே பின்பு பரதன் என்று பெயர் பெற்றான். இவன் வெகு நீதியாய் இராஜ்ய பரிபாலனம செய்து வந்தான். இவனது வம்சமே பரத வம்சம் என்று சொல்லப் படும்.

வினா 14.—இவனால்தான் நமது தேசத்திற்குப் பாரதவருஷமென்று பெயர் வந்ததோ?

விடை.—இல்லை. ஜடபரதர் என்பவர் ஒருவர் இராஜ்யமாளுங்கால் மிகச் சிறந்த அரசராய் இருந்தமையால் அவர் ஆண்ட நமது தேசத்திற்குப் பாரதவருஷம் என்று பெயர் வந்தது. இவரது சரித்திரத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் பஞ்சம ஸ்கந்தத்தில் காணலாம்.

வினா 15.—இப் பரதனுக்கு முன் பிறந்த சில முக்கிய அரசர்கள்பெயர் என்ன?

விடை.—நகுஷன், அவன் பிள்ளை யயாதி முதலியவர்கள், யயாதி பிள்ளை பூரு, யது முதலியவர்கள். அவர்களில் பூரு வம்சத்தில் சில தலைமுறைக்குப் பின் துஷ்யந்தன் தோன்றினான்.

வினா 16.—இவர்களுள் நகுஷனைப் பற்றிய விசேஷம் என்ன?

விடை.—இவன் இந்திரப் பட்டம் பெற்றதும், அகஸ்தியர் சாபத்தால் மலைப் பாம்பானதும், பீமஸேனனைப் பிடித்துக் கொண்டதும், தருமபுத்திரரால் ஸந்தேகம் தெளிந்து சாபத்திலிருந்து விடுபட்டதும்; ஆரண்ய பர்வத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்போகிறோம்.

வினா 17.—பயாதிக்குப் பூரு, யது என்ற பிள்ளைகள் யாரிடத்தில் பிறந்தார்கள்.

விடை.—பயாதிக்கு சுக்ராசாரியர் பெண்ணாகிய தெய்வயானை இடமாக யது முதலிய நான்கு பிள்ளைகளும், விருஷபர்வன் என்ற இராக்ஷஸ ராஜன் பெண்ணாகிய சர்மிஷ்டை இடமாக பூரு முதலிய பிள்ளைகளும் உண்டானார்கள்.

வினு 18.—சுக்ராசாரியார் தேவலோகத்தில் உள்ள பிராம்மணஉத்தமர் அல்லவா? அவரது பெண்ணை யயாதி அடையவேண்டிய காரணம்என்ன?

விடை.—தேவகுருவாகிய பிரஹஸ்பதியின் பிள்ளை கசன் என்பவன் சாபத்தால் இப்படி நேர்ந்தது.

வினு 19.—கசன் சாபங்கொடுத்த காரணம் என்ன?

விடை.—கசனை தெய்வயானை "என்னைக் கல்யாணம் செய்துகொள்" என்று கேட்க, அதற்கு அவன் "நீ என் குருவினது பெண், எனக்கு நீ ஸஹோதரியாக வேண்டும் ஆதலால் நான் உன்னை விவாஹம் செய்துகொள்ளக்கூடாது" என்றான். அதற்கு அவள் "உனக்கு என் தகப்பனார் சொல்லிய மந்திரம் பலிக்காமல்போகட்டும்" என்று சபிக்க, கசன் "நீ தேவ பிராம்மண குலமாயிருந்தும் பூலோகத் தரசனையே விவாஹம் செய்துகொள்ளக் கடவாய்" என்று மறு சாபங் கொடுத்தான்.

வினு 20.—கசன் சுக்ராசாரியராகிய அஸுர குருவினிடத்தில் என்ன கற்றுக்கொள்ள வந்தான்?

விடை.—முன்காலத்தில் அஸுரர்களுக்கும் தேவர்களுக்கும் யுத்தமுண்டாயிற்று. அப்பொழுது சுக்ராசாரியர் தனக்குத் தெரிந்த ஸஞ்ஜீவினி மந்திரத்தால், மாண்டுபோன அஸுர ஸைனிகளை பிழைப்பித்து வந்தார். இந்த ரஹஸ்யத்தை அறிந்த தேவர்கள் தாமும் லாபமடைய எண்ணி, பிரஹஸ்பதியின் புத்திரனாகிய கசனை சுக்ராசாரியர் வீட்டிற்கு அனுப்பிவித்து அந்த மந்திரத்தை கற்றுவரும்படி செய்தார்கள். ஆதலால் கசன் சுக்ராசாரியர் வீடு சென்றான்.

வினா 21.—இவன் தேவர் பக்கத்திலிருந்தும் இவனைக் கஷ்டப் படுத்தாது அஸுரர்கள் சும்மா விருந்தார்களா?

விடை.—அஸுரர்கள் இவனை அநேகம் தடவை கொன்று சாம்பலாக்கியும், தெய்வயானைக்கு இவன்பேரிலிருந்த பிரீதியினாலே, சுக்ராசாரியரால் ஸஞ்ஜீவினி மந்திர மூலமாய், அநேகம் தரம் பிழைப்பு மூட்டப்பட்டான்.

வினா 22.—கடைசியாய் சுக்ராசாரியரிடம் இருந்து மந்திரத்தைக் கசன் கற்றுக்கொண்டானா? எப்படி?

விடை.—இப்படிக் கசன் அடிக்கடி பிழைப்பு மூட்டியதைப் பார்த்த அஸுரர்கள் கசனைக் கொன்று சாம்பலாக்கி மதுவோடு கலந்து சுக்ராசாரியருக்குக் கொடுத்துவிட்டார்கள். அதை அறியாமல் சுக்ராசாரியரும் குடித்துவிட்டார். பின்பு தெய்வயானை கசனைக்காணோமே என்று பரிதபிக்குங்கால், கசன் தனது வயிற்றிலிருப்பதை அஸுர குரு கண்டார். இப்பொழுது ஸஞ்ஜீவி மந்திரத்தைச் சொன்னால் கசன் பிழைத்து தன் வயிற்றை கீறிக்கொண்டு வருவான் என்றும், அதனால் தாம் இறப்போம் என்றும் தெரிந்துகொண்டார். ஆதலால் அவர் கசனுக்கு மந்திரத்தை உபதேசித்து அவன் வெளியில் வந்ததும் தம்மைப் பிழைக்கும்படி செய்வதே நல்வழி எனத் தீர்மானித்தார். அப்படியே கசன் வெளியில்வந்து தன் குருவைப் பிழைப்பு மூட்டினான். இவ்வாறு அஸுரரது கெட்ட எண்ணமே கசன் காரியத்தைப் பூர்த்திசெய்வித்தது.

வினா 23.—இப்படி அடாத காரியத்தையும் செய்ய உத்தேசித்து தனக்கு அநியாயமாய்ச் சாபமுங் கொடுத்த தெய்வ

யானைக்கு மறுசாபங் கொடுத்தபின்பு கசன் என்ன செய்தான் ?

விடை.—தெய்வ லோகம் சென்று தன் பிதாவாகிய பிரஹஸ் பதிக்கு மந்திரத்தை உபதேசம் செய்து அவர் மூலமாய் தேவர்களுக்கு ஸுகத்தை உண்டாகினான்.

வினா 24.—கசன சாபம் எப்படி தெய்வயானை விஷயத்தில் பலித்தது ?

விடை.—ஒருநாள் தெய்வயானையும் விருஷபர்வன் என்ற அஸுரராஜன் குமாரியாகிய சர்மிஷ்டையும் சேர்ந்து ஒரு திவ்விய தடாகத்தில் ஸ்நானம் செய்யப்போனார்கள். அப்பொழுது காற்றடிக்க இருவருடைய வஸ்திரங்களும் ஒன்றொடொன்று சேர்ந்துவிட்டன. அப்பொழுது சர்மிஷ்டை ஸ்நானம் செய்தெழுந்து, தெரியாமல் தெய்வயானையினது வஸ்திரத்தை எடுத்துக் கட்டிக்கொண்டாள். உடனே இருவருக்கும் தர்க்க முண்டாய்க் கடைசியில் அதுசண்டையாய் முடிய, சர்மிஷ்டை தனது தாதியர் மூலமாய் தெய்வயானையை ஒரு பாழுங் கிணற்றில் தள்ளி விட்டுப் போய்விட்டாள். மருநாள் அங்கு வேட்டையாட வந்த யயாதி என்ற இராஜன் அக்கிணற்றிலிருந்து இந்தத் தெய்வயானையை கையைப்பிடித்து கரை ஏற்றினான். உடனே தெய்வயானையும் அவ்வரசனையே மணம்புரிவ தாகத் தீர்மானித்தாள்.

வினா 25.—சுக்ராசாரியர் தெய்வயானையால் நடந்த விஷயங் களைத் தெரிந்துகொண்டவுடன் என்ன செய்தார் ?

விடை.—உடனே அதிகோபத்தோடு விருஷபர்வன் இடஞ் சென்று அவன் பெண் செய்த அகிருத்தியத்தைச் சொல்லி தாம் ஊரைவிட்டுப் போவதாகச் சொல்லவே,

அரசன் வேண்டிக்கொள்ளப் பிறகு தம் பெண் எண்ணப் படி சர்மிஷ்டையை அவள் ஊழியக்காரியாகச் செய்தால் தாம் ஊரைவிட்டுப் போவதில்லை என்றார். அதைக்கேட்ட அஸுரராஜன் அப்படியே செய்துவிட்டான்.

வினா 26.—சுக்ராசாரியர் யயாதியாகிய மாப்பிள்ளைக்கு என்ன சொல்லி அனுப்பினார்?

விடை.—'என் பெண்ணே உன் பட்டமகிஷியாய் இருக்க வேண்டும். இந்த சர்மிஷ்டையை ஸ்திரீயாக வைத்துக் கொள்ளவேகூடாது. அவளை ஊருக்கு வெளியில் வைத் திருக்கவேண்டும். அவளை நீ பெண்சாதியாக்கிக் கொண்டா யென்று தெரிந்தால் உனனைச் சபித்துவிடுவேன்' என்றார்.

வினா 27.—யயாதி மஹாராஜன் எப்படி நடந்துகொண்டான்?

விடை.—ஊருக்குச்சென்று சில வருஷங்கள் தெய்வயா னை யோடேயே ஸுகமாய் இருந்தான். அப்பொழுது தெய்வ யானையிடத்தில் யது முதலிய இரண்டு பிள்ளைகள் பிறந் தார்கள்.

வினா 28.—யயாதிக்குப் பூரு என்ற பிள்ளை பிறந்ததாகச் சொல்லி யிருக்கிறீரே மே அதெப்படி?

விடை.—ஒருநாள் யயாதி தனிமையாய் தனது உத்தியான வனத்திலிருக்கும்பொழுது சர்மிஷ்டை வந்து அரசனை பலவந்தம்செய்ய அதற்கிணங்கியதால் அவ்விடம் பூரு முதலிய மூன்று பிள்ளைகள் உண்டானார்கள். பூரு என்ப வன் எல்லாப் பிள்ளைகளிலும் சிறியவன்.

வினா 29.—இது சுக்ராசாரியருக்குத் தெரியவந்ததா? எப்படி?

விடை.—ஒருநாள் பூரு முதலிய பிள்ளைகள் தெருவில் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்ட தெய்வயானைக்கு அரசனது சாயை அந்த பிள்ளைகளிடத்திலிருந்ததாகத் தோன்றியது. உடனே அச்சிறுவர்களை யழைத்து 'உங்கள் தகப்பன் யார்' என்றுகேட்க, அறியாத சிறுவர்கள் அருகிலிருந்த யயாதியைக் காண்பித்து விட்டார்கள். உடனே தெய்வயானை அதிகக் கோபத்தோடு சுக்ராசாரியரிடம் இந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தாள்.

வினு 30.—சுக்ராசாரியர் இதைக்கேட்டதும் என்ன செய்தார்?

விடை.—உடனே அரசனிடம் வந்து அவனுக்கு அன்றுமுதல் கிழத்தனம் வரவேண்டுமென்று சபித்தார். உடனே யௌவன வயதிலிருக்கும் யயாதிக்கு ஒரு ஸுகத்தையும் அனுபவிக்க முடியாமலிருக்கும்படி கிழத்தனம் வந்துவிட்டது.

வினு 31.—யயாதி எவ்வளவு காலம் இந்தச் சாபத்தால் கஷ்டப்பட்டான்?

விடை.—இதிலிருந்து அதிக கஷ்டத்தை அடையவில்லை. சுக்ராசாரியருக்குத் தயவு வரும்படி நடந்துகொண்டதனால் இதிலிருந்து தப்புவிக்க கொஞ்சம் இடம்கொடுத்தார். அதாவது 'கிழத்தனம் வந்தபோதிலும், நீ அதை ஒருவனுக்குக் கொடுத்து அவனது யௌவனத்தை வாங்கிக்கொள்ளும் சகதி உனக்கு வரட்டும்' என்று அஸுர குரு அனுக்கிரஹித்தார். ஆதலால் சிற்றின்பத்தின் ஆசை மாறுத அரசன் தனது கிழத்தனத்தை கொடுத்து யௌவனத்தை வாங்கிக்கொண்டு அநேக காலம் ஸுகங்களை அனுபவித்தான்.

வினா 32.—யயாதியின் கிழத்தனத்தை யார் ஏற்றுக்கொண்டு தனது யௌவனத்தை அவனுக்கு கொடுத்தார்கள் ?

விடை.—யயாதியானவன் தனது புத்திரர்கள் ஒவ்வொருவரையும் தனது கிழத்தனத்தை ஏற்றுக்கொண்டு அவர்களது யௌவனத்தைத் தரும்படியாகவும், அப்படிக் கொடுத்தால் அதைதிரும்பவும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் கொடுத்துவிடுவதாகவும் கேட்டுப் பார்த்தான். ஒருவரும் அதற்கு ஸம்மதிக்கவில்லை. கடைசியாகப் பூரு அதற்கு ஒப்புக்கொண்டு தகப்பனார் இஷ்டப்படி செய்தான்.

வினா 33.—யயாதி அப்பொழுது என்ன செய்தான் ?

விடை.—பதுவிற்கு உன் வம்சத்தை சேர்ந்தவர்கள் அரசராவதற்கு யோக்கியமில்லாதவர்களாகட்டுமென்று சாபங் கொடுத்து, இதுபோன்ற சில சாபங்களை மற்றைய பிள்ளைகளுக்கும் கொடுத்தான். ஜனங்களுடைய இஷ்டத்தை அநுஸரித்து பூருவுக்கு இளவரசு பட்டாபிஷேகம் செய்தான்.

வினா 34.—யயாதி யௌவனத்தோடு எவ்வளவு காலம் ஸுகானுபவம் செய்தான் ?

விடை.—வெகுகாலம் ஸுகானுபவம் செய்தான். அதன் பின்பு கூட அவனுக்கு திருப்திவரவில்லை. பின்பு தன் புத்திரனுகிய பூரு என்பவன் கிழத்தனத்தை வாங்கிக் கொண்டு கவலையற்றிருப்பதைக்கண்டு வியந்து, யயாதி யோசனைசெய்து அதன்பேரில் தன் கிழத்தனத்தை வாங்கிக்கொண்டு பூருவினிடத்தில் தனது யௌவனத்தைக் கொடுத்தான்.

வினா 35.—யயாதி அப்பொழுது என்ன யோசனை செய்தான் ?

விடை.—ஆசைக்கோர் அளவில்லை. தேகத்திற்குக் கிழத்தனம் வரவர, ஆசைக்கு யௌவனம் வருகிறது. அநுபவித்து ஆசைதீருகிற தென்பதே கிடையாது. நெய்விடவிடவிட, எப்படி நெருப்பு விருத்தியாகிறதோ, அதுபோல அநுபவம் ஆக ஆக, ஆசையும் விருத்தியாகும். ஆதலால் புத்திமான்கள் அதைக் கூடிய சீக்கிரத்தில் நிவர்த்திக்கப் பார்ப்பார்கள் என்று யோசித்தான்.

வினு 36.—பின்பு யயாதி என்ன செய்தான் ?

விடை.—கிழத்தனத்தை ஏற்றுக்கொண்டு, தனது புத்திரனை பூருசெய்த ஸத்கிருத்யத்தை ஜனங்கள் யாவருக்கும் தெரிவித்து, அவர்களது இஷ்டத்தையும் ஸம்பாதித்துக் கொண்டு பூருவுக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு வனம் சென்று தவம் செய்து கடைசியாக ஸ்வர்க்கத்தை அடைந்தான்.

வினு 37.—இவன் ஸ்வர்க்கத்தை அடைந்த பின்பு அங்கு நடந்த விசேஷம் என்ன ?

விடை.—ஸ்வர்க்கத்தில் கொஞ்சகாலம் வாஸம் செய்தபிறகு இந்திரன், யயாதியைப் பார்த்து 'நீர் யாரைப்போல் தபோபலமுடையவர்' என்று கேட்க, அதற்கு யயாதி 'ஒரு ரிஷியும் எனக்கு நிகரல்ல' என்று பெருமை பாராட்டினன். உடனே இந்திரன் 'நீ செய்த ஸத்காரியங்களெல்லாம் இந்த மறுமொழியோடு க்ஷீணித்துவிட்டன. ஆகையால் உன்னை எனது ஸேவகர்கள் பூலோகத்தில் தள்ளிவிடுவார்கள், போகலாம்' என்று அவனை அங்கிருந்து தள்ளும்படி செய்தான்.

வினு 38.—அப்பொழுது யயாதி என்ன சொன்னன் ?

விடை.—யயாதி, அப்பொழுது 'துள்ளின மாடு போதிசுமக்கும்' என்ற பழமொழியின் கருத்தை உள்ளபடி அறிந்து கொண்டு, பரிதபித்து இந்திரனைநோக்கி 'எனக்கு கீழே விழும்படியான நிலைவந்தபோதிலும் ஸத்துக்கள் மத்தியிலேயே தங்கும்படி அநுக்ரஹிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க, இந்திரனும் சரி என்று ஒப்புக்கொண்டான்.

வினா 39.—யயாதி எங்கு வந்து விழுந்தான்?

விடை.—யயாதி பூமியிலே வந்து விழாமல் ஹோமப் புகையால் ஆகாயத்திலேயே நிருத்தப்பட்டான்.

வினா 40.—இந்த ஹோமத்தைச் செய்தவர்கள் யார்?

விடை.—அஷ்டகன், பிரதர்த்தனர், வஸுமனஸ், சிபி என்ற நால்வர்கள். இவர்கள் யயாதினுடைய பெண் வயிற்றுப் பேரர்கள். (இவர்களது விஷயத்தை ஆரண்ய உத்தியோக பர்வங்களில் விஸ்தாரமாய்ச் சொல்லப் போகிறோம்.)

வினா 41.—இப்பேரப் பிள்ளைகள் அப்பொழுது என்ன செய்தார்கள்?

விடை.—இவர்களில் ஒவ்வொருவரும் தாங்கள் செய்த புண்ணியபலத்தில் ஒவ்வொரு பாகம் யயாதிக்கும் கொடுத்தார்கள். ஆனால் சிபி மாத்திரம் தனதுபலன் முழுவதையும் கொடுத்தான். இப்படிக்கொடுத்த தருமத்தின் பலத்தால் இவ்வைவரும் ஸ்வர்க்கத்திற்கு திவ்ய ரதங்களில் சென்றார்கள். (சிபியின் மஹத்வம் ஆரண்யபர்வத்தில் சொல்லப் போகிறோம்.) பின்பு யயாதி ஸ்வர்க்கத்தில் ஸௌக்கியமாய் இருந்தான்.

வினா 42.—இந்தப் பூருவுக்குப் பின் முக்கிய அரசன் யாவன்?

விடை.—துஷ்யந்தன் இவனைப்பற்றி முன்னமேயே சொல்லியாய்விட்டது.

வினா 43.—பரதனுக்குப் பின் முக்கியமான அரசன் யாவன்?

விடை—ப்ரதீபன் என்ற அரசன், அவன் கங்கோத்தரையில் சிலகாலம் தபஸு செய்துகொண்டிருந்தான்.

வினா 44.—அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ப்ரதீபன் இவ்வாறு தபஸு செய்துகெண்டிருக்கையில் கங்காதேவி ஒருநாள் ஒரு யௌவன ஸ்திரீ உருக்கொண்டு அவனது வலது தொடையில் வந்து உட்கார, அரசன் கங்கையைநோக்கி "என்ன காரணத்தால் நீ இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

வினா 45.—அதற்கு கங்கை என்ன பதில் சொன்னாள்?

விடை.—"நான் உன்னை விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்று வந்தேன்" என்றாள்.

வினா 46.—அதற்கு அரசன் என்ன மறுமொழி சொன்னான்?

விடை.—"அந்த எண்ணத்தோடு வந்தால் நீ எனது இடது தொடையில் உட்கார்ந்திருக்கவேண்டும். நீ உட்கார்ந்த இடத்தில் பெண்ணும், மருமகளும் உட்காருவார்கள். ஆகையால் நான் உன்னை விவாஹம்செய்துகொள்ளமாட்டேன், ஆனால் எனது பிள்ளையை உன்னை விவாஹம் செய்துகொள்ளும்படி செய்கிறேன்," என்றான்.

வினா 47.—இவன் பிள்ளை பெயர் என்ன?

விடை.—இவன் பிள்ளைக்குச் சந்தனு வென்று பெயர். இவனது கை பட்டவர்களுக்கெல்லாம் ஸுகமுண்டான தால் இவனுக்கு இப்பெயர் வந்தது.

வினா 48.—தெய்வப் பெண்ணாகிய கங்கை இவனை விவாஹம் செய்து கொள்ள விரும்புவானேன்?

விடை.—முன் காலத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் மஹாவிசுவன் என்றொரு அரசன் இருந்தான். அவன் மஹா கீர்த்திமான். ஒருகாலத்தில் தேவதைகள் யாவரும் பிர்ம்மாவைத் தரிசிக்க வந்திருந்த ஸமயத்தில், அங்கே இந்த அரசனும் போய்ச்சேர்ந்தான். கங்காதேவியும் பிர்ம்மாவை தரிசிக்க அங்கு வந்திருந்தாள். அப்பொழுது அகஸ்மாத்தாய் ஒரு காற்று வீசி, கங்கையின் மேல்வஸ்திரத்தை ஒதுக்கவே, உடனே ஸகல தேவதைகளும் பரஸ்திரீகளை இங்ஙிலையில் பார்ப்பது பாபமேதுவென்று தமது தலையைக் குனிந்து கொண்டார்கள். இந்த மஹாவிசுவன் மாத்திரம் மிகுந்த ஆவலோடு கங்கையைப்பார்த்தான். கங்கையும் அவ்வாறே செய்தாள். இதற்காகப் பிர்ம்மா இவனை 'நீ மறுஜென்மமெடுத்தபின்புதான் என் உலகத்திற்கு வரவேண்டும்' என்று சபித்தார். பிறகு கங்கையைப்பார்த்து 'நீயும் பூலோகத்திற்குப் போய் மறு ஜன்மமெடுக்கவும்' என்று சபித்தார்; பரஸ்திரீகளைக் கண்ணெடுத்து நோக்கல் பாபம் என்று நன்றாய்த் தெரிந்துகொண்ட அரசன், உலகத்தில் ப்ரதீபனது பிள்ளையாகிய சந்தனுவாகப் பிறந்தான். இந்த ஸம்பந்தம் முன்னமே இருந்ததினால் சந்தனுவை கங்கை விவாஹம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டாள்.

வினா 49.—சந்தனுவை கங்கை எப்பொழுது எவ்வாறு விவாஹம் செய்துகொண்டாள்?

விடை.—சந்தனு ஒருநாள் வேட்டைமார்க்கமாக கங்கைக்கரையில் வந்தகாலத்தில், தகப்பன் சொன்னபடி கங்கையைக் கண்டான். உடனே தனக்கு பத்னியாக வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவளும் பின்வருமாறு சொன்னாள்.

"நான் உங்களைக் கணவனாக ஒப்புக்கொள்ளுகிறேன். அனால் நான் செய்யும் சில விஷயம் தங்களுக்குத் தகாதனவாய்த் தோன்றிய போதிலும் என்னைத் தடுக்கக் கூடாது. நீங்கள் சொல்லியபடி யான் நடக்கக் காத்திருக்கிறேன். என்னைச் சில விஷயங்களில் தடுப்பீர்களானால், உடனே தங்களைவிட்டுப் போய்விடுவேன்" என்றாள். இதற்கு அரசன் இசைந்து அப்பெண்ணை விவாஹம் செய்துகொண்டான்.

வினு 50.—அப்படித் தகாதனவாய்த் தோன்றும்படியாக என்ன காரியங்கள் இப்பெண் செய்துகொண்டு வந்தாள்?

விடை.—ஸகல விதத்திலும் அரசனுக்கு ஹிதத்தையே இவள் செய்துகொண்டு வந்தாள். ஆயினும், அவளிடத்தில் பிறக்கும் பிள்ளைகளை மாத்திரம் உடனே அவள் கங்காநதியில் தூக்கி எறிந்துகொண்டு வந்தாள். இந்தக் கொடிய காரியத்தை மாத்திரம் இப்பெண் தவறாது செய்துவந்தாள்.

வினு 51.—எவ்வளவு காலம் இப்படி இவள் செய்து வந்தாள்? சந்தனு எவ்வாறு இதைப் பொறுத்து வந்தான்?

விடை.—ஏழுபிள்ளைகள் வரையில் இவள் இப்படிக் குரூரமாய்க் கங்கையில் எறிந்து விட்டாள். இதுவரையில் "இப்பெண், எங்கே தடுத்துப் பேசினால் கோபித்துக் கொண்டு போய்விடுவாளோ, நமக்கு ஸுகம் கெட்டுப் போகுமே" என்று நிரம்பவும் சந்தனு பொறுத்துப் பார்த்தான். அப்பொழுது எட்டாவது பிள்ளை பிறந்தது. முன்போலவே இதையும் கங்கையில் எறியப் போனாள்.

வினு 52.—கங்கையில் எறிந்தாளா? எறியவில்லையா? பின்பு இவள் என்ன செய்தாள்?

விடை.—இவ்வளவு நாளும் மிகுந்த கஷ்டத்தோடு பொறுத்த இந்த அரசனுக்கு இப்பொழுது ஸகிக்கமுடியாத துக்க முண்டாய் விட்டது. "நமது வம்சத்திற்கு ஒரு பிள்ளை கூடவா இருக்கக்கூடாது" என்று எண்ணிக்கொண்டு அவளை "கங்கையில் எறியாதே" என்று தடுத்தான். உடனே அவள் அதை நதியில் எறியாது, "ஆனல் எனக்கு நீர் கொடுத்த வாக்குப்படி நான், உம்மை இப்பொழுது விட்டுப் போகவேண்டியதுதான். இப்பிள்ளையை நான் வைத்து வளர்த்து கொஞ்ச காலத்திற்கெல்லாம் உம்மிடத்தில் கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்று சொல்லி விட்டுக் கங்கைநதிக்குள் மறைந்துவிட்டாள்.

வினு 53.—கங்கை ஏழு பிள்ளைகளையும் கொல்லுவானேன்? எட்டாவது பிள்ளையை மாத்திரம் இப்படி வளர்ப்பானேன்?

விடை.—மஹாவிசுவனுக்குச் சாபம் கிடைத்தபின்பு, கங்கை திரும்பிவரும் வழியில், அஷ்டவஸுக்களைக் கண்டாள். அவர்கள் முகம் வாட்டமாயிருப்பது கண்டு, அதற்குக் காரணம் அவர்களுக்கு பூமியில் மனிதராய்ப் பிறக்கும்படி வஸிஷ்ட சாபம் வந்திருப்பதாகத் தெரிந்துகொண்டாள். அப்பொழுது வஸுக்கள் கங்கைக்குள்ள லோக ஸம்பந்தத்தையும் தெரிந்துகொண்டு, தாங்கள் எட்டுப் பேர்களும் எட்டுப் பிள்ளைகளாக கங்கைக்கே பிறப்பதாக ஒத்துப் பேசிக் கொண்டார்கள். அவர்களில் ஏழு வஸுக்கள் குற்றங்குறைவாயிருந்ததால் தாங்கள் பிறந்ததும் தங்களைக் கங்கையில் எறிந்து விடும்படி அவளைப் பிரார்த்தித்தார்கள். "எட்டாவது வஸுமாத்திரம் பூலோகத்தில் இருக்கட்டும், அவனே இக்குற்றங்களுக்குக் காரணம். ஆனல் அவன் ஸம்ஸார விருத்தி செய்யமாட்டான்.

தான் இருக்கவேண்டிய காலம் உலகத்திலிருந்து, எங்களிடம் திரும்பி வருவான்" என்றார்கள்; அதற்குக் கங்கை இசைந்து முன்சொன்னபடி ஏழுபேரை கங்கையில் எறிந்து, எட்டாவது பிள்ளையை வளர்த்து வந்தாள்.

வினு 54.—அஷ்டவஸுக்களுக்கு என்ன காரணத்தால் இச் சாபம் வந்தது?

விடை.—அந்த அஷ்டவஸுக்களில் ஒருவன் தனது பெண்சாதியைத் திருப்திசெய்ய, மற்றைய வஸுக்களுடைய ஸஹாயத்தால், வஸிஷ்டரது காமதேனுவைக் கன்றோடு திருடி விட்டான். இதை அறிந்த வஸிஷ்டர் முன்சொன்ன சாபத்தைக் கொடுத்தார்.

வினு 55.—சந்தனுவின் பிள்ளையின் பெயர் என்ன?

விடை.—அப்பிள்ளைக்குக் காங்கேயன் என்றும், தேவவிருதன் என்றும் பெயர். இவன் தகப்பனைவிட மிகச் சிறந்த வனுப் விளங்கக்கூடியவனுய்இருந்தான்.

வினு 56.—சந்தனு பின்பு எவ்வாறு தனது குமாரனை அடைந்தான்?

விடை.—தனது திவ்ய இராஜ்யத்தில் மனுநெறிதவறுது செங்கோல் செலுத்தும் ஒருநாள், சந்தனு ஒரு கரடியை வேட்டையாடும்படிநேரிட, அதைத் துரத்திக்கொண்டு கங்கைக்கரை வரைசென்று, அங்கு அதை சங்கரித்தான். அப்பொழுது கங்கையில் மிகவும் ஜலம் குறைந்திருப்பதை நோக்கி "இதென்ன அற்புதம்! கங்கையில் கூட இப்படி நீர் குறையும்படி வந்ததே!" என்று ஆச்சரியத்தோடு சுற்றிலும் பார்த்தான். அங்கு திவ்ய தேஜஸ்ஸோடு ஒருபிள்ளை, கங்கைக்குக் குறுக்கே பாண அணை போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டான். அப்பொழுது

கங்கை வெளியில் வந்து பிள்ளையை அரசனிடம் ஒப்புவித்தாள்.

வினா 57.—சந்தனு மறுபடியும் விவாஹம் செய்துகொண்டாரா? யாரை? எப்படி?

விடை.—ஒருநாள் வேட்டைக்குப் போகும்போது காட்டில் யோஜனகந்தி அல்லது ஸத்தியவதி என்ற பெயருடைய ஒரு செம்படக்கன்னிகையைப் பார்த்து மிகுந்த கஷ்டத்தின்பேரில் இவர் அவளை விவாஹம் செய்துகொண்டார்.

வினா 58.—இந்த ஸத்தியவதி என்பவள் யார்? அழகான கன்னிகை எப்படி செம்படவனுக்குப் பெண்ணானாள்?

விடை.—இவள் உபரிசிரவஸு என்ற அரசனுடைய அம்சத்தால் மீனின் வயிற்றில் தங்கும்படி நேரிட்டுப் பிறந்தவள். இவளை ஒரு செம்படவன் மீனின் வயிற்றைப் பிளந்து எடுத்தமையால் இவள் செம்படவர் அகத்தில் அவரது பெண்போல் வளர்ந்தனள்.

வினா 59.—இவளுக்குத் துர்நாற்றமல்லவா இருக்க வேண்டும், அப்படி இருக்க இவளுக்கு யோஜனகந்தி என்ற பெயர் எப்படிவந்தது?

விடை.—இவள் சிறு கன்னிகையாய் யமுனாநதியில் ஓடம் ஓட்டிக் கொண்டிருக்கும்போது பராசர மஹாமுனி அங்கு வர அவரது அநுக்ரஹத்தால் இவளுக்கு இந்த நற்கந்தம் வந்தது.

வினா 60.—பராசரர் எதற்காக இந்த வரமளிக்கொடுத்தார்?

விடை.—லோக உபகாரார்த்தம் ஒரு சுப லக்கினத்தில் ஒரு பிள்ளையை உண்டாக்க எண்ணிப் பராசரர் வரும்பொழுது யமுனா நதியைத் தாண்ட இங்கு வந்தார். யமுனா

நதி மத்தியில் போகும்பொழுது அவர் உத்தேசித்த லக்கினம் வந்தது கண்டு, இப்பெண்ணைத் தம் அநுக்ரஹத்திற்குப் பாத்திரமாகும்படி கேட்க, அவள் ஒப்புக்கொண்டதால் அங்கேயே ஒரு திட்டில் வியாஸ பகவான் உண்டானர். இப்படி அந்த ஸமயத்தில் அவருக்கு இசைந்ததற்காக இவ்வரான இந்தமுனி அவளுக்குக் கொடுத்தார்.

வினு 61.—இப்படி இவளுக்கு ஒரு பிள்ளை முன்னமேயே பிறந்திருக்குமானால் எப்படி இவளைச் சந்தனு விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணினார்?

விடை.—பராசரது அநுக்ரஹத்தால் முன் இருந்ததுபோல இவள் கன்னிகையாய் விட்டபடியால் இவளுக்கு ஒரு தோஷமும் இல்லாமற் போய் ஸாதாரணமான கன்னிகையாகவே இருந்தாள். ஆகையால்தான் ஸன்மார்க்கரான அரசரும் இவளை விவாஹம் செய்து கொள்ள எண்ணினர்.

வினு 62.—இவளை விவாஹம் செய்துகொள்வதற்குமுன் அரசனுக்கு என்ன கஷ்டமுண்டாயிற்று?

விடை.—அரசன் ஸத்தியவதியின் பிதாவை விவாஹ விஷயமாய்க் கேட்க, அவன் "என் பெண்ணின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு நீ முடிசூட்டுவாயானால், நான் இந்தப் பெண்ணை உனக்கு விவாஹம் செய்து கொடுக்கிறேன்" என்று சொன்னன். அரசனால் இதற்கு எப்படி இசைய முடியும்? காங்கேயனுக்கல்லவோ இராஜ்யம் நியாயமாய்க் கொடுக்கவேண்டும்? ஆதலால் மிக துக்கத்தோடு அரசன் தனது அரண்மனைக்குப் போகும்படி நேரிட்டது.

வினா 63.—இந்தக் கஷ்டம் எப்படி நிவர்த்தியாய் சந்தனு ஸத்தியவதியை கல்யாணம் செய்துகொண்டார்?

விடை.—இப்படித் தகப்பன் துக்கத்தோடு வந்தான் என்பதைக் கேட்ட காங்கேயன் ஸத்தியவதியின் பிதாவிடம் சென்று "நான் ராஜ்யத்தை விரும்புவதில்லை ஸத்தியவதிக்குப் பிறக்கும் பிள்ளைக்கே கொடுக்கிறேன்" என்று சபதம் செய்தார். அப்பொழுது அந்தச் செம்படவன், "நீ விரும்பாவிட்டால், உனது புத்திரர்கள் விரும்புவார்களே, அப்பொழுது கலஹம் நேருமே, அதனால் எனக்கு என்ன லாபம்" என்றான். அப்பொழுது காங்கேயன் மஹா கோரமான பிரதிக்ஞையைச் செய்தான். "நான் இராஜ்யத்தையும் விரும்புவதில்லை. நான் விவாஹத்தையும் செய்து கொள்ளுவதில்லை. இப்படியே ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாகவே இருப்பேன்" என்றான். இதனால் இவருக்கு **பீஷ்மர்** என்ற பெயர் வந்தது. இதன் பின்பு ஸத்தியவதியை செம்படவன் அரசனுக்கு விவாஹம் செய்து கொடுத்தான்.

வினா 64.—சந்தனுவிற்கு ஸத்தியவதியிடம் எத்தனை புத்திரர்கள் பிறந்தார்கள்? அவர்களின் பெயர் என்ன? அவர் எப்படி வாழ்ந்தார்கள்?

விடை.—இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே சித்ராங்கதன் என்றும் விசித்திரவீர்யன் என்றும் பெயர். அவர்களில் முதல்பிள்ளையைச் சித்ராங்கதன் என்ற கந்தர்வன், தன்பெயரை வஹித்த மனிதன் பூலோகத்தில் உயிரோடிருக்கலாமா வென்று அஹங்காரம்கொண்டு ஸம்ஹாரம் செய்தான். ஆதலால் ஒரு பிள்ளை மாத்திரம் உயிரோடிருந்தான்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

வினு 65.—இவனுக்கு விவாஹம் நடந்ததா ? அப்பொழுது நடந்த விசேஷம் என்ன ?

விடை.—பீஷ்மர் காசி ராஜன் புத்திரிகளது ஸ்வயம்வரத்தில் சென்று அவனது புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை, அம்பை என்பவர்களை, வீரர்கள் மத்தியில் இரதத்தில் ஏற்றிக்கொண்டு விசித்திரவீர்யனுக்குப் பார்யைகளாகச் செய்ய வேண்டுமென்று கொண்டுவர, அப்பொழுது தன்னை எதிர்த்த அரசர்களை வென்றார். வரும் வழியில் அம்பை, தான் வேறொரு ராஜனை மனதில் பர்த்தாவாக வரித்ததாகச்சொல்ல பீஷ்மர் அவளுக்குப் போகும்படி அநுமதிகொடுத்தார். (இவளால் நடந்த கலஹத்தை உத்தியோக) பர்வத்தில் சொல்லப்போகிறோம். அம்பாலிகை, அம்பிகை ஆகிய இவர்களை விசித்திரவீர்யனுக்குப் பீஷ்மர் விவாஹம் செய்வித்தார்.

வினு 66.—விசித்திரவீர்யன் எவ்வளவு காலம் ஸுகமாய் வாழ்ந்தான் ? அவனுக்கு எத்தனை பிள்ளைகள் ?

விடை.—அவன் விவாஹமாகி ஏழு வருஷகாலம் ஜீவித்திருந்து பின்பு க்ஷயரோகத்தால் இறந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை கூட இல்லை.

வினு 67.—அப்பொழுது குல விருத்திக்கு என்ன ஏற்பாடு செய்தார்கள் ?

விடை.—ஸத்யவதி முதலில் பீஷ்மரை விவாஹம் செய்துகொண்டு குலவிருத்தி செய்யும்படி அநுமதி கொடுத்தும், "என் பிரம்மசரிய விருதத்திற்கு விரோதமாய் ஒன்றும் செய்யமாட்டேன்" என்று அவர் மறுத்து விட்டார். பின்பு இம்மாதிரியான ஆபத்துக்காலங்களில் நல்ல சிறந்த மஹான்கள் அநுக்ரஹத்தால் இராஜபத்தினி குழந்தை

களை அடையலாம் என்று பீஷ்மர் நியாயத்தை எடுத்துக் காட்டத் தனது புத்திரனுகிய வியாஸரை ஸத்யவதி தியானித்தாள். மாதாவினது வேண்டுகோளிற்கிசைந்து வியாஸரும் அநுக்கிரஹிப்பதாக ஒப்புக்கொண்டார்.

வினு 68.—வியாஸர் அனுக்ரஹத்தால் யார் யாருக்கு எவ்விதமான புத்திரர்கள் உண்டானார்கள்? ஏன் அப்படி உண்டானார்கள்?

விடை.—முதலில் அம்பிகைக்கு அநுக்ரஹிக்கும்பொழுது அவள் பயத்தால் கண்ணை மூடிக்கொண்டமையால் அவளிடத்தில் அந்தகனுகிய திருதராஷ்டிரன் பிறந்தான். பின்பு அம்பாலிகைக்கு அநுக்ரஹிக்கும்பொழுது அவள் பயத்தால் வெளுத்துப் போனமையால் அவளுக்குப் பாண்டு என்னும் வெளுத்த தேகமுடைய புத்திரன் உண்டானன். 'கடைசியாய் நல்ல புத்திரன் ஒருவனை அம்பிகையிடத்தில் உண்டாக்கவேண்டும்' என்று ஸத்யவதி வியாஸரைப் பிரார்த்திக்க, அவர் அப்படியே ஒப்புக் கொண்டு வந்தார். அம்பிகை, தான் வராது தனது தாதியை அனுப்ப, அவளிடத்தில் மஹாதர்மாத்மாவாயும், புத்திமானுயும், யமதர்மரது அம்சாவதாரமாயும் உள்ள **விதுரர்** உண்டானார்.

வினு 69.—பமதர்ம ராஜா சூத்திர ஸ்திரீ வயிற்றில் அம்சாவதாரம் செய்யவேண்டிய காரணம் என்ன?

விடை.—பமதர்மனுக்கு இவ்வாறு பிறக்கவேண்டும் என்று மாண்டவ்ய ரிஷி சாபம் நேர்ந்தமையால், இப்படி அவதாரம் செய்யும்படி நேரிட்டது.

வினு 70.—மாண்டவ்ய ரிஷி யமதர்மனைச் சபிப்பானேன்?

விடை.—இவரை ஒருகாரணத்தால் அரசன் கழுவேற்ற, அதிலிருந்து பின்பு அரசனே அவரை வெளியிலெடுத்துவிட முடியாமல் கழுமரத்தை மேலேயும், கீழேயும் அருத்துவிடச் செய்தான். இவர் தேகத்துள் இந்த இரும்பாணி இருந்தமையால் ஆணிமாண்டவ்யர் என்று பெயர்பெற்ற ரிஷி, தாம் செய்த எந்தப் பாபத்திற்காக இப்படி கழுவேறும்படி வந்ததென்று யமனைப் போய்க் கேட்டார். அதற்கு அவன் "நீர் ஏழு வயதில் தட்டாரப் பூச்சி முதலியவைகளை முட்களால் குத்தி வேடிக்கை பார்த்து வந்தீர். ஆகையால் இந்தக்கஷ்டம் உமக்கு வந்தது" என்றான். "சிறுவர் செய்த பாபம், தாய் தகப்பனுக்கென்று அறியாமல் என்னை வீணாய் கஷ்டப் படுத்தினையே, ஆதலால் நீ சூத்திரனாய்ப் பிறக்கக் கடவாய்" என்று இவர் சாபங் கொடுத்தார்?

வினு 71.—ரிஷியை யாது காரணத்தால் அரசன் கழுவேற்றினான்?

விடை.—ஒருநாள் மாண்டவ்ய ரிஷி தமது ஆசிரமத்தில் ஸமாதியிலிருக்கும்பொழுது சில திருடர்கள் ஸேவகரால் துரத்தப்பட்டு ரிஷி யிருக்குமிடம் வந்து ஸாமான்களை எறிந்து விட்டு அங்கேயே ஓரிடத்தில் ஒளிந்தார்கள். ஸேவகர்கள் வந்து ரிஷியை கேள்விகேட்க ரிஷி மௌனமாய் இருந்ததையும், பக்கத்தில் திருட்டுப்போன வஸ்துக்கள் இருப்பதையும் கண்டு, ஆச்ரமத்தை சோதிக்க ஆரம்பிக்க, திருடர்கள் அகப்பட்டார்கள். உடனே ரிஷியை ஒரு திருடனாக வெண்ணி அரசனிடம் அவர்கள் கொண்டுபோய்விட்டு அவன் ஆக்ஞையின் பேரில் எல்லோரையும் கழுவேற்றி விட்டார்கள்.

வினா 72.—திருதராஷ்டிரன் முதலியவர்களுக்கு யார் யார் பெண்சாதிக்களாய் அமைந்தார்கள் ?

விடை.—திருதராஷ்டிரனுக்குக் காந்தார தேசத்தரசன் பெண்ணும், சகுனி என்பவனது தங்கையுமாகிய காந்தாரி என்பனவளும், பாண்டு விற்கு குந்திபோஜராஜனது தத்துப் பெண்ணுகிய குந்தியும், மத்திர தேசாதிபதியாகிய சல்லியனது ஸஹோதரியாகிய மாத்ரியும், பெண்சாதிகளாய் அமைந்தார்கள்.

வினா 73.—இம்மூன்று பெண்களுள் யாரிடத்தில் என்ன முக்கிய விசேஷம் இருந்தது ?

விடை.—குந்தி யிடத்தில் ஒரு மந்திர மிருந்தது. அதை எந்த தேவதையை உத்தேசித்து உச்சரித்தாலும் அந்த தேவதை வந்து விடும். அவனது அநுக்ரஹத்தால் அவள் பிள்ளையை அடையும் சக்தி உடையவளாக இருந்தாள்.

வினா 74.—இது இவளிடம் இருப்பதற்குக் காரணம் என்ன?

விடை.—இவள் கன்னிகையாய் தனது தத்துப் பிதா வீட்டிலிருக்கும்போது ஒருநாள் தூர்வாஸ மஹரிஷி சாதுர்மாஸ்ய விருதத்திற்கு அங்கே வந்தார். அப்பொழுது குந்தியைச் சிச்ரூஷை செய்யும்படி அரசன் ஏவ, அவள் இந்த மஹா கோபிஷ்டருக்கு பூரண திருப்தி வரும்படி நடந்துகொண்டாள். அந்த ரிஷி ஸந்தோஷத்தால் இந்த மந்திரத்தை குந்திக்கு உபதேசித்தார்.

வினா 75.—குந்தி இந்த மந்திரம் கிடைத்ததும் என்ன செய்தாள் ?

விடை.—அது சக்தி உடையதா அல்லவா என்று பரீக்ஷை பார்க்க ஸூர்யனை உத்தேசித்து ஜபிக்க, அவர் அநுக்ரஹத்தால் இவளுக்குக் கன்னியாப் பருவத்திலேயே

கர்ணன் என்ற ஒரு பிள்ளை பிறந்தது. ஸூர்யன் சொல்லியபடி அந்தப் பிள்ளையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டாள். பின்பு ஸூர்யன் அநுக்ரஹித்தால் இவளுக்குக் கன்னியாப் பருவம் வந்துவிட்டது. (இந்தக் கர்ணன் கதையை சாந்தி பர்வத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்போகிறோம்.)

வினு 76.—இவளுக்குக் குந்திபோஜன் தத்துப் பிதாவென்று சொல்லியிருக்கிறதே, இவள் சொந்த பிதா யார்?

விடை.—இவள் யயாதி பிள்ளையாகிய யதுவின் வம்சத்தில் பிறந்த சூராராஜன்பெண்ணும், ஜகந்நாதரான கிருஷ்ண பகவான் பிதாவாகிய வஸுதேவரது ஸஹோதரியுமாம்.

வினு 77.—குந்திக்கு இம்மந்திரங்களை உபயோகிக்கும் ஸமயம் வந்ததா? எப்படி?

விடை—வந்தது. கிந்தம ரிஷி சாபத்தால் பாண்டுவுக்குத் தனது பெண்சாதிகளைத் தொட முடியாமல் போய்விட்டது. அப்பொழுது வம்ச விருத்திக்கு இந்த மந்திரத்தைப் பாண்டுவின் வேண்டுகோளின்படி குந்தி உபயோகித்தாள்.

வினு 78.—கிந்தம ரிஷி ஏன் பாண்டுவை சபித்தார்? எப்பொழுது?

விடை.—மூன்று பிள்ளைகளுள் பாண்டுவே இராஜனுகி திக்விஜயம் செய்தபின்பு ஒருநாள் வேட்டைக்குப் போன விடத்தில் ஓர் ஆண்மானும், பெண்மானும் விளையாடுவதைக் கண்டு அவைகளை அம்பெய்து கொன்றான். அவை நிஜ மான்கள் அல்ல. ஒரு ரிஷியும் ரிஷி பத்தினியும் அந்த ரூபத்தோடு விளையாடிக்கொண்டிருந்தார்கள். தாம் விளையாடிக்கொண்டிருக்கும்போது தம்மைத் தெரி

யாது பாண்டு அடித்ததால் "நீயும் உன் மனைவியோடு இப்படி விளையாடினால் உனக்கும் மரணம் வரட்டும்" என்று அந்த ரிஷி சபித்தார்.

வினா 79.—இந்தச் சாபம் கிடைத்தவுடன் பாண்டு என்ன செய்தான்?

விடை.—உடனே ராஜ்யத்திற்குத் திரும்பி வராமல் வானப் பிரஸ்தாசிரமியாய் பெண்சாதிகளோடு காட்டிலேயே இருந்து விட்டான்.

வினா 80.—இவன் குந்தியை மந்திரம் உபயோகிக்கும்படி சொல்லக் காரணமென்ன?

விடை.—பாண்டு காட்டில் வாஸம் செய்யுங்கால் அங்கு அநேக ரிஷிகள் மேருமலையில் இருக்கும் பிரம்மஸபைக்குப் போகும் வழியில் வந்து தங்கினார்கள். அவர்களோடு கூடப் பாண்டுவும் போக யத்தனிக்கையில், பிள்ளையில்லாதவர்கள் அங்கு வரக்கூடாதெனச் சொல்லி அவர்கள் பாண்டுவைத் தடுத்து விட்டுப் போயினர். உடனே பாண்டுவிற்குப் பிள்ளை வேண்டுமென்று ஆசைவர, குந்தியோடு ஆலோசித்து அவளை மந்திரத்தை உபயோகிக்கும்படி செய்தான்.

வினா 81.—குந்தியின் மந்திரபலத்தால் எவ்வெப்பிள்ளைகளைப் பாண்டு அடைந்தான்?

விடை.—குந்தியின் மந்திர பலத்தால் அவளிடத்தில் தர்மபுத்திரர், பீமன், அர்ஜுனன் என்பவர்கள் முறையே தர்மராஜன், வாயு, இந்திரன் என்பவர்களுடைய அநுக்ரஹத்தால் உண்டானார்கள். பின்பு குந்தி பாண்டுவின் வேண்டுகோளின்படி மாத்ரிக்கு இதை யுபதேசித்து அவளிடத்தில் நகுல ஸஹாதேவர் என்ற இரட்டைப்

பிள்ளைகள் அசுவனி தேவதைகள் அநுக்ரஹத்தால் உண்டாகும்படி செய்தாள்.

விஞ 82.—திருதராஷ்டிரனுக்கு எத்தனை குழந்தைகள் ?

விடை.—துர்யோதனன் முதலிய 100-பிள்ளைகளும், துச்சலை என்னும் கடைசிப் பெண்ணும் ஆகிய 101-குழந்தைகள் திருதராஷ்டிரனுக்கு உண்டானார்கள்.

விஞ 83.—இவ்வாறு அநேக குழந்தைகள் காந்தாரிக்குப் பிறக்கக் காரணமென்ன ?

விடை.—வியாஸர் ஒருநாள் மிகப்பசியோடு அரண்மனைக்கு வர அவருக்குத் தாமதிக்காமல் காந்தாரி உணவளித்தாள். உடனே வியாஸர் 'உனக்கு 100-குழந்தைகள் உண்டாகட்டும்' என்று அநுக்ரஹித்தார். இதனால் இவள் இவ்வளவு குழந்தைகளை அடைந்தாள்.

விஞ 84.—இவளுக்குக் குழந்தைகள் பிறந்த விதம் எப்படி ? 100-குழந்தைகள் உண்டாக வேண்டியிருக்க 101-குழந்தைகள் உண்டாவானேன் ?

விடை.—கொஞ்ச காலத்திற்கெல்லாம் காந்தாரி கர்ப்பந் தரித்தாள். ஆனால் இரண்டு வருஷம் வரையில் குழந்தை ஒன்றும் வெளி வரவில்லை. இதற்குள் காட்டில் தேவானுக்ரஹத்தால் குந்திக்கு ஒரு குழந்தை பிறந்ததெனக் கேள்விப்பட்டதும், பொறுமையால் ஒருவருக்குந் தெரியாமல் தனது வயிற்றை இடித்துக்கொள்ள, உடனே அவளது கர்ப்பம் ஒரு பெரிய மாம்ஸபிண்டமாய் வெளியில் வந்து விழுந்தது. இதை வியாஸர் 100 பிரிவாகப் பிரித்து 100 பாத்திரத்திலிட்டு மந்திரித்து வைத்துக் கொண்டு வருகையில், காந்தாரிக்கு 101-வது ஒரு பெண் உண்டானால் நலமாயிருக்கும் என்ற எண்ணம்வர வியா

ஸர் இதை உணர்ந்து 101-வது ஒரு சிறு துண்டு மீதி வரும்படி பிரித்து 101-பாத்திரங்களி லிட்டார். சில காலத்திற்கெல்லாம் இவைகள் 100-பிள்ளைகளும், ஒரு பெண்ணுமாக மாறின.

வினா 85.—இவர்கள் உண்டாகும் காலத்தில் என்ன குறிகள் காணப்பட்டன? இவர்களில் முக்கியமானவர்கள் பெயர்களைக் கூறுக? இவர்களுக்குக் கௌரவர் எனப் பெயர் வரக் காரணமென்ன?

விடை.—முதற்பிள்ளை உண்டாகுங்கால் அநேக அபசகுனங்கள் உண்டாயின. இவைகளைக் கண்டதும் விதுரர் முதலிய மஹான்கள் இம்முதல்பிள்ளையை ஸமுத்திரத்தில் எறிந்து விட்டால், பரதவம்சத்திற்கு க்ஷேமமுண்டாகுமெனப் புத்திகூற, திருதராஷ்டிரனுக்கு இப்படிச் செய்ய மனம் வரவில்லை. இதுபோலவே, இந்த 101-பிள்ளைகள் உண்டாகும்பொழுதும் அபசகுனங்கள் உண்டாயின. இவர்களில் முக்கியமானவர்களின் பெயர்கள்: துர்யோதனன் முதல்பிள்ளை, துச்சாஸனன் இரண்டாவது பிள்ளை, விகர்ணன், துச்சலை (கடைசிப்பெண்), ஆகிய இவர்களே. பரதவம்சத்தில் குரு என்ற ஒரு அரசனிருந்தான். இவர்கள் அவன் வம்சத்திற் பிறந்தவராகையால் இவர்களுக்கு கௌரவர் எனக் காரண விடுகுறிப்பெயர் கிடைத்தது.

வினா 86.—திருதராஷ்டிரனுக்கு வேறு பிள்ளைகளுண்டா?

விடை.—இவனுக்கு ஒரு வைசியப் பெண்ணிடத்தில் பிறந்த யுயுத்ஸு என்றொரு பிள்ளை உண்டு.

வினா 87.—பாண்டவர்கள் பிறக்குங்கால் என்ன விசேஷங்கள் நடந்தன?

விடை.—தர்மபுத்திரர் பிறந்ததும் உலகமே ஸந்தோஷிப்பது போல் நற்சகுனங்கள் காணப்பட்டன. அசரீரிவாணி தர்மபுத்திரரது நற்குண விசேஷங்களைப் புகழ்ந்து கூறியது. பீமன் பிறந்ததும் அசரீரிவாணி அவனது பலத்தைப் புகழ்ந்து பேசியது. இவன் பிறந்தவுடன் காட்டில் ஒருவேங்கை உறுமு, தன்மடியில் இருக்கும் குழந்தையை மறந்தவளாய், குந்தி அதிக பயத்தோடு எழுந்திருந்தாள். குழந்தை பீமன் கற்பாறையில் விழுந்தான். அவன் விழுந்ததும் கற்பாறை பொடிப்பொடியாக சிதறிப்போக, இந்த சப்தத்தைக் கேட்டு வந்த வேங்கை பயந்தோடி விட்டது. உடனே பீமனது பலம் எத்தன்மையது என்று பாண்டுவிற்கு விளங்கியது. அர்ஜுனன் பிறந்ததும் ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி சொரிந்தன. தேவதுந்துபி ஆர்த்தன. அசரீரிவாணி அர்ஜுனனது பிரதாபத்தைப் புகழ்ந்து கூறியது. நகுலஸஹாதேவர்கள் பிறந்தபொழுதும் இதுபோன்ற அசரீரிவாணி உண்டாயிற்று.

வினு 88.—இப்பஞ்ச பாண்டவர்கள் உண்டானபிறகு பாண்டுவின்கதி என்னமாயிற்று?

விடை.—வஸந்தகாலம் வர, குந்தி குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வெளியே போயிருந்த காலத்தில், பாண்டுவும், மாத்ரியும் உல்லாஸமாய் விளையாடி வந்தார்கள். மாத்ரி பாண்டுவிற்குக் கிந்தமரிஷியின் சாபத்தைப்பற்றி ஞாபகப் படுத்தியும், பாண்டு அதிக ஸந்தோஷமாய் இருந்தபடியால் ஒன்றுந்தோன்றாது தனது மனைவியோடு ஸுகமாய் விளையாடி வந்தான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ரிஷியின் சாபப்படி பாண்டு மரணமடைந்தான்.

வினா 89.—பின்பு பாண்டுவின் பெண்சாதிகள் என்ன செய்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—குந்தி தான் உடன்கட்டை ஏறுவதற்கு வேண்டிய ஆதாரங்களை எடுத்துக்காட்ட, மாத்ரியும் தான் அவ்வாறு செய்வதற்குத் தகுந்த ஆதாரங்களை எடுத்துக் காட்டினாள். கடைசியில் மாத்ரிசொல்வதே நியாயமென்று தோன்ற குந்தி அவளுக்கு உடன்கட்டை ஏற அனுமதி கொடுத்தாள். உடனே மாத்ரி பாண்டுவின் தேகத்தோடு ஸஹகமனஞ்செய்து இறந்தாள். உடனே குந்தியையும் அவளது பிள்ளைகளாகிய பாண்டவர்களையும் அங்கு வஸித்துக்கொண்டிருந்த ரிஷிகள் தேற்றி ஹஸ்தினபுரம் என்ற திருதராஷ்டிரன் ராஜ்யமாளும் பட்டணத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு பாண்டுவிற்கும் மாத்ரிக்கும் அபரக் கிரியைகள் கிரமப்படி நடந்தேறின.

வினா 90.—பாண்டுவின் மரணத்தால் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கும் ஸத்யவதியை வியாஸர் எவ்வாறு தேற்றினார்? பின் என்னநடந்தது?

விடை.—"ஸுகாலம் யாவும் முடிந்துவிட்டன. இனிமேல் உங்களுக்குப் பாண்டவ கௌரவரது சண்டையால் துக்கம் அதிகரிக்குமே ஒழிய, ஸுகத்திற்கு இடமில்லை" என்று வியாஸர் ஸத்யவதிக்கு எடுத்துரைத்தார். உடனே இவள் இதைத் தனது மருமகள் இருவருக்கும் உரைக்க, மூவரும் வனம்சென்று, துறவுபூண்டு, கடவுளைத் த்யானித்து, தமது தேகங்களை நழுவவிட்டு, ஸ்வர்க்கமடைந்தனர்.

வினு 91.—கௌரவ பாண்டவர்கள் சிறுவர்களாய் இருக்கும் பொழுது எவ்வாறிருந்தனர்? இதனால் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—குழந்தைகள் அனேக அற்புத விளையாட்டுக்களை விளையாடிவந்தன. இவர்களில் பீமன் ஒருவன் மாத்திரம் கௌரவர் 100-பெயர்களை தனது பல விசேஷத்தால் ஸதா தோல்வி யடையும்படிசெய்து வந்தான். மேலும் இவன் வேகமாய் நடந்து வந்தால் கௌரவரில் சிலர் கீழே விழுந்துவிடுவார்கள். இவைகளால் துர்யோதனதி யருக்கு பீமனிடம் பொறுமை உண்டாக, அவனை எப் படியாவது ஒழிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். இதற்காகவே துர்யோதனதியர் கங்கையில் **பிரமாண கோடி** என்ற ஆழமான மடுவின் கரையில் ஜலக்ரீடா மண்டபம் ஒன்று கட்டி, அதில் விதம் விதமான போஜன விஷயங்களைத் தயார் செய்யச்சொல்லி, பாண்டவர்களை அங்குவந்து ஆனந்திக்க அழைத்தனர். யாவரும் அங்கு சென்று ஆனந்தமாய் விளையாடிக் கடைசியில் சாப்பிட உட்கார்ந்தார்கள். உடனே துர்யோதனனே பீமஸேனன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவனுக்காகத் தயார் செய்திருந்த நஞ்சிட்ட சோற்றை திருப்திகரமாக பீமன் உண்ணும்படி செய்தான். எழுந்தவுடன் யாவரும் ஜலக்ரீ டைசெய்து கொஞ்ச நாழிகைக்கெல்லாம் களைப்பாய் வந்து ஸதாக்ரஹங்களில் படுத்தார்கள். பீமன் விஷத் தின் வேகத்தால் மெய்மறந்து தூங்கத்தொடங்கினன். யாவரும் தூங்குகையில் துர்யோதனன் முதலியோர் பீமனைக் கொடிகளால் கட்டிப் பிரமாணகோடியில் தள்ளி விட்டார்கள்.

வினா 92.—பீமன் கதி என்ன ஆயிற்று? என்ன விசேஷங்கள் ஸம்பவித்தன?

விடை.—பீமன் விழுந்ததும் அங்கிருந்த பாதாள லோகத்திற்குப்போகும் சுரங்கத்தின் வழியாய் நாகலோகத்திற்குப் போய்ச்சேர்ந்தான். அங்குள்ள பாம்புகள் இவனைக்கடிக்க பாம்பின் விஷத்தால் உணவின் விஷ வேகம் குறைந்தது. பீமனுக்கு மயக்கந் தெளிந்தது. தன்னை சுற்றிக் கட்டியிருந்த கொடிகளை அறுத்துக் கொண்டு பாம்புகளை அடிக்க ஆரம்பித்தான். இந்த ஆச்சரியத்தை பீமனிடம் இருந்து தப்பிவந்த பாம்புகள் வாஸுகியாகிய ஸர்ப்பராஜனிடம் சொல்ல, அவன் வந்து பார்த்து, ஸர்ப்பங்களது அபிப்பிராயப்படி பீமனுக்கு 10,000 யானைபலம் வரும்படியான அமிருத ரஸம் கொடுக்க, பீமன் 8-கலசம் குடித்துத் திருப்தியடைந்து ஒரு படுக்கையில் படுத்தான்.

வினா 93.—இங்கு பாண்டவர்கள் குந்தி இவர்களது ஸ்திதி என்னமாயிற்று?

விடை.—பீமன் முன்னமே ஊருக்குப் போயிருப்பான் என்று சொன்ன துர்யோதனனது சொல்லை நம்பிப் பாண்டவர் முதலியோர் ஹஸ்தினபுரஞ்செல்ல அங்கு பீமனைக்காணாது கவலை யுற்றனர். இதை யறிந்ததும் குந்திக்கு அடங்காத் துயரமுண்டாக, பீமனைத்தேட ஏற்பாடுகள் செய்துவிட்டு விதுரரை யழைப்பித்து அவரோடு அவள் ஆலோசனை செய்து பார்த்தாள். இது துர்யோதனனது செயலாகவே இருக்கவேண்டுமென்றும், பீமனை அவர்கள் கொன்றிருப்பார்கள் என்றும் குந்தி சொல்ல, விதுரர் மற்றப் பிள்ளைகளது க்ஷேமத்திற்காக குந்தியை பொறுமையோ டிருக்கச்செய்து, மஹரிஷிக

ளது ஆசீர்வாத பலத்தால் பீமன் திரும்பிவராமல் போக மாட்டான் என்று தேறுதல் சொல்லிப்போனர்.

வினு **94**.—பீமன் எவ்வாறு திரும்பி வந்தான்? பின் நடந்தது என்ன?

விடை.—எட்டுநாள் முடிந்து பீமன் எழுந்ததும் அவனுக்கு 10,000 யானை பலம் உண்டாக, மங்களஸ்நானம் செய்து பரிசுத்தனனன். நாகர்கள் உடனே பீமனைத் தூக்கி வந்து பிரமாணகோடியின் கரையில் விட்டுப்போயினர். உடனே பீமன் தனது தாய், ஸஹோதரர் இவர்களிடம் சென்று, தனக்கு வந்த ஆபத்துக்களையும் அவைகளால் தான் அடைந்த நன்மைகளையும் பற்றிச் சொன்னன். தர்மபுத்திரர் பீமனை ஒன்றுஞ் சொல்லாதிருக்கும்படி அடக்கிவிட்டார். விதுரர், யுயுத்ஸு இவர்கள் அன்று முதல் அடிக்கடி பாண்டவர்களுக்கு நல்ல புத்தி சொல்லிக்கொண்டு வந்தனர். இதன் பின்பு துர்யோதனுதியர் பீமனை அனேகந்தடவை விஷம் வைத்துக்கொல்ல யத்தனித்தும் பயன்படாமல் போயிற்று. விதுரர், யுயுத்ஸு இவர்கள் புத்தி சொன்னபடி ஒன்றும் வெளியிட்டுச் சொல்லாது பாண்டவர்கள் எல்லாவற்றையும் பொறுத்து வந்தனர்.

வினு **95**.—பாண்டவர்கள், கௌரவர்கள் இவ்வாறு வளர்ந்து வருகையில் முதலில் யாரிடத்தில் வில் வித்தை பயின்றனர்?

விடை.—கௌதம ரிஷியின் புத்திரராயும், ஸதா வில் வித்தையிலேயே கவனமுடையவராயு முள்ள சாரத்வதர் புத்திரராகிய கிருபாசாரியரிடம் இவர்கள் முதலில் வில் வித்தை பயின்றனர்.

வினா 96.—இவ்வாசிரியருக்கு கிருபர் என்று பெயர் வரக் காரணமென்ன? இவர் யாரிடம் வில்வித்தை கற்றனர்?

விடை.—இவரது தகப்பனரான சாரத்வதர் வில்லுங்கையுமாய்த் தமக்கு தனுர்வேதத்தில் தேர்ச்சி வரவேண்டுமென்று தபஸு செய்யுங்கால், அவர் தபஸைக்கலைக்க இந்திரனது உத்தரவால் ஒரு தேவதாஸி அங்கு வந்தாள். அவளைக் கண்டு மயங்கி அவளிடம் ஒரு பிள்ளையையும், ஒரு பெண்ணையும் பெற்றவுடன், தம் தபஸு பங்கமானது தமக்கு ஞாபகம் வந்துவிட்டது. உடனே வெட்கத்தாலும், கோபத்தாலும் அவ்விடம் விட்டு சாரத்வதர் இக்குழந்தைகளைக் கவனியாது வேறோரிடம் சென்றனர். சற்று நாழிகைக்கெல்லாம் அங்கு சந்தனு மஹாராஜனது ஸேவகன் வந்து, தனிமையாய் வில்லின் அருகே கிடக்கும் இவ்விரு குழந்தைகளையுங்கண்டு இவைகள்மேல் கிருபை கூர்ந்து எடுத்துக்கொண்டு, தனது இராஜன் ஆளும் ஹஸ்தினபுரி சென்று அரசனிடம் காட்ட, அவர் இக்குழந்தைகளுக்கு முறையே கிருபன், கிருபி எனப் பெயரிட்டு ஜாக்கிரதையாய் வளர்த்து வரும்படி கட்டளையிட்டார். இவ்வாறு குழந்தைகள் வளர்ந்து வருவதை கௌதம ரிஷி ஞானதிருஷ்டியால் அறிந்துவந்து இக்குழந்தைகளது பிறப்பை ஸேவகன் முதலியவர்களுக்குத் தெரிவித்துத் தாமே கிருபருக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்தனர். இதைக்கண்டு பீஷ்மர் பாண்டவ கௌரவர்களுக்கு கிருபரையே தனுர்வேத ஆசிரியராக முதலில் நியமித்தார்.

வினா 97.—இதன்பின்பு யாரிடம் இவர்கள் தனுர்வேதம் பயின்றனர்?

விடை.—கிருபியினது கணவரும், பாரத்வாஜரது துரோண கும்பத்தில் உண்டானவருமான துரோணாசாரியரிடம் இவர்கள் வில்வித்தை பயின்றனர்.

வினு 98.—துரோணர் ஹஸ்தினபுரம் வரக் காரணமென்ன? இவ்வூருக்கு வந்தவுடன் துரோணர் எவ்வாறிருந்தார்?

விடை.—தமது பால்ய ஸ்நேஹிதனை துருபதனிட மிருந்து அவன் ஸபையார் முன்னிலையில் இவர் மிகுந்த அவமானத்தை அடைய, அதை ஸஹிக்காமல் அப்பொழுதே அச்சபையில் 'நான் சிறந்த சிஷ்யர்களுக்கு எனது வில் வித்தையைக் கற்றுக்கொடுத்து, ஏ மஹா கர்வங்கொண்ட அரசனே! அவர்கள் உன்னைத் தேரோடு தேராய்க்கட்டி என்முன் கொண்டுவரும்படி செய்கிறேன்' என்று கொடிய சபதத்தைச்செய்து, சிஷ்யர்களை அடைதற் பொருட்டு தனது மைத்துனர் இருக்கும் ஹஸ்தினபுரம் வந்து அங்கு கிருபரோடு இடை இடையே பாண்டவ கௌரவர்களுக்கு வில்வித்தையை சொல்லிக்கொடுத்து வந்தனர். துரோணர் தமது ஸாமர்த்தியம் யாவையும் கொஞ்சநாள்வரையில் ஒருவருக்கும் தெரியாமலிருக்கும் படி மறைத்துவந்தார்.

வினு 99.—இவர் துருபதனிடம் போகக் காரணம் என்ன? அவன் எவ்வாறு இவரை அவமானித்தான்?

விடை.—துரோணர் சிறுவரா யிருக்கும்கால், அக்னி விச்வ ரிஷியிடம் வில்வித்தைகள் கற்றுக்கொண்டிருக்கையில், இவரோடு துருபதனும் வில்வித்தை கற்கவந்தான். அவர் கள் இருவருக்கும் ஸ்நேஹம் உண்டாக அதில் துருபதன் 'எனக்கு பாஞ்சாலதேசாதி பத்யம் கிடைத்தால் இராஜ்ய முதலியவைகள் எல்லாவற்றையும் நீங்களும் என்னைடு

ஸுகமாய் அனுபவிக்கலாம்' என்று அடிக்கடி வாக்களிப்பது வழக்கம். கொஞ்ச காலத்திற்கெல்லாம் துருபதனுக்கு இராஜ்யம்வர துரோணருடைய ஞாபகமே அவனுக்கில்லாமல் போய்விட்டது. இதன் இடையில் துரோணர் கிருபியை மணந்து அசுவத்தாமன் என்ற ஒரு குழந்தையை யடைந்து, இக்குழந்தைக்குப் பாலில்லாது வருந்துங்கால், துருபதனது வார்த்தை இவருக்கு ஞாபகம் வந்தது. உடனே துருபதன் ஸபைக்குச் சென்று தனக்கும் அரசனுக்கும் உள்ள பால்ய ஸ்நேஹத்தை எடுத்துச் சொல்லி ஒரு பசு வேண்டுமென யாசித்தார். அரசன் மிகுந்த கர்வத்தோடு 'என் நிலை என்ன உமது நிலை என்ன? நமக்கு ஸ்நேஹம் எப்படி இருந்திருக்கக் கூடும்?' என்று சொல்லி ஸபை நடுவில் துரோணரை அவமதித்தான்.

வினா 100.—இந்த துரோணர் வேறு யாரிடம் வில்வித்தை கற்றார்?

விடை.—தனது ராஜ்யம் யாவையும் காசியபருக்குத் தானம் செய்து திருப்தி யடைந்திருந்த பரசுராமரிடம் மிகுதியாய் இருந்த தனுர் வித்தையை அவரது அநுக்ரஹத்தால் துரோணர் பூர்ணமாய்த் தெரிந்துகொண்டார்.

வினா 101.—முன் சொல்லியபடி ரஹஸ்யமாயிருந்த துரோணரது ஸாமர்த்தியம் எவ்வாறு வெளிவந்தது?

விடை.—ஒரு நாள் பாண்டவ கௌரவர்கள் பந்து விளையாடத் தொடங்கினார்கள். அவர்கள் பந்து கிணற்றில் விழ, யாவரும் திகைத்து நின்றனர். அங்கு அப்பொழுது துரோணர் தற்செயலாய் வர அவரைச் சூழ்ந்துகொண்டு, இவர்கள் நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். உடனே

அவர் துடைப்பக் குச்சிகளில் ஒரு அஸ்திரத்தை மந்திரித்துவிடப் பந்து கரைமேல் வந்து விழுந்தது. இதைக் கண்டு ராஜ குமாரர்கள் இவரது வல்லமையை பீஷ்மரிடம் சொல்ல, அவர் இவர் யாரென்பதையும், என்ன எண்ணத்தோடு ஹஸ்தினபுரிக்கு வந்தார் என்பதையும் இவரிடமிருந்தே தெரிந்துக்கொண்டு, அன்றுமுதல் துரோணரையே ராஜ குமாரர்களுக்கு தனுர்வேத ஆசிரியராக நியமித்தார்.

வினா 102.—யார் யார் எவ்வாறு துரோணரிடம் வில்வித்தை கற்றுவந்தார்கள் ?

விடை.—இவர்களுள் பாண்டவர்கள் கௌரவர்களைவிட அதி சீக்கிரத்தில் வித்தை கற்றுக்கொண்டார்கள். பாண்டவர்களுள் அர்ஜுனன் ஒருவனே மிகுந்த கருத்தோடு இவ் வில்வித்தையைக் கற்றுக்கொண்டான்.

வினா 103.—துரோணருக்கு யாரிடத்தில் அதிகப் பிரீதி ? இது வரக் காரணமென்ன ?

விடை.—துரோணருக்கு அர்ஜுனனிடத்தில் அதிகப் பிரீதி. இவர் பாண்டவ கௌரவர்களை ஏகாந்தத்தில் அழைத்து, 'என் மனதில் ஒரு குறை இருக்கிறது ; அதை நீங்கள், தனுர்வித்தையில் தேர்ச்சியடைந்த பின்னர், பூர்த்தி செய்ய வேண்டும்' என்று அவர்களிடம்சொல்ல, அர்ஜுனன் ஒருவனே பூர்த்தி செய்வதாக உறுதி வாக்களித்தான். மற்றையவர் யாவரும் மௌனமாயிருந்தனர். இது பற்றி துரோணருக்கு அர்ஜுனனிடம் பிரீதி உண்டாயிற்று.

வினா 104.—இவர்கள் வில்வித்தை பயிலுங்கால் யார் யார் இவரிடம் வில்வித்தை கற்க வந்தது ?

விடை.—ஸோம்ய புத்திரன் என்று அப்பொழுது வழங்கி வந்த கர்ணன், விருஷ்ணி, அந்தகாள் முதலிய ராஜவம்சத்தவர், ஏகலவ்யன் என்ற வேட அரசன் குமாரன், ஆகிய இவர்களே.

வினா 105.—துரோணருக்கு அர்ஜுனனிடம் பிரீதி அதிகரிக்கக் காரணம் என்ன?

விடை.—ஒருநாள் தமது பிள்ளையாகிய அசுவத்தாமனுக்கு புதிய ஆயுதங்கள் கற்றுக்கொடுக்க வெண்ணித், துரோணர் மற்றையவர்களை வெளியிலனுப்புவதற்காக ஒவ்வொருவர் கையிலும் வாய் குறுகிய கமண்டலுவைக் கொடுத்துத் தண்ணீர் கொண்டுவரும்படி ஏவ, யாவரும் அதைக் கொண்டுவரப் போயினர். அப்பொழுது தனது பிள்ளைக்கு உபதேசிக்கத் தொடங்கினர். உடனே அர்ஜுனன் அதிசீக்கிரத்தில், நதிக்கும் போகாது, வருணாஸ்திர மகிமையால் தனது கமண்டலுவை நிறைத்துவந்து அசுவத்தாமனுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட வித்தையைத் தானுங் கற்றான். மேலும் அரண்மனைப் பரிசாரகனுக்கு இருட்டில் அர்ஜுனனுக்கு சோறிடவேண்டாமென்று துரோணர் கட்டளையிட்டார். அதன்படி ஒருநாள் அர்ஜுனன் சாப்பிடுகையில் விளக்கணைய பரிசாரகன் அவனுக்குச் சோறிடவில்லை. இப்படிச் செய்தபோதிலும் கையானது வாய்க்குச்சரியாய்ப் பழக்கத்தினாற் போவதை கண்ணுற்ற அர்ஜுனன் வில்வித்தையில் அதிகத் தேர்ச்சியடைய இரவிலும் அதைப் பழகத் தொடங்கினான். இதைக்கண்ட துரோணருக்கு அர்ஜுனனிடம் யிருந்த பிரீதி அதிகரித்தது.

வினா 106.—இப்பிரீதியால் துரோணர் என்ன உபகாரம் அர்ஜுனனுக்குச் செய்தார்?

விடை.—ஏகலவ்யன் அர்ஜுனனைவிட தேர்ச்சி அடைவானே என்ற ஸந்தேகத்தால் துரோணர் அவனை சிஷ்யனாக ஒப்புக்கொள்ளவில்லை. அவனே துரோணரைப்போல ஒரு பிம்பத்தை செய்துவைத்துக்கொண்டு தனது குரு பக்தி விசேஷத்தால் அர்ஜுனனுக்கு துரோணர் இரகஸ்யமாய்ச் சொல்லிக்கொடுத்த வித்தைகள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டான்.

வினு 107.—ஏகலவ்யன் அர்ஜுனனைவிட அதிகத்தேர்ச்சியடையாதபடி எப்படி துரோணர் தடுத்தார்?

விடை.—துரோணரது அனுமதியின்பேரில் பாண்டவ கௌரவர்கள் காட்டுக்கு வேட்டைக்காகப் புறப்பட்டார்கள். அங்கு ஏகலவ்யனது சிலம்பக் கூடத்தருகில் போகுங்கால் அவனைக் கண்டு அவர்கள் பின் வந்த நாய் குலைக்க, ஏகலவ்யன் ஏழு பாணத்தால் நாயின்வாயைக் காயப்படுத்தினான். இந்த வித்தை அர்ஜுனனுக்கு மாத்திரம் தான் துரோணர் சொல்லி இருந்தார். இதைக்கண்டு அர்ஜுனன் திகைத்து நீ யார் என்று கேட்க, வேடன் "நான் துரோணர் சிஷ்யன்" என்றான். இதை அர்ஜுனன் துரோணரிடம் சொல்ல அவரும், இவன் கூடவே ஏகலவ்யனிடம் வந்து "எனக்குக் குருதக்ஷிணையாக உனது வலதுகை கட்டைவிரலைக் கொடு" என, ஏகலவ்யன் உடனே யோசியாது கொடுத்துவிட்டான். இதனால் இவனுக்கு வில்லிழுக்க முடியாமலேபோக, அர்ஜுனனை மிஞ்ச இடமில்லாமல் போய்விட்டது.

வினு 108.—தமது சிஷ்யர்களை துரோணர் எவ்வாறு பரீக்ஷித்தார்?

விடை.—ஒரு மரத்தின்பேரில் ஒரு பட்சி உட்கார்ந்திருக்கக் கண்டு அதை வரிசையாய் ஒவ்வொருவரையும் குறி

வைக்கச் சொல்லி தன் உத்தரவின்பேரில் அம்பெய்யும் படி கட்டளையிட்டார். ஒவ்வொருவனும் குறிபார்த்த வுடன், 'உன் கண்ணுக்கு என்ன தெரிகிறது' என்று துரோணர் கேட்க, ஒவ்வொருவனும் சுற்றுமுற்றுமுள்ள ஸகல வஸ்துக்களும் என்கண்ணில் படுகின்றன என அவர் களை அப்புறம் போகச் செய்தார். கடைசியில் அர்ஜுன னைக்கேட்க அவன் "எனக்கு பட்சி மாத்திரம்தான் தெரிகிறது, வேறொன்றும் தெரியவில்லை" என, "அம்பு எய்" என்று துரோணர் கட்டளையிட்டார். உடனே பட்சி அர்ஜுனன் அம்புபட்டுக் கீழே விழுந்தது. இதனால் துரோணர் அர்ஜுனனது திறமையை யாவரும் அறியும் படி வெளியிட்டார்.

வினா 109.—இதன்பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—துரோணர் தமது சிஷ்யரோடு கங்கைக்கு நீராடச் சென்றார். அங்கு அவரை ஒரு முதலை பிடித்துக்கொண் டது. தம்மைக் காக்குந்திறமை தமக்கு இருந்தும் சிஷ்ய ரைக் கூவி யழைத்து முதலையைக்கொன்று தன்னை விடுவிக்கும்படி உத்தரவுசெய்தார். சிஷ்யர்கள் யாவரும் ஒன்றும் செய்யத்தோன்றாது திகைத்து நின்றனர். உட னே அர்ஜுனன் ஐந்து பாணங்களைப் பிரயோகித்து முதலையைக் கொன்று ஆசிரியரை விடுவித்தான். அப் பொழுது துரோணர் ஸந்தோஷத்தால் அர்ஜுனனுக்குப் பிரம்ம சிரோஸ்திரத்தை உபதேசித்து அதன்பிரயோ கத்தையும் கற்றுக்கொடுத்தார்.

வினா 110.—இவ்வாறு பாண்டவ கௌரவர்கள் அஸ்திரவித் தை, வில்வித்தை இவைகளில் தேர்ச்சியடைந்த பின்பு

துரோணர் என்ன செய்தார்? என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவர்களது ஸாமர்த்தியத்தை யாவரும் அறிவதற்காக பீஷ்மர் முதலிய பெரியோர்களது எண்ணப்படி ஒரு பரீக்ஷை ஏற்படுத்தினர். இதற்காக ஊருக்கு வெளியில் மைதான ஸ்தலத்தில் யாவரும்வந்து கூடினர்கள். அப்பொழுது பாண்டவ கௌரவர்கள் தமது ஸாமர்த்தியத்தை வெளியிட்டார்கள். யாவரும் இதைக்கண்டு வியந்தார்கள். குந்தி காந்தாரி திருதராஷ்டிரர் இவர்களுக்கு, குழந்தைகள் செய்யும் அற்புத காரியங்களை விதுரர் சொல்லிக்கொண்டு வந்தார்.

விஞ 111.—இதில் ஏதாவது சண்டை உண்டாயிற்றா?

விடை.—முதலில் பீமனுக்கும் துர்யோதனனுக்கும் விளையாட்டாயுண்டான வீர்யம் உண்மையான சண்டையாகவே முடிந்தது. சப்தம் அதிகரித்துப் பரீக்ஷை அபாயகரமாவதைக் கண்ட துரோணர் இவர்களை விலக்கும்படி அசுவத்தாமனுக்கு கட்டளையிட்டார். உடனே அசுவத்தாமன், பீமனுக்கும் துர்யோதனுக்கும் மத்தியில் சென்று சண்டையை விலக்கினன்.

விஞ 112.—இதற்குப்பின் யார் யார் தமது திறமையைக் காட்டினர்கள்?

விடை.—துரோணருடைய உத்தரவின்படி அர்ஜுனன் தனது திறமையின் விசேஷத்தை காட்டத் தொடங்கினன். உடனே அர்ஜுனனது திறமையை யாவரும் வியந்து ஆரவாரித்தனர். அர்ஜுனன் காட்டிய விசித்திர வித்தை எல்லாவற்றையும் கர்ணனும் காட்டினன்.

வினா 113.—உடனே துர்யோதனன் என்ன செய்தான்? இதனால் என்ன விளைந்தது?

விடை.—உடனே துர்யோதனன் ஸாரதியின் புத்திரனாகிய கர்ணனை ஸ்நேஹம் செய்துகொண்டான். இப்படியான தும் இவனுக்கு கர்வம்வர அர்ஜுனனைத் தன்னோடு யுத்தம் செய்யும்படி அழைத்தான். அப்பொழுது இருவ ரும் மிகுந்த ஆவேசத்தோடு சண்டைசெய்யத் தொடங்கி னார்கள்.

வினா 114.—இத் தருணத்தில் யுத்தம் உண்டாக என்ன தடை ஏற்பட்டது? அது எவ்வாறு நிவர்த்திக்கப் பட்டது?

விடை.—இத் தருணத்தில் கிருபாசாரியர் எழுந்து கர்ணனை நோக்கி "நீ உன் குலம், கோத்திரம் உனது வம்சோத்தா ரகரான அரசர்களது பெயர் இவைகளை வெளியிட்டால் மாத்திரம் தான், அர்ஜுனன் உன்னோடு எதிர்த்துப் போர் செய்வான். நல்ல க்ஷத்திரியருக்கு தம்மைவிட தாழ்ந்த வரை எதிர்த்தல் கௌரவக் குறைவு" என்று எடுத் துரைத்தார். கர்ணன் ஒன்றும் பதில் சொல்லமாட்டாமல் வெட்கிநின்றான். அத்தருணத்தில் துர்யோதனன் தனது தோழனைக் காப்பாற்றுவதற்காக கிருபரை நோக்கி, "அரச வம்சத்தில் பிறவாதிருந்தபோதிலும் மூன்று திறத்தார் அரசரெனக் கொண்டாடப்படுவார். அவர்கள், நல்ல குடிபிறந்தோர், மஹா வீரர், ஸைந்திபதிகள் ஆகிய இவர்களே. இப்பொழுது இவன் அரசனல்லவே, ஆதலால் இவனை எப்படி எதிர்ப்பது என்று அர்ஜுனன் யோசித் தால், கர்ணனை இப்பொழுதே நான் அங்கதேசாதிபதி யாக்குகிறேன். இனிமேல் போர் நடக்க என்ன தடை" என்று சொல்லி கர்ணனுக்கு வந்த அவமானத்தை

நிவர்த்திசெய்ய அவனுக்கு துர்யோதனனிடம் இருந்த பிரீதி அதிகரித்துவிட்டது.

வினு 115.—இவ்வாறு கர்ணன் அங்க தேசாதிபதியாய் யாவரும் வியக்கும்படி பாணவித்தைகளை காட்டினதும் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—அந்த ஸமயத்தில் கர்ணனை எடுத்து வளர்த்த ஸாரதி, அந்த ரங்க ஸ்தலத்திற்கு வர, பார்த்தவர்கள் ஸகைப்பமேர என்று வெட்கமில்லாமல், தன்னை வளர்த்த பிதாவாகிய ஸாரதிக்கு கர்ணன் வந்தனவழிபாடுகள் செய்து, அவனைத் திருப்தி செய்வித்துத் தனது பெருந் தன்மையை வெளியிட்டான். இதைக்கண்ட பீமன் கர்ணனை ஸாரதி புத்திரன் என்று பரிஹாஸம் செய்ய துர்யோதனன் கோபத்தோடு, க்ஷத்திரியருக்கு அடையாளம் பலமே ஒழிய பிறப்பல்ல வென்று சொல்லிவிட்டு, வீட்டுக்குத் தன் பரிவாரங்களோடு சென்று அர்ஜுனனால் தனக்கு உண்டான பயம் கர்ணனது ஸ்நேஹத்தால் நிவர்த்தியாக, ஸுகமாய் வாழ்ந்தான்.

வினு 116.—இவ்வாறு பாண்டவ கௌரவர்கள் கற்றுத் தேர்ந்தபின் துரோணர் என்ன குரு தக்ஷிணை கேட்டார்?

விடை.—பாஞ்சால தேசத்தரசனுகிய துருபதனை தேர்க்காலோடு கட்டித் தம்முன் கொண்டுவந்து விடவேண்டும் என்று தம் உள்எண்ணத்தை வெளியிட்டு குருதக்ஷிணை கேட்டார்.

வினு 117.—இவர்கள் எவ்வாறு குரு தக்ஷிணை கொடுத்தார்கள்?

விடை.—முதலில் கௌரவர்கள் துருபதராஜன் பட்டணத்தை முற்றுகை போட்டுக் கடைசியில் அவனைப் பிடிக்கமாட்

டாது, தோல்வியடைந்து ஓடத் தலைப்பட்டார்கள். இந்நிலையைக்கண்ட பஞ்சபாண்டவர் ஐவரும் உடனே பட்டணத்தைத் தம் ஸேனையால் வளைத்துக்கொண்டு, கொடும் போர்செய்ய கடைசியில் அர்ஜுனன் வெகு தந்திரமாய் துருபதராஜனைப் பிடித்து தேரோடு கட்ட, யாவரும் துரோணரிடம் இவ்வரசனைக் கொண்டுபோய் விட்டனர்.

வினா 118.—இப்படி வந்த துருபதனை துரோணர் என்ன செய்தார்?

விடை.—"இப்பொழுதாவது நான் உனது ஸ்நேஹத்திற்குத் தகுந்தவனாக உனக்குத் தோற்றுகிறதா? நீ பயப்படாதே, உன்னை நான் கொல்லமாட்டேன்" என்று சொல்லிக் காட்டி, "நான் அரசனுய் இல்லாதகாலத்தில் நீ எவ்வாறு என்னோடு ஸ்நேஹிக்க முடியும்? ஆகையால் உன் ராஜ்யத்தில் பாதி என்னைச்சேர்ந்தது, மற்றப்பாதியை நீ ஆளலாம்" என்று சொல்லி அவனை இசையும்படிசெய்து பின்பு கட்டவிழ்த்துவிட, அரசன் அன்றுமுதல் பாஞ்சால தேசத்தின் பாதிபாகத்தை ஆண்டு வந்தான்.

வினா 119.—இப்படி துரோணர் செய்தபின்பு துருபதன் மனம் எவ்வாறு இருந்தது?

விடை.—துரோணரைக் கொல்லத்தக்க ஒரு பிள்ளையையும், தன்னை வெகு தந்திரமாய் பிடித்துத் தேர்க்காலோடு கட்டி வந்த அர்ஜுனனுக்குத் தக்க ஒரு பெண்ணையும் தான் அடைய வேண்டுமென்ற எண்ணம் துருபதனுக்கு உண்டாக, அன்று முதல் அவன் இதற்கு வேண்டிய யத்தனங்கள் செய்யத் தொடங்கினன்.

வினா 120.—இவ்வாறு பாண்டவர்கள் குரு தக்ஷிணை கொடுத்ததும் என்ன நடந்தது?

விடை.—தர்மபுத்திரருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. இவர் பாண்டுவைவிடச் சிறந்தவர் என்று யாவரும் புகழும்படி தர்ம நெறி தவறாது நடந்துவந்தார். இக்காலத்தில் பீமன் பலராமரிடமிருந்து கதாயுத்த வகைகளைத் தெரிந்துகொண்டு மஹா பலவானானன். அர்ஜுனன் துரோணரிடமிருந்து இன்னும் புதிதாகிய அரிய அஸ்திரங்களை யறிந்துகொண்டு மிகச்சிறந்த வில்லாளி பானன். அப்பொழுது துரோணரது வேண்டுகோளின்படி அவர் தன்னை எதிர்க்குங்கால் தானும் அவரை கூசாது எதிர்ப்பதாக அர்ஜுனன் ஒப்புக்கொண்டான். நகுலனும் சிறந்த யுத்தவீரனாகப் பிரகாசித்தான். ஸஹாதேவனே துரோணரிட மிருந்த தர்மசாஸ்திர விஷயங்கள் யாவையும் ஐயம்திரிபறக் கற்றுக்கொண்டு சிறந்த புத்திமானானன். பாண்டவர்கள் தமது தகப்பனால் வெல்லமுடியாத அரசர்களைக்கூட வென்று மஹா தேஜோவான்களாய் விளங்கினர்.

வினா **121.**—இப்படிப் பாண்டவர்கள் விருத்தியடைவதைக் கண்டு யார் யார் என்னென்ன வெண்ணினார்கள் ?

விடை.—ஜனங்கள் யாவரும் திருப்தியோடு பாண்டவர்களைப் புகழ்ந்து பேசினர். பீஷ்மர், விதுரர், யுயுத்ஸு, துரோணர், கிருபர் முதலிய தர்மாத்மாக்கள் யாவரும் ஆனந்தித்தனர். ஆனால் திருதிராஷ்டிரனுக்கும், விகர்னனைத் தவிர மற்றைய துர்யோதனாதியருக்கும் அடங்காப் பொறுமை வந்துவிடப் பாண்டவர்கள் ஐவரையும் எப்படியாவது ஒழித்துத் தமது கீர்த்தியை நாட்டி தாம் நிலை பெறவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றியது.

வினா **122.**—துர்யோதனாதியர் பாண்டவரிடத்தில் இருந்த விரோதத்தை எவ்வாறு முதலில் வெளியிட்டார்கள் ?

விடை.—துர்யோதனதியர் திருதராஷ்டிரனோடு ஆலோசித்து பாண்டவர்களை மெதுவாய் வாரணவதம் (பிரயாகை) என்ற பட்டணத்திற்கு அனுப்பிவிட்டுத் தாம் ஹஸ்தினபுரியில் தமது கீர்த்தியை நிலை நிறுத்த எண்ணினர்கள். பாண்டவர்களை அடியோடு ஒழிப்பதற்கு அவர்களை வாரணவதத்தில் புரோசனன் என்ற தச்சனால் முன்னமேயே கட்டப்பட்ட அரக்குமாளிகையில் இறங்கும்படிசெய்து, பாண்டவர்கள் நிச்சிந்தையாய் தூங்கும் ஓரிரவில் அந்த மாளிகையைக் கொளுத்தி விடும்படி புரோசனனை ஏவி பாண்டவர்களோடு கூடவே அனுப்பிவிட்டார்கள்.

வினா 123.—இதைத் தெரிந்துகொண்டு யார் எவ்வாறு பாண்டவர்களுக்கு உதவி செய்தது?

விடை.—விதுரர் இதைத் தெரிந்துகொண்டு, முன்பு யுதிஷ்டிரருக்கு மாத்திரம் மிலேச்ச பாஷையில் ஜாடையாக அரக்கு மாளிகையின் ஸ்வரூபத்தையும், அவர்கள் கூடவே வரும் புரோசனனது மோசக் கருத்தையும் வெளியிட்டார்.

வினா 124.—இதைத் தெரிந்துகொண்டு தர்மபுத்திரர் என்ன செய்தார்? புரோசனன் பின்பு என்ன செய்தான்?

விடை.—தர்மபுத்திரர் ஒன்றும் தெரியாதவர்போல் குந்தி தனது தம்பிமார் பாவரையும் கூட்டிக்கொண்டு, வாரணவதம் சென்று அவர்களுக்காகத் தயாராய் இருந்த அரக்கு மாளிகையில் வாஸம்செய்து வந்தார். புரோசனனும் கொஞ்ச காலம் தனது எண்ணப்படி மாளிகையைக் கொளுத்தி விடாது நல்லஸமயம் பார்த்துக்கொண்டு சும்மா விருந்தான்.

வினு 125.—இப்படி இருக்கையில் விதுரர், பாண்டவர்கள் தப்புவித்துக்கொள்ள வேறு என்ன ஏற்பாடுகள் செய்தார்?

விடை.—தமக்குத் தெரிந்தவனும், நல்ல நம்பிக்கை யுடையவனுமுள்ள ஒரு சுரங்கம் வெட்டுபவனை தர்மபுத்திரரிடம் அனுப்பி, இரகஸ்யமாய் அரக்குமாளிகையிலிருந்து கங்கைக்கரைவரையில் ஒரு சுரங்கம் இயற்றி அரக்குமாளிகையுள் இருக்கும் இதன் வாயை ஒரு கற்பாறையால் அடைத்துவிட்டு, தர்மபுத்திரரிடம் இந்தச் சுரங்கத்தின் ரஹஸ்யங்களைச் சொல்லி வரும்படி கட்டளையிட்டார். மேலும் அவர் கங்கைக் கரையில் சுரங்கத்தின் வாயண்டையில் ஒரு குறிப்பிட்ட இராத்திரியில் தப்பி வரும் பாண்டவர்கள் எளிதில் கங்கையைக் கடப்பதற்காக ஒரு நம்பிக்கையான ஓடக்காரனைத் தனது ஓடத்தோடு இருக்கும்படி செய்து இதையும் யுதிஷ்டிரரிடம் வெகு ரஹஸ்யமாய்த் தெரிவித்தார்.

வினு 126.—யுதிஷ்டிரர் இவைகளைத் தெரிந்துகொண்டு என்ன செய்தார்? பின் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவ்விஷயங்கள் யாவையும் பீமஸேனனிடம் சொல்ல, அவன் விதுரரால் குறிப்பிட்ட இரவில் அரக்குமாளிகையைக் கொளுத்திவிட்டு சுரங்கத்தின் வழியாய் தனது தம்பிமார், தாயார் இவர்களைத்தூக்கிகொண்டு போவதாகத் தீர்மானித்தான். இதே மாதிரி குறிப்பிட்ட நாள் இரவு வரவே புரோசனன் முதலியவர்கள் ஒரு ஸந்தேகமுமின்றி உறங்குகையில், பீமன் கொள்ளிக்கட்டையை எடுத்துக்கொண்டு அரக்குமாளிகையின் நான்குபுறங்களிலும் நெருப்பை வைத்துவிட்டு, தனது தம்பிமார், தாயார் இவர்களைத் தனது தோளிலும்,

முதுகிலும், கையிலும் தூக்கிக்கொண்டு, தனது காலால் சுரங்கத்தின் கல்லைப் புரட்டிவிட்டு, அதன் வழியாய் கங்கைக்கரையை அடைந்தான். அங்கு ஓடக்காரன் தயாராய்இருக்க, கங்கையைக் கடந்து அக்கரையில் இருந்த ஹிடும்ப வனத்துட் சென்று பீமன் தனது உறவினர்களை மெதுவான ஓர் இடத்தில் படுக்க வைத்துவிட்டு காவல் காத்து வந்தான்.

வினா 127.—அரக்குமாளிகை தீப்பற்றி எரிந்தபின்பு வாரணாவதவாஸிகள், திருதிராஷ்டிரன் முதலியோர் என்ன செய்தார்கள் ?

விடை.—வாரணாவதவாஸிகள், திருதிராஷ்டிரன் முதலியவர்களைப் பழித்தார்கள். திருதிராஷ்டிரன் முதலியோர் அதிக துக்கப்படுவதுபோலப் பாசாங்கு செய்தார்கள். பாண்டவர்களுக்கு வேண்டியவர்கள் துக்ககடலில் ஆழ்ந்தனர். விதுரர் மாத்திரம் இவைகளை எல்லாம் பார்த்து துக்கிக்காது மனத்துள் நகைத்து வந்தார். விதுரரைத் தவிர யாவரும் பாண்டவர்கள் அகியாயமாய் இறந்தனர் என்றே எண்ணினார்கள்.

வினா 128.—பாண்டவர்கள் ஹிடும்ப வனத்திற்குப் போனார்களை அங்கு என்ன விசேஷம் நடந்தது ?

விடை.—அந்த வனத்துக்கு அதிபதியான ஹிடும்பாஸுரன் மனிதர் வந்திருப்பதாக காற்ற மூலமாய்த் தெரிந்து கொண்டு தனது தங்கை ஹிடும்பியை மனிதர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று பார்த்துவர அனுப்பினன். அவள் வந்து மஹா கம்பீரமாய் உட்கார்ந்திருக்கும் பீமனைக் கண்டதும் இராக்ஷஸகுணம் போய், அவளுக்குப் பீமனை கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற நல்ல எண்

ணம்வர, பீமனிடம் சென்று அவளுக்குத் தனது தமை யனுல்வரும் அபாயத்தைத் தெரிவித்து, அவர்கள் தப்பு வதற்கு வேண்டிய உபாயம் சொன்னுள். பீமன் இதைக் கவனியாது தைர்யமாய் இருப்பதைக் கண்ணுற்ற ஹிடும் பிக்கு அவனிடம் இருந்த காதல் அதிகரிக்க, பீமனோடு பேசிக்கொண்டே அவனது அழகைப் பார்த்துப் பிர மித்து, அங்கு வெகு நாழிகை தனது தமையனது கட் டளையை மறந்து நின்றுவிட்டாள்.

வினு 129.—இதற்குள் ஹிடும்பன் என்ன செய்தான்? இது என்னமாய் முடிந்தது?

விடை.—வெகு நாழிகை தன் தங்கை வராதது கண்டு, தங்கைக்குப் போனவிடத்தில் என்ன அபாயம் வந்ததோ என்று பயந்து, ஹிடும்பன் கோபமாய் பீமனிருக்குமிடம் வர, அங்கு தனது தங்கை வெட்கத்தோடும், அடக்கத் தோடும் நிற்பதை அவன் கண்டான். உடனே பீமன் தனது தங்கையை ஏதோ மந்திராதிகளால் கட்டிவிட் டான் என்ற எண்ணம் வர ஹிடும்பனுக்கு அடங்காக் கோபம் வந்தது. உடனே பீமனோடு சண்டைக்குப் போனன். கொஞ்சநேரம் இருவரும் சப்தம் அதிகம் உண்டாகாமல் சண்டைசெய்து கடைசியில் பீமன் ஹிடும் பனைக் கொன்றான்.

வினு 130.—ஹிடும்பன் இவ்வாறிறந்ததும் ஹிடும்பி கதி என்னவாயிற்று?

விடை—ஹிடும்பனுக்கும் பீமனுக்கும் சண்டை நடந்து கொண்டிருக்கையில் உண்டான சப்தத்தால் குந்தி முத லானவர்கள் எழுந்திருக்க, அவர்களுக்கு ஹிடும்பி தனது எண்ணத்தை வெளியிட்டு வெகுவாகச் சொன்னுள். அவர்கள் ஹிடும்பியினது வேண்டுகோளுக்கிசைந்து,

மத்தியானமெல்லாம் பீமனோடு ஸுகமாய் இருந்துவிட்டு, இரவில் பீமனைத் தம்மிடம் கொண்டுவந்து விட்டுவிட வேண்டுமென்று ஹிடும்பிக்குக் கட்டளையிட்டார்கள். பீமனோ தனது தாய் முதலியவர்களது வார்த்தைக்கு இசைந்து, ஹிடும்பிக்கு ஒரு பிள்ளை உண்டாகிறவரையில் அவளோடிருப்பதாகவும், பின்பு போய்விடுவதாகவும் அவளுக்கு வாக்களித்து கொஞ்சகாலம் அவளோடு அங்கேயே ஸுகித்திருந்தான்.

வினா 131.—ஹிடும்பிக்குப் பிள்ளை பிறந்ததா? அந்தப் பிள்ளை என்ன செய்தான்?

விடை.—ஹிடும்பிக்குக் கொஞ்ச காலத்திற்கெல்லாம் பீமனைப்போல் மஹா வீர்யவானான கடோத்கசன் என்ற ஒரு பிள்ளை பிறந்தான். உடனே கடோத்கசன் பாண்டவர்களிடம் வந்து "நீங்கள் எப்பொழுது காரியார்த்தமாய் என்னை நினைக்கிறீர்களோ அப்பொழுது நான் உங்களுக்கு என்னாலியன்ற ஸஹாயம் செய்யத் தயாராய் வந்துவிடுகிறேன்" என்று வாக்குக் கொடுத்துவிட்டு தனது தாயை கூட்டிக்கொண்டு இஷ்டப்படி அந்த வனத்தில் உலாவிவந்தான்.

வினா 132.—இதன் பின் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? யார் இக்காலத்தில் இவர்களுக்கு எவ்வாறு உதவி செய்தார்கள்?

விடை.—பாண்டவர்கள் காட்டுவழியாய் போய்க்கொண்டிருக்கையில், இவர்கள் கண்முன் பாட்டனாரான வியாஸ மஹாரிஷிதோன்றி, பாண்டவர்களைத் தேற்றி, இவர்களுக்குப் பிராம்மணவேஷம் போட்டு, பக்கத்தில் இருந்த ஏகசக்ரபுரி என்ற பட்டணத்திற்கு இவர்களை கூட்டிக்கொண்டு போனார். அங்கே தான் மறுபடியும் வரும்வரை

யில் இவர்களைப் பிராமணர் வீட்டில் இருக்கும்படி ஏற் பாடு செய்துவிட்டு வியாஸர் மறைந்தார்.

வினு 133.—பாண்டவர்கள் ஏகசக்ர நகரத்திலிருக்கும் பொழுது என்ன நல்ல காரியம் செய்தார்கள்?

விடை.—குந்தியின் உத்தரவின்படி, பீமன் அவர்களிருந்த வீட்டுக்காரர் கொடுத்த சோற்று வண்டியைக் காட்டுக்குக் கொண்டுபோய் அங்கு வயிறார அதில் உள்ள உணவுகளைப் புசித்து, அவ்வுணவுக்காக வெகு பசியோடு வந்த பகா ஸுரன் என்பவனோடு வெகு நாழிகை சண்டைசெய்து கடைசியில் அவனைக் கொன்று விட்டான். அப்பட்டணத் திற்கு அதுவரையில் பகாஸுரனால் நேரிட்டிருந்த பயத்தை இவ்வாறு பீமன் நிவர்த்தி செய்தான்.

வினு 134.—பகன் யார்? அவன் ஏகசக்ர நகரத்தவரை எவ் வாறு வருத்தி வந்தான்?

விடை.—இவன் ஏகசக்ர நகரத்தருகிலுள்ள 10,000-யானை பலமுள்ள இராக்ஷஸன். இவன் அடிக்கடி பட்டணத் துள் வந்து அங்கு 'அகப்படுவர் எல்லோரையும் வயிறு நிறைகிறவரையில் தினம் புசித்துவிட்டுப் போவது வழக் கம். இதை ஸகிக்க முடியாமல் அவ்வூரார் பகனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி ஊரார் ஒழுங்காய் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வீட்டுக்கார ராக ஒரு வண்டி நிறைய சோற்றையும் அதற்கு வேண் டிய உபகரணங்களையும் அந்த வண்டியில் கட்டி இருக்கும் எருதுகளையும் அதை ஓட்டும் ஒரு சிறு பிள்ளையையும் பகனுக்கு ஆகாரமாகக் கொடுப்பதாகவும், அதற்குப் பதி லாக பகன் அகப்பட்டவரை புசியாமலும் வேறொருவர் ஊராரை வருத்தாமலும் அவர்களைப் பாதுகாத்து வருவ தாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தினம் ஒரு பிள்ளையை

இழப்பது என்பது பகனுல் ஏற்பட்ட ஒரு பெரிய துன்ப மாக ஊரார் எண்ணி துக்கித்துவந்தனர்.

வினு 135.—இவ்விஷயம் குந்திக்கு எப்மடித் தெரியவந்தது? குந்தி அப்பொழுது என்ன செய்தாள்?

விடை.—பாண்டவர்கள் அங்கு வாஸம் செய்கையில் அவர்கள் இறங்கி இருக்கும் வீட்டுக்காரன் பகனுக்குச் சோறு படைக்கவேண்டிய தினம் வர, அவ்வீட்டுக்காரர்கள் தமது அருமைக்குழந்தை ராக்ஷஸனுக்கு அகியாயமாய் இரையாகி மாளப்போகிறுனே என்று கூக்குரலிட்டு அழத்தொடங்கினர்கள். இதைக் குந்தி கேட்டு ஓடிவந்து அவர்களிடம் இருந்து பகனது கொடுமையைத் தெரிந்து கொண்டு அவர்களைத் தேற்றி தனது பிள்ளைகளுள் ஒரு வனை அன்றைக்கு வண்டி ஓட்ட அனுப்புவதாகச் சொல்லி பீமனை அன்று வண்டியை ஓட்டிப்போகும்படி ஏற்பாடுசெய்து, பகாஸுரனை ஸம்ஹாரம் செய்வித்து, ஏகசக்ரபுரிக்கு நன்மையை உண்டாக்கினுள்.

வினு 136.—ஊரார் பகாஸுரன் எவ்வாறு இறந்ததாக எண்ணினுர்கள்?

விடை.—குந்தியின் வேண்டுகோளின்படி அவர்கள் இறங்கி இருந்த வீட்டுப் பிராம்மணர் உண்மையை ஒளித்து யாரோ ஒரு மஹாப்பிராம்மணர் தன்மேல் கருணை கூர்ந்து தமது மந்திர பலத்தால் பகனை ஸம்ஹரித்தார் என்ற வதந்தி உண்டாகிவிட, அது ஊரெங்கும் பரவிற்று. இவ்வதந்தியே ஸத்தியமென ஊரார் நம்பி இருந்தனர்.

வினு 137.—இந்த ஸத்கிருத்யம் முடிந்ததும், பாண்டவர்க ளுக்கு என்ன நல்ல ஸமாசாரம், யார் வந்து சொன்னர் கள்?

விடை.—பாண்டவர்கள் இறங்கி இருக்கும் வீட்டில் ஒரு பிராம்மண சிரேஷ்டர் வந்து தமது யாத்திரை விசேஷங்களைச் சொல்லி வருகையில், பாஞ்சால தேசத்தரசனும் துரோணரது ஸ்நேகிதனுமான துருபதனுக்குச் சிகண்டி, திரௌபதி, திருஷ்டத்யும்னன் ஆகிய இக்குழந்தைகள் உண்டான விதத்தையும், அப்பொழுது திரௌபதிக்கு ஸ்வயம்வரம் நடக்கப்போகிறது என்பதையும், எடுத்து வெளியிட்டார்.

வினா 138.—இந்த திரௌபதி, திருஷ்டத்யும்னன் யார்? இவர்கள் எவ்வாறு பிறந்தார்கள்?

விடை.—துருபதன், துரோணர் தன்னை ஹஸ்தினபுரியில் அவமானித்த உடன், இரண்டு எண்ணங்களோடு புறப்பட்டு, அதைப் பூர்த்திசெய்ய ஸதா முயன்றான் என்று 119-ம் விடையில் சொல்லியிருக்கிறோம். இதற்காகக் காடெங்கும் திரிந்து ஒரு பிராம்மணசிரேஷ்டரைக் கண்டுபிடித்து அவரால் ஒரு யக்ஞத்தை நடத்தி அந்த யக்ஞகுண்டத்திலிருந்து துரோணரைக் கொல்லத்தக்க திருஷ்டத்யும்னன் என்ற பிள்ளையையும் அர்ஜுனனுக்குத் தக்க கிருஷ்ணை என்ற பெண்ணையும் அடைந்தான்.

வினா 139.—இக்கதைகளைக் கேட்ட பாண்டவர்களுக்கு என்ன எண்ணமுண்டாயிற்று?

விடை.—பாண்டவர்கள் ஐவருக்கும் திரௌபதி ஸ்வயம்வரத்திற்குப் போகவேண்டுமென்று தோன்ற, குந்தியும் இதற்கிசைந்தாள்.

வினா 140.—இந்த எண்ணத்தை யார் எப்படி ஸ்திரப்படுத்தியது?

விடை.—வியாஸர் முன் சொல்லிப்போயிருந்தபடி பாண்டவர்கள் முன் தோன்றி திரௌபதியின் பூர்வஜன்ம சரித்திரத்தில் ஒரு பாகத்தைச் சொல்லி அவளே பாண்டவர்களுக்குப் பெண்சாதியாகப் போகிறாள் என்றும், அவளால் பாண்டவ குலத்திற்கு மேன்மை வரப்போகிறதென்றும் எடுத்துக்காட்டி, பாண்டவர்களது எண்ணத்தை உறுதிப்படுத்தினர்.

வினா 141.—வியாஸர் திரௌபதியின் பூர்வஜன்ம சரித்திரத்தில் எந்த பாகத்தைச் சொன்னர்?

விடை.—திரௌபதி பூர்வஜன்மத்தில் சங்கரரைக் குறித்து தபஸுசெய்து 'எனக்குப் பதிவேண்டும்' என்று ஐந்து தடவை சங்கரரைக் கேட்டதால், பகவான் 'உனக்கு அடுத்த ஜன்மத்தில் ஐந்து புருஷர் ஏற்படுவார்கள்' என்று சொல்லிப்போனதாக உள்ள சரித்திர பாகத்தை வியாஸர் பாண்டவர்களுக்குச் சொன்னர்.

வினா 142.—திரௌபதி ஸ்வயம்வரத்திற்காகப் பாண்டவர்கள் போகையில் என்ன ஆபத்து நேரிட்டது? அது எப்படித் தீர்ந்தது?

விடை.—இவர்கள் இரவும் பகலும் வழிநடந்து போகையில், இரவில் முன்புறம் அர்ஜுனன் ஒரு தீவட்டியைப் பிடித்துப் போவது வழக்கம். ஓரிரவில் கங்கைக்கரையில் வந்து அதைத் தாண்ட யத்தனிக்கையில், அங்கு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்த சைத்தரரதன் என்ற கந்தர்வ ராஜன் இவர்களைத் தடுக்க, மிகுந்த சண்டை உண்டாயிற்று. இதில் கடைசியாக அர்ஜுனன் தனது கையிலிருந்த தீவட்டியில் ஆக்னேயாஸ்திரத்தை மந்திரித்து விட, அது சென்று கந்தர்வ ராஜனது இரதம் முதலிய வைகளைக்கொளுத்தி, அவனைக் கீழே தள்ளியது. உட

னே அர்ஜுனன் கந்தர்வனைப் பிடித்துக்கொல்ல யத்தனிக்கையில், அக்கந்தர்வனது பெண்சாதி தன் தமையன் இவர்களது வேண்டுகோளின்படி கந்தர்வராஜனை உயிரை வாங்காது அர்ஜுனன் விட்டுவிட்டான்.

வினா 143.—இப்படித் தோல்வியடைந்ததும் கந்தர்வன் என்ன செய்தான்?

விடை.—தனக்கும், அர்ஜுனனுக்கும் ஸ்நேஹம் ஸதா இருக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன், மனுவினிடமிருந்து பரம்பரையாய் வந்ததும், ஒருவன் நினைத்தவைகளையெல்லாம் அவன் கண்முன் கொண்டுவந்து காட்டும் திறனுடையதுமான சாக்ஷுஷி என்கிற மந்திரத்தையும், தன்னிடமிருந்த மஹா மகிமை வாய்ந்த குதிரைகளையும் அர்ஜுனனுக்கு நல்ல மனதோடு கொடுத்து, அவனிடமிருந்து ஆக்னேயாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டான். இதன் பின்பு அர்ஜுனன் தன்னை ஜயித்ததற்கு அவனது பிரம்மசரியமும், தான் ஸ்திரீ மத்தியத்திலிருந்ததுமே காரணமென்று எடுத்துக் காட்டி, பின்பு பாண்டவர்களுக்கு ஒரு புரோஹிதரால் அரசனுக்குண்டாகும் நன்மைகளை எடுத்துச்சொல்லி, கூடிய சீக்கிரத்தில் ஒரு நல்ல புரோஹிதரை அடைய வேண்டும் என்று அவர்களுக்குப் புத்திமதி கூறினன்.

வினா 144.—இவ்வாறு புத்திமதி கூறி வருங்கால் சைத்ரரதன் என்ன சரித்திரத்தைச் சொல்லவேண்டி நேர்ந்தது? ஏன்?

விடை.—புத்திமதி கூறிவருங்கால் அர்ஜுனனை தாபதேசா என்று அவன் அழைத்தான். இதைக் கேட்டதும் அர்ஜுனனுக்கு 'நம்மைத் தாபதேசன் என்று கூப்பிடு

வானேன்' என்ற ஸந்தேகம்வர, அவன் கந்தர்வனை இதன் காரணத்தைக் கேட்டான். இதற்காக கந்தர்வன் தபதியின் உபாக்கியானத்தைச் சொல்லும்படி நேரிட்டது.

வினா 145.—இந்தத் தபதி யார்? இவளுக்கும், அர்ஜுனனது வம்சத்திற்கும் என்ன ஸம்பந்தம்?

விடை.—பரதவம்சத்தில் ஸம்வரணன் என்றொரு அரசன் இருந்தான். அவன் ஸூர்யனது பெண்ணாகிய தபதியின் அழகைக்கண்டு ஆசைகொண்டு அவளை விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்று ஸூர்யனைக் குறித்துத் தபஸு செய்தான். பின்பு ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடப் போகையில் அவளைக் காட்டில் கண்டு மோஹித்து அவளைத் தனக்குப் பெண்சாதியாக வேண்டுமென்று கேட்க, அவள் தனது தகப்பனான ஸூர்யனது அனுமதியின்பேரில் அவனுக்குத் தான் பெண்சாதியாவதாகச் சொல்லி மறைந்தாள். அரசனுக்கு அடங்காத துக்கம் வர, அவன் மூர்ச்சையாகிக் கீழேவிழுந்துவிட்டான். மந்திரியால் அரசன் மூர்ச்சைதெளிந்து தெழுந்து ஸூர்யனை ஆராதித்துத் தனது குருவாகிய வஸிஷ்டரை நினைத்தான். உடனே அவர்வந்து ஸூர்யனிடம் சென்று, தன் அரசனது எண்ணத்தை வெளியிட்டுத் தபதியை வாங்கி வந்து அரசனுக்கு விவாஹம்செய்து வைத்தார். ஸம்வரணனுக்குத் தபதியிடம் பிறந்தவனே குரு என்னும் அரசன். இதனாலேயே பரத வம்சத்தவருக்குக் குரு வம்சத்தவர் என்கிற பெயரும் உண்டு. இக்காரணம் பற்றிக் கந்தர்வன் அர்ஜுனனைத் தாபதேசன் என்று அழைத்தான்.

வினா 146.—வஸிஷ்டரது மஹத்துவத்தைச் சொல்ல வேண்டும் என்று அர்ஜுனன் கேட்க சைத்தரரதன் என்ன சொன்னன்?

விடை.—வஸிஷ்டரிடத்தில் ஒரு காமதேனு இருந்தது. இது விசுவாமித்திரர் தமதுபரிவாரங்களோடு வந்திருக்குங்கால் அவர்கள் எல்லாருக்கும் உணவளிக்க, வஸிஷ்டரிட மிருந்து அதைத் தான் கொண்டுபோக வேண்டுமென்று கௌசிகர் நினைத்து அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டு போகப் பார்த்தார். விசுவாமித்திரரது நோக்கத்தைக் காமதேனு அறிந்து, தன் தேகத்திலிருந்து அனேக ஸேனைகளை சிருஷ்டித்து அவரை வென்றது. உடனே விசுவாமித்திரருக்குப் பிரம்ம பலத்தின் மஹிமை தெரிய வர, தபஸுசெய்து பிராம்மணரானர். இவர் பிராமண ராகுமுன், இவருக்கும் வஸிஷ்டருக்கும் காமதேனு விஷயமாய்ச் சண்டை நேர்ந்ததால் கௌசிகருக்கு வஸிஷ்டரிடம் விரோதமிருந்தது. இதனல் கௌசிகர் வஸிஷ்டரது பிள்ளைகளெல்லோரையும் உயிர் இழக்கும் படி சபித்தார். அப்பொழுது வஸிஷ்டருக்கு அடங்காத் துக்கம் வந்தும், கௌசிக வம்சத்தை அழிக்கவேண்டு மென்கிற எண்ணம் அவர் மனதில் தோன்றவில்லை. அவர் மாத்திரம் துக்கத்தால் அனேக வழியில் உயிரை மாய்க் கப் பார்த்தும் உயிர்போகவில்லை. இதற்குள் அவரது மூத்தகுமாரனது பெண்சாதி வயிற்றில் ஒரு குமாரன் இருப்பதை அறிந்து, துக்கம் தீர்ந்தார். இக் குமாரனே பராசர முனி. இவர் பிறந்ததும் தமது தகப்பன், சிற்றப் பன் ஆகிய இவர்கள் இறந்ததைக் கேள்வியுற்று உல கத்தை அழிக்க யத்தனிக்கையில் அப்பொழுதும் வஸிஷ் டர் பிருகு வம்சத்தில் பிறந்து உலகத்தை அழிக்க

முயன்ற ஔரவர் என்பவரை அவர் பிதிர்க்கள் தடுத்த கதையைச்சொல்லித் தடுத்து, இவரை நல்ல வழியில் திருப்பினர். இவ்வளவு, மேலான துறவும், சாந்தமும் வாய்ந்தவர் வஸிஷ்டமுனி.

வினா 147.—விசுவாமித்திரர் எவ்வாறு வஸிஷ்டரது பிள்ளைகளைக் கொல்லக் காரணமானார்.

விடை.—இக்ஷ்வாகு வம்சத்தில் கல்மாஷபாதர் என்கிற ஒரு அரசர் இருந்தார். அவர் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும்போது வஸிஷ்டரது பிள்ளை சக்தி என்பவரோடு விவாதம் செய்து மிகுந்த அபராதத்தைச்செய்ய அவர் 'நீ இராக்ஷஸனுய் போகக்கடவது' என்று சபித்தார். இதைக் கேட்டிருந்த விசுவாமித்திரர் தாம் ஒரு இராக்ஷஸனை ஏவி, அரசனுள் புகும்படி செய்ய, அதனல் அவன் பிராம்மணருக்கு மனுஷ்ய மாம்ஸம் ஊட்டல் முதலிய கொடிய அபராதங்கள் செய்துவந்தான். அவர்களது சாபத்தால் இராக்ஷஸத் தன்மை அரசனுக்கு அதிகரிக்க, விசுவாமித்திரர் ஏவிய இராக்ஷஸனது தூண்டுதலால் இவ்வரசன் வஸிஷ்டரது குழந்தைகளைத் தின்ன ஆரம்பித்தான். இவ்வாறு இவன் வஸிஷ்டரது பிள்ளைகள் எல்லோரையும் கொன்றுவிட்டான்.

வினா 148.—இவ்வரசன் கதி என்னவாயிற்று?

விடை.—இவன் ஒருநாள் வஸிஷ்டரையும், அவரது பிள்ளை சக்தியினது கர்பந்தரித்த பெண்சாதியையும் கண்டு அவர்களைத் தின்னவர, வஸிஷ்டரது அநுக்கிரகத்தால் சாபம் நீங்கி, இராஜ்யம் சென்று ஒரு புத்திரனை அடைந்து ஸுகித்திருந்தான்.

வினா 149.—பிராம்மணரது மஹிமையைப்பற்றி இவ்வளவு சொல்லிய பின்பு, கந்தர்வன் யாரை பாண்டவருக்குப்

புரோஹிதராக நியமித்துக்கொடுத்தான்? பின்பு பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—அதே காட்டில் ஒரு திவ்ய ஸ்தலத்தில் தபஸு செய்து கொண்டிருக்கும் தேவல ரிஷியினது தம்பியாகிய தௌம்யர் என்பவரை கந்தர்வன் பாண்டவர்களுக்குப் புரோஹிதராகத்தக்கவர் என்று சொன்னான். இவன் சொல்லியவாறே பாண்டவர்கள் அக்காட்டில் தௌம்யரைத் தரிசித்து 'எமக்கு பௌரோஹித்யம் செய்தருள வேண்டும்' என்று மஹா வினயத்துடன் அந்த ரிஷி சிரேஷ்டரைக் கேட்க, அவர் அதற்கு இசைந்தார். உடனே தௌம்யரை முன்னிட்டுக்கொண்டு பாண்டவர்கள் திரௌபதி ஸ்வயம்வரத்திற்காக பாஞ்சால தேசம் சென்றார்கள். பாஞ்சாலதேசம் சென்று ஒரு குயவன் வீட்டில் இறங்கி, இவர்கள் பிரம்மசாரிகளைப் போலவே பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்து வந்தார்கள். இவர்களை ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

வினு 150.—திரௌபதியை விவாகத்தில் அடைவதற்குப் துருபதராஜன் அரசர்களுக்கு என்ன பரீக்ஷையை ஏற்படுத்தினான்?

விடை.—ஒரு மத்ஸ்யம் போன்ற ஒரு குறியை உயர அமைத்து, அதன் கீழ் ஒரு யந்திரம் சுற்றிக்கொண்டிருக்கும்படி அமைக்கப் பட்டிருந்தது. யாரொருவன் அங்கு வைத்திருக்கும் ஒரு பெரியவில்லை நாணேற்றி இந்த யந்திரத்தின் வழியால் அந்த மத்ஸ்யத்தைக் குறிவைத்து அம்பால் அடித்து விடுகிறானே, அவனுக்கு உடனே திரௌபதியைக் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வினா 151.—அரசர்கள் அந்த ஸ்வயம்வரத்தில் வில்லை வளைத்தபோது என்ன கதியை அடைந்தார்கள்?

விடை.—சிலர் வில்லைத் தூக்கவும் முடியவில்லை. சிலர் வளைக்க யத்தனித்தும் வில்லால் அடிபட்டுக் கீழே விழுந்தனர். கர்ணன் மாத்திரம் வில்லை வளைத்து அம்பு விடப்போகும் தருணத்தில், திரௌபதி இவர்தான் என் புருஷரோ என்று நினைக்கும்போது அம்பினுடைய நாண் கழன்று காணைக் கீழே தள்ளிவிட்டது.

வினா 152.—இவ்வாறு எல்லா அரசரும் அவமானப்பட்டுப் போகுங்கால் யார் இந்த பரீக்ஷையில் தேறினார்கள்? எப்படி? இதனால் என்ன விளைந்தது?

விடை.—பிராம்மணர் கோஷ்டியி லிருந்து அர்ஜுனன் எழுந்து, வில்லை வெகு சீக்கிரத்தில் நாணேற்றி அந்த மத்ஸ்யக் குறியை அடித்துவிட்டான். உடனே திரௌபதி அர்ஜுனனுக்கு மாலையிட, துருபத ராஜனும் இதற்கு இசைந்து இந்த பிராம்மணச் சிறுவனுக்கே தன் பெண்ணைக் கொடுப்பதாகத் தீர்மானித்தான். இதைக் கண்டு அங்கு வந்திருந்த அரசர்கள் கோபங்கொண்டு துருபதனைக் கொல்லப்போக அர்ஜுனனும் பீமனும், அவர்களை எதிர்த்துச் சண்டை செய்தார்கள். அப்பொழுது அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும், சல்லியனுக்கும் பீமனுக்கும், கோரமான யுத்தமுண்டாயிற்று. இந்தச் சண்டையின் நிலையைக்கண்டு இராஜாக்களுக்கு இவர்கள் கேவலம் பிராம்மணர்கள் அல்ல வென்று தோன்ற, அவர்கள் உடனே சண்டையை நிறுத்திவிட்டார்கள்.

வினா 153.—இவ்வாறு சண்டை நின்றுவிடப் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் திரௌபதியை அழைத்துக்கொண்டு தாங்கள் இறங்கி யிருக்கும் குயவன் வீட்டற்குப்போனார்கள். அங்கு குந்தியோ 'நமது பிள்ளைகள் இவ்வளவு நாழிகையாயும் ஏன் பிக்ஷையைக் கொண்டுவரவில்லை? அவர்களுக்கு வழியில் ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டதோ?' என்று துக்கித்துக்கொண்டிருந்தாள். இப்படியிருக்குங்கால், பீமார்ச்சுனர்கள் திரௌபதியைக் கூட்டிக்கொண்டு வந்து 'தாயே நாம் ஒரு பிக்ஷைகொண்டு வந்திருக்கிறோம்' என, குந்தி உள்ளேயிருந்தபடி அவர்கள் கொண்டுவந்தது இன்னதென்று பாராது 'அப்பா அப்படியானால் அதிகநாழிகையாய் விட்டது; நீங்கள் ஐந்து பேரும் அதைப் பங்கிட்டு உண்ணுங்கள்' என்று கட்டளையிட்டாள். இது தர்மபுத்திரருக்குத் தெரிய வந்ததும், அவர் முதலில் அர்ஜுனனுக்கே திரௌபதி பெண்சாதி என்று தீர்மானித்திருந்தபோதிலும், ஏகசக்கிரபுரத்தில் வியாஸர் திரௌபதியின் பூர்வ ஜன்ம சரித்திரம் சொன்னது ஞாபகம் வர, 'நாம் ஐவரும் இவளைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டியது' எனத் தீர்மானித்தார்.

வினா 154.—இவ்வாறு தர்மபுத்திரர் தீர்மானித்துக் கொண்டிருக்கையில், அவர்கள் வீட்டிற்கு யார் வந்தது? அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—அவர்களது அம்மான்சேயாகிய கிருஷ்ண பலராமர்கள் அங்கு அவர்களைப் பார்க்கவந்தார்கள். முதலில் இவர்களைக் கண்டதுமே, இவர்கள் இன்னார் என்பது பகவானுக்கு விளங்கிவிட்டது. மேலும் பீமார்ச்சுனர் செய்து வந்த சண்டையால் அவர் எண்ணம் திடப்பட, இவர்களைப் பார்த்துத் தேறுதல் சொல்ல பகவான் அங்கு அக்காலத்தில் அவஸரமாய் வந்தார். இதுவே பாண்டவர்

களுக்கு முதலில் கிருஷ்ண தரிசனம் ஆனஸமயம். இது முதல் கிருஷ்ணர் பாண்டவர்களை அடிக்கடி நேரில் பார்த்து அவர்களுக்கு அப்போதைக்கப்போது வேண்டிய ஸஹாயங்களைச் செய்துவந்தார். இங்கு வந்த கிருஷ்ண ராமர்கள் வெகு அவஸரமாய்த் தமது அத்தையாகிய குந்தியிடம் விடைபெற்றுத் துவாரகையை நோக்கிச்சென்றார்கள்.

வினா 155.—இவர்களது உண்மை நிலையை அப்பொழுது வேறு யார் எப்படித் தெரிந்துகொண்டு என்ன செய்தார்?

விடை.—அர்ஜுனன் திரௌபதியை ஸ்வயம்வர மண்டபத்திலிருந்து அழைத்துக்கொண்டு போனதும், துருபதன் "அர்ஜுனனுக்காகப் பெற்ற பெண்ணை யாரோ ஒரு பிராம்மணன் அடித்துக்கொண்டு போய்விட்டானே!" என்று துக்கிப்பதைத் திருஷ்டத்யும்னன் கண்டு, தன் தங்கையைக்கொண்டுபோன பிராம்மணரது உண்மை நிலை யறிவதற்கு, அர்ஜுனன் பின்னே மறைவாய்ச் சென்றான். இவன் திரௌபதியை ஒரு குயவன் வீட்டிற்குக் கொண்டுபோய் வயது சென்ற ஒரு அம்மாளிடம் அவளை ஒப்புவித்துவிட்டு, பிக்ஷையெடுக்கச்சென்று கொண்டுவந்த சோற்றை அப்பெரிய அம்மை திரௌபதியைப் பாகம்போட்டு, பாதி ஒரு பிராம்மணனுக்கும் (பீமனுக்கும்) பற்றையப் பாதியை ஆறு ஸரி பாகமாக்கி ஒவ்வொன்றை மற்றையவர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்படி செய்ததையும், இரவில் இவ்வைந்து பிராம்மணர் பேசிக்கொண்டிருந்த யுத்த விஷயங்களையும் கண்டு திருஷ்டத்யும்னன் இவர்கள் பாண்டவர்களாய் இருக்கலாம் என்று தீர்மானித்துத் தன் தகப்பனிடம் சொல்ல,

துருபதன் அன்றிரவு ஸந்தோஷமாயிருந்தான். காலையில் ஒரு புரோஹிதர் மூலமாயும், அவர்கள் பாண்டவரெனத் தெளிந்து, அவர்களைத் தன் அரண்மனைக்கு அழைத்து அவர்கள் வாயாலேயே அவர்கள் பாண்டவர்கள் எனத் தெரிந்துகொண்டான்.

வினு 156.—இவ்வாறு இவர்கள் பாண்டவர்கள் என்ற ஸந்தோஷ ஸமாசாரம் தெரிந்தபின், துருபதனுக்குத் திரௌபதி விவாஹ விஷயத்தில் என்ன தடை ஏற்பட்டது?

விடை.—'நல்ல சுபதினம் நோக்கி அர்ஜுனன் திரௌபதியை விவாஹம் செய்துகொள்ளலாம்' என்று துருபதன் வார்த்தை எடுப்பதற்கு முன்னமே, மஹா தர்மாத்மாவான தர்மபுத்திரர் அதைத் தடுத்து "நாங்கள் ஐவரும் திரௌபதியை விவாஹம் செய்துகொள்ள வேண்டியது தான், அர்ஜுனன் மாத்திரம் அன்று" என்றும், குந்தி தேவி, "நீங்கள் கொண்டு வந்திருப்பதை ஐவரும் ஸமமாய் அநுபவியுங்கள் என்று என் வாக்கில் வந்துவிட்டது. அது பொய்யாகக்கூடாது" என்றும் சொல்ல, துருபதனுக்கு "ஒரு பெண் ஐவரை விவாஹம் செய்துகொள்வது அதர்மமல்லவா? இந்த தர்மாத்மாவான பாண்டவர்களுக்கும் இவ்விஷயத்தில் மனம் ஏன் ப்ரவிருத்தித்தது?" என்ற எண்ணங்களால் மனக் குழப்பமுண்டாயிற்று.

வினு 157.—இது எவ்வாறு யாரால் நீங்கியது?

விடை.—இவர்கள் ஒரு காரியமும் செய்யமுடியாமல் தயங்கி நிற்குங்கால், வியாஸ மஹாரிஷி வந்து துருபதனை ஒரு ஏகாந்த ஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கு பாண்டவர் ஐவரும் மஹாதேவதைகள் என்றும், பூர்வஜன்மத்தில் இவர்கள் கர்வத்தால் மனிதராகும்படி

மஹாதேவரது சாபம் வந்ததென்றும், அப்பொழுது மஹாதேவரைக் குறித்து இந்தத் திரௌபதி தவம் செய்து ஐந்துதரம் பர்த்தா வேண்டுமென்று கேட்டதற்கு, அவர் இவ்வைந்து தேவதைகளையும் அவளுக்குப் பர்த்தாக்களாக நியமித்தார் என்றும், இவள் இவ்வாறு தவம் செய்யுங்கால் ஒரு நாள் கங்கையில் குளிக்கப் போனவிடத்தில் இவளது கண்ணீர் கங்கையில் விழுந்து பொற்றமரையாய் மிதந்ததும், அதைக்கண்டு அப்பொழுது கங்கைக்கரைக்கு வந்திருந்த இந்திரன் அப்பொற்றமரையின் உற்பத்தி அறியப் போனவிடத்தில் இவளைக் கண்டு இவள் மூலமாய் மஹாதேவரைத் தரிசித்ததும், அவனுக்குக் கர்வ மடங்காததால் ஐந்தாவது தேவனுக (மஹாதேவரால் முன்னமே நான்கு தேவதைகளை அடைக்கப்பட்டுள்ள) ஒருமலைக்குகையில் அடைக்கப் பட்டான் என்றும், கடைசியில் இவ்வைவரையும், துக்கித்துக் கொண்டிருக்கும் ஸ்திரீக்குச் சிவன் பர்த்தாவாக ஏற்படுத்தினர் என்றும், வியாஸர் துருபதனுக்குத் திரௌபதியின் பூர்வஜன்மக் கதையைச் சொன்னர். இப்படிச் சொல்லியும் அவ்வரசன் தேறுததுகண்டு, அவனுக்கு வியாஸர் திவ்யசக்ஷுஸைக் கொடுத்து பாண்டவர்கள் திரௌபதி இவர்களது உண்மையான உருவாகிய தேவதா உருவைக் காட்டினவுடன் துருபதன் மனது திருப்தியடைந்தது.

வினா 158.—இதன்பின்பு திரௌபதிக்கு விவாஹம் எப்படி நடந்தது?

விடை.—விவாஹம் ஐந்துநாள் நடந்தது. ஒவ்வொருநாளிலும் ஒவ்வொருவராகப் பாண்டவர் ஐவரும் திரௌபதியைப் பாணிக்ரஹணஞ் செய்துகொண்டார்கள். இக்கல்யாண

மஹோத்ஸவத்தில் பாண்டவர்களது மாமன் பிள்ளைகளாகிய கிருஷ்ணராமர்கள் ஏராளமான சீர் முதலிய மரியாதைகளைச் செய்தார்கள்.

வினு 159.—இவ்வாறு அரக்குமாளிகையில் இறந்து விட்டார்கள் என்று எண்ணப்பட்ட பாண்டவர்கள், திரௌபதியை விவாஹம் செய்துகொண்டார்கள் என்று கேட்டதும், திருதிராஷ்டிர ராஜன் என்ன செய்தான்?

விடை.—தனது பிள்ளைகளின் கெட்ட எண்ணங்களால், பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் சண்டை உண்டாக்கி பாண்டவர்களைக் கெடுக்க வேண்டும் என்று திருதிராஷ்டிர ராஜனுக்குத் தோன்றின போதிலும், பீஷ்மர், துரோணர், விதுரர் முதலிய மஹான்களது நல்ல போதனைகளால் மனம் மாற அவன் பாண்டவரையும், திரௌபதி முதலியவர்களையும், ஹஸ்தினபுரிக்கு அழைத்துவரும்படி விதுரரைத் துருபதராஜன் பட்டணத்திற்கு அனுப்பினன்.

வினு 160.—இவ்வாறு பாண்டவர்களை அழைப்பித்த பின்பு அவர்களுக்குத் திருதிராஷ்டிரன் என்ன ஏற்பாடு செய்தான்?

விடை.—ஹஸ்தினபுரியில் திரௌபதியோடு பாண்டவர்கள் ஸுகித் திருந்தால் துர்யோதனாதியர்களுக்கும் இவர்களுக்கும் சண்டை உண்டாகும் என்று எண்ணிப் பாண்டவர்களுக்கு ஹஸ்தினபுரத்திற்கு அருகில் இருக்கும் காண்டவப்ரஸ்தம் என்னும் நகரத்தைப் பிரதான பட்டணமாக நியமித்து, அவர்களை அர்த்த ராஜ்யம் ஆளும்படி திருதிராஷ்டிரன் ஏற்பாடு செய்தான்.

வினா 161.—அர்த்தராஜ்யம் கிடைத்ததும், பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—கிருஷ்ண பகவானை முன்னிட்டுக்கொண்டு வியாஸரால் நியமிக்கப்பட்ட சுபலக்கினத்தில் **காண்டவப்ரஸ்த** நகரப்பிரவேசம்செய்து, பின்பு கிருஷ்ணபகவான் ஸஹாயத்தால் அந்த நகரத்தைப் புதிதாய் நிர்மாணம் செய்யும்படி செய்தார்கள். அது ஒரு திவ்ய பட்டணமாக மாறிவிட்டபடியால் அதற்கு **இந்திரப்ரஸ்தம்** என்ற பெயர் உண்டாயிற்று. இவ்வளவையும் செய்து வைத்துவிட்டு, கிருஷ்ணபகவான் துவாரகைக்குப் போனார்.

வினா 162.—இப்படிப் பாண்டவர் ஸுகமாய் இந்திரப்ரஸ்தத்தில் வாழுங்கால் அவர்களிடம் யார் வந்து, என்ன நல்ல ஏற்பாடு செய்து வைத்தார்?

விடை.—திரிலோக ஸஞ்சாரியாயும், எங்கும் பூஜ்யராயும் உள்ள நாரதமுனிவர் இந்திரப்ரஸ்தம் வந்தார். வந்து, பாண்டவர் ஐவருக்கும் பொதுவாய் ஒருபெண்சாதி அமைந்திருப்பதை அறிந்து, பாண்டவர்களுக்கு, பொது ஸ்திரீ நிமித்தத்தால் புருஷர்களுக்கு உண்டாகும் பிரமாதங்களை ஸுந்தோப ஸுந்தாளது கதையால் நன்கு விளக்கி, அம்மாதிரி சண்டை அவர்களுக்கு உண்டாகாதிருக்கும்படி அவர்களுக்கும் திரௌபதிக்கும் இருக்கும் ஸம்பந்தத்தை ஒருவாறு ஒழுங்குபடுத்தினர். அந்த ஒழுங்காவது ஒவ்வொரு வருஷம் திரௌபதி ஒவ்வொரு பர்த்தா விடத்திலிருக்கவேண்டியது; அந்த வருஷக் கடைசியில் வரிசைக் கிரமமாய் அடுத்த பர்த்தாவிடம் போகவேண்டியது. இவ்வாறு ஒரு பர்த்தாவோடு திரௌபதி யிருக்குங்கால் மற்றைய நால்வரில் யாராவது அவர்களைப் பார்க்கும்படி நேரிட்டால், அவர் 12-வருஷம்

தீர்த்த யாத்திரைசெய்து ஒழுங்கிற்கு விரோதமாய் நடந்துகொண்ட பாபத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது" என்பதே.

வினு 163.—இந்த ஸுந்தோப ஸுந்தாள் யார்? இவர்களின் ஸ்வபாவம் என்ன?

விடை.—ஹிரண்யகசிப வம்சத்தில், நிகும்பன் என்றொரு அஸுர அரசன் இருந்தான். அவனுக்கு **ஸுந்த உபஸுந்தன்** என்ற இருபிள்ளைகள் பிறந்தார்கள். இவர்கள் இருவரும், பிறந்தது முதல் ஒருவரோடு ஒருவர் மிக அந்நியோன்யமாய் இருந்தார்கள். பார்ப்பவர்கள் யாவரும் இவர்களுக்கு தேகம் இரண்டே யொழிய மனது ஒன்றுதான் என்று சொல்லத்தக்க நிலையில் இருந்தார்கள்.

வினு 164.—இவர்கள் யாரைக் குறித்து தவம் செய்து என்ன அடைந்தார்கள்?

விடை.—பெரியவர்களிடம் இருந்து உபதேசம்பெற்று விந்திய மலைச் சாரலில் பிர்ம்மாவைக் குறித்து, இவர்கள் கடுந்தவம் புரிந்தார்கள். தேவர்கள் எவ்வளவுதான் இவர்களது தபஸைக் கலைக்கப்பார்த்தும், அவர்களால் முடியவில்லை. பிர்ம்மா பிரத்யக்ஷமாய், "என்னவரம் வேண்டும்" என்று கேட்க, இவர்கள் தமக்கு அமரத்வம் வேண்டுமென, அது தம்மால் கொடுக்க முடியாது என்று பிர்ம்மா மறுத்துவிட்டார். பின்பு இவர்கள் "எங்களுக்கு எந்தக் காரணத்தாலும் சாவு வரக்கூடாது. எங்களுக்குள் சண்டை வந்து நாங்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாகவேண்டுமே ஒழிய, வேறு எந்தக் காரணத்தாலும் சாகக்கூடாது" என்று கேட்டுக்கொள்ள, பிர்ம்மா அந்த வரத்தைக் கொடுத்துவிட்டார்.

வினா 165.—இவ்வரத்தைப்பெற்று இவர்கள் என்ன செய்தார்கள்? அப்பொழுது தேவதைகள் என்னசெய்தார்கள்?

விடை.—இவர்கள் அஸுரரானபடியால் நல்லவர்களை உபத்திரவப்படுத்த ஆரம்பித்தார்கள். இதையறிந்து, தேவதைகள் மிகுந்த துக்கமடைந்து பிர்ம்மாவிடம் சென்று முறையிட்டார்கள்.

வினா 166.—பிர்ம்மா எப்படி இந்த ஸஹோதரர்களுள் சண்டை உண்டாக்க ஏற்பாடு செய்தார்?

விடை.—பிர்ம்மா, உலகத்திலுள்ள பெண்களை விட அதிக அழகோடுகூடிய பெண்ணொருத்தியைச் சிருஷ்டிக்கும் படி விசுவகர்மாவுக்குக் கட்டளையிட, அவன் உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் எள்ளளவு அழகை எடுத்து, திலோத்தமை என்ற அப்ஸர ஸ்திரீயை சிருஷ்டித்தான்.

வினா 167.—இந்தத் திலோத்தமை ஸுந்தோபஸுந்தாளுக்குள் எப்படி சண்டை யுண்டாக்கி அவர்களை இறக்கும் படி செய்தாள்?

விடை.—ஸுந்தோப ஸுந்தாள், ஒருநாள் நடுப்பகலில் விந்திய மலையில் ஒரு கற்பாறையில் உட்கார்ந்துகொண்டு இருக்கையில், அங்கு திலோத்தமை பிர்ம்மாவினது ஆக்ஞைப் படி பூக்கொய்து கொண்டு வந்தாள். அவளைக் கண்டதும் இருவரும் ஓடிவந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு 'இவள் என் பெண்சாதி,' 'இவள் என் பெண்சாதி' என, இருவருக்கும் சண்டை உண்டாய்விட்டது. இச்சண்டையில் ஒருவரை ஒருவர் கொன்று விட்டார்கள்.

வினா 168.—இக்கதையைச் சொல்லி நாரதர் ஏற்படுத்திப் போன ஒழுங்குக்கு, யார் யாது காரணத்திற்காக விரோதமாய் நடக்க வேண்டிவந்தது?

விடை.—அர்ஜுனன் இதற்கு விரோதமாய் நடக்கவேண்டி வந்தது. ஒருநாள் மத்தியானம் ஒரு திருடன் ஒரு பிராம் மணரது கோதனம் யாவையும் திருடிக்கொண்டுபோக, அப்பொழுது அப்பிராம்மணர் ஓடிவந்து அரண்மனையி லிருந்த அர்ஜுனனிடம் முறையிட்டார். பிராம்மணனைக் காப்பாற்ற, வில்லை எடுக்க யத்தனிக்கையில், அது அப் பொழுது தர்மபுத்ரரும், திரௌபதியும் ஏகாந்தமாய் இருக்கும் ஒரு உள்ளில் இருப்பதாக அர்ஜுனனுக்கு ஞாபகம் வந்தது. வில்லெடுக்கப் போனால், நாரதர்செய்த ஒழுங்கிற்கு விரோதம் வரும்; வில்லெடுத்து வாராமற் போனால், பிராம்மணர் அநியாயமாய்ப் பொருளிழந்து கஷ்டப்படுவார். சற்று நேரம் யோசித்து தனக்கு 12-வருஷம் தீர்த்தயாத்திரை போகும்படி நேரிட்டா லும் ஸரி, பிராம்மணனைக் காப்பாற்றவேண்டுமென்று அர்ஜுனனுக்குப் பட்டது.

வினா 169.—உடனே அர்ஜுனன் என்ன செய்தான்?

விடை.—உடனே அவன் தனது கண்களை மூடிக்கொண்டு பகவானது நாமத்தை ஸ்மரணம் செய்துகொண்டு அதி வேகமாய் தர்மபுத்ரரிருக்குமிடம் சென்று தனது வில் முதலியவைகளை எடுத்துக்கொண்டு வெளிவந்து பிராம் மணனைக் காப்பாற்றினான்.

வினா 170.—இதன் பின்பு அர்ஜுனன் தீர்த்தயாத்திரை விஷயமாய் என்ன செய்தான்?

விடை.—தர்மபுத்ரர் முதலியோர் எவ்வளவோ விதத்தில் இது நாரதர் செய்த ஒழுங்கிற்கு விரோதமில்லை என்று காட்டி, அர்ஜுனன் தீர்த்தயாத்திரை செய்யவேண்டி யது அவசியமில்லை என்று சொல்லியபோதிலும், அர்ஜு

னன் ஒரே பிடிவாதமாய் தீர்த்த யாத்திரைக்கே புறப் பட்டு, அனேக பிராம்மண உத்தமர்கள் பின்தொடர்ந்து வர, வடக்கிலுள்ள அனேக திவ்ய ஸ்தலங்களைத் தரி சித்துக்கொண்டு கங்கோத்தரைக்கு வந்து அங்கு பிராம் மணர்களுடன் கொஞ்சகாலம் வஸித்திருந்தான்.

வினா 171.—அர்ஜுனனது தீர்த்த யாத்திரை என்னமாக முடிந்தது? முதலில் இதற்கேற்ப நடந்த விஷயமென்ன?

விடை.—அர்ஜுனனது தீர்த்த யாத்திரை விவாஹ யாத்திரை யாகவே முடிந்தது. இவன் ஒருநாள் கங்கையில் ஸ்நானம் செய்ய முழுகி நிற்கையில், அங்கு யதிர்ச்சையாய் வந்திருந்த கௌரவன் என்னும் நாகனது பெண்ணாகிய **உலூபி** என்பவள், இவனது அழகைக்கண்டு மோஹித்து, அர்ஜுனனைத் திடீரென்று நாகலோகத்திற்குக் கொண்டு போய் தனக்கு அர்ஜுனன்பேரில் இருந்த ஆவலை அவனுக்கு வெகு தர்மசாஸ்திர ஆதாரங்களைக்கொண்டு தெரிவிக்க, அர்ஜுனன் ஒருநாள் அவளோடு இருந்து அவளுக்கு **இராவான்** என்ற பிள்ளையுண்டாகும்படி செய்துவிட்டு மறுநாள் காலை, தான் மூன்றினாள் ஸ்நானம் செய்துகொண்டிருந்த இடம் வந்து சேர்ந்து பிராம்மணர்களுடன் நடந்த விஷயங்களை ஒளிக்காது சொல்லிவிட்டான்.

வினா 172.—இதன்பின்பு அர்ஜுனன் எங்கு சென்றான். அங்கு என்ன விவாஹம் நடந்தது?

விடை.—அர்ஜுனன் கிழக்குத் திக்கை நோக்கிப் புறப்பட்டு அனேக திவ்யஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டு வருகையில் ஓரிடத்தில் பின்னாடு வந்த பிராம்மணர்கள் அர்ஜுனனுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டுத் தத்தம் இருப்

பிடம் சென்றார்கள். இதன்பின் அவன் கிழக்கு ஸமுத்திரைக்கரை வழியாகவே மணிபுரம் வந்தான். அங்கு **சித்ரபவனன்** என்ற அரசனிருந்தான். அவனுக்குச் சித்திராங்கதை என்ற ஒரே ஒரு பெண்தான் உண்டு. அப்பெண்ணைக் கண்டு அர்ஜுனன் மோஹித்து, அவ்வரசனிடம் தனது பெயர், குலம், ஆசை முதலியவைகளைத் தெரிவித்தான். அவன் 'உனக்குப் பிறக்கும் பிள்ளையை எனக்குக் கொடுத்து விடுவாயானால் உனக்கு என்பெண்ணை கல்யாணம் செய்து கொடுக்கிறேன்' என்று சொல்ல, அதற்கு அர்ஜுனன் இசைந்து சித்திராங்கதையை விவாஹம் செய்துகொண்டு அவளுக்கு ஒரு பிள்ளை பிறக்கிற வரையில் மூன்று வருஷம் அவளிடத்தில் ஸுகமாய் இருந்து விட்டுப் பின்பு தனது தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டான்.

விஞ 173.—இதன் பின்பு, அர்ஜுனன் எங்கு தீர்த்தயாத்திரை செய்தான்? அங்கு நடந்த விசேஷம் என்ன?

விடை.—அர்ஜுனன் தெற்கு ஸமுத்திரக்கரை வழியாய்த் தீர்த்தயாத்திரை செய்து வருகையில் அங்கு நிர்மானுஷ்யமான இடத்தில் மிக அழகான ஐந்து தடாகங்களைக் கண்டான். அங்கு பக்கத்தில் வஸித்துவந்த மஹான்களை 'இவைகள் ரிஷிகளால் இப்படி ஏன் நியாகம் பண்ணப்பட்டன' என்று கேட்க, அவர்கள் "இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முதலை இருக்கின்றது. அது தண்ணீரில் இறங்குபவர் எல்லோரையும் இழுத்துக் கொல்லுகினறது" என்று சொல்ல, உடனே அர்ஜுனன் ஒரு தடாகத்திலிறங்கி ஸ்நானம் செய்ய, முதலை அவன் காலைக் கவ்விக்கொண்டது. அதைத் தனது தேக பலத்தால் கரையில் அர்ஜுனன் இழுத்துப்போட உடனே

அது ஒரு திவ்ய அப்ஸர ஸ்திரீயாய் மாறவே, அவளை நோக்கி, 'நீ முதலை யாவதற்குக் காரண மென்ன' வென்று அர்ஜுனன் கேட்டான்.

வினா 174.—இப்படிக் கேட்டதற்கு அவள் என்ன பதில் சொன்னாள்? அர்ஜுனன் பின்பு என்ன செய்தான்?

விடை.—தாங்கள் ஐந்துபேர் அப்ஸர ஸ்திரீகள் என்றும், ஒரு கால் ஒரு பிரம்மஞானியின் தபஸைக் கலைக்க உத்தேசிக்கையில், அவர் தங்களை முதலைகளாகப் போகும்படி சபித்தார் என்றும், அப்பொழுது அவருக்குக் கிருபை வரும்படி தாங்கள் நடந்துகொண்டவுடன் தங்களை 103-வருஷங்களுக்குப்பின் ஒரு திவ்ய புருஷன் தண்ணீரை விட்டு வெளியில் போடுவான், உடனே தங்களுக்கு ஸ்வயமான ரூபம் வருமென்றும் சொல்லி, நாரதரது உத்தரவால் இவ்வைந்து தடாகங்களில் தாங்கள் முதலைகளா யிருப்பதாகச் சொன்னாள். இதைக்கேட்டதும் அப்ஸர ஸ்திரீகளுக்கும் அங்குள்ள ரிஷீசுவரர்களுக்கும் ஓரேகாலத்தில் உபகாரம் செய்ய நினைத்து மற்றை நான்கு தடாகங்களில் உள்ள முதலைகளையும் அர்ஜுனன் கரையில் இழுத்துப்போட, அவைகளும் அப்ஸர ஸ்திரீகளாகி அர்ஜுனனைத் துதித்துக்கொண்டு ஸ்வர்க்கம் சென்றன.

வினா 175.—இதன் பின்பு அர்ஜுனன் எங்கே போனான்?

விடை.—சித்திராங்கதையைப் பார்ப்பதற்காக மணிபுரத்திற்கு அர்ஜுனன் சென்று, அங்கு தன் பிள்ளையாகிய பப்ரவாஹனன் அரசாள்வதைக் கண்டான். அங்கு சித்திராங்கதையைக்கண்டு ஸந்தோஷமடைந்து, பின்பு மேற்கு ஸமுத்திரக்கரை யோரமாய் கோகரணம்முதல்

ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்துகொண்டு கடைசியாக துவாரகாபுரியின் அருகேயுள்ள பிரபாஸ தீர்த்தம் வந்து சேர்ந்தான்,

வினா 176.—இங்கு வந்ததும், அர்ஜுனன் என்ன கேள்விப் பட்டான்? உடனே என்ன செய்தான்?

விடை.—இதுவரையில் கிருஷ்ண பகவானது தங்கையாகிய ஸுபத்திரையின் அழகைக் கேள்வியுற்று, அவளை விவாஹம்செய்து கொள்ள வேண்டுமென்று அர்ஜுனன் எண்ணியிருந்தான். அவளைத் துர்யோதனனுக்குக் கொடுப்பதாகப் பலராமர் வாக்களித்திருப்பதைக் கேள்வியுற்றான். உடனே ஸுபத்திரையைத் தான் அடைய வேண்டும் என்கிற ஆவலோடு கிருஷ்ணபகவானைத் துதிக்க, அவர் உடனே அவன் முன் தோன்றினார்.

வினா 177.—கிருஷ்ண பகவான் வந்து ஸுபத்திரையை அடையும் விஷயத்தில் அர்ஜுனனுக்கு என்ன உபாயம் சொல்லிக்கொடுத்து எந்த வழியால் ஸுபத்திரையையும், அர்ஜுனனையும் சேர்த்து வைத்தார்?

விடை.—அர்ஜுனனைத் திரிதண்ட ஸந்நியாஸி வேஷம் போட்டுக் கொள்ளும்படி செய்து, பக்கத்திலிருக்கும் ரெய்வதகபர்வதத்தின் குகை ஒன்றில் வந்திருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, துவாரகைக்குச் சென்றார். கொஞ்ச நாளைக்குள் ரெய்வதகபர்வதத்தில் ஒரு உத்ஸவம் வர, அதற்கு ஸகல யாதவர்களும் அங்குவந்து அர்ஜுன ஸந்நியாஸியைக் கண்டார்கள். ஸந்நியாஸிகளிடம் அதிகப்பிரீதி வாய்ந்த பலராமர் வந்து அர்ஜுனனை வந்தனம் செய்ய, கிருஷ்ணமூர்த்தி கலியுக ஸந்நியாஸிகளை நம்பலாகாதென்று தூரவேகின்றுவிட்டார். பெரிய

வாளைத் தூஷியாதிருக்கும்படி கிருஷ்ணனைக் கையமர்த்தி விட்டு, பலராமர் துவாரகைக்கு ஸந்நியாஸியை அழைத்துப்போய், கிருஷ்ணமூர்த்தி எவ்வளவுதடுத்தும் அதைக்கேட்காது, ஸுபத்திரை முதலியவர்கள் இருக்கும் கன்னியா மடத்தருகில் ஒரு தோட்டத்தில் இவரை வைத்து, சாதுர்மாஸ்ய விரதம் முடிகிறவரையில் அப்படியே இருக்கும் படி ஏற்பாடு செய்தார். அப்பொழுது பலராமரது உத்தரவின்படி ஸுபத்திரை அர்ஜுன ஸந்நியாஸிக்குத் தொண்டுசெய்து வந்தாள்.

வினா 178.—பின்பு கிருஷ்ணமூர்த்தி ஸுபத்திரையின் கல்யாணத்தை எவ்வாறு நடத்திவைத்தார்?

விடை.—சாதுர்மாஸ்ய முடிவில் துவாரகைக்கு அருகிலுள்ள பிண்டாரக தீர்த்தத்தில் ஒரு பெரியஉத்ஸவம் நடப்பது வழக்கம். அதற்காக அர்ஜுன ஸந்நியாஸியும், ஸுபத்திரையும் ஒரு யாதவ ஸேனாதிபதியும் தவிர, மற்றைய எல்லா யாதவர்களும் பிண்டாரக தீர்த்தம் சென்றார்கள். அப்பொழுது இரவில் ஸுபத்திரைக்கு அர்ஜுனன் தனது உண்மை ரூபத்தைக்காட்டி காந்தர்வ விவாஹம் செய்துகொள்ளலாமென்று சொல்ல, "கிருஷ்ணமூர்த்தியில்லாது நாம் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது" என்று ஸுபத்திரை சொன்னாள். அர்ஜுனன் கிருஷ்ணமூர்த்தியைத்தியானம் செய்தான். கிருஷ்ணபகவான் உடனே வர, அவரது மஹிமையால் அந்த இரவிலேயே, தேவேந்திரன் பிரஹஸ்பதி முதலியவர் வர, அர்ஜுனனுக்கு விவாஹம் விதிப்படி நடந்தேறியது.

வினா 179.—இப்படி விவாஹம் முடிந்த பின்பு அர்ஜுனன் எவ்வாறு இந்திரப்ரஸ்தத்திற்கு வந்தான்? வழியில் என்ன நடந்தது?

விடை.—கிருஷ்ண பகவான் மறைந்து போகுமுன் ஸுபத்திரைக்கு இரத ஸாரத்யம் தெரியுமென்றும், ஆகையால் லாயத்தில் இருக்கும் ஒரு இரதத்தை தயார் செய்து கொண்டு ஸுபத்திரையை ஸாரதியாகவைத்துக்கொண்டு இந்திரப்ரஸ்தம் போகலாமென்றும், பொழுது விடிவதற்கு முன், துவாரகையின் எல்லையைத் தாண்டிவிட வேண்டுமென்றும், அர்ஜுனனுக்கு எச்சரிகை செய்து விட்டுப்போனர். அர்ஜுனன் பகவானது உத்திரவின் படி புறப்பட்டுபோகையில், பகவானுலேயே ஏவப்பட்ட யாதவ ஸைனிபதி ஒருவன் அர்ஜுனனை எதிர்த்து யுத்தம் செய்வதுபோலப் பாசாங்கு செய்ய அவன் நோக்கத்தைத் தெரிந்த அர்ஜுனன் அவன்மேலே படாது, வெகு தந்திரமாய்ப் பாணங்களை வருஷித்தான். இதைக் கண்டு அந்த ஸைனிபதி தோல்விபடைந் தாற்போல பாசாங்கு செய்துகொண்டு அர்ஜுனனைப்போக விட்டான். அர்ஜுனன் கூடிய சீக்கிரத்தில் இந்திரப்ரஸ்தம் போய்ச்சேர்ந்தான்.

வினு 180.—இந்த ஸமாசாரம் பலராமருக்குத் தெரிந்ததும் அவர் என்ன செய்ய யத்தனித்தார்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—உடனே அர்ஜுனனிடம் பலராமருக்கு அதிக கோபம் வர, அவனைக் கொல்லவேண்டுமென்று அவர் ஸகல யாதவ ஸைனிகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். உடனே கிருஷ்ணமூர்த்தி கலியுக ஸந்நியாஸிகளைப் பற்றிச் சொன்னவைகளைக் கேட்காததினாலல்லவா இக்கஷ்டம் வந்ததென்று பலராமருக்குத் தோன்ற, இப்பொழுதாவது கிருஷ்ணமூர்த்தி சொற்படி கேட்போம் என்று அவரோடு ஆலோசித்தார். "அர்ஜு-

னனைச் சண்டையில் கொன்றால் தமது ஸுபத்திரைக்குக் கஷ்டம். நாம் தோல்வியடைந்தால் நமக்கும் அவமானம். ஆகவே சண்டை எப்படிமுடிந்தாலும் கஷ்டம் நமக்கே. ஆகையால் நமக்கு தெரிந்தே அர்ஜுனன் ஸுபத்திரையைக் கல்யாணம் செய்து கொண்டதாக, அவனுக்குச் சீர்முதலியவைகளைக் கொண்டு போய்க் கொடுத்து, அர்ஜுனனை நம்மோடு கூட்டிக் கொள்வதே இப்பொழுது செய்யத்தக்க காரியம்" என்று கிருஷ்ணன் சொல்ல, அதன்படியே யாதவர்கள் செய்து ஸுபத்திரைக்கு விவாஹத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

வினா 181.—பிரம்மசரிய விரதத்தோடு தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்ட அர்ஜுனன் அதை இப்படி விவாஹ யாத்திரை யாக்கினது நியாயமா?

விடை.—கதை இருக்கிறபடியே பார்த்தால் நியாயம் என்று ஸ்தாபிக்க முடியாது. பாரதம் வேத ரஹஸ்யத்தை வெளியிட வந்த நூல் எனக்கொண்டு, அர்ஜுனனை நரனாகவும் கிருஷ்ண பரமாத்மாவை மனிதனுள் இருக்கும் பரமாத்மாவாகவும் கொண்டு, ஜீவாத்மாவுக்குக் கடைசியில் வைராக்கியம் வந்து மோக்ஷமடைவதற்குத் தக்க அதிகாரம் வரும்படி செய்யப் பரமாத்மா ஜீவாத்மாவை உலக இன்பங்களில் அலையவிட்டு வேடிக்கை பார்ப்பதை இந்த தீர்த்த யாத்திரை விவாஹயாத்திரையானது சூசிப்பிக்கின்ற தென்று கொண்டால் மாத்திரம்தான் இந்த கேள்விக்கு ஒருவாறு பரிஹாரம் சொல்லலாம். வேறு எந்த விதமாய் ஆகட்டும், கதை யிருக்கிறபடி சொல்லப்போனால் அது யுக்திக்குப் பொருந்தாத தாகவே முடியும்.

வினா 182.—இப்படி அர்ஜுனனுக்கு ஸுபத்திரா விவாஹ மானதும் கிருஷ்ணார்ஜுனர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இவ்விருவரும் இந்திரப்ரஸ்தத்திலேயே ஸுகமாய்க் கொஞ்ச காலம் வாழ்ந்திருந்தார்கள். இப்படி யிருக்கையில் வஸந்த காலத்தில் ஒருநாள் இவ்விருவரும் தங்களது ஸ்திரீகளோடு யமுனையில் ஜலக்கிரீடை செய்யவந்து கொஞ்ச நாழிகை ஜலக்கிரீடை செய்துவிட்டு யமுனைக் கரையில் ஏகாந்த ஸ்தலத்தில் இருவரும் வந்து உட்கார்ந் திருந்தார்கள்.

வினா 183.—அப்பொழுது அவர்களிடத்தில் யார்வந்து என்ன வேண்டுமென்று யாசித்தார்கள்?

விடை.—கிருஷ்ணார்ஜுனர்கள் இப்படி உட்கார்ந்திருக்கும் பொழுது அக்கினி பகவான் ஒரு பிராம்மண வடிவம் கொண்டு அவர்களிடம் வந்து தனக்கு வலிமை குறைந் திருக்கிறதென்பதாகவும், அதற்குப் பிரம்மா பக்கத்தி லிருக்கும் காண்டவ வனத்தைதான் எரிப்பதே பரிஹா ரம் என்று சொன்னதாகவும், அந்த வனத்தைத் தான் முன் சிலதடவை எரிக்கப்பார்த்து முடியாமற் போன தாகவும் சொல்லிக் கடைசியாய் அவர்களை அவ்வனத்தை எரிப்பதில் தனக்கு ஸஹாயம் செய்யவேண்டுமென்று மஹா விநயத்துடன் கேட்டுக்கொண்டார்.

வினா 184.—அக்கினி பகவானுக்கு வலிமை குறையக் காரண மென்ன?

விடை.—முற்காலத்தில் சுவேதாகி என்றொரு அரசனிருந் தான். அவன் அடிக்கடி தொடர்ச்சியாய் யக்ஞங்கள் நடத்தி வர, பிராம்மணர்களுக்குக் கஷ்டம் அதிகரித்து விட்டபடியால் எல்லோரும், 'உம்முடைய யக்ஞத்திற்கு

வந்து ஸஹாயம்செய்வதில்லை' என்று மறுத்துவிட்டார்கள். யக்ஞ ஆசை அதிகமாக உடைய அரசன் மஹாதேவரைக் குறித்து தவம்செய்ய அவர் அவ்வரசன் முன் தோன்றினவுடன் "நீரே எனக்கு யக்ஞ விஷயத்தில் ஸஹாயம் செய்யவேண்டும்" என்று அவன் கேட்க, அதற்கு அவர் "நீ ஒருவர் ஸஹாயமுமின்றி, அக்கினியில் விடாது நெய்யை ஆஹுதியாக 12-வருஷம் கொட்டிக்கொண்டிருந்தால் என் ஸஹாயத்தை நீ அடையலாம்" என்று சொல்லி மறைந்தார். இதுகேட்டு சுவேதாகி அப்படி செய்யக் கடைசியில் சிவன் தூர்வாஸ மஹரிஷியை அனுப்பி அவ்வரசனது கஷ்டத்தை நிவர்த்தி செய்து வைத்தார். இப்படி 12-வருஷம் விடாது நெய்யைக் குடித்தமையால் அக்கினிபகவானுக்கு வலிமை குறைந்தது.

வினா **185**.—அக்கினி பகவானது எண்ணத்தை யறிந்தவுடன் கிருஷ்ணார்ஜுனர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இவர்கள் அக்கனிபகவானுக்கு வேண்டிய ஸஹாயம் செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். அர்ஜுனன் தனக்குத் தகுந்த தேர், வில், அம்பு முதலியவைகள் இல்லையென்று சொல்ல, அக்கினி பகவான் வருணபகவானிடம் சென்று ஹநுமக்கொடிவாய்ந்து நான்கு குதிரைகள் கட்டிய இரதத்தையும் காண்டீவ தனுஸையும், எப்பொழுதும் நிறைந்திருக்கும் அம்பறாத்தூணியையும் வாங்கி அர்ஜுனனுக்கே கொடுத்துவிட்டு காண்டவவனத்தைச் சென்று சூழ்ந்துகொண்டு எரிக்கத்தொடங்கினர். கிருஷ்ணார்ஜுனர் சுற்றி வந்துகொண்டே வெளியில் ஓடப் பார்க்கும் ஸகல பிராணிகளையும் நெருப்பிலே தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

வினு 186.—இப்படி இவர்கள் அக்கினிபகவானுக்கு யஜ்ஞ யம் செய்துகொண்டிருக்கையில் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—காண்டவ வனத்தை அக்கினி பகவான் எரிக்கிறான் என்ற செய்தியைக் கேள்வியுற்ற இந்திரன் தனது மேகங் களால் மழை பொழியும்படி செய்தான். கிருஷ்ணார்ஜு னுள் அம்மழையை ஆகாயத்தில் சரக்கூடுபோட்டுத் தடுத்து விட்டார்கள். இதைக் கண்டவுடன் ஸகல தேவதைகளும் இவர்களோடு சண்டைக்குவர, கொஞ்ச நாழிகை இவர்களுக்கும் கிருஷ்ணார்ஜுனர்களுக்கும் கோரயுத்தம்நடந்தது. கடைசியில் தேவதைகள் தோல்வி யடைந்து தத்தம் இருப்பிடம் சென்றார்கள.

வினு 187.—இந்த நெருப்பில் ஒரு ஜந்துவும் பிழைக்க வில்லையா?

விடை.—ஆறு ஜந்துக்கள் மாத்திரம் பிழைத்தன. அவையா வன: தக்ஷகன் பிள்ளையாகிய ஒரு பாம்பு, மயன் என்ற அஸுரன், நான்கு சாரங்கக பட்சிகள் ஆகிய இவை களே.

வினு 188.—தக்ஷகனது பிள்ளையாகிய பாம்பு எப்படிப் பிழைத் தோடிப்போயிற்று?

விடை.—நெருப்புப் பற்றி எரியும் காலத்தில் தக்ஷகன் காண் டவவனத்திலில்லை. குருக்ஷேத்திரத்திற்கு ஒரு காரி யார்த்தமாய்ப் போயிருந்தான். அவன் பெண்சாதியும் பிள்ளையும் அவ்வனத்தி லிருந்தார்கள். நெருப்பு ஸமீபத் தில் வருவதைக் கண்டு, தன் பிள்ளையைப் பிழைப்பிக்க வெண்ணி, தன் பிள்ளையை தலை முன்னதாகவும், வால் தன் வாயண்டையும் வரும்படியாகவும் விழுங்கிக்

கொண்டு, தாய்ப் பாம்பு ஆகாயத்திற் கிளம்பியது. இதைக்கண்ட அர்ஜுனன் தாய்ப்பாம்பின் தலையை அறுத்துவிட, உள்ளிருந்த சிறு பாம்பின்வால் மாத்திரம் வெட்டுண்டது. அச்சமயத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் காற்று, தூசி இவைகளைக் கிளப்பி மறைக்க இச்சிறு பாம்பு தப்பு ஓடிப்போய்விட்டது. இது அர்ஜுனனுக்குத் தெரியாது.

வினா 189.—மயாஸுரன் எப்படித் தப்பித்துக்கொண்டான்?

விடை.—இவ்வஸுரன் தன்னண்டையில் தீ வருவதைக் கண்டு காண்டவ வனத்தை விட்டு ஓட யத்தனிக்கையில், கிருஷ்ணபகவான் கண்டு, அவனைக் கொல்ல சக்கிராயுதத்தைக் கையிலெடுத்துவிட்டார். இதை கண்ட மயன் அர்ஜுனன் காலில் விழுந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்ச, அர்ஜுனன் அவனைக் காப்பாற்றுவதாகச் சொன்னன். உடனே பகவானும் சக்கிராயுதத்தைக் கீழே வைத்து விட்டார். ஆகவே இருவரும் மயனை தப்பிப் போகும்படி விட்டுவிட்டார்கள். (தனக்கு உயிர்தந்த அர்ஜுனனுக்கு இம்மயன்செய்த உபகாரத்தை ஸபாபர்வத்தில் விஸ்தரிப்போம்.)

வினா 190.—நான்கு சாரங்கபறைவைகள் எவ்வாறு பிழைத்தன?

விடை.—நெருப்பு சுற்றி வருவதைக் கண்ட நான்கு இறகு முளைக்காத சாரங்கக் குஞ்சுகள் அக்கினி பகவானை மனதாரத் துதித்தன. மேலும் இச் சாரங்கபறவைகளின் பிதாவாகிய மண்டபாலர் என்கிற ரிஷியும் முன்னமேயே அக்கினி பகவானிடம் தன் நான்கு குஞ்சுகளையும் எரிக்காது காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். இவ்விரு காரணத்தால் இக்குஞ்சுகளை எரிக்காது அக்கினிபகவான் விட்டுவிட்டார்.

வினா 191.—ரிஷிக்குப் பறவைகள் பிறப்பானேன் ?

விடை.—மண்டபாலர் என்கிற ரிஷி மஹா ஸந்நியாஸியாயிருந்து கடைசியில் தேகம் விட்டு பிதிர் லோகத்திற்குப் போனதும், அங்கு ஸுகம் கிடைக்காது கண்டு, அங்கிருந்த தேவதைகள் மூலமாய் தனக்குப் பிள்ளையில்லாததால்தான் அவ்வுலகில் ஸுகம் கிடைக்கவில்லை யென்று தெரிந்துகொண்டார். உடனே அதிசீக்கிரத்தில் குழந்தைகள் உண்டாவது பக்ஷிஜாதியில்தான் என்று அறிந்தரிஷி, ஒரு சாரங்ககப்பறவையாகி நான்கு குஞ்சுகளை உண்டாக்கினர். பின்புகொஞ்சநாள் சாரங்ககமாகவே பக்ஷிதர்மத்தை அனுஷ்டித்துவிட்டுப் பின் பிதிர்லோகமடைந்தார். ஆகையால்தான் ரிஷிக்குப் பக்ஷிகள் குழந்தைகளாகப் பிறந்தன.

வினா 192.—இப்படி காண்டவ தகனம் ஆனதும் என்ன நடந்தது?

விடை.—இந்திரன் முதலிய தேவதைகள் அர்ஜுனனைக் கண்டு ஸந்தோஷித்தார்கள். அப்பொழுது அர்ஜுனன் இந்திரனைத் தனக்கு அஸ்திர விசேஷங்களைக் கொடுக்கும்படி கேட்டான். இந்திரன் "உனக்கு எப்பொழுது சிவ கடாக்ஷம் வருமோ அப்பொழுது நீ கேட்டவைகளை நான் உனக்குக் கொடுப்பேன்" என்று சொல்லித் தன் இருப்பிடம் சென்றான். அக்கினிபகவானும் 'என்ஸஹாயத்தால் உங்களுக்கு நினைத்தவிடம்போக சக்தி வரட்டும்' என்ற வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார். உடனே ஸகலதேவதைகளும் தத்தம் இருப்பிடம் சென்றார்கள். கிருஷ்ணார்ஜுனர்களும், ஸ்திரீ ஜனங்களும் இந்திரப்ரஸ்தம்சென்றார்கள்.

---

2. ஸபா பர்வம்

பாண்டவர்கள்புரிந்ததவப்பயனுகி
யவதரித்துப்பகைத்துமேன்மேன்
மூண்டவினைமுழுவதுவுமுனதோறு
முரண்முருக்கிமுகில்புகாமல்
காண்டவமுங்கனல்வயிற்றுக்
கனறணியநுகருவித்துக்காக்குமாறே
பூண்டருளெம்பெருமானைப்
போற்றுவாரெழுபிறப்புமாற்றுவாரே.

வினு 1.—காண்டவவனத் தீயிலிருந்து காப்பாற்றப்பட்ட மயாஸுரன் எப்படித் தன் நன்றியறிதலைக் காட்டத் தொடங்கினன் ?

விடை.—மயன் தனக்கு உயிர் தந்த அர்ஜுனனிடம் வந்து தனக்கு இருக்கும் ஸந்தோஷத்தை தெரிவித்து, தன்னுல் இயன்றமட்டும் பாண்டவர்களுக்கு ஏதாவது ஒரு நன்மை செய்ய எண்ணுவதாகச் சொன்னன். அர்ஜுனன் தனக்கு ஒரு உபகாரமும் தற்காலம் வேண்டாம் என்றும், தன்னிடத்தில் மயனுக்கு அப்பொழுது இருக்கும் நன்றியறிதல் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று மறுமொழி சொன்னன். மேன்மேலும் மயன் உபகாரம் ஏதாவது செய்தே தீரவேண்டும் என்று வற்புறுத்த, அப்பொழுது அர்ஜுனன் 'கிருஷ்ணனுக்குப் பிரியமானது எதுவோ அதைச் செய்' என்று மயனுக்கு உத்தரவு செய்தான்.

விஞ 2.—கிருஷ்ணமூர்த்தி மயாஸுரனை என்ன செய்யும்படி ஏவினார்?

விடை.—மஹாத்மாவாயும் அர்ஜுனன் தமயனுயும் உள்ள தர்மபுத்திரர் இருந்து அரசாளத் தகுந்ததாயும், தேவாஸுர சிற்ப சாஸ்திர விசித்திரங்கள் அமைந்து அற்புதங்கள் நிறைந்ததாயும் உள்ள ஒரு திவ்ய ஸபையை இந்திரப்ரஸ்தத்தில் உண்டாக்கும்படி கிருஷ்ணபகவான் மயனை ஏவினார்.

விஞ 3.—இப்படிக் கிருஷ்ண பகவான் உத்தரவு செய்த பின்பு என்ன செய்தார்?

விடை.—இதன் பின்பு பாண்டவர்களில் தன்னைவிட வயதில் சிறியவரை ஆசிர்வதித்து ஸமான வயதுள்ளவர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு தன்னைவிட பெரியோரிடம் இருந்து மஹா விநயத்துடன் விடைபெற்று கிருஷ்ண பகவான் துவாரகாபுரியை நோக்கிச் சென்றார்.

விஞ 4.—மயாஸுரன் எங்கிருந்து ஸபைக்குவேண்டிய ஸாமான்களைக் கொண்டுவந்து எவ்வளவு நாளில் ஸபையைக் கட்டி முடித்தான்?

விடை.—கைலாஸகிரிக்கு வடக்கே மைநாக மலைக்கருகில் பிந்து ஸரஸின் கரையோரமாக அநேக விசேஷ விலையுயர்ந்தகற்களை விருஷபர்வன் என்கிற அஸுரராஜன் வீட்டின் அருகாமையில் மயன் முன்னொருக்கால் தானவர்கள் யாகஞ்செய்யுங்கால், சேர்த்துவைத்திருந்தான். அவைகளை வடக்கேசென்று தர்மபுத்திரரது ஸபைக்காக எடுத்துக்கொண்டு வந்து தனக்கு ஊழியக்காரராயிருக்கும் கிங்கரர்கள் என்கிற அஸுரர்களது ஸஹாயத்தால்

14-மாதத்தில் ஒரு விசித்திர ஸபையை இந்திரப்ரஸ்தத்தில் கட்டி முடித்தான்.

வினா 5.—இந்த ஸபையிலடங்கிய முக்கிய விசித்திரங்கள் என்ன?

விடை.—இச்சபையில் சிலவிடங்களில் கீழேபோட்டுள்ள பளிங்குக் கற்களால் பார்ப்பவர்களுக்குத் தண்ணீர் ஓடுவதுபோல் தோன்றும், சில விடங்களில் நல்ல குளத்தை உண்டாக்கிவைத்து அதன் படிகளில் பளிங்குக் கற்கள் அமைத்திருத்தலால் அங்கு தண்ணீராவது பள்ளமாவது இருப்பதாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்ற திருக்கும். வேறு சில விடங்களில், சுவரில் கண்ணாடிகளின் மூலமாயாவது, திரைகளின் மூலமாயாவது, சித்திரங்கள் மூலமாயாவது வாசல் இருக்குமிடத்தில் இல்லாதது போலவும், இல்லாதவிடத்தில் இருப்பதுபோலவும் தோன்றும்படி செய்திருந்தது. ஆகையால் இந்த ரகஸியங்களை அறியாது உள்ளே செல்லும் ஜனங்கள் உள்ளே போகமுடியாமலும், வெளியே வரமுடியாமலும் தத்தளிக்கவேண்டியதுதான். இதுபோல இன்னும் அனேக விசித்திரங்களோடு கூடி இருந்தது இந்த மயஸபை.

வினா 6.—இவ்வாறு மயன் ஸபையைக் கட்டி முடித்ததும் தர்மபுத்திரர் என்ன செய்தார்?

விடை.—மஹாப்பிராமணர்களுக்கு ஒரு சுபதினத்தில் வயிறார போஜனமிட்டு, அன்று ஒரு சுபலக்கினத்தில் பிராமண சிரேஷ்டரால் ஆசீர்வதிக்கப் பெற்று, இந்த ஸபையில் யுதிஷ்டிரர் பிரவேசித்தார். இந்த ஸபையில் இருக்குங்கால் அனேக மஹரிஷிகள் அங்குவந்து தர்மபுத்திரருக்கு சாஸ்திர ரகஸியங்களை உபதேசித்தருளினர். அனேக சிற்றரசர்களும், ஸ்நேகித ராஜாக்களும் தர்மபுத்திரரிடம்

வந்து காத்துக்கிடந்தனர். இவ்வாறு மேலான பதவியில் தர்மபுத்திரர் மயனால் செய்யப்பட்ட அந்த விசித்திர ஸபையிலிருந்துகொண்டு மனுநெறி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தார்.

வினு 7.—இவ்வாறு பாண்டவர்கள் கோலாஹலமாய் மய ஸபையில் வஸிக்கும்பொழுது யார் இவர்களைப் பார்க்க வந்து, என்ன சொன்னார்?

விடை.—ஸகல சாஸ்திரங்கள், கலை ஞானங்கள் முதலியவைகளில் கரை கண்டவரும், ஸதா ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்பவருமான நாரதர் பாண்டவர்களைப் பார்க்க இந்திரப்ரஸ்தத்திற்கு வந்தார். உடனே யுதிஷ்டிரர் முதலியவர்கள் எழுந்து ரிஷிக்கு மரியாதை செய்து அவரை ஒரு உயர்ந்த ஆஸனத்திலிருத்திவிட்டுப் பாண்டவா முதலியவர்கள் தத்தமக்குத் தகுந்த கீழான ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். உடனே நாரதர் இராஜ்யத்தின் செழிப்பு முதலியவைகளைபற்றி மிகுந்த ஆவலோடு யுதிஷ்டிரரை விசாரித்தார். இதன் பின்பு தர்மபுத்திரர் "இந்த ஸபையைப்போல வேறு ஸபை எங்கேயாவது கண்டதுண்டா?" என்று நாரதரை மஹா விநயத்தோடு கேட்டார்.

வினு 8.—இதற்கு நாரதர் என்ன பதில் சொன்னார்?

விடை.—"மனுஷ்ய லோகத்தில் இதைப்போன்ற விசித்திரமான ஸபை நான் எங்கும் கண்டதில்லை. ஆனால் லோகபாலர்கள், பிரம்மா, இந்திரன் முதலியவர்களது ஸபைகள் வேண்டுமானால் இதற்குக் கொஞ்சம் மேற்பட்டதெனச் சொல்லலாம்" என்று சொல்லி அவர்களது ஸபைகளை நாரதர் யுதிஷ்டிரருக்கு வர்ணிக்கத் தொடங்கினார்.

வினா 9.—இவ்வாறு நாரதர் வர்ணித்துக்கொண்டு வருங்கால் யுதிஷ்டிரரது மனதில் பற்றிய முக்கிய விஷயங்கள் எவை? யுதிஷ்டிரர் முடிவில் என்ன செய்தார்?

விடை.—இந்திர ஸபையில் ஸூர்ய வம்சத்தரசராகிய ஹரிச்சந்திரர் இருக்கிறார் என்பதும், யம ஸபையில் பாண்டு மஹாராஜா இருக்கிறார் என்பதும், யுதிஷ்டிரர் மனதில் நன்றாய்ப் பதிய, கடைசியில் யுதிஷ்டிரர் நாரதரை நோக்கி "என் தகப்பனார் ஏன் இன்னும் பிதிர்லோகத்தில் யமஸபையில் இருக்கிறார்? ஹரிச்சந்திரன் போன்ற அரசர்கள் மாத்திரம் ஏன் இந்திர ஸபையில் இருக்கவேண்டும்? இவர்களைப்போல என் பிதாவும் இந்திர ஸபைக்குப் போகவேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்.

வினா 10.—இதற்கு நாரதர் என்ன பதில் சொன்னார்?

விடை.—"ஹரிச்சந்திரன் முன்பு இராஜஸூய யக்ஞம்செய்து தனது ஸொத்துக்களைத் தானஞ்செய்து ஸகலரையும் திருப்தி செய்தமையால், இந்திர ஸபையில் இப்பொழுது ஸுகத்தை அனுபவிக்கிறான். இப்படி ஸுகம் அனுபவிக்கும் ஹரிச்சந்திரனது பதவியைக் கண்ட உனது தகப்பனை பாண்டு, உன்னையும் இராஜஸூய யக்ஞம் செய்யச் சொல்லி தனக்கும் அப்பதவி கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டான்" என்று நாரதர் மறுமொழி சொல்லி திரிலோக ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டார்.

வினா 11.—இப்படி நாரதர் சொல்லிப்போனதும், யுதிஷ்டிரர் என்ன தீர்மானம் செய்தார்?

விடை.—யுதிஷ்டிரருக்கு அந்த யாகஞ்செய்தால் நலம் என்று தோன்ற, தனது தம்பிமார், மந்திரிமார் முதலியவர்களோடு ஆலோசனை செய்தார். அவர்களும் இதை அங்கீகரித்தார்கள். பின்பு தௌம்யர், வியாஸர், இவர்களோடு தர்மபுத்திரர் கலந்து ஆலோசித்தார். இவர்களும் இதை அங்கீகரித்தார்கள். இவ்வளவு முடிந்த பின்பும் தர்மபுத்திரருக்கு ஒருவித ஸ்திரம் வராததால் கிருஷ்ணபகவானைத் துவாரகையிலிருந்து ஒருதூதன் மூலமாய் வரவழைத்து அவரோடு ஆலோசித்துப் பார்த்தார். இதன் பின்பு தர்மபுத்திரர் இராஜஸூய யாகஞ் செய்வதாகத் தீர்மானித்தார்.

வினு 12.—பாண்டவர்கள் இராஜஸூய யாகஞ் செய்வதற்கு என்ன முக்கியமான தடை இருந்தது?

விடை.—இந்த யாகம் செய்ய வேண்டுமானால், பரதகண்டத்திலிருந்த அரசர் யாவரும் பாண்டவர்களுக்கு ஸ்நேகிதர்களாக வாவது அல்லது அவர்களால் ஜயிக்கப்பட்டவர்களாகவாவது இருந்து யக்ஞத்தில் தர்மபுத்திரருக்கு மரியாதை செய்ய வரவேண்டும். ஜராஸந்தனைத் தவிர வேறு பரதகண்டத்தரசர் யாவரும் ஒருவாறு தர்மபுத்திரருக்கு இணங்கிவிடுவார்கள். இவன் மாத்திரம் ஒரு வழிக்கும் வரமாட்டான். ஆகையால் ஜராஸந்தன் உயிரோடிருப்பதே அந்த இராஜஸூய யக்ஞத்திற்கு ஒரு பெரிய தடையாய் இருந்தது.

வினு 13.—ஜராஸந்தனைக் கொன்று இந்த முக்கிய தடையை நிவர்த்தி செய்வதற்குக் கிருஷ்ணபகவான் என்ன உபாயம் சொன்னார்?

விடை.—தாமும், பீமனும், அர்ஜுனனும் மகத தேசாதிபதி ஜராஸந்தன் பட்டணமாகிய கிரிவ்ரஜம் என்கிற பட்

டணத்திற்கு ஸ்நாதகப்ராமணர் வேஷம் தரித்துப்போய் அவனைத் தங்கள் மூவரில் ஒருவரோடு யுத்தம் செய்யும் படி கேட்டுக் கடைசியில் கொன்று திரும்பலாம் என்று உபாயம் சொல்லிக் கொடுத்தார்.

வினா 14.—ஜராஸந்தனைக் கொன்றேதான் தீரவேண்டு மென்று ஏன் தர்மபுத்திராதிகள் எண்ணினார்கள் ?

விடை.—அவன் துராத்மா. அவன் நரபசு செய்வதற்காக அநேக அரசரைப் பலிகொடுக்க எண்ணி தனது பட்டணத்தருகிலிருந்த ஒருமலைக் குகையில் அடைத்துப் போட்டிருந்தான். ஆகையால் அவனைக் கொன்றால் அனேக அரசரைப் பிழைப்பித்து பாண்டவர்கள் அவர்களைத் தமக்கு வசப்படுத்திக் கொள்ளலாம். ஆதலால், யாவரும் ஜராஸந்தனைக் கொன்றே தீரவேண்டும் என்று எண்ணினார்கள்.

வினா15.—ஜராஸந்தனக்கு இப்பெயர் வரக் காரணமென்ன?

விடை.—இவன் தகப்பன் பிருகத்ரத ராஜாவுக்கு இரண்டு அழகியமனைவிகள் இருந்தார்கள். இவர்கள் இருவரிடத்திலும் இவருக்குக் குழந்தைகள் உண்டாக இவர்கள் கொஞ்ச காலத்திற்கெல்லாம் பிள்ளைகளைப் பெற்றார்கள். பெற்றதும், ஒருத்திக்கு ஒருகுழந்தையின் வலது பாதியும், மற்றவளுக்கு அதே குழந்தையின் இடது பாதியும் பிறந்தன. இதைக்கண்ட அரசனும் அவன் மனைவிகளும் மிக துக்கித்துவிட்டு இவ்விருபாதிகளையும் தம்மூர் குப்பை மேட்டில் எறிந்து விடும்படி செய்தார்கள். இப்படி இருக்கையில், அந்தவழியே மனுஷ்யமாம்ஸம் புஜிக்கும் ஜரை என்கிற ஒரு இராக்ஷஸி போக, இவ்விரு பாகங்களையும் சேர்த்துத் தின்னக் கொண்டுபோவோம் என்று எண்ணி இவைகளைச் சேர்க்க, இவை ஒரு பலம்

வாய்ந்ததும், மஹா கனமானதுமான குழந்தையாக அது உறக்கக்கத்தியது. இதைக்கேட்டு அரசன் முதலியோர் வெளிவர, அவரிடம் இக்குழந்தையை ஒப்புவித்து விட்டு ஜரை மறைந்துபோனாள். இவ்வாறு ஜரை என்கிற இராக்ஷஸியால் சேர்க்கப்பட்டு உண்டானமையால் இப்பிள்ளைக்கு ஜராஸந்த னென்று பெயர் வந்தது. இவனுக்கு 10, 000 யானை பலமுண்டு.

வினு 16.—பிருகத்ரத ராஜாவுக்கு இவ்வாறு முதலில் பிள்ளை பிறப்பானேன் ?

விடை.—இவ்வரசன் பிள்ளை வேண்டு மென்கிற ஆசையால் அநேக யக்ஞும் முதலியவைகள் செய்தும் பயன்படாதிருக்கையில், கௌதம வம்சத்தில் பிறந்த சண்டகௌசிகர் என்கிற மஹாரிஷி தன்னூருக்கு வந்து ஒரு மாமரத்தடியிலிருப்பதாகக் கேள்விப்பட்டார். உடனே தனது பெண்சாதி இருவர்களோடும் அரசன் ரிஷியை அடிபணிந்து தனது எண்ணத்தை வெளியிட, அப்பொழுது அந்த ரிஷியின் மடியில் அம் மாமரத்திலிருந்து ஒரு பழம் விழுந்தது. இதை மந்திரித்து ரிஷி அரசனிடம் கொடுத்துப் பிள்ளை உண்டாவதற்காக அவன் பெண்சாதிக்குக் கொடுக்கும்படி சொன்னார். அரசன் இரு பெண்சாதிகளிடத்திலும் ஒரே மாதிரி இருந்தமையால் ஒரு பழத்தில் பாதியை ஒருத்திக்கும், மற்றொரு பாதியை மற்றொருத்திக்கும் கொடுத்தான். இதனால் இவ்வாறு விசித்திரமாய் இவர்களுக்குப் பிள்ளை பிறந்தது.

வினு 17.—கிருஷ்ணார்ஜுன பீமர்கள் எவ்வாறு ஜராஸந்தன் பட்டணம் போனார்கள்? அவன் யாரோடு சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டான் ?

விடை.—ஸ்நாதக பிராம்மணர்கள் வேஷம் தரித்து இம் மூவரும் கிரிவ்ரஜம் சென்று, விரோதிகளாகையால், கோட்டைவாசல் வழிபோகாது, கோட்டைமதில் ஏரிக் குதித்து, ஜராஸந்தனது அரண்மனையின் கொல்லை வாசல் வழியாகப் பிரவேசித்தார்கள். இவர்களைக் கண்டதும் ஸந்தேகத்தோடு ஜராஸந்தன் பிராம்மணருக்குரிய மரியாதைகள் செய்து என்ன வேண்டும் என்று கேட்க, அப்பொழுது இவர்கள் தமது பெயர் முதலியவைகளை வெளிப் படையாய்ச்சொல்லி, தம்முள் ஒருவரோடு நீயுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். உடனே ஜராஸந்தன் பீமனோடு சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டான்.

வினா 18.—இப்படி பீமனை இவன் தேடி எடுக்கக் காரணம் என்ன?

விடை.—அர்ஜுனனைக் கண்டதும், அவன் சிறு பிள்ளை எனத் தோன்ற அவனை விட்டுவிட்டான். கிருஷ்ண பகவானிடம் இவன் பதினெட்டுத்தடவை தோல்வியடைந்திருந்தமையால் இவர் தன்னைக் கொன்றுவிடுவார் என்கிற பயத்தால் கிருஷ்ண பகவானையும் தள்ளிவிட்டான். ஆகையால் இவன் பீமனோடு போர் புரிவதாக ஒப்புக் கொண்டான்.

வினா 19.—இவர்கள் சண்டை எவ்வாறு நடந்தது? இது என்னமாய் முடிந்தது?

விடை.—இவர்கள் சாப்பாடு, தூக்கம், ஒழிவு முதலியவைகள் இல்லாது 14-நாள் யுத்தம்செய்ய, 14-ம் நாள் இரவில் ஜராஸந்தன் களைப்படைந்தான். கிருஷ்ணபகவானது உத்தரவுப்படி பீமன், ஜராஸந்தன் தனக்குக்கொடுத்த ஆயுதங்களை எறிந்துவிட்டு அவனோடு முஷ்டி யுத்தம்

செய்யத்தொடங்கினன். இப்படிக் கொஞ்சநாழிகை செய்தபின்பு பீமன் ஜராஸந்தனைக் காலைப் பிடித்துக் கொண்டு வெகு வேகமாய் அநேகம்தரம் சுழற்றி அவன் தேகத்தை முறித்து எறிந்து அவனைக்கொன்றுவிட்டு கர்ச்சனை செய்தான்.

வினு 20.—இதன் பின்பு இவர்கள் என்ன செய்தார்கள் ?

விடை.—மறுநாட்காலையில், ஜராஸந்தனது இரதத்தைக் கொண்டுவந்து அதில் மூவரும் ஏறிக்கொண்டார்கள். உடனே கருடபகவான் அதன்கொடியில் வந்துட்கார அந்த இரதத்தைக் கிருஷ்ணபகவான் நடத்த அது பட்டணத்தில் ஒரு மைதானத்தில் வந்து நின்றது. அப்பொழுது ஜராஸந்தனது பிள்ளையாயும், ஸத்தாயுமுள்ள ஸஹதேவன் பகவானைச் சரணமடைய, பகவான் அவனுக்கே அப்பட்டணத்தைக் கொடுத்து தர்மபுத்திரரது இராஜஸூயயாகத்திற்கு வரும்படி சொல்லி விட்டு, ஜராஸந்தன் சிறையில் வைத்திருந்த அரசர்கள் எல்லோரையும் விடுவித்து, அவர்களையும்கூட அழைத்துக்கொண்டு இவர்கள் இந்திரப்ரஸ்தம் சென்றனர். தர்மபுத்திரர் இவ்வரசர்களுக்குத் தகுந்த மரியாதைசெய்து அனுப்பிவிட்டு ஸுகமாய் வஸித்திருந்தார் ?

வினு 21.—இவ்வாறு இராஜஸூய யாகத்திற்கு முக்கிய தடையாகிய ஜராஸந்தனைக் கொன்ற பிறகு பாண்டவர்கள் யாகவிஷயமாக என்ன ஏற்பாடு செய்தார்கள் ?

விடை.—தர்மபுத்திரரது தம்பிமார்கள் நால்வரும் மற்றைய அரசர்களை ஜயித்து இராஜஸூய யாகத்திற்கு வரும்படியாக அழைக்க நான்கு திக்கிலும் திக்கு விஜயம்செய்யப் புறப்பட்டார்கள். இதில் அர்ஜுனன் வடக்கு திக்கையும், பீமன் கிழக்குதிக்கையும், ஸஹாதேவன் தெற்குதிக்கை

யும், நகுலன் மேற்கு திக்கையும்நோக்கி, தர்மபுத்திரரது அனுமதியின்பேரில் சென்றார்கள்.

வினா 22.—அர்ஜுனனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷங்கள் என்ன?

விடை.—போகும் வழியில் அனேக சிற்றரசர்களை ஜயித்துக் கொண்டு அர்ஜுனன் நரகாஸுரனது பிள்ளை பகதத்தன் அரசாளும் பட்டணம் வர, அவன் இவனோடு சிலகாலம் சண்டை செய்து இவனது பராக்கிரமத்தைக் கண்டு இவன் இஷ்டப்படி செய்வதாக ஒப்புக்கொண்டான். இதன் பின்பு வடக்கே மலைப் பிரதேசத்தரசர்களைத் தன் வசப்படுத்திக் கொண்டு, கிம்புருஷலோகம் சென்று அவர்களை வென்று, உத்தரகுருகண்டம் சென்றான். அது சிறந்த கண்டமாதலால் அதில் மனிதர் சென்றால் உயிர் தரிப்பது அரிது. அப்படி யிருக்க அர்ஜுனன் அங்கு செல்ல, வாயில்காப்பவர் அக்கண்டத்தின் ஸ்வபாவத்தைச் சொல்லி அர்ஜுனனைத் திரும்பிப்போகும்படி சொன்னார்கள். பின்பு அர்ஜுனன் வந்த காரியத்தைச் சொல்ல, தர்மபுத்திரரது நன்னடத்தைக்காக அக்கண்டத்தார் அநேக தெய்வீகமான ஆடையாபரணங்கள் கொடுக்க, அவைகளைப் பெற்றுக்கொண்டு வரும் வழியில் பாக்கி யிருந்த சில காட்டு ராஜாக்களை வென்று, தர்மபுத்திரரிடம் தான் கொண்டுவந்தவைகளை ஸமர்ப்பித்தான்.

வினா 23.—பீமஸேனனது திக்கு விஜயத்தில் நடந்த விஷயம் என்ன?

விடை.—முதலில் பீமன் பாஞ்சால தேசம் சென்று, ஸமாதான வழியால் அரசர்களை வசப்படுத்தி, சில சிற்றரசர்களை வென்று, கடைசியில் சேதிதேசத்தரசன் சிசுபாலனிடம் வர, அவனும் ஸமாதானமாய் தர்மபுத்ர

ருக்கு வேண்டியது செய்வதாக வாக்களிக்க, பீமனும் 30. நாள் அவனிடம் ஸுகமாய் இருந்தான். இதன் பின்பு போகும் வழியில் இருந்த சிறு தேசாதிபதிகளை வென்று ஜராஸந்தன் பிள்ளையிடம் வந்து அவனிட மிருந்து மரியாதைகளைப் பெற்று அங்கதேசாதிபதி யாகிய கர்ணனை வென்றான். இவ்வாறு அனேக இரா ஜாக்களை ஜயித்து, அவர்களிடமிருந்து தான் பெற்று வந்த பரிசுகளைத் தர்மபுத்திரர் பாதங்களில் பீமன் ஸமர்ப்பித்து விட்டான்.

விஞ 24.—ஸஹாதேவனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷமென்ன?

விடை.—முதலில் தந்தவக்கிரன், குந்திபோஜன், அவந்தி நகரத்திலிருந்த விந்தானுவிந்தாள், பீஷ்மகராஜா, கிஷ் கிந்தா நகரத்தில் அரசாண்டு வந்த மைந்தத்துவிதாள், முதலிய இராஜாக்களை எளிதில் ஸஹாதேவன் வென் றான். இதன் பின்பு இவன் மாஹிஷ்மதீ பட்டணம் போனான். அங்கு அரசாண்டு வந்த நீலராஜனுக்கு அக்கினி பகவான் ஸஹாயமாக வர ஸஹாதேவனது ஸேனைகளுக்குத் தாபம் அதிகரித்துவிட்டது. இதைக் கண்டு அவன். அக்கினியைத் துதிசெய்ய அவர் இவ னிடம் வந்து தான் பரீக்ஷை செய்ததாகவும் தர்மபுத்தி ரரது நல்ல எண்ணம் தனக்குத் தெரியும் என்பதாகவும், தான் அப்பட்டணத்தைக் காக்கும்வரை அதை ஒரு வராலும் ஜயிக்க முடியாதென்பதாகவும் சொல்லி, அக் கினிபகவான் ஸஹாதேவனுக்கும், நீல ராஜாவுக்கும் ஸ்நேஹம் செய்துவைக்க, பின்பு ருக்மிமுதலிய அரசர் களை ஸஹாதேவன் வென்றான். இதன் பின்பு தெற்கு ஸமுத்திரக்கரையை அடைந்து இலங்கையில் அரசாண்டு

வந்த விபீஷணருக்குத் தூதரை அனுப்ப, மிகுந்த ஸந்தோஷமாய் அவர் பரிசுகள் அனுப்பினர். இவ்வாறு தெற்கிலுள்ளவர்கள் யாவரையும் வென்று ஸஹாதேவன் இந்திரப்ரஸ்தம் சென்று தர்மபுத்திரர் அடிபணிந்து நின்றான்.

வினா 25.—மாஹிஷ்மதீ பட்டணத்தில் அக்கினி பகவான் காவலிருந்ததற்குக் காரணம் என்ன?

விடை.—நீலராஜனது பெண்ணைக் கண்டு அக்கினி பகவானுக்கு ஆசை வர, அந்த அரசன் அரண்மனையில் யார் என்ன செய்தாலும் ஹோமகுண்ட நெருப்புப் பற்றாதிருந்தது. தற்செயலாய் நீலராஜன் பெண் வந்து அக்கினியை ஊதிப் பார்த்தாள். உடனே அக்கினி பற்றிக் கொண்டது. அதைக் கண்டதும், அக்கினி பகவானை இப்பெண் கல்யாணம் செய்துகொள்ள ஒத்துக்கொள்ளவே, அக்கினி பகவான் பிராம்மண வடிவங் கொண்டு இப்பெண்ணோடு விளையாடி வந்தார். இப்படியிருக்கையில் அரசன் கண்டு இப் பிராம்மணனை தண்டிக்க யத்தனிக்க, உடனே அக்கினி பகவான் தன் ரூபத்தைக் காட்டினார். அரசன் வியந்து தன் பெண்ணை அக்கினி பகவானுக்கு விவாஹம் செய்துகொடுக்க, அன்று முதல் அரசனது வேண்டுகோளின்படி அப்பட்டணத்தை அக்கினி பகவான் காத்துவந்தார். இதை அறியாது அங்கு படையெடுத்துச் சென்றவர்கள் நெருப்பால் எரிக்கப்பட்டு மாளுவது வழக்கம். தெரிந்தவர்கள் அப்பட்டணத்தருகில்கூட வருவதில்லை.

வினா 26.—நகுலனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷம் என்ன?

விடை.—அநேக சிற்றரசர்களை ஜயித்துக்கொண்டு நகுலன் மேற்கே துவாரகை அருகில் வந்து கிருஷ்ண பரமாத்மாவுக்குத் தூதரை அனுப்ப, அவர் யாதவ பரிவாரங்களோடு எதிர் கொண்டு வந்து நகுலனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்தனுப்பினர். இவன் பின்பு மந்திர தேசாதிபதியும், தனது மாமனுமான சல்லியராஜனை தன் வசப்படுத்திக் கொண்டு, அநேக மிலேச்ச ராஜாக்களை ஜயித்து இவன் இந்திரப்ரஸ்தம் வந்து சேர்ந்தான்.

வினு 27.—இவர்கள் இவ்வாறு வந்த பின்பு என்ன நடந்தது?

விடை.—கொஞ்சகாலம் கழிந்தபின்பு மந்திரிமார் முதலிய பெரியோர்கள் இராஜஸூயயாகஞ்செய்யவேண்டியகாலம் வந்ததென்று தர்மபுத்திரருக்குச் சொன்னார்கள். இப்படியிருக்கையில் அநேக பரிசுகளை எடுத்துக்கொண்டு கிருஷ்ண பகவான் இந்திரப்ரஸ்தம் வந்துசேர்ந்து இராஜஸூய யாகத்தைத் தொடங்கும்படி உத்தரவு கொடுத்தார். உடனே பாண்டவர்கள் யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சேகரித்தார்கள். அவர் அழைத்துவிட்டு வந்திருந்த அரசர்கள் யாவரும் யாக வைபவத்தைக் கண்டு களிக்க இந்திரப்ரஸ்தம் வந்து கூடினர்கள். அவரவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைத் தர்மபுத்திரர் செய்து அவரவர்களுக்குத் தகுந்த விடுதிகளை நியமித்தார். துர்யோதனதியர், பீஷ்மர், விதுரர் முதலியவர்கள், யாதவாள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். இவர்கள் ஸந்நிதானத்தில் தர்மபுத்திரர் யாகத்தை ஆரம்பித்தார்.

வினு 28.—இவ்வாறு யாகம் ஆரம்பித்து நடந்து வருங்கால் விக்கினம் போன்றது என்ன நடந்தது?

விடை.—சேதி தேசாதிபதியான சிசுபாலனுக்குக் கடைசி நாள் கிருஷ்ண பகவானிடம் கோபம் உண்டாக, அவன் அவரை பலவிதமாக வைதான். இது நிரம்பவும் அதிகமாய்போகும் வரையில் பொறுத்திருந்து, கடைசியில் சிசுபாலன் வரம்புகடந்து போனவுடன், பகவான் தமது சக்கிரத்தை எடுத்து சிசுபாலனது தலையை அறுத்தார். உடனே சிசுபாலனது தேகத்திலிருந்து ஒரு திவ்ய தேஜஸ் புறப்பட்டு கிருஷ்ண பரமாத்மாவின் தேகத்துட் பிரவேசித்தது. அப்பொழுது தர்மபுத்திராதிகள் சிசுபாலனது பிள்ளையைச் சேதி தேசாதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்து, இராஜஸூய யாகத்தை மேல் நடத்த ஆரம்பித்து நிர்விக்கினமாய் செய்து முடித்தார்கள்.

வினா 29.—இம்மாதிரியாய் இச்சிசுபாலனுக்கு கிருஷ்ண பகவானிடம் கோபம் உண்டாவானேன்?

விடை.—கடைசி நாள் ஸபையோருக்கு அக்ர பூஜை செய்ய வேண்டி வர, யாருக்கு ஸபையில் முதலில் அர்க்கியத்தை ஸமர்ப்பிப்பது என்கிற ஸந்தேகம் தர்மபுத்திரருக்கு வந்தது. கிருஷ்ண பகவானே அதை வாங்கத் தகுந்தவர் என்று பீஷ்மர் சொல்ல, அதன்படி அவர் முதல் முதலில் அர்க்கியத்தைப் பகவானுக்கு ஸமர்ப்பித்தார். கிருஷ்ணபகவானே இடையன் என்று எண்ணியிருந்த சிசுபாலனுக்கு இது அதிக கோபத்தை உண்டாக்கியது. மேலும் இவன் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்த ருக்மணிதேவியை, அவள் இஷ்டத்தின்படி கிருஷ்ணபகவான் தூக்கிகொண்டு நடந்து விட்டார் என்றகோபம் இவனுக்கு முன்னமேயே இருந்தது. ஆகவே அதிககோபத்தோடு பகவானைச் சிசுபாலன் நாக்கில் நரம்பில்லாது வையத் தொடங்கினன்.

வினா 30.—சிசுபாலன் வசவுகளை வெகுநாழிகை வரையில் கிருஷ்ண பகவான் ஏன் பொறுத்திருந்தார்? பின்பு ஏன் அவனைக் கொன்றார்?

விடை.—சிசுபாலனது தாயார் கிருஷ்ண பரமாத்மாவே தன் பிள்ளையைக் கொல்லப்போகிறவர் என்று அறிந்து, அவரிடம் "என் பிள்ளை உமக்கு என்ன அபராதம் செய்தாலும் நீர் பொறுத்தருள வேண்டும்" என்று வரங்கேட்டிருந்தாள். இதற்குக் கிருஷ்ண பகவான், "ஸம்ஹரிப்பதே தகுதி என்று சொல்லத்தகுந்த குற்றங்கள் 100 இவன் செய்கிறவரையில் நான் இவனை பொறுத்துக் கொள்ளுகிறேன்" என்று வாக்களித்திருந்தார். இதன்படி வரம்புகடந்து சிசுபாலன் போகிற வரையில் பொறுத்திருந்த பகவான், அவனுக்குச் சீக்கிரத்தில் நற்கதி அளிக்கவேண்டுமென்று அவன் வரம்புகடந்ததும் அவனைக் கொன்றார்.

வினா 31.—சிசுபாலனது தாயாருக்குக் கிருஷ்ண பரமாதமா தன் பிள்ளையைக் கொல்லப்போகிறார் என்று எப்படித் தெரிய வந்தது?

விடை.—சிசுபாலன் பிறந்தவுடன் அவனுக்கு மூன்று கண்ணும் நான்கு கையும் ஏற்பட்டது. அவன் கழுதை கத்துவதுபோல்கத்த, தாயார் தகப்பனாருக்கு அடங்காத் துக்க முண்டாய் விட்டது. உடனே ஒரு அசரீரி வாக்கு "இவன் சீக்கிரத்தில் சாகமாட்டான், ஆனல் இவனைக் கொல்ல ஒரு பலவானான புருஷன் வளருகிறான்" என்று சொல்ல, தாயார் "என்பிள்ளையைக் கொல்லுகிறவனை அறியும் வழி என்ன?" என்று கேட்டாள். அதற்கு அசரீரி "நீ யாருடைய மடியில் இப்பிள்ளையை வைத்தவுடன், இவனது அதிக கைகளும், கண்களும் மறைந்து

போகின்றனவோ அவனே இவனைக் கொல்லுகிறவன்" என்று சொல்லி மௌனமாய் விட்டது. இதுமுதல் தாயார் யார் வந்தாலும் அவர்களது மடியில் எல்லாம் இக் குழந்தையை வைப்பது வழக்கம். இம்படி யிருக்கையில் கிருஷ்ணபகவான் சேதி தேசம்வர, அவரது மடியிலும் இக்குழந்தை வைக்கப்பட்டது. உடனே குழந்தையின் அதிகமான கண்களும், கைகளும் மறைய, பகவானே தன் பிள்ளைக்கு விரோதி என்று சிசுபாலன் தாயார் அறிந்து கொண்டாள்.

வினா 32.—இந்த துராத்மாவான சிசுபாலனுக்குப் பகவானது தேகத்துள் புகும்படியான பாக்கியம் எப்படி வந்தது?

விடை.—இச்சிசுபாலனது நிஜரூபம் வைகுண்டத்திலிருக்கும் துவாரபாலக ரூபம். இவனுக்கும் இவனது ஸஹாவுக்கும் ஸனகாதியோகிகள் சாபத்தால் பூமியில் மூன்று ஜன்மம் ஹரித் துவேஷிகளாய் பிறக்கவேண்டிவர, இவர்கள் ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, இராவணன், கும்பகர்ணன், சிசுபாலன் தந்தவக்கிரனுக வரிசையாய்ப் பிறந்து ஒவ்வொரு ஜன்மத்திலும் பகவானிடம் துவேஷரூப பக்தியைச் செய்தார்கள். ஆகையால் இவர்கள் பகவானுலேயே கொல்லப்பட்டுக் கடைசியில் சிசுபால தந்தவக்கிரர்களாகி கிருஷ்ணனுல் உயிரிழந்து அவருட் பிரவேசித்தார்கள். (இவ்விஷயத்தின் விஸ்தாரத்தைப் பாகவத வினு விடையில் காண்க.)

வினா 33.—யாகம் முடிந்தவுடன் தர்மபுத்திரரது மனம் எவ்வாறிருந்தது? ஏன்?

விடை.—தர்மபுத்திரரது மனம் சிசுபாலவதத்தை நினைந்து குழம்பிக் கொண்டிருந்தது. நாரதர் முன்னமே இந்த

யாகத்தைப்பற்றி சொல்லிமுடிக்குங்கால், இதற்கு ஏதாவது நடுவில் தடைகள் வந்தால் ஸகல க்ஷத்திரியர்களும் நாசமடையும்படியான யுத்தமுண்டாகும் என்று சொல்லியிருந்த வார்த்தை ஞாபகத்தில்வர, தர்மபுத்திரரது கஷ்டம் அதிகரித்து விட்டது. இதைப்பற்றி வியாஸரிடம் கேட்டதில், அவர் "இந்தச் சின்னங்களுடைய பலன் 13-வருஷம் இருக்கும், அதன் கடைசியில் க்ஷத்திரியருக்கே உனது மூலமாய் நாசம் வந்தாலும்வரும். இதற்காக நீ துக்கப்பட்டு பிரயோஜனமில்லை" என்று சொல்லிப்போனார். இதைக்கேட்டு தர்மபுத்திரருக்குத் துக்கமதிகரித்தது. கடைசியாக இதைத் தடுப்பதற்குத்தான் யாருக்கும் ஹிதத்தையே செய்வதாக இவர் சபதம் செய்து கொண்டார்.

வினு 34.—இந்த யாகம் முடிந்ததும் யார்யார் ஊருக்குச் சென்றார்கள்? யார் யார் இந்திரப்ரஸ்தத்திலேயே இருந்தார்கள்?

விடை.—கிருஷ்ண பகவான், பீஷ்மர் முதலிய ஸகல இராஜாக்கள் தர்மபுத்திரரால் தகுந்த மரியாதை செய்யப்பட்டுத் தத்தம் இருப்பிடம் சென்றார்கள். ஆனால் துர்யோதனன், சகுனி இவ்விருவர் மாத்திரம் இந்திரப்ரஸ்தத்தில் சிலகாலம் தங்கி இருந்தார்கள்.

வினு 35.—இவர்கள் இங்கு இருக்கையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—துர்யோதனனும், சகுனியும் ஒருவரது ஸஹாயமுமின்றி மயஸபையைச் சுற்றிப்பார்க்கப் போனார்கள். போனவிடத்தில் இவர்கள் தண்ணீரில்லாத விடங்களில் துணிகளைத் தூக்கிக்கொண்டும், தண்ணீர் நிறைந்த

தடாகங்களில் தெரியாது விழுந்தும், கதவில்லா விடங்களில் பிரமித்து முட்டிக்கொண்டும் தத்தளித்தார்கள். இங்கிலையைக்கண்ட பீமன் முதலிய ஸாதாரண ஜனங்களும் ஸ்திரீகளும் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள். ஆனல் தர்மாத்மாவான தர்மராஜர் மாத்திரம் சிரிக்காது இவர்கள் படுந்துயரத்திற்கு இரங்கி இவர்களுக்குப் புதிய வஸ்திரங்களையும் அழைப்பித்துக் கொடுத்தார். இதைக்கூட வாங்கிக்கொள்ளாது அதிக கோபத்தோடும் வெட்கத்தோடும் ஒருவரோடும் சொல்லிக் கொள்ளாது, இவ்விருவரும் ஹஸ்தினபுரம் போய்ச்சேர்ந்தனர்.

வினு 36.—இவர்கள் ஊர்போய்ச் சேர்ந்ததும் என்ன ஆலோசனை செய்தார்கள் ?

விடை.—தர்மபுத்திரரது இராஜஸூய வைபவத்தைக்கண்டு வயிற்றெரிச்சல் துர்யோதனனுக்கு அதிகரிக்க, தர்மபுத்திரரது வைபவங்களை அபகரியாது தான் உயிர் தரிப்பது அஸாத்திய மென்று சகுனி, கர்ணன் முதலிய துராத்மாக்களோடு இவன் கலந்து பேசினன். சகுனி தனது மருமகன் படுங்கஷ்டத்தைக் கண்டு தான் தர்மபுத்திரரைச் சூதாட்டத்தில் வென்று அவரது வைபவங்களைத் துர்யோதனனுக்குக் கொடுப்பதாகச் சொன்னன். இதன்பின்பு தர்மபுத்திரரை சூதாட அழைக்க வேண்டியதற்குத் தகுந்த உபாயங்களைச் செய்யத் தொடங்கினர்கள்.

வினு 37.—இவர்கள் என்னென்ன செய்தார்கள் ? அவைகள் எவ்வாறு முடிந்தன ?

விடை.—புதிதாய் ஸபை நிர்மாணம் செய்து அதைப்பார்ப்பதற்குப் பாண்டவரை அழைப்பதுபோல அழைத்து

அவர்களைச் சூதாடும்படி செய்து இராஜ்யம் முதலிய வைபவங்களைப் பறித்துக்கொள்ளவேண்டுமென்று ஒரு ஸபையைத் திருதிராஷ்டிரனது அனுமதியின்பேரில் கட்டத்தொடங்கினர்கள். விதுரர் துர்யோதனதியரது எண்ணப்படி விடக்கூடாதென்று தடுத்துச் சொல்லியும் திருதிராஷ்டிரனுக்குப் பிள்ளைகளது வார்த்தை ஹிதமாகப்பட, ஸபைகூடிய சீக்கிரத்தில் கட்டிமுடிந்தது. உடனே விதுரரையே திருதிராஷ்டிரன் பாண்டவரை அழைக்கும்படி ஏவினன்.

வினா 38.—விதுரர் இந்திரப்ரஸ்தம் சென்று என்ன செய்தார்? கடைசியில் என்ன நேரிட்டது?

விடை.—பாண்டவரிடம் உண்மையை உள்ளபடி விதுரர் சொல்ல தர்மபுத்திரர் "யார் யார் என்னோடு சூதாடப் போகிறார்கள்" என்று கேட்டார். விதுரர், சகுனி முதலிய மோசக்காரர்களே என்றும், அவர்கள் சதியாலோசனை செய்திருக்கிறார்கள் என்றும் வெளியிட்டார். தர்மராஜர் இப்பொழுது திருதிராஷ்டிரரது உத்தரவுப்படி நான் ஹஸ்தினபுரி வரவேண்டியதுதான். நானுக புரட்டான சூதாட ஒருநாளும் விரும்பமாட்டேன். என்னை யாராவது சூதாட அழைத்தால், என் விரதப்படி தடுத்துப் பேசவும் மனம் வராது. கடவுள் விடும் வழிப்படியே யாகட்டும்" என்று கடவுளிடம் பாரத்தைப் போட்டு தனது தம்பிமார் திரௌபதி, உறவினர் முதலியவர்களோடு ஹஸ்தினபுரிக்கு விதுரரை முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டார்.

வினா 39.—பாண்டவர்கள் ஹஸ்தினபுரி வந்ததும் என்ன செய்தார்கள்?

விடை.—இங்குப் பாண்டவர்கள் வந்ததும் தமது உறவினர் எல்லோரையும் கண்டு தண்டனிட்டு மரியாதைகள் செய்து விட்டுத் தமக்கு விட்டிருந்த விடுதிகளில் சென்று அன்று இரவை ஸுகமாய்க் கழித்தனர். மறு நாட் காலையில் ஸகல அரசர்களும் நிறைந்திருக்கும் புதிய ஸபையில் பாண்டவர்கள் வந்து பெரியோர்களுக்கு மரியாதை செய்துவிட்டு உட்கார்ந்தார்கள்.

வினா 40.—இப்படிப் பாண்டவர்கள் வந்து உட்கார்ந்ததும், சகுனி என்ன செய்தான்? தர்மபுத்திரர், கடைசியில் என்னசெய்தார்?

விடை.—தர்மபுத்திரர் தம்மால் இயன்றமட்டும் சொல்லிப் பார்த்தும் சகுனி விடாமல் சூதாட அழைப்பதைக் கண்டு, அதற்கு இசைந்தார். உடனே துர்யோதனன் தான் பந்தயம் வைப்பதாகவும், சகுனி தனக்காகச் சூதாடுவதாகவும் சொல்ல, இது நியாயமில்லை என்று முதலில் தடுத்தபோதிலும், தர்மபுத்திரர் கடைசியில் ஒப்புக்கொண்டார். சூதாட்டம் ஆரம்பித்தது.

வினா 41.—சூதாட்டம் எவ்வாறு நடந்தது? யார் யார் என்ன அபிப்பிராயப் பட்டார்கள்?

விடை.—சகுனி மோசக்காரனதலால், எல்லா ஆட்டங் களிலும் தானே ஜயித்துவந்தான். இதில் தர்மபுத்திரர் ஸகல ஸொத்துக்களையும் இழந்துகொண்டு வந்தார். இதைக்கண்டு துர்யோதனதியர், திருதராஷ்டிரன், கர்ணன் முதலிய துராத்மாக்கள் ஆனந்தித்தனர். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், விகர்ணன் முதலிய சுத் தாத்மாக்கள் இதிலிருந்து ஏதாவது பிரமாதம் உண்டாய் விடுமோ என மனங்குழம்பினர்கள்.

வினு 42.—இவர்களில் யார் முதலில் தமது அபிப்பிராயத்தைப் பயப்படாது எப்படி வெளியிட்டார்? இவரது புத்திமதி பிரயோசனப் பட்டதா?

விடை.—விதுரர் ஒருவர்தான் இந்த ஆபத்துக்காலத்தில் தன் மனத்தில் உள்ளவற்றை ஒளிக்காது வெளிக்காட்டினர். சூது முதலியவைகள் போன்றவை அபாயகரமானவை என்றும், அப்பொழுது ஆடும் சூதால் மிகுந்த பிரமாதம் விளையலாம் என்றும், அதற்கு முக்கியகாரணம் துர்யோதனன் என்றும், அவனால் உண்டாகப் போகிற பிரமாதத்தை தடுக்க அவனை அவசியம் கொல்லவேண்டும் என்றும், பலர் ஸுகம் அடைய ஒருவனைக் கொல்லுவது சாஸ்திர விருத்தமல்ல வென்றும், இச்சூதாட்டத்தால் பாண்டவர்களைச் சகுனி முதலியோர் அவமரியாதை செய்து அவர்களைக் கோப மூட்டிவிட்டால் பாண்டவர்களை வெல்லவல்லார் ஸபையில் ஒருவரும் இல்லைஎன்றும், விதுரர் தமது அபிப்பிராயத்தை நன்றாக வெளியிட்டார். உடனே துர்யோதனன் எழுந்து, விதுரரை நம்பிக்கைத் துரோகி, அவரைக்காப்பாற்றுவது பாம்பிற்கு பாலிட்டு வளர்ப்பதுபோலத் தமக்கே விபரீதமாய் முடியும் என்று சொல்லி விதுரரை வெகுவாகத் தூஷித்தான். தம் சொல்பயன் படாதது கண்டு விதுரர் திருதிராஷ்டிரனை நோக்கித் தமது அபிப்பிராயத்தை வற்புறுத்திச் சொல்லி விட்டு மௌனமாய் இருந்தார்.

வினு 43.—இதன் பின்பு சூதாட்டம் என்னமாய் விருத்தியடைந்தது? எப்படி முடிந்தது?

விடை.—சகுனி ஸகலத்தையும் தர்மபுத்திரரிடம் இருந்து வெகு தந்திரமாய் வென்றான். உடனே அவர் சூதாட்ட ஆவேசத்தில் முதலில் தனது தம்பிமாரையும், கடை

சியில் தன்னையும் பந்தயம் வைத்துப் பார்த்தார். அப் பொழுதும் சகுனியே வென்றான். இதன் பின்பு ஒன்றை யும் பந்தயம் வைக்கத் தோன்றாது தருமபுத்திரர் விழித் துக்கொண் டிருக்கையில், சகுனி, திரௌபதி ஒருத்தி யிருக்கிறாளே என்று ஞாபகப்படுத்த, அவர் திரௌபதி யையும் பந்தயம் வைத்தாடித் தோற்றார்.

வினா 44.—இப்படி திரௌபதியைத் தர்மபுத்திரர் தோற்ற தும் துர்யோதனாதியர் என்ன செய்ய முயன்றனர்?

விடை.—துர்யோதனன் விதுரரை நோக்கி "திரௌதியை ஸபைக்குக் கொண்டுவந்து அடிமைத்தொழில் அவள் செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடு செய்யுங்கள்" என்று சொல்ல, விதுரர் "திரௌபதி அடிமையாவதற் குக் காரணமில்லை; ஏனெனில் தர்மபுத்திரர் தாம் தோற்ற பின்புதான் அவளைப் பந்தயம் வைத்தார்" என்று சொல் லி, துர்யோதனாதியரைத் தூஷித்து விட்டு, வாயை மூடிக்கொண்டு ஸபையிலேயே உட்கார்ந்துவிட்டார். பின்பு துர்யோதனன் பிரதிகாமி என்ற ஸூதஜாதி வேலைக்காரனை ஏவவே அவன் சென்று திரௌபதியை ஸபைக்கு வரும்படி அழைத்தான். அவள் தீண்டத்த காத நிலையிலிருப்பதாகவும், தான் உண்மையில் தோல்வி யடைந்தவளா இல்லையா என்பதை அறியவேண்டும் என்பதாகவும், இவனிடம் சொல்லி யனுப்பினாள். துர் புத்திகளான துர்யோதனாதியர் இவ்வாறு திரௌபதியை அவமானப்படுத்த வேண்டுமென்று எண்ணங் கொண் டார்கள்.

வினா 45.—இந்தக் கெட்ட எண்ணத்தை இவர்களுக்கு எவ் வாறு யார் பூர்த்தி செய்வித்தது?

விடை.—முன் சொல்லியவைகளை பிரதிகாமி சபையில் வந்து சொல்லத் துர்யோதனன் தனது தம்பியான துச்சாஸனனை ஏவினன். அவன் விரைவில் சென்று திரௌபதியின் தலைமயிரைப் பற்றி அவளை ஸபைக்கு இழுத்து வந்து, யாவரும் பார்த்துப் பரிதபிக்கும்படியான நிலையில் நிறுத்தி வைத்தான்.

வினு 46.—ஸபைக்கு வந்ததும், திரௌபதி ஸபையோரை என்ன கேள்வி கேட்டாள்? அங்கிருந்தவர்கள் அப்பொழுது என்ன பதில் உரைத்தனர்?

விடை.—"தர்மபுத்திரர் முன்பு என்னைப் பந்தயம் வைத்துப் பின்பு தம்மை பந்தயம் வைத்துக்கொண்டாரா, அல்லது தம்மை வைத்துத் தோற்றபின்பு என்னை வைத்துத் தோற்றாரா? அப்படி முன்பு வைத்துத் தோற்றது உண்மையாகில் நான் அடிமைதான், இல்லாவிடில் என்னை அடிமைப்படுத்த துர்யோதனுதியருக்கு என்ன அதிகாரம்?" என்று ஸபையோரை நோக்கித் திரௌபதி கேட்டாள். விதுரர், விகர்ணன் முதலிய தர்மாத்மாக்கள் திரௌபதி அடிமையாகவில்லை யென்று உரக்கத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். கர்ணன் முதலிய துராத்மாக்கள் திரௌபதி எப்படியானாலும் தமக்கு ஊழியக்காரி என்றனர். பீஷ்மர் முதலிய சிலர் இவ்விஷயத்தில் தர்மாதர்ம விவேகமின்றித்தமது அபிப்பிராய குழப்பங்களை வெளியிட்டனர். தர்மபுத்திரர் மாத்திரம் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு மௌனமாயிருந்தார்.

வினு 47.—இப்படி யிருக்க பாண்டவர்களுள் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பீமன் முதலிய தம்பிமார்களுக்குக் கோபம் அதிகரித்த போதிலும், தமயன் இருக்கும் பொறுமையை நோக்கித் தாமும் அவருக்கு உட்பட்டு அடங்கியிருந்தனர். திரௌபதி அடிக்கடி கேள்விகேட்க ஸபையோர் அவளைக் கவனியாது இருக்கக் கண்டு பீமனுக்குக் கோபம் அதிகரித்தது. தர்மபுத்திரரது கையை எரித்துவிட ஸஹாதேவனை நெருப்பு எடுத்து வரும்படி பீமன் கட்டளையிட, அர்ஜுனன் இதை யறிந்து பீமஸேனனது கோபம் அடங்கும்படி செய்தான்.

வினா 48.—இப்படி ஸபை முழுவதும் திரௌபதியினது கேள்விக்குப் பதில் சொல்லமுடியாது தத்தளிக்குங்கால் துச்சாஸனன் என்ன விபரீத காரியத்தைச்செய்ய யத்தனித்தான்? அவன் யத்தனம் எவ்வாறு முடிந்தது?

விடை.—தான் இதுவரை செய்த அவமானம் போதாதென்று துச்சாஸனன் திரௌபதியை ஸபையில் நிர்வாணமாய் நிறுத்தி வேடிக்கை பார்க்கவேண்டுமென்று துராக்கிரகம் கொண்டு அவளது புடவையை வெகு அவஸரமாய் அவிழ்க்கலாயினன். இவன் எவ்வளவுதான் புடவையை இழுத்து மலைபோல் குவித்தபோதிலும் மேல்மேலும் திரௌபதிக்கு விசேஷப்புடவைகள் உண்டாகிவரக் கடைசியில் கை ஓய்ந்து துச்சாஸனன் கீழேவிழுந்தான். இதை நோக்கியதும் ஸபையோர் எல்லோருக்கும், திரௌபதி அடிமை யல்லவென்றும், துரியோதனாதியர் துராத்மாக்கள் என்றும் நன்றாய் விளங்கியது.

வினா 49.—இவ்விசித்திர விஷயம் நடக்கக் காரணம் என்ன? இதனால் என்ன விளங்குகிறது?

விடை.—துச்சாஸனன், தனது புடவையை அவிழ்க்க இழுக்கும் பொழுது, தன்மானம் கெட்டுப்போகிறதே என்ற

எண்ணத்துடன் திரௌபதி தனது புடவையைக் கெட்டியாகப்பிடித்து பார்த்தாள். கடைசியில் தன்னால் முடியாதென்பது கண்டு தனது இருகைகளையும் தலைமேல் வைத்துக்கொண்டு தெய்வத்தின்மேல் பாரத்தைப் போட்டு மனதுருகி கிருஷ்ண பரமாத்மாவைத் துதித்தாள். இந்த உண்மையான பக்தியின் விசேஷத்தால் இவளது மானங் கெடாத வண்ணம் விசித்திரப் புடவைகள் கிருஷ்ண பரமாத்மாவால் அளிக்கப்பட்டு துச்சாஸனன் இழுக்க இழுக்க வந்துகொண்டேயிருந்தன. இதனால் ஸர்வம் கடவுளது அதீனம் என்ற உள்ளத்துறவுவாய்ந்த மஹான்களுக்கும் வரும் மஹாபோன்ற துக்கங்கள் கடவுளது அருளால் ஸூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடிப்போம் என்பது எளிதில் விளங்கும்.

விஞ 50.—இவ்வாறு திரௌபதியைத் துச்சாஸனன் துகிலுரியுங்கால் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—தருமபுத்திரர் முன்போலப் பொறுமையோடு மௌனமாய் இருந்தார். பீமன், துரியோதனன், துச்சாஸனன் முதலிய தம்பிமார் 100-பேர்களைக் கொல்லுவதாகவும், அர்ஜுனன் கர்ணனைக் கொல்லுவதாகவும், நகுலன் சௌபாலர்களைக் கொல்லுவதாகவும், ஸஹாதேவன் சகுனியைக் கொல்லுவதாகவும் கொடிய சபதம் செய்தார்கள்?

விஞ 51.—இவைகள் எவ்வாறு முடிந்தன? ஏன்?

விடை.—அப்பொழுது திருதிராஷ்டிரனது ஸபை முதலிய இடங்களில் அபசகுணங்கள் உண்டாக, விதுரரும், காந்தாரியும் திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதிகள் சொன்னார்கள். அப்பொழுது அவனுக்குப் புத்தி தெளிந்திருந்தமையால் தனது பிள்ளைகளை வெகுவாகத் திட்டித் திரௌ

பதியை அருகிலழைத்து வேண்டிய வரங்களைக் கேட்டுக் கொள்ளும்படி இடங்கொடுத்தான். திரௌபதி தனது பதிகளாகிய பாண்டவர் ஐவரும் அடிமைத்தனத்திலிருந்து நீங்கி ஸுகம் அடையும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எல்லாரையும் மீட்க, திருதிராஷ்டிரனது அனுமதியின் பேரில் இந்திரப்ரஸ்தத்தை நோக்கி பாண்டவர்கள் தமது இரதங்களில் ஏறிச்சென்றார்கள்.

வினா 52.—திருதிராஷ்டிரனுக்கு எவ்வளவு நாழிகை இந்தப் புத்தி இருந்தது? புத்திமாறியதும் இவன் என்ன செய்தான்?

விடை.—துரியோதனனோடு கொஞ்சநாழிகை பேசியதும், திருதிராஷ்டிரனுக்குப் புத்திமாரித் தனது பிள்ளைகளிடம் அபிமானம் விருத்தியாக, ஊருக்குப் போய்க்கொண்டிருக்கும் பாண்டவரைத் திரும்ப அழைத்து மறுபடியும் சகுனியோடு சூதாடும்படி ஏவினன். காந்தாரி, விதுரர் முதலியவர்கள் என்ன சொல்லியும் இச் சமயத்தில் இவன் காதில் ஏறவில்லை.

வினா 53.—இம்மறு சூதாட்டத்தில் பந்தயம் என்ன வைத்தார்கள்? அது என்னமாய் முடிந்தது?

விடை.—இந்தச் சூதாட்டதில் தோற்றவர்கள் 12-வருஷம் வனவாஸமும், 1-வருஷம் அஜ்ஞாதவாஸமும் (ஜனங்கள் நிறைந்த பட்டணத்தில் உருமாறிவஸித்தலும்) செய்து திரும்பிவரவேண்டுமென்றும், 13ம்வருஷத்தில் எப்பொழுதாவது அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் மறுபடியும் வனவாஸ அஜ்ஞாதவாஸாதிகள் ஒழுங்காய் பூர்த்தியாகிறவரையில் செய்தே தீரவேண்டும் என்றும் தீர்மானித்து மறு சூதாட ஆரம்பித்தார்கள். இதிலும் சகுனி ஜயிக்கப்

பாண்டவர்கள் முன்செய்த நிபந்தனைக்குட்பட வேண்டி வந்தது.

வினு 54.—பாண்டவர்கள் வனவாஸம் செல்லுங்கால் நடந்த விஷயங்கள் என்ன?

விடை.—பாண்டவர்கள் தமது இராஜ உடமைகளை உதறி எறிந்துவிட்டு ரிஷி உருக்கொண்டு மிகுந்த வணக்கத்தோடு புறப்பட்டார்கள். திரௌபதியும் ரிஷி பத்தினி உருக்கொண்டு இவர்கள் பின்னே தொடர்ந்து சென்றாள்; குந்தியைப் பாண்டவர்கள் விதுரரிடம் ஒப்புவித்துவிட்டு அவளது துக்கத்தை ஒருவாறு ஆற்றிவிட்டு வனம்நோக்கிச் செல்ல, அநேகம் பிராம்மணோத்தமர்களும், நகர வாஸிகளும் பாண்டவர்களை விட்டு நகரத்திலிருக்கப் பொறுக்காது அவர்கள் பின்னே சென்றார்கள். அப்பொழுது ஹஸ்தினபுரம், புருஷனை இழந்த பூவைபோல ஒளி மழுங்கிக் கிடந்தது.

வினு 55.—இவ்வாறு பாண்டவர்கள் மனங்கொதிக்க வனம் சென்றதும், யார் திருதிராஷ்டிரரிடம் வந்து என்ன சொன்னார்? அவர் பின்பு என்ன செய்தார்.

விடை.—நாரதமகாமுனி வந்து திருதிராஷ்டிரரிடம் அவரது பிள்ளைகள் பதினான்காவது வருஷம் இருந்தவிடம் தெரியாது பாண்டவர்களால் நாசமடையப் போகிறார்கள் என, திருதிராஷ்டிரரும் அப்பொழுது மாத்திரம், தாம் செய்தது தப்பிதம் என்று எண்ணித் துக்கிக்கத் தொடங்கினர்.

---

3. ஆரண்ய பர்வம்

இரணியமகனுமுன்ன ரிழையுரைக்கேதங்கண்ட
தரணியன்மகனுமற்ற யானையுஞ்சரணென்றேத்தி
முரணியசிறியோர்வெஃக முதன்மைகொண்மாதுங்கண்ட
பிரணவப்பொருளையின்றும் பேணுவார்காணுவாரே.

வினா 1.—பாண்டவர்களோடு காட்டிற்குச் சென்றவர்கள் என்ன செய்தார்கள் ?

விடை.—பாண்டவர்களைப் பிரிந்து இருக்க மனம்வராத நகர வாஸிகளும், பிராம்மணோத்தமர்களும் அவர்களோடு வெகுதூரம் செல்ல, தர்மபுத்திரர் அவர்களைப் பட்டினத்திற்குத் திரும்பிப்போய் தம்தாயாகிய குந்திக்குத் தேறுதல் சொல்லும்படி விநயத்தோடு ஏவ, நகரவாஸிகள் யாவரும் ஹஸ்தினபுரிக்குத் திரும்பிவிட்டார்கள். பிராம்மணோத்தமர்கள் மாத்திரம் பாண்டவர்களை விடாது காட்டிற்குத் தொடர்ந்து சென்றனர்.

வினா 2.—பிராம்மணோத்தமர்கள் விஷயத்தில் பாண்டவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் ? அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள் ?

விடை.—தம் கூடவேவரும் மஹான்களை நோக்கி தாம் காட்டிற்குப் போவதாகவும், தமக்கு அவ்வளவு பிராம்மணர்களை ஆராதிக்கும் வழி தோன்றவில்லை என்பதாகவும், ஆகையால் அவர்கள் வேறு எவ்விடமாவது சென்று வாழ்ந்திருப்பது நலம் என்பதாகவும் தர்மபுத்திரர் மஹாதுக்கப்பட்டுக்கொண்டு சொன்னார். அப்பொழுது அந்த

ஸங்கத்தில் இருந்த பிராம்மணர்களுள் பெரியவரான சௌனகர் பாண்டவர்களைச் சாஸ்திரபூர்வமாய் ஸமாதானம் செய்தார். பாண்டவர்கள் படும் தர்ம ஸங்கடத்தை நோக்கி ஸூர்யனது நாம விசேஷங்களைச் சொல்லி, அதை ஜபம்செய்து அதன் மூலமாய் அந்தப் பிராம்மணர்களை விட்டுவிடாது பாதுகாத்துக்கொண்டு வனவாஸம் செய்வதற்கு வேண்டிய வஸ்துவை ஸம்பாதிக்கும் படி பாண்டவர்களைச் சௌனகர் ஏவினர்.

வினு 3.—ஸூர்ய பகவான் தர்மபுத்திரருக்கு என்ன உபகாரம் செய்தார்? அதன் விசேஷம் என்ன?

விடை.—அக்ஷய பாத்திரம் என்ற ஒரு திவ்ய செப்புப்பாத்திரத்தை ஸூர்யன் தர்மபுத்திரரிடம் கொடுத்தார். அந்தப் பாத்திரத்திலிருந்து எவ்வளவு போஜனங்கள் வேண்டுமானலும் வெளிவரும். ஆனல் கடைசியாய் திரௌபதி சாப்பிட்டுவிட்டால் அதன் பிறகு அதிலிருந்து அன்றைய தினம் ஒன்றும் வெளிவரமாட்டாது. இதைவைத்துக் கொண்டு தர்மபுத்திரர் ஸகல பிராம்மணர்களை ஒழுங்கு தவறாது, வனவாஸம் 12-வருஷம் முடியும் வரையில் ஆராதித்து வந்தார். இவ்வளவு சிறந்த உபகாரத்தை ஸூர்ய பகவான் பாண்டவர்களுக்கு நல்ல தருணத்தில் செய்தார்.

வினு 4—.இவ்வளவும் எங்கு நடந்தது? பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்?

விடை.—முன்சொன்ன காரியங்கள் யாவும் கங்கைக்கரையில் முதல் நாள் பாண்டவர்கள் தங்கிய ஆலமரத்தடியில் நடந்தது. மறுநாள் ஸூர்யனிடம் அக்ஷயபாத்திரம் பெற்று, பிராம்மணர்கள் எல்லோருக்கும் போஜனம் அளித்த

பின்பு, பாண்டவர்கள் காம்யக வனத்திற்குப் பிராம்மணர்கள் சூழ்ந்துவரப் புறப்பட்டுப் போனர்கள்.

வினா 5.—இங்கு இப்படி இருக்க ஹஸ்தினபுரத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் காடுசென்ற பின்பு திருதிராஷ்டிரன் தன் தம்பியாகிய விதுரரை அழைத்துத் தனக்கு அப்பொழுது எது செய்தால் நன்மையாய் இருக்கும் என்று கேட்க, அவர் தான் முன்சொன்னபடி துர்யோதனனைக் கொல்லவேண்டுமென்றும், தர்மபுத்திரருக்குப் பட்டாபிஷேகம் செய்துவிடவேண்டு மென்றும், பயப்படாது தமது நிஜ அபிப்பிராயத்தை வெளியிட்டார். இதைக் கேட்டதும், விதுரர் தனக்கு விரோதி என்ற கெட்ட எண்ணம் வர, திருதிராஷ்டிரன் அவரைப் பலவாறு நன்றிகெட்டவன் என்று வைது, தன் ஊரைவிட்டுக் காட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டான்.

வினா 6.—விதுரர் எங்கே சென்றார்? பின்பு திரும்பிவந்தாரா என்ன?

விடை.—இதைக்கேட்டதும் மனம் கோணது விதுரர் தர்மபுத்திரர் இருக்கும் காம்யகவனம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி, தர்மபுத்திரரால் மரியாதை செய்யப் பெற்று ஸுகமாய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்தனர். இப்படி இருக்கையில் திருதிராஷ்டிரனுக்கு நல்லபுத்தி வர, தான் தன் தம்பி விஷயத்தில் செய்தது பெரிய அநியாயம் என்று தோன்றிற்று. உடனே ஸஞ்சயனை அழைத்து விதுரரைத் திரும்பி அழைத்துவரும்படி ஏவினன். ஸஞ்சயன் காம்யக வனஞ்சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி யுதிஷ்டிரர் அனுமதியின்பேரில் விதுரரை ஹஸ்தினபுரிக்கு அழைத்துவந்தான்.

விஞ 7.—விதுரர் திரும்பிவந்ததைக் கேள்வியுற்றதும் துர் யோதனதியர் என்ன செய்ய யத்தனித்தார்கள்? இதை யார் எவ்வாறு தடுக்க யத்தனித்தார்?

விடை.—விதுரர் வந்ததைக் கேள்வியுற்ற துர்யோதனதியர் ஆலோசனைசெய்து கடைசியில் பாண்டவர்களைக் கொன்றுவிடுவது நலம், 'இல்லாவிடில் இந்த விதுரன் எப்படியாவது நமது இராஜ்யத்தை அவர்களிடம் சேர்ப் பித்துவிடுவான்' என்று தீர்மானித்து அவர்களைக் கொல் லத் தயாராய்த் துர்யோதனதியர் புறப்பட்டார்கள். இதைத் தமது ஞானக் கண்ணால் அறிந்த வியாஸர் திருதிராஷ்டிரனிடம் வந்து அவன் பிள்ளைகளைச் சண் டைக்குப் போகாது தடுத்து விட்டால்தான் அவர்கள் பிழைப்பார்கள், இல்லாவிடில் அவர்கள் பாண்டவர்களால் இறப்பார்கள், என்று உறுதியாய்ச் சொல்லி துர்யோத னதியரைப் படை எடுத்து காட்டிற்குச் செல்லாது தடுக்க யத்தனித்தார். மேலும் வியாஸர், திருதிராஷ்டிர னுக்கு, முன்காலத்தில் ஸுரபி என்கிற காமதேனு தனது கன்றுகளுள் கஷ்டப்படும் கன்றிற்காக இந்திர னிடம் சென்று அழுத உபாக்கியான மூலமாய்த் தனக்கு அப்பொழுது கஷ்டப்படும் பாண்டு புத்திரர்களிடம் இருந்த ஆசையை வெளியிட்டு, துர்யோதனதியரைப் பாண்டவர்களோடு சிநேகம் செய்துகொள்ளும்படி வியா ஸர் திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதி கூறினர்.

விஞ 8.—இப்படி வியாஸர் சொல்லிப் போனவுடன் யார்வந்து துர்யோதனதியருக்கு என்ன புத்திமதி கூறினர்?

விடை.—மைத்ரேயர் என்ற மஹரிஷி தர்மபுத்திரரைக் காம்யக வனத்தில் ஸந்தித்துப் பேசிவிட்டு, துர்யோதனன் ஸபைக்கு வந்து வியாஸர் சொல்லியபடியே பாண்டவர்க

ளது பலத்தைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லி, பீமன், பகன் ஜராஸந்தன் கிம்மீராஸுரன் முதலியவர்களைக் கொன்ற பிரபாவத்தை எடுத்துக்காட்டி, பாண்டவர்களோடு அவசியம் துர்யோதனதியர் ஸந்திசெய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர்.

வினா 9.—இதை துர்யோதனன் அங்கீகரித்தானா? இதனால் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—துர்யோதனன், மஹரிஷி மிகுந்த ஆவலோடு புத்திமதி கூறுங்கால் அதைக் கவனியாது தனது துடையைத் தட்டிக்கொண்டிருக்க, ரிஷி அதிக கோபத்தோடு "உனது துடையை யுத்தத்தில் பீமன்கதையால் அறுத்துத் தள்ளட்டும்" என்று சபித்துவிட்டு, மேல்விஷயங்களை விதுரர் எடுத்துச்சொல்லுவார் என்று சொல்லி மைத்ரேயர் தாம் வந்த வழியை நோக்கிச் சென்றார்.

வினா 10.—மைத்ரேயர் கோபித்துக்கொண்டு சென்றதும், விதுரர் என்ன சொன்னார்? இதனால் என்ன பிரயோஜனம் உண்டாயிற்று?

விடை.—கிம்மீரன் என்ற அஸுரன் பாண்டவர்களைக் காட்டில் ஸந்தித்ததும், அவர்களில் பீமனே தனது ஸகோதரனாகிய பகாஸுரனைக் கொன்றவன் என்று அறிந்து அவனோடு இவன் சண்டை செய்ததும், கொஞ்சநேரம் கோர யுத்தம் செய்தபின்பு பீமன் கிம்மீரனைக் கொன்றதுமாகிய இந்த விசித்திரக் கதையைச்சொல்லி துர்யோதனனது கெட்ட எண்ணப்படி ஒன்றும் நடவாதபடி விதுரர் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்.

வினா 11.—இப்படிப் பாண்டவர்கள் காம்யக வனத்தில் வஸிக்குங்கால் அவர்களைப்பார்க்க யார் வந்தது? அங்கு என்ன நடந்தது?

விடை.—கிருஷ்ண பரமாத்மாவும், அவரைச்சேர்ந்த பரிவாரங்களும் பாண்டவர்கள் சகுனி இவர்கள் ஆடிய மாயச் சூதில் தோற்று காட்டில் கஷ்டப்படுகிறார்கள் என்று கேள்வியுற்று மிக வருத்த மடைந்து, பாண்டவர்களைத் தேற்ற காம்யக வனம் வந்தார்கள். இவர்கள் வந்து, சீக்கிரத்தில் துர்யோதனாதியரை ஹதம்செய்தால்தான் நலமென்று சொல்ல, அர்ஜுனன் பகவானது பூர்வச்செயல்களைச் சொல்லி அவரை ஸமாதானப்படுத்தினான். உடனெ திரௌபதி வந்து பீமன், அர்ஜுனன் முதலியவர்களது பல வைபவங்களை எடுத்துச்சொல்லி, அவர்கள் பல விசேஷங்கள், தன்னை ஸபையிலிழுத்துவந்து கொடிய அவமானம் செய்ததுச்சாஸனன் விஷயத்தில் உபயோகப்படாததை நினைத்து மனமுருகிக் கதறினாள். அப்பொழுது விரோதிகள் யாவரும் சீக்கிரத்தில் இறக்கத் திரௌபதிக்கு நல்ல காலம் வரும் என்று கிருஷ்ணபகவான் தேற்ற, அப்பொழுது தான் துரோணரையும், சிகண்டி பீஷ்மரையும், பீமன் துர்யோதனனையும், அர்ஜுனன் கர்ணனையும் கொல்லப்போகிறதாக திருஷ்டத்யும்னன் சபதம் செய்தான்.

வினு 12.—இவ்வளவு மன உருக்கத்தோடு பாண்டவர்களைத் தேற்றிய கிருஷ்ண பகவான் பாண்டவர்கள் சூதாடி அவமானப்படுங்கால் எங்கிருந்தார்? ஏன் வரவில்லை?

விடை.—இராஜஸூய யாகம் முடிந்து கொஞ்ச நாளானதும் பகவான் துவாரகைக்குப் போனார். அங்கு முன்னமேயே ஸௌபவ விமானத்தில் ஏறிக்கொண்டு படை எடுத்து வந்த ஸால்வராஜா துவாரகையை அழிக்கயத்தனித்துத் தோல்வியடைந்து அப்பொழுதுதான் ஓடிப்போயிருந்தான். கிருஷ்ணபகவான் வந்ததும் ஸங்கதியை அறிந்து

ஸால்வராஜனைத் துரத்திச்சென்று அவனோடு வெகு காலம் யுத்தம்செய்து அவன் பிரயோகித்த மாயைகள் எல்லாவற்றையும் நீக்கிக் கடைசியில் அவனது விமானத்தை அழித்து அவனைக்கொன்று துவாரகைக்குத் திரும்பினர். அப்பொழுதுதான் பாண்டவர்களுக்கு வந்த ஆபத்தைக் கேள்விப்பட்டு உடனே காம்யக வனத்திற்கு வந்து அவர்களை ஸந்தித்தார். இதனால்தான் சகுனி மாயச் சூதாடுங்கால் கிருஷ்ணபகவான் வர முடியவில்லை.

வினா 13.—பின்பு கிருஷ்ண பகவான் என்ன செய்தார்? பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு அவர்களைப் பார்க்க யார் வந்தது?

விடை.—சாஸ்திரப்படி பாண்டவர்களிடம் விடைபெற்று, ஸுபத்திரையையும், அபிமன்யுவையும் கூட்டிக்கொண்டு கிருஷ்ண பகவான் துவாரகை நோக்கிச்சென்றார். உடனே பாண்டவரும் காம்யக வனத்திலிருந்து, அர்ஜுனனது அபிப்பிராயப்படி துவைத வனத்திற்குச் சென்றார்கள். அவர்களைப் பார்க்க மார்க்கண்டேய மஹா முனி வந்து தர்மபுத்திரரைச் சாஸ்திரோக்த வசனங்களால் தேற்றினர். அவரோடுகூட இருந்த ரிஷிகளும் தர்மபுத்திரரைத் தேற்றினர்கள்.

வினா 14.—இவ்வாறு மார்க்கண்டேயர் வந்து போனதும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—பாண்டவர்களும், திரௌபதியும் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு தாங்கள் பட்டகஷ்டத்தையும், தாங்கள் நடந்துகொண்ட விதத்தையும்பற்றி வெகுவாக ஸம்பாஷித்தார்கள். இதில் திரௌபதி முதலில் தர்மபுத்

திரரை ஆண்மையற்றவரென்றும், மிகுந்த கஷ்டம் வந்தவிடத்தும் கோபத்தைக் காட்ட சக்தியற்றபேதை என்றும், வெகுவாகத்தூஷித்து, சிற்சில ஸமயங்களில் கோபத்தைக் காட்டாமல் எப்பொழுதும் சாந்தமாகவே இருந்தால் கிரஹஸ்தனுயிருப்பவன் மிகுந்த ஹீனஸ்திதிக்கு வருவதற்கு இடம் உண்டாகும் என்றும் ப்ரஹ்மலாத பலி ஸம்வாதத்தால் திரௌபதி நிரூபித்தாள். இதைக்கேட்டு "கோபம் சண்டாளம்" "சாந்தம் ஸர்வார்த்த ஸாதகம்" என்பதைப்பற்றி தர்மபுத்திரர் வெகு விஸ்தாரமாய் திரௌபதிக்குப் புத்திமதி உரைத்தார். இதைக் கேட்டதும் திரௌபதி 'திவ்ய யக்ஞாதி கிருதுக்கள் செய்து கஷ்டம்வந்த விடத்திலும் ஸதாதருமத்தில் இருக்கும் உமக்கு மஹா அதர்மமான சூதாட்டத்தில் புத்தி செல்லுவானேன்? மேலும் இவ்வளவு தர்மாத்மாவான உமக்கு இந்த மஹத்தான கஷ்டம் வருவானேன்? கொடிய துர்யோதனாதியர் ஸுகமாய் வாழுவானேன்? தெய்வச்செயல் ஏன் இவ்வளவு விபரீதமாய் இருக்கிறது?' என்று கேள்விகேட்டாள். வேதவாக்கியங்களில் நம்பி நாம் ஸத் விருத்தியில் இருக்கவேண்டும் என்றும், அதன் பலன்களை உத்தேசித்து மனம் வருந்தல்கூடாது என்றும், ஸுகதுக்கங்கள் அனுபவிப்போர் மனதைப் பொறுத்தனவே ஒழிய, வெளி வஸ்துக்களிலிருந்து ஜனிப்பவை யல்லவென்றும், ஸத்துக்களுக்கு ஈசுவரச்செயலால் உண்டாகும் துக்கங்கள் தோற்றமாத்திரமே ஒழிய உண்மையில் ஸுகங்களே என்றும், அஸத்துக்கள் அனுபவிக்கும் ஸுகம் யாவும் துக்கமே ஒழிய வேறில்லை என்றும், தர்மபுத்திரர் ஸுகதுக்க ரகஸியத்தை எடுத்துக்காட்டினர். திரௌபதி இதை அங்கீகரிக்காது, "எல்லாம் ஈசன்செயல் என்று சும்மாமுயற்சி இல்லாமல்

இருந்துவிடலாமா ? நமக்குக் கஷ்டம் வருங்கால் அதை நிவர்த்திக்க உபாயம்தேடாது அது துக்கரூபமாய்வரும் ஸுகம் என்றிருந்தால் ஸதா நாம் கஷ்டத்திலிருக்க வேண்டியது தான்" என்று மறுமொழி கூறினள். இப்படித் திரௌபதி தர்மபுத்திரரிடம் பயனில்லாச் சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது பீமன் முன் வந்து,"உம்மிடத்தில் ஸகல குணங்களும் பொருந்தி இருக்கின்றன. அதனல் எங்களுக்குப் பலம்யாவும் குறையாதிருக்கின்றன. இவ்வளவு நல்ல விஷயங்கள் அமைந்திருந்தும் இவைகளை உபயோகிக்கத்தகுந்த கஷ்டகாலம் வருங்கால் ஏன் நீங்கள் எங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்படி ஏவாதிருக்கவேண்டும்?நீர் உமது கஷ்டத்தை நிவர்த்திசெய்துகொண்டு உமது பிரஜைகளுக்கு நன்மை செய்யத்தக்க நிலையை அடையாவிட்டால் உமக்கு அபகீர்த்தியே நிச்சயமாய்வரும். ஆகையால் இப்பொழுதே படை எடுத்துச்சென்று துர்யோதனுதியரை வென்று இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ளும்" என்று தனது அபிப்பிராயத்தை வெளியிட்டான். இதற்குத் தர்மபுத்திரர், "நான் என்னமோ விதிவசமாக அதர்மமான சூதாட்டத்தில் புகுந்துவிட்டேன். இப்பொழுது நாம் படும் கஷ்டத்திற்கெல்லாம் நான்தான் காரணம் என்பதற்கு ஸந்தேகமே இல்லை. அப்படியிருந்தும் இனி மேலும் அதர்மத்தை செய்வது நன்றன்று. ஆகையால் நான் ஸபையில் செய்துவந்த பிரதிக்ஞைக்கு விரோதமாய் இப்பொழுது துர்யோதனுதியரைக் கொல்லுவது தகாதகாரியம்" என்று மறுமொழி கூறினர். பீமன் இதற்கு "நீர் செய்த பிரதிக்ஞை மிக அஸாத்தியமானது. இதை நம்மால் நிறைவேற்றமுடியாது. நம்முள் ஒருவரை எப்படியாவது நமது விரோதிகள் 13-வது வருஷத்தில்

நிச்சயமாய்க் கண்டுபிடித்துவிடுவார்கள். நாமோ இப் பொழுது 13-மாஸம் காட்டில் வாஸம்செய்தாய் விட்டது. இப்பொழுதே நாம் படை எடுத்துச் சென்று துர்யோத னுதியரைக் கொல்லலாம்" (வருஷம் என்பதற்கு சிலஸந்தர்ப்பங்களில் மாஸம் என்ற அர்த்தமும் உண்டு) என்றும் பீமன் சொன்னதும், தர்மபுத்திரருக்குப் பீஷ் மர் முதலிய பெரியவர்கள், கர்ணன் முதலிய வில்லாளி கள் நிறைந்த துர்யோதன ஸைந்நியத்தை எவ்வாறு வெல்வது என்ற ஏக்கமுண்டாயிற்று.

வினு 15.—இவ்வாறு ஏக்கமடைந்த தர்மபுத்திரரை யார்வந்து எவ்வாறு தேற்றியது? பின் என்ன நடந்தது?

விடை.—இந்த ஸமயத்தில் வியாஸர் தர்மபுத்திரரிடம்வந்து "பிரதிஸ்மிருதி" என்ற மந்திரத்தை உபதேசித்து இதை அர்ஜுனனுக்கும் உபதேசித்து அவனைத் தபஸுக்கு அனுப்பி, மஹாதேவர் முதலிய ஸகல தேவதைகளிடத் திலிருந்தும் அஸ்திர விசேஷங்களை ஸம்பாதித்து வரும் படி செய்யச்சொன்னார். தர்மபுத்திரர் துக்கந்தெளிந்து இந்த விஷயங்களை அர்ஜுனனிடம் சொல்ல, அவன் இந்த மந்திரத்தைப் பெற்றுக்கொண்டு, எல்லாரிடத்தும் விடைபெற்றுத் தபஸுக்காக வடக்கு நோக்கிச் சென் றான்.

வினு 16.—வடக்கே சென்ற அர்ஜுனன் யாரைக்கண்டான்? பின் என்ன நடந்தது?

விடை.—வடக்கே செல்லுங்கால் இந்திரகீல மலைச்சாரலுக்கு வரும்பொழுது 'இங்கே நில்லு' என்ற அசரீரிவாக்கு உண்டாக உடனே அர்ஜுனன் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். அப்பொழுது ஒரு மரத்தடியில் ஒரு ஸன்னி யாஸியைக் கண்டான். இவர் தம்மால் இயன்றமட்டும்

அர்ஜுனனை வில், அம்பு இவைகளை எறிந்து விடும்படி செய்யப்பார்த்தும் முடியாதுகண்டு, தமது உண்மையான இந்திர ரூபத்தைக்காட்டி அர்ஜுனனைச் சிவனைக் குறித்து தவம் செய்யும்படி ஏவிமறைந்தார். உடனே அர்ஜுனன் தவவடிவம் பூண்டு அங்கேயே சிவனைக் குறித்துக் கொடிய தவம் செய்யத் தொடங்கினன்.

வினா 17.—இவ்வாறு கொடுந்தவம் அர்ஜுனன் செய்யுங்கால், அதற்கு என்ன விக்கினம் வந்தது ?

விடை.—அர்ஜுனன் சிறந்த அஸ்திரங்களைப்பெற்று சிறந்த வில்லாளியாகத் தவம் செய்யச்சென்றான் என்ற ஸமாசாரத்தைக் கேள்வியுற்ற துர்யோதனன் தனது தோழனை மூகாஸுரனை ஏவி, அர்ஜுனனைக் கொல்லும்படி அனுப்பினன். இவன் ஒரு பெரிய காட்டுப்பன்றி உருக்கொண்டு அர்ஜுனன் தவம்செய்யும் இடத்திற்கு அருகிலுள்ள ஒரு பெரும் புதரில் ஒளித்துக் கொண்டு அவன் மேல் பாய்ந்து அவனைக் கொல்லும் தருணத்தில் இருந்தான்.

வினா 18.—இந்தத் தடை எவ்வாறு யாது காரணத்தால் நிவர்த்தியாயிற்று ?

விடை.—இப்படி இருக்கையில் ஸகல ரிஷி சிரேஷ்டர்களும் பரமசிவனிடம் சென்று, அர்ஜுனனது தபோக்கினியால் தமக்குக் கஷ்டம் பொறுக்கமுடியவில்லை என்று முறையிட, பரமசிவன் அர்ஜுனனுக்கு அனுக்கிரஹித்து, அவனைத் தவத்தை நிறுத்தும்படி செய்வதாக ஒப்புக்கொண்டார். இதற்காகவே பரமசிவன் வேடரூபந்தரித்து பார்வதியை வேடச்சியாக்கி நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கிக்கொண்டு வேட்டைக்குப்

புறப்படும் வேடன்போல, அர்ஜுனன் தவம்செய்யு மிடம் வந்து மூகாஸுரனுகிய பன்றியைக் கண்டு, அதைச் சங்கரிக்க ஒரு அம்பை எய்தார். இதற்குள் அர்ஜுனனும் பன்றி தன்னைக் கொல்லக் காத்திருப் பதைக்கண்டு அதைக்கொல்லத் தானும் ஓர் அம்பு எய் தான். இவ்விரண்டு அம்புகளாலும் மூகாஸுரன் உயிர் நீங்கி விழுந்தான்.

வினா 19.—இவ்வாறு பன்றி இறந்ததால் என்ன விபரீதம் உண்டாயிற்று?

விடை.—வேட்டை ஒழுங்குப்படி, ஒருவன் அம்பு எய்து கொல்லக் குறிவைத்த ஜந்துவின்பேரில் வேறொருவன் அம்பெய்தல் அநியாயம். இந்த ஒழுங்கின்படி வேடனுக் கும், அர்ஜுனனுக்கும் தர்க்கமுண்டாயிற்று. இதில் ஒரு வரை ஒருவர் இகழ்ந்து பேசும்படி நேரிட, இந்தத் தர்க் கம் கடைசியில் போராய் முடிந்தது.

வினா 20.—இப்போரின் விசேஷம் என்ன? அது எவ்வாறு முடிவு பெற்றது?

விடை.—அர்ஜுனன் போடும் அம்புகள் யாவும் வேடன்மேல் தைக்காது அவன் அருகில்போய் கீழே விழத்தொடங்கி விட்டன. ஆனல் வேடன்விடும் பாணங்களோ அர்ஜு னன் மேல் நன்முய்த்தாக்கி அவனுக்கு மிகுந்த துன் பத்தை உண்டாக்கின. இதைக் கவனியாது அர்ஜுனன் சண்டை செய்யும்பொழுது அவனுக்கு அக்கினிபகவா னல் கொடுக்கப்பட்ட அக்ஷய அம்பறாத்தூணியில் பாணம் ஒன்றுகூட இல்லாமல் முடிந்துபோய்விட்டது. இப்படி யானதால் அதிக கோபத்தோடு அர்ஜுனன் தன் காண்டீவ தனுஸின் நாணை அவிழ்த்துவிட்டு வேடனைச் சிரஸில் அடிக்க அவன் தனது தனுஸை இழக்கும்படி.

நேரிட்டது. இதன் பின்பு இருவரும் மல்லயுத்தஞ் செய்யக் கடைசியில் அர்ஜுனனுக்குச் சிரமம் வந்துவிட்டது. அப்பொழுது அர்ஜுனன் சண்டையை நிறுத்திவிட்டு மனதில் பரமசிவத்தைத் தியானித்து ஒரு மண்விக்கிரஹத்தைச் செய்து, பூஜை செய்து புஷ்பம் முதலியவைகளைச் சாத்திக் கண்ணை விழித்துநோக்க, அவைகள் யாவும் வேடன் தலையில் இருப்பதைக் கண்டு, அர்ஜுனன் சிவமே வேட உரு வோடு வந்ததாக அறிந்து, தெண்டனிட்டுத் தான் செய்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தான். உடனே அவன் முன்பு, ஸகல தேவதைகளும் தோன்றினார்கள்.

வினா 21.—இப்படி அர்ஜுனன் சிவனைத் தரிசித்த பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—சிவன், அர்ஜுனன் செய்த திவ்ய யுத்தத்தைக் கண்டு மகிழ்ந்து அவனுக்குப் பாசுபத அஸ்திரத்தைக் கொடுத்து, அதைத் தகுந்த பலவான் விஷயத்தில்தான் பிரயோகிக்க வேண்டும், அப்படி இன்றி பலஹீனர்மேல் பிரயோகித்தால் பிரபஞ்ச முழுவதையும் அது அழித்து விடும் என்ற பிரயோகக்கிரமத்தைச் சொல்லி சிவன் மறைந்தார். உடனே அங்கு இருந்த ஸகல தேவதைகளும் தங்கள் தங்களுக்குரிய முக்கிய அஸ்திரங்களை அர்ஜுனனுக்கு அநுக்கிரஹித்து மறைந்தனர்.

வினா 22.—இவ்வாறு அர்ஜுனன் ஸகல அஸ்திரங்களையும் பெற்ற பின்பு என்ன செய்தான்? ஏன்?

விடை.—இந்திரனது வேண்டுகோளின்படி அர்ஜுனன் இந்திர லோகம் சென்று, அங்கு இந்திரனோடு ஐந்துவருஷம் வாஸம் செய்து வந்தான். இந்திரனுக்கு மஹா பலசாலிக

ளாகிய நிவாதகவசாள், காலகேயர்கள் என்ற ஜாதியர்கள் விரோதிகளாய் இருந்ததால், அவர்களைக் கொல்லுவதற் காக அர்ஜுனனை இந்திரன் இந்த ஸமயத்தில் தனது லோகத்திற்கு அழைத்தான்.

விஞ 23.—அர்ஜுனன் இந்திரலோகத்தில் வஸிக்குங்கால் என்ன விபரீதம் நடந்தது? காரணம் என்ன? அது எவ் வாறு அர்ஜுனனுக்கு நன்மையாய் முடிந்தது?

விடை.—அர்ஜுனன் இந்திர ஸபையில் ஒருநாள் இருக்குங் கால் அவன் முன்பு எல்லா அப்ஸர ஸ்திரீகளும் நர்த்த னம் செய்துவர, அப்பொழுது தனது பூரு வம்சத்திற் குத் தாய்போன்றவளாகிய ஊர்வசியை அர்ஜுனன் கண் கொட்டாது மிகுந்த விநயத்தோடு நோக்கினன். இந் நோக்கத்தைக் காமநோக்கு என்று விபரீத அர்த்தம் செய்துகொண்டு, இந்திரன் ஊர்வசியை அர்ஜுனனோடு ஓர் இரவு ஸுகித்திருக்கும்படி அனுப்ப, அவன், தனது எண்ணத்தை வெளியிட்டு மிகுந்த ஆவலோடு தன்னி டம் வந்த ஊர்வசிக்கு வந்தனை வழிபாடுகள் செய்தான். தனது எண்ணம் பூர்த்தியாகாதது கண்ட ஊர்வசி, அர் ஜுனனுக்கு நபும்ஸக ரூபம் (பேடி ரூபம்) வந்து, ஸ்திரீ கள் மத்தியில் அவன் நாட்டியம் கற்பிப்போனாக வஸித்து மானங்கெட்டுத் திரியவேண்டும் என்று சபித்தாள். இது இந்திரனுக்குத் தெரியவே அர்ஜுனனது மனோதிடத்தை மெச்சி, ஊர்வசியை அழைத்துப் பேடிரூபம் முதலிய வைகள் ஒரு வருஷம் மாத்திரம் இருக்கும்படி சாபத்தை மாற்று வித்தான். (இந்தச் சாபம் எப்படி அர்ஜுனனுக்கு நன்மையாக முடிந்தது என்பதை விராடபர்வத்திற் காண்க.)

வினா 24.—நிவாதகவச காலகேயர்களை அர்ஜுனன் எவ்வாறு வென்றான்?

விடை.—அர்ஜுனன் இந்திர ஸாரதியாகிய **மாதலியால்** நடத்தப்பட்ட இரதத்தில் ஏறிக்கொண்டு, நிவாதகவசர்கள் இருக்கும் பட்டணத்திற்கு வந்து தனது காண்டீவ தனுஸால் பாண வருஷம் செய்யத்தொடங்கினான். முதலில் அர்ஜுனனோடு அவர்கள் எதிர்த்துச் சண்டை செய்வது அஸாத்தியம் என்று கண்டு, அநேக மாயா வித்தைகளை முன்னிட்டுக் கொண்டு மறைந்து சண்டை செய்யத் தொடங்கினார்கள். அர்ஜுனனும் தன்னுல் இயன்ற மட்டும் அவர்களது மாயாவித்தைகளை வீணாக்கிக் கடைசியில் இந்திரனுல் கொடுக்கப்பட்ட வச்சிராயுதத்தைப் பிரயோகம் செய்து நிவாதகவசர்களது மாயைகளைச் சின்ன பின்னமாக்கி அவர்கள் எல்லோரையும் கொன்றான். பின்பு இந்திர லோகத்திற்குத் திரும்பி வருங்கால் ஹிரண்யபுரம் வந்து அங்கு வஸித்திருந்த காலகேயாதி இராக்ஷஸர்களை மிகுந்த கஷ்டத்தோடு ருத்திராஸ்திரப் பிரயோகம் செய்து வதம் செய்தான்.

வினா 25.—இவ்வாறு அர்ஜுனன் தேவகாரியமாய் இந்திர லோகத்தி லிருக்கிறான் என்ற செய்தி தர்மபுத்திராதிகளுக்கு எவ்வாறு தெரியவந்தது? பின்பு அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இந்திரன் **லோமசர்** என்ற முனிவரை அழைத்து அர்ஜுனன் தன் லோகத்தில் இருக்கிறான் என்றும், நிவாதகவசாதி ராக்ஷஸர்களைக் கொன்றபின்பு திரும்பி வருவான் என்றும், அதற்குள் அவர்கள் அர்ஜுனனை எண்ணி வருந்துவதைவிட்டுத் தீர்த்தயாத்திரை செய்து புண்ணியம் ஸம்பாதித்தல் நலம் என்றும் யுதிஷ்டிரரிடம்

சொல்லும்படி ஏவினன். அவர் வந்து இந்திரன் சொன்ன படி யுதிஷ்டரரிடம் சொல்ல, யுதிஷ்டிரர் தமது தம்பி விஷயமான துக்கம் நீங்கித் தீர்த்தயாத்திரை செய்வதாகத் தீர்மானித்தார்.

வினு 26.—அர்ஜுனனது மேன்மையைக் கேள்வியுற்ற திருதிராஷ்டிரன் கதி என்னமாயிற்று?

விடை.—தனது பிள்ளைகள் செய்த துஷ்காரியங்களுக்காக கூடிய சீக்கிரத்தில் அவர்கள் அர்ஜுனன் முதலிய பாண்டவ வீரர்களால் இறப்பார்களென்றும், அர்ஜுனனே தனது குலத்திற்கு யமன் என்றும் திருதிராஷ்டிரனுக்குத் தோன்ற அவன் மனமுடைந்து துக்கக் கடலில் ஆழ்ந்தான்.

வினு 27.—லோமசர் இந்திரலோகத்திலிருந்து யுதிஷ்டிரரிடம் வரும் முன், பாண்டவர்கள் எங்கு எவ்வாறு காலங் கழித்தனர்?

விடை.—பாண்டவர்கள் அர்ஜுனன் தவம்செய்யச் சென்ற சில காலத்திற்கெல்லாம் காம்யக வனம் வர, அங்கு அர்ஜுனனது பிரிவை ஸஹிக்கமுடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் இருக்குமிடம் **பிரகதசுவர்** என்ற மஹரிஷி வர, அவரிடம் இவர்கள் தமது குறைகளை எடுத்துரைத்தனர். அப்பொழுது இந்த ரிஷி பாண்டவர்களது துக்கத்தைமாற்ற அவர்களை விடத் தனிமையாய் அதிகக் கஷ்டப்பட்ட நளனது சரித்திரத்தைச் சொல்லி முடித்தார்.

வினு 28.—இந்த நளன் யார்? இவனுக்கு விவாஹத்தை நடத்த யார் முயற்சி செய்தது? ஏன்?

விடை.—இந்த நளன் நிஷத தேசாதிபதி. ஓர் அன்ன பக்ஷி இவனது அழகை விதர்ப்பதேசாதிபதியின் குமாரத்தியான தமயந்தி யிடமும், அவளது அழகை நளனிடமும் சொல்லி இருவருக்கும் ஒருவர்மேல் ஒருவர்க்குக் காதல் உண்டாகும்படி செய்தது. ஒரு நாள் இப்பட்சியைத் தாதிமார்கள் நளனது உத்தியான வனத்தில் பிடித்து நளனிடம் கொண்டுவந்து கொடுக்க அவன் இதைக் கொல்லாது விடுதலை செய்ததால் அப்பட்சி நளனுக்கு இந்த உபகாரத்தைச் செய்தது.

வினா 29.—தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கு நளன் போகையில், இவனது எந்த சிறந்தகுணம், எவ்வாறு வெளிவந்தது?

விடை.—தேவகாரியம் ஸாதிக்கும் விஷயத்தில் தனது காரியத்தைக் கவனியாது இருத்தல் என்கிற அவனது சிறந்த குணம் வெளிப் பட்டது. போகும் வழியில் இந்திரன், அக்கினி, வாயு முதலிய தேவதைகள் தமயந்தியைக் கல்யாணம் செய்து கொள்ள எண்ணி வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நளனை நோக்கி, 'எமது மேன்மை முதலியவைகளை தமயந்தியிடம் தெரிவித்து அவளை எங்களுள் ஒருவரைக் கல்யாணம் செய்துகொள்ள இசையும்படி செய்யவேண்டும். அதற்காக நீ எங்களுக்குத் தூதுசெல்ல வேண்டும்' என, நளன் மனங் கூசாது தான் ஆசை வைத்திருந்த பெண்ணினிடம் தூதாகப் போய்த் தன்னுல் ஆனமட்டும் தேவர்களுக்காக மன்றாடிப்பார்த்தான். தமயந்தி நளனையே கல்யாணம் செய்துகொள்ளுவதாகப் பிடிவாதமா யிருப்பதைக் கண்டு, நளன் தேவர்களிடம் நடந்த விஷயங்களை ஒளியாது சொல்லிவிட்டான். தேவர்களும் தமது சக்தியால் இவன் சொல்

வது உண்மை யென்றும், இவன் மனங் கூசாது தமயந் தியினிடம் தமது மேன்மையை எடுத்துரைத்தான் என் றும் தெரிந்து கொண்டார்கள்.

வினு 30.—இவ்வாறு நளன் நடந்துகொண்டதால் அவனுக்கு என்ன சிறப்பு உண்டாயிற்று?

விடை.—தேவர்களின் ஸந்தோஷத்தால் நளனுக்குச் சிறந்த சக்திகள் உண்டாயின. அக்கினியின் அனுக்கிரகத்தால் நளனுக்கு அரிசி காய் கறி முதலியவைகளைக் கையால் தொட்டவுடன் உண்ணத்தக்க நல்ல பக்குவ பதார்த்தங்க ளாக மாற்றும் சக்தி வந்தது. வாயுவின் அனுக்கிரகத்தால் குதிரை நடத்தும் வழியும், **அசுவஹ்ருதயம்** என்கிற குதிரைகளின் ஸ்வபாவம் அறியும் வித்தையும் கிடைத் தன. இது போலவே ஒவ்வோரு தேவதையிடத் திலிருந் தும் நளன் திவ்ய சக்திகளை அடைந்தான்.

வினு 31.—தமயந்தி ஸ்வயம்வரத்தில் என்ன விசேஷம் நடந் தது? தமயந்தி நளனை எவ்வாறு அறிந்து மாலையிட் டாள்?

விடை.—ஸ்வயம்வர மண்டபத்தில் இந்திரன் முதலிய நான்கு தேவதைகளும் நளன்போல் ரூபங்கள் எடுத்துக்கொண்டு நளன் அருகில், தமயந்தியின் உறுதியைச் சோதிக்க உட் கார்ந்தார்கள். தமயந்தி ஸ்வயம்வர மாலை எடுத்துவரும் பொழுது ஐந்து நளர்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு முதலில் மயக்கமுற்றாள். அதன் பின் கண் இமைத்தல், கால் நிலத்தில் பதிதல் முதலிய இலக்ஷணங்களால் உண்மையான நளனைக் கண்டுபிடித்து அவனுக்கு மாலை யிட்டாள். இதன் பின்பு நளன் நிஷதபுரி சென்று ஸுக மாய் வாழ்ந்திருக்கையில் இவனுக்கு **இந்திரஸேனன்**, **இந் திரஸேனை** என்ற இரண்டு குழைந்தைகள் உண்டாயின.

வி॥ 32.—தேவதைகள் தமது இருப்பிடம் செல்லுங்கால் யார் எதிரே வந்தது? அதனுல் என்ன விபரீதம் விளைந்தது?

விடை.—தேவதைகள் தமது இருப்பிடம் செல்லுங்கால் எதிரே கலி (சனி பகவான்) தலைவிரிகோலமாய்த் தமயந்தியை கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஓடிவந்து கொண்டிருந்தான். இவன், தேவதைகளிடமிருந்து காரியம்முடிந்து போய்விட்டது என்று அறிந்ததும், இவனுக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. உடனே இவன் "நளனைப் பிடித்துத் திண்டாட்டம் ஆட்டுவித்தும் அவனைத் தமயந்தியை விட்டுப்பிரித்தும் கஷ்டப்படுத்துகிறேன்" என்று கொடிய பிரதிக்ஞை செய்தான்.

வி॥ 33.—கலி புருஷன் எவ்வாறு நளனைப் பிடித்துக் கொண்டான்? கலி புருஷன் பிரவேசம் ஆனதும் நளன் என்ன செய்தான்?

விடை.—ஒருநாள் **ஸந்தியாவந்தனம்** செய்யப் போகுங்கால் காலை நன்றுய்க் கழுவாது உட்கார, இந்த அசுத்த ஸமயம் பார்த்துக் கலிபுருஷன் நளனைப் பிடித்துக் கொண்டான். உடனே அவனுக்குப் புத்திமாற, அடுத்த இராஜ்யத்திலிருந்த புஷ்கரராஜனோடு சூதாடித் தனது ஸொத்துக்கள் எல்லாவற்றையும் தோற்றுவிட்டான். ஆகையால் நளன் இராஜ்யத்தைவிட்டு வெளியே போக வேண்டிவர, தனது குழந்தைகளை விதர்ப்பதேசம் அனுப்பிவிட்டு தமயந்தியையும் அங்குபோகும்படி சொல்லிப் பார்த்தான். அவள் அங்கு செல்லாது நளனோடே காட்டிற்குப் புறப்பட்டாள்.

வினு 34.—கலிபுருஷன் எவ்வாறு இவர்களை வழியில் கஷ்டப்படுத்தினன்? கடைசியில் இவர்களை எவ்வாறு பிரிந்தான்?

விடை.—போகும்வழியில் இவர்களுக்கு ஒருவரும் பிச்சையிடாதபடி ஜனங்களது மனதை மாற்றிவிட, இவ்விருவரும் பசிதாகங்களால் மிகவருந்தினர்கள். இவ்வளவு சிரமத்தோடு காட்டின் வழியாய்ப்போகையில் ஒரு அன்னபட்சி உருவமாய் கலிபுருஷன் இவர்கள்முன் தோன்ற, அதை அறியாது தமயந்தி அந்தப்பட்சி தனக்கு வேணுமென்றுள். உடனே நளன் தமயந்தியின் புடவையின் ஒரு பாகத்தைத் தான் சுற்றிக்கொண்டு தனது ஆடையை அன்னத்தின்மேல் போட்டு அதைப் பிடிக்கப்பார்க்க, அந்தப்பட்சி ஆடையை தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து போய்விட்டது. இவ்வாறு ஆடைஇழந்து இவர்கள் போகையில், விதர்ப்பம் போகும்வழியைக்கண்டு நளன் தமயந்தியைத் தகப்பன் வீடு செல்லும்படி தன்னால் இயன்றமட்டுஞ் சொல்லிப்பார்த்தான். தமயந்தி கேட்கவில்லை. அன்றிரவு அவர்கள் அருகிலிருந்த ஒரு பாழ்மண்டபத்தில் தங்கினர்கள். நடு ராத்திரியில் நளன் எழுந்து, தமயந்தியின் புடவையைக் கிழித்துக்கொண்டு, தமயந்தி காலையில் எழுந்து தகப்பன் வீடுபோவாள் என்கிற எண்ணத்துடன், அவளைத் தனிமையாய்க் காட்டில் விட்டுவிட்டு ஓடிப்போனன்.

வினு 35.—காலையில் தமயந்தி கதி என்னமாயிற்று?

விடை.—காலையில் எழுந்ததும் தன் புருஷனைக்காணாது புலம்பிக்கொண்டே போகையில் வழியிலிருந்த ஒருமலைப் பாம்பு அவளைப்பிடித்து விழுங்கத்தொடங்கியது.

வினா 36.—இவளை யார் இதிலிருந்து தப்புவித்தது? தப்புவித்தவன் கதி என்னமாயிற்று? ஏன்?

விடை.—இவளது அழுகுரலை ஒரு வேடன் கேட்டு ஓடிவந்து அம்பெய்து பாம்பைக்கொன்று இவளை விடுவித்தான். உடனே வேடன் தமயந்தியின் அழகைக்கண்டு மோஹித்து அவளைப் பெண்டாளவேண்டும் என்று கிட்டப் பிதற்றிக் கொண்டுவரவே, தமயந்தியின் கோபாக்கினியால் அவன் சாம்பலாய் விழுந்து இறந்தான்.

வினா 37.—பின்பு இவள் கஷ்டப்பட்டு எந்த ஊருக்குச் சென்றாள்?

விடை.—வழியில் ஒரு வர்த்தகக்கூட்டத்தைக் கண்டு அத்துடன் சேர்ந்துபோனாள். இராத்திரி ஒரு மலைச்சாரலில் அது தங்கியது. அன்றிரவு காட்டு யானைக்கூட்டங்கள் வந்து அநேகரை அழிக்கத் தமயந்தி மாத்திரம் பிழைத்து, பின்பு மிகுந்த கஷ்டங்களை அடைந்து கடைசியில் தனது சிற்றம்மை இராணியாக வாழும் சேதி நகரம் சென்று அங்கு அரண்மனையில் ஓர் ஸைரந்திரியாக அமர்ந்தாள்.

வினா 38.—காட்டில் நடு ராத்திரியில் தமயந்தியை விட்டுப் பிரிந்த நளனது கதி என்னமாயிற்று?

விடை.—நளன் காட்டு மார்க்கஞ் செல்லுகையில் ஒரு காட்டுத்தீ எரிவதைக்கண்டு அதன் அருகில் சென்றான். அங்கு கார்க் கோடகன் என்ற பாம்பு தீயில் அகப்பட்டுத் தத்தளிப்பதைக் கண்டான். பாம்பு நளனுக்குத் தகுந்த உபகாரம் செய்வதாகச் சொல்ல, அவன் அதை நெருப்பிலிருந்து வெளியே எடுத்து விட்டான். அது வெளியே வந்ததும் அவனைக் கடிக்கவே, நளன் தனது அரச உரு

வம் இழந்து ஒரு கரிமுண்டமாக மாறினன். உடனே பாம்பு கலி நீங்கியதும் அவன் நினைத்த போது வந்து, இந்த ரூபத்தை அவனுக்கு மாற்றுவிப்பதாக வாக்களித்து விட்டு மறைந்தது.

வினு 39.—பின்பு நளன் என்ன செய்தான்?

விடை.—இந்தஉருவத்தோடு அயோத்தியா பட்டணத்தில் ருதுபர்ணனிடம் பாஹுகன் என்கிற பெயர் வைத்துக் கொண்டு ஸாரதியாகவும் சமையற்காரனுகவும் அமர்ந்து, வாயு அக்கினி முதலிய தேவதைகளிடமிருந்து பெற்ற சக்தியால் தனது வேலையை அரசன் பார்த்து திருப்தியடையும்படி செய்தான்.

வினு 40.—தமயந்தியின் தகப்பன், தமயந்தி இருக்குமிடத்தை எவ்வாறு கண்டுபிடித்தான்?

விடை.—தனக்கு வேண்டியவனான **ஸுதேவன்** என்கிற பிராம்மணனை அனுப்பி விதர்பதேசாதிபதி, தமயந்தியைத் தேடச் சொன்னன். இவன் எல்லாவிடங்களிலும் தேடிக்கொண்டு வருகையில் தமயந்தியைச் சேதிதேசத்தில் கண்டு அவளை அவள் தகப்பனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

வினு 41.—இதன் பின்பு நளனைக் கண்டுபிடிக்க தமயந்தி என்ன ஏற்பாடுகள் செய்தாள்? அவை என்னமாய் முடிந்தன?

விடை.—ஸுதேவனைத் தமயந்தி அழைத்து "நீர் ஒவ்வொரு இராஜ ஸபைக்கும் சென்று 'தன் பெண்சாதியை நடுக்காட்டில் பாதி ராத்திரியில் காப்பதற்கு வகையறியாது ஒரு புருஷன் விட்டுப் போவது நியாயமா?' என்கிற கேள்வியைக் கேளும். இதற்கு யார் தகுந்த பதில்

சொல்லுகிறீர்களோ அவர்தான் என் புருஷன். அவரை இவ்வாறு நீர் சீக்கிரத்தில் கண்டுபிடித்து வாரும்," என்று ஏவினாள். பிராம்மணன் இவ்வாறு இராஜஸபைதோறும் சொல்லி வந்தான். அயோத்தி வந்து அங்கும் இதைச் சொல்லி ஸபையை விட்டு வெளியே வருகையில், பாஹுகன் வெகு அவஸரமாய் வெளிவந்து பிராம்மணரை நோக்கி "காட்டில் தான் கஷ்டப்படுங்கால் பெண்சாதியுங் கஷ்டப்படுவானேன் என்றும், அவளைத் தனிமையாய் விட்டுப்போனால் அவள் தன் தகப்பன் வீடுசென்று ஸுகமாய் இருப்பாள் என்றும் எண்ணி அவன் விட்டுப் போயிருக்கலாம். ஆகையால் அது நியாயம்தான்" என்றான். இதைத் தமயந்தியிடம் பிராம்மணர் வந்து சொல்ல, பாஹுகன் தான் நளன் என்று தமயந்தி தீர்மானித்தாள்.

வினா 42.—நளன் தன்னிடம் வருவதற்குத் தமயந்தி என்ன ஏற்பாடுகள் செய்தாள்? அதனால் என்ன நடந்தது?

விடை.—ஸுதேவபிராமணர் மூலமாய் ருதுபர்ணனுக்கு மாத்திரம் தனக்கு இரண்டாம் ஸ்வயம்வரம் அடுத்த நாள் காலையில் நடக்கப் போகிறது என்கிற ஸமாசாரத்தைத் தமயந்தி தெரிவிக்க ஏற்பாடுகள் செய்தாள். இதைக் கேட்டதும் ருதுபர்ணன் தேரைத் தயார் செய்யும்படி பாஹுகனுக்குக் கட்டளையிட அவன் பார்வைக்கு இளைத்தனவாயும் ஓடுவதில் வாயுவுக்கு ஸமானமாயும் உள்ள குதிரைகளை எடுத்துப் பொறுக்கி தேரில்கட்டித் தேரைக் கொண்டுவந்து நிறுத்த, ருதுபர்ணன் விதர்ப்பதேசம் நோக்கிப் புறப்பட்டான்.

வினா 43.—போகும் வழியில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—போகும் வழியில் நிஷாகள் படர்ந்து தழைத்திருந்த வன்னிமரம் தோன்ற அதன் அருகே அரசன் தேரை நிறுத்தச் சொன்னான். உடனே அரசன் அந்த மரத்திலிருக்கும் இலை, காய், பூ, பழம் இவ்வளவு என்று கணக்குச் சொன்னான். அது ஸரியாய் இருப்பதை நளன் மரத்தருகில் சென்று எண்ணித் தெரிந்து கொண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டான். உடனே ருதுபர்ணன் தனக்குச் சூதாட்ட ரகஸ்யம் (அக்ஷஹிருதயம்) தெரியும் என்றும், தான் பாஹுகனுக்குச் சொல்லிக் கொடுப்பதாகவும், அதற்குப்பதிலாகப் பாஹுகன் தனக்குத்தெரிந்த அசுவஹ்ருதயத்தைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து பாஹுகனுக்குச் சூதாட்ட ரகஸியத்தைச் சொல்லிக்கொடுத்தான். இதை நளன் கற்றுக் கொண்டதும் அவனிடமிருந்த கலி புருஷன் அங்கேயே நீங்கிப் போனான். உடனே நளன் இரதத்தில் ஏறிக் கொண்டு விதர்ப்ப நகரம் போய்ச் சேர்ந்தான்.

வினு 44.—பாஹுகன் தான் நளன் என்பதைத் தமயந்தி எவ்வாறு பரிசோதித்தறிந்தாள்? பின்பு என்ன நடந்தது?

விடை.—முதலில் ஒரு தாதியை அனுப்புவித்து பாஹுகனைப் பார்த்து அவனோடு, நளன் தன்னைக்காட்டில் விட்டுப்போன விஷயத்தைப்பற்றிப் பேசிவரச்சொன்னாள். பின்பு பாஹுகனிடம் தனது குழந்தைகளை அனுப்பிப் பார்த்தாள். பின்பு பாஹுகன் சமைக்கும் விதத்தைப் பார்த்து வரச் சொன்னாள். கடைசியாக அவன் சமைத்த பதார்த்தங்களின் ருசியையும் பார்த்து பாஹுகன்தான் நளனெனத் தீர்மானித்துக்கொண்டு அவரை ராஜஸபைக்குத் தமயந்தி அழைத்துவரச் சொன்னாள். ஸபையிலே

கார்க்கோடகன் வந்து நளன் ஸ்வரூபத்தை மாற்றிவிட, காட்டில் கட்டியிருந்த பாதிப்புடவையோடு மாத்திரம் நளன் வெளியானன். அன்று நளனும், தமயந்தியும் ஒருவரை ஒருவர் கண்டு ஆனந்தித்தார்கள்.

வினா 45.—இதன் பின்பு நளன் என்ன செய்தான்?

விடை.—நளன் தனது பெண்சாதி குழந்தைகள் தனது பரிவாரங்கள் முதலியவைகளோடு கூடிக் கொண்டு நிஷத புரி சென்று புஷ்கரனை சூதாட்டத்தில் வென்று, இழந்த தனது இராஜ்யத்தை மீட்டுக்கொண்டு ஸுகமாய் வாழ்ந்திருந்தான்.

வினா 46.—இந்த உபாக்யானம் சொல்லி முடிந்தவுடன் பிரஹதசுவர் என்ன செய்தார்?

விடை.—தர்மபுத்திரருடைய வேண்டுகோளின்படி அவருக்கு இந்த ரிஷி சூதாட்டத்தைச் சொல்லிக்கொடுக்க, தர்மபுத்திரர் சூதாட்டத்தில்சகுனியையும் வெல்லும்படியான தேர்ச்சியை அடைந்தார். இதன் பின்பு பிரஹதசுவர் யாத்திரார்த்தம் புறப்பட்டுப் போனர்.

வினா 47.—பிரஹதசுவர் சென்றதும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—பாண்டவர்கள் அர்ஜுனனது பிரிவுக்கு ஆற்றுமையால் மிகக் கஷ்டப்படுங்கால், நாரத மஹாமுனி வந்து புலஸ்தியருக்கும் பீஷ்மருக்கும் முன் காலத்தில் தீர்த்த மஹத்துவங்களைப் பற்றி நடந்த ஸம்வாதத்தைச் சொல்லிப் பாண்டவரைத் தீர்த்த யாத்திரை செய்யச்சொன்னர். பின்பு தௌம்யரும் ஸகலதீர்த்தங்களை வர்ணித்தார். இந்த ஸமயத்தில் லோமசர் பூமிக்கு வந்து பாண்டவரிடம் அர்ஜுனனது செய்தியைச் சொல்லி, இந்திரன்

அவர்களை அர்ஜுனன் வரும் வரையில் தீர்த்த யாத்திரை செய்து புண்ணிய விசேஷங்களை ஸம்பாதிக்கச் சொன்னதாக வெளியிட்டார். இவைகளை யெல்லாம் கேட்டதும் தர்மபுத்திரர் தீர்த்தயாத் திரைக்குப் புறப்பட லோமசரும் தீர்த்த யாத்திரையால் தேவர்கள் அடைந்த பலனையும், அது இல்லாததால் அஸுரர்கள் அடைந்த கேட்டையும் சொல்லி, அதே மாதிரி பாண்டவர்களுக்கு நன்மையும், துர்யோதனதியருக்குக் கேடும் விளையும் என்று பலவாறு தேற்றிக்கொண்டு பாண்டவர்கள் பின்னே தாமும் புறப்பட்டார்.

வினு 48.—இவர்கள் எந்தெந்த முக்கியமான தீர்த்தங்களுக்குச் சென்றார்கள்? அங்கு இருந்த விசேஷங்கள் என்ன?

விடை.—சில தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தபிறகு பாண்டவர்கள் அகஸ்திய ஸம்பந்தமான **பிரம்மஸரஸ்** என்கிற தீர்த்தம் வர, அங்கு லோமசர், அகஸ்தியர் லோபாமுத்திரை என்கிற மிகுந்த அழகிய பெண்ணை ஒரு அரசனிடம் பிறக்கும்படி செய்து, பின்பு தான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டதையும், பின்பு அவளைத் திருப்தி செய்வதற்காக இரண்டு அரசரிடம் சென்றும் பணம் கிடையாதது கண்டு **இல்வலன்** என்கிற அஸுரனிடம் சென்றதையும், அவன் தன் தம்பி வாதாபியை ஆடாக்கிக் கறிசமைக்க அதை அகஸ்திபர் உண்டு வாதாபியை உடனே ஜீரணமாக்கிக் கொன்றதையும விஸ்தாரமாய்ச் சொன்னார். இதன் பின்பு அகஸ்திபரது மகிமையை விஸ்தாரமாய்க் கேட்கவேண்டும் என்று தர்மபுத்திரர் சொன்னார். தேவேந்திரன் விருத்திராஸுரனை ததீசி மஹரிஷி எலும்பால் ஆக்கப்பட்ட வச்சிராயுதத்தால்

கொல்ல, அவனைச் சேர்ந்தவர்கள் கடலுள் ஒளித்துக் கொண்டு இரவில்வந்து ஜனங்களைக் கஷ்டப்படுத்தினதையும், அகஸ்தியரைக்கடலைக் குடிக்கும்படி செய்து தேவர்கள் அஸுரர்களை வென்றதையும், இவ்வாறு அகஸ்தியரால் வற்றிய கடல் ஸகர சக்கிரவர்த்தியின் பிள்ளைகளால் அசுவமேதக்குதிரை தேடிவருங்கால் வெட்டப்பட்டதையும் அதன் முடிவில் அவர்கள் யாவரும் கபில வாஸுதேவரது கோபாக்கினியால் இறந்ததையும், அவர்களைக் கரை ஏற்ற பகீரதனது பிரயத்தினத்தால் கங்கை வந்ததையும் லோமசர் விஸ்தாரமாய்ச் சொன்னார்.

வினா 49.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கு இருந்த விசேஷம் என்ன?

விடை.—அவர்கள் கௌசிகி நதி சென்று **காசியபர்** ஆசிரமத்தைக் காண லோமசர், ரிசியசிருங்கர் காசியபரது வம்சத்தில் பிறந்ததையும், அவரை **லோமபாத** ராஜனது நாட்டிலிருக்கும் வேசியர் வந்து தமது இராஜ்யத்திற்கு அழைத்துப் போனதையும், அவர் நாட்டில் உள்ளே அடிவைத்ததும் மழை தாரை தாரையாய்ப் பொழிந்ததையும், பின்பு லோமபாதர் தனது பெண்ணாகிய **சாந்தையை** அவருக்கு விவாகம் செய்து கொடுத்ததையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்.

வினா 50.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பாண்டவர்கள் மஹேந்திர மலை சென்று அங்கு பரசுராமரது சிஷ்யரைக் கண்டார்கள். அவரிடமிருந்து **பரசுராமர்** கூடிய சீக்கிரத்தில் அங்குள்ள ஸந்தியாஸிகளுக்குத் தரிசனம் கொடுக்கப் போகிறதாக பாண்டவர்கள் தெரிந்து

கொண்டு, அதுவரையில் அங்கிருந்து பரசுராமரைத் தரிசிப்பதாகத் தீர்மானித்தார்கள். இதன் மத்தியில் அகிருதவ்ருணரிட மிருந்து பாண்டவர்கள் பரசுராமரது தகப்பனரான ஜமதக்னி பிறந்த விதத்தையும், அவருக்குப் பரசுராமர் உண்டானதையும், பின்பு தன் தாயாருடைய பாதிவிருத்பத்திற்குக் குறைவுவரத் தன் தகப்பனரது உத்திரவின்படி பரசுராமர் தனது தாயைக் கொன்றதையும், பின்பு தன் தாயைப் பிழைப்பிக்க வேண்டும் என்று கேட்க அவர் தாயை அடைந்ததையும், கடைசியாய் கார்த்தவீரியார்ஜுனனது பிள்ளைகளால் ஜமதக்னி ரிஷி இறந்ததையும், இதனல் பரசுராமர் க்ஷத்திரியர் மேல் கோபங்கொண்டு அவர்கள் வம்சத்தை 21-தடவை வேரறுத்து தனது தகப்பனருக்குப் பிதிர்தர்ப்பணம் செய்ததையும், கடைசியில் பூமியைக் காசியபருக்கு தானம் செய்துவிட்டு மஹேந்திர மலையில் தபஸ்செய்து கொண்டிருப்பதையும் தெரிந்து கொண்டார்கள். இந்தக் கதை முடிந்ததும் பரசுராமர் இவர்கள் கண்முன்தோன்ற அவரைத் தரிசித்துவிட்டு பாண்டவர்கள் வேறு தீர்த்தங்களுக்குப் புறப்பட்டார்கள்.

வினு 51.—இப்படிப் பரசுராமரைத் தரிசித்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—அகஸ்திய தீர்த்தம் முதலிய தீர்த்தங்களுக்குப் போய் கடைசியாய்ப் ப்ரபாஸதீர்த்தம் வந்து சேர்ந்தார்கள். இங்கு கிருஷ்ண பகவான், பலராமர் முதலிய யாதவ குலத்தோர் யாவரும் பாண்டவரை ஸந்தித்து, அவர்களுக்கு வந்த துக்கங்களைத் தமக்கு வந்தவைகளாகப் பாராட்டி, உடனே துர்யோதனதியரைக் கொல்லக்

கிளம்பத் தர்மபுத்திரர் அவர்களை ஸமாதானப்படுத்தி ஊருக்கு அனுப்பிவிட்டார்.

வினா 52.—ப்ரபாஸ தீர்த்தத்தை விட்டுப் பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கிருந்த மஹத்வமென்ன?

விடை.—இதன் பின்பு பாண்டவர்கள் நர்மதா நதி தீரம் சென்றார்கள். இங்கு **சியவனரிஷி** அருகாமையி லுள்ள குளக்கரையில் தபஸு செய்யுங்கால் அவர் மேல் இவ்வாறு புற்று மூடியது என்பதையும், அங்கு வந்து சரியாதி ராஜன் தண்டிறங்க அவனது பெண்ணாகிய ஸுகன்யை விளையாடி வருங்கால் புற்றுள் இருந்த சியவனரது கண்ணை மின்மினி என்றெண்ணி ஒரு குச்சியால் குத்தியதையும், ரிஷியின் சாபத்தால் அரசனது பரிவாரங்களெல்லாருக்கும் வயிறு ஊதியதையும், அரசன் தன் பெண் செய்த அபராதத்தைக் கண்டுபிடித்து ரிஷியின் வேண்டுகோளின்படி ஸுகன்யையை அவருக்குக் கொடுத்ததையும், இதன்பின்பு அசுவநீ தேவதைகள் வந்து இவளது கற்பை பரீக்ஷித்ததையும், கடைசியில் சியவனரும் அசுவநீ தேவதைகளும் அக்குளத்துள் முழுகி ஒரே மாதிரியான யௌவன புருஷராக எழுந்திருக்க, ஸுகன்யை தனது கற்பின் மஹத்வத்தால் சியவனரைக் கண்டுபிடித்ததையும், இந்த உபகாரத்திற்காக சியவனர் அசுவனிதேவதைகளுக்கு யாகங்களில் ஹவிர்ப்பாக முண்டாக்க சரியாதி ராஜாவுக்கு ஒரு புதிய யாகம் செய்து வைத்ததையும், அதைத் தடுக்கவந்த இந்திரனது கையை அசையாதிருக்கும்படி செய்து அசுவனி தேவதைகளுக்குச் சியவனர் ஹவிர்ப்பாகம் கொடுத்ததையும், மதன் என்கிற ஒரு அஸுரனை சிருஷ்டித்து இந்திரனைக் கொல்ல யத்தனிக்க அவன் புதிய ஹவிர்ப்பாகத்தை ஒப்

புக்கொண்டதையும், லோமசர் விஸ்தாரமாய்ச் சொன்னர்.

வினு 53.—பின்பு பாண்டவர்கள் எந்த மஹத்வமுடைய தீர்த்தத்திற்கு போனர்கள் ?

விடை.—மாந்தாதா தானே யாகம் செய்த யமுனு நதிக் கரையை அடைந்தார்கள். மாந்தாதா, பிள்ளையை உண்டாக்கும் சக்தியை உடைய மந்திரித்த தீர்த்தத்தைத் தாக மிகுதியால் குடித்த **யுவனுசுவ** ராஜாவின் இடது விலாப்புற மிருந்து வெளிவந்து, இந்திரனது கட்டை விரலைச் சப்பிக்கொண்டு வளர்ந்தான் என்கிற கதையை இங்கு லோமசர் விஸ்தரித்தார். அவ்விடத்திலேயே ஸோமகர் 100 பிள்ளைகளை அடைவதற்காக, ரித்விஜர் என்ற அவரது புரோஹிதர் அரசனுக்கிருந்த ஜந்து என்ற பிள்ளையை ஹோமம் செய்யக் கடைசியில் அவர் நரகத்தில் கஷ்டப்பட்டார் என்றும், இதைக் கண்ட ஸோமகர் தமது புரோஹிதரோடு கஷ்டப்பட்டு கடைசியில் ஸ்வர்க்கமடைந்தார் என்றும் உள்ள கதையையும் லோமசர் சொன்னர்.

வினு 54.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்கே சென்றார்கள் ? அந்தத் தீர்த்தத்தின் மஹத்வம் என்ன ?

விடை.—யமுனு நதியில், **உசீனரன்** என்று பெயர் பெற்ற சிபிச்சக்கிரவர்த்தி விசேஷயாகம் செய்த தீர்த்தத்திற்கு வந்தார்கள். இந்திரன் வல்லூறு ரூபமாய் புரு ரூபமான அக்கினியைத் துரத்திவர, புரு சிபியின் மடியில் வந்து விழுந்து சரணமடைந்த தென்றும், வல்லூறு வந்து தான் பசியாலிறப்பதாகவும் தனக்குப் புருவே தகுந்த ஆகாரம் என்றும் சொல்லிக் கடைகியில் புருவின் கனத்திற்கு ஸமானமான சிபியது மாம்ஸத்தால் தான் திருப்தி

யடைவதாக வல்லூறு சொல்லியதென்றும், உடனே சிபி தனது மாம்ஸத்தை அறுத்துப்போடவே புறு கனமாகிக்கொண்டு வருவதைக்கண்டு, தானே தராசில் ஏறும் பொழுது இந்திரனும் அக்கினியும் தமது உருவத்தை வெளிப்படுத்தி சிபிக்கு வரமளித்தனர் என்றும் லோமசர் சொல்லி முடித்தார்.

வினா 55.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்தத் தீர்த்தம் சென்றார்கள்? அங்கு லோமசர் என்ன கதையைச் சொன்னார்?

விடை.—பாண்டவர்கள் **ஹரிச்சந்திர தீர்த்தம்** சென்றார்கள். அங்கு லோமசர், ஸத்யத்திற்காக ஹரிச்சந்திரன் பட்ட பாட்டை விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார்.

வினா 56.—ஹரிச்சந்திரன் யார்? இவன் யாரை எவ்வாறு மணம் புரிந்துகொண்டான்? இவனுக்கு எத்தனை பிள்ளைகள்?

விடை.—இவன் ஸூர்யவம்சத்தரசன். இவன் அயோத்திமாநகரில் அரசாண்டுவந்தான். கன்னபுரி யரசனது குமாரத்தி சந்திரமதியினது அழகைக் கேள்வியுற்று, இவன் அவளை மணம்புரிய வேண்டுமென்கிற விருப்பத்துடன் அவளது **ஸ்வயம்வரத்துக்குப்** புறப்பட்டான். அப்பொழுது, 'சிவபெருமானால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட இரகஸிய வஸ்துவை யார் பார்த்து அறிகிறார்களோ அவர்தான் சந்திரமதிக்கு ஏற்பட்ட புருஷனாவார்' என்ற விசேஷ ஸமாசாரத்தையும் அவன் கேள்விப்பட்டான். ஸ்வயம்வர மண்டபத்தில் அரசன் சந்திரமதியைக் கண்டதும் அவள் கழுத்தில் திருமாங்கல்யம் இருப்பதைக் கண்டு முன் கல்யாணமான பெண்ணை மறுபடியும் கல்யாணம் செய்துகொள்வது நியாயமல்லவே என்று ஹரிச்

சந்திரன் வாய்விட்டுச் சொன்னன். அப்பொழுது சந்திர மதி தனது கழுத்திலிருந்த இரகஸியமான தாலி இவன் கண்ணில் பட்டதைக் கண்ணுற்று, இவனே நமக்குத் தகுந்த நாயகனெனத் தீர்மானித்து மணமாலையை ஆகாயத்தி லெறிய, அது ஹரிச்சந்திரன் கழுத்தில் வந்து விழுந்தது. பின்பு இவர்கள் விவாகம் வெகுகோலாஹலமாய் நடந்தேதறியது. இவர்களுக்கு லோஹிதாஸன் என்ற ஒரு அருமைப்பிள்ளை உண்டானன்.

வினு 57.—இவ்வரசனை விசுவாமித்திர மஹரிஷி கஷ்டப் படுத்தக் காரணம் என்ன?

விடை.—இந்திர ஸபையில் வஸிஷ்டர், விசுவாமித்திரர் முதலிய மஹரிஷிகள் கூடி இருக்குங்கால் 'பூமியில் ஸத்யம் முதலிய நற்குணங்களில் சிறந்தவன் யார்?' என்கிற கேள்வி பிறந்தது. அப்பொழுது தனது சிஷ்யனை ஹரிச்சந்திரனே சிறந்தவன் என்றும், அவனுக்கு ஸமான மான்வர் உலகில் வேறொருவர் இல்லை என்றும் வஸிஷ்டர் வெகுவாகப் புகழ்ந்து பேசினர். இதை ஸகியாத விசுவாமித்திரர், முன்னமே வஸிஷ்டரிடமிருந்த துவேஷத்தால், ஹரிச்சந்திரனை வெகுவாகப் பழித்துரைக்க இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. முடிவில் வஸிஷ்டர் 'ஹரிச்சந்திரன் எந்தக் கஷ்டத்திலாவது ஒரு பொய் சொன்னால் நான் எனது பிராம்மண்யத்தை விட்டுப் பறையரது தர்மத்தை மேற்கொள்ளுகிறேன்' என்றும், விசுவாமித்திரர் அப்படி எந்த கஷ்ட திசையிலும் ஒரு பொய்கூடச் சொல்லாமல் ஹரிச்சந்திரன் இருந்தால் எனது தபஸில் பாதி அவனுக்குக் கொடுக்கிறேன் என்றும் இந்திரன்முன்பு கொடிய சபதம் செய்துகொண்டார்கள். உடனே ஹரிச்சந்திரனது உண்மை உரைக்கும்

உறுதியைச் சோதிக்க விசுவாமித்திரர் பூமிக்குப் புறப் பட்டார்.

வினா 58.—முதலில் ஹரிச்சந்திரனைக் கஷ்டப்படுத்த விசு வாமித்திரர் எவ்வாறு தொடங்கினர்?

விடை.—முதலில் சில பிராம்மணர் மூலமாய் தனக்கு யாகத் திற்கு வேண்டிய பொருளுதவி செய்வதாக அரசனிட மிருந்து வாக் குறுதியைப் பெற்றுக்கொண்டு, பின்பு விசு வாமித்திரர் அரசனிடம் சென்று பொருள் வேண்டு மென்று சொல்லி அரசனல்கொடுக்க முடியாததாகிய ஏராளமான பொருள் கேட்க, அவன் அதைக்கொடுக்க யத்தனம் செய்தான். அப்பொழுது தமக்குவேண்டாம் என்று சொல்லிவிட்டு, ரிஷி போய் துஷ்டமிருகங்களை சிருஷ்டித்து இவன் இராஜ்யத்துப் பயிர்களை அழிக்கும் படி ஏவினர். இவ்வாறு அழிக்கவந்த கொடிய பிராணி கள் எல்லாவற்றையும் அரசன் வேட்டையாடிக்கொல்ல, ரிஷி ஒரு மாயப் பன்றியைச் சிருஷ்டித்து அனுப்பினர். அதையும் அரசன்வென்று ஒரு தடாகம் அமைந்த சோலையில்வந்து தண்டிறங்கினன்.

வினா 59.—இந்தப் பன்றியால் என்னவிபரீதம் அரசனுக்கு உண்டானது?

விடை.—இது சென்று ரிஷியினிடம் நடந்த செய்தியைச் சொல்ல, அவருக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. அப்பொழுது அவரிடமிருந்து அழகுள்ள பூலச்சியர் இருவர் உண்டாக, ரிஷி அரசனைக் காமவலையில் சிக்கும் படி செய்து அவனைத்தம்மிடம் இழுத்துவரும்படி அவர்களை ஏவினர். இவர்கள் அரசனிடம் சென்று பாட அவன் "உங்களுக்கு வேண்டுவதென்ன" என்று கேட் டான். அதற்கு அவர்கள் "உம்மைக்கல்யாணம் செய்து

கொள்ள வேண்டுமென்றனர்." அரசன் இதற்கு இசையாதது கண்டு, உடனே இவர்கள் அரசனைப்பழிக்க, அவன் கோபங்கொண்டு இவர்களைதனது வேலைக்காரர் மூலமாகத் துரத்தியடித்தான். இதைக்கேள்வியுற்ற கௌசிகருக்குக் கோபாவேசம் வர, அரசனிடம் வந்து தமது பெண்களை வருத்தப்படுத்தியதற்காக அவன் தலையில் உதைத்தார். உடனே அரசன் மிகுந்த பொறுமையோடு "எனது இராஜ்யத்தைக் கேட்டாலும் கொடுப்பேன், இந்தத் தகாத காரியத்தை நான் செய்யமாட்டேன்" என, கௌசிகர் "கொடுத்துவிடு" என்றார். அரசன் கூசாது தனது இராஜ்யம் முழுவதையும் கொடுத்துவிட்டான்.

விஞ 60.—இவ்வாறு இராஜ்ய மிழந்ததும் இவனுக்கு வேறு என்ன கஷ்டமுண்டாயிற்று? அதைத் தீர்ப்பதற்கு அரசன் என்ன ஏற்பாடு செய்தான்?

விடை.—இப்படி அரசன் இராஜ்யம் முழுவதையும் கொடுத்து விட்டபின்பு, கௌசிகர் "நான் முன் கொடுத்து வைத்திருந்த பொருளை நீ இன்னும் எனக்குக் கொடுக்கவில்லை, அதை எனக்குக்கொடு" என்று கேட்டார். அப்பொழுது அரசன் தான் அவசரத்தில் செய்த தப்பிதத்தைக்கண்டு, அந்தப்பொருளைக் காசிநகரம் சென்றதும் கொடுத்துவிடுவதாக வாக்களித்தான். அதை அவனிடம் இருந்து வாங்குவதற்காக கௌசிகர் **நக்ஷத்திரீகன்** என்றகொடிய விடாமுண்டனை அரசனுடு காசிக்குப் போய் வரும்படி அனுப்பி, ஹரிச்சந்திரனைத் தன்னால் கூடியவரையில் கஷ்டப்படுத்தும்படி அவனுக்கு உத்தரவும் கொடுத்தார். சற்று நாழிகைக்கு முன் பரிவாரங்களோடு இருந்த அரசன் இப்பொழுது பாதசாரியாய் **சந்திரமதி, லோஹிதாஸன்,** நக்ஷத்திரீகன் முதலியவர்

களைக் கூட்டிக்கொண்டு ஒரு எளியவன் போல் காசி நோக்கிப் புறப்பட்டான்.

வினா 61.—காசிப்பட்டணம் போகும் வழியில் ஹரிச்சந்திரனுக்கு என்ன கஷ்டங்கள் உண்டாயின?

விடை.—கௌசிகர், போகும் வழியெல்லாம் முள்ளும் கல்லுமாயிருக்கும்படி செய்ய, நல்ல ஸ்திதியிலிருந்த அரசன் முதலியோர் மிகுந்த வருத்தமடைந்தார்கள். இதுபோதாதென்று வெயில்தாபம் அதிகரிக்கும்படியாகவும், வழியில் மரமே இல்லாதிருக்கும்படியாகவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு இவர்கள் கஷ்டப்படுங்கால் நக்ஷத்திரீகன் இவர்களை மிகக் கஷ்டப்படுத்தி, கடைசியில் தன்னால் நடக்க முடியவில்லை என்று அரசன் தோளில் ஏறிக்கொண்டான். அவன் தோளில் இருந்து படுத்தும் பாட்டைப் பொறுமையோடு ஸஹித்துக்கொண்டு அவனை அரசன் வெகுதூரம் தூக்கிக்கொண்டு சென்றான். இரவில் கௌசிகர் காட்டுத்தீ, புயல்காற்று துஷ்டமிருகம் முதலியவைகளால் அரசனை வருத்தி, அவன் அதிகக் கஷ்டப்படுங்கால் எதிரே தோன்றி "நீ எனக்கு இப்பொருள் கொடுக்கவில்லை என்கிற ஒரு பொய் சொல்லிவிடு. உனக்கு ஸகலதுக்கங்களும் நீங்கிப்போம், இராஜ்யமும் திரும்பி வந்துவிடும்" என்றுசொல்லி அடிக்கடி ஆசை காட்டிப் பார்த்தார். இவைகள் ஒன்றிற்கும் ஹரிச்சந்திரன் இசையவில்லை. இவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக்கொண்டு அரசன் காசிப்பட்டணம் வந்து சேர்ந்தான்.

வினா 62.—காசிப்பட்டணம் வந்ததும், அரசன் எவ்வாறு கௌசிகர் கடனைத் தீர்த்தான்? உடனே வேறு என்ன கஷ்டம் வந்தது?

விடை.—காசிப்பட்டணம் சென்றதும் **காலகண்டன்** என்கிற கொடிய பிராம்மணனுக்குத் தனது சந்திரமதியையும், பிள்ளையையும் விற்று கௌசிகருக்குக் கொடுக்கவேண்டிய பொருளை நக்ஷத்திரீகனிடம் ஒப்புவித்தான். இதைப் பெற்றுக்கொண்டு, "நான் கஷ்டப்பட்டதற்குக் கூலி எங்கே" என்று நக்ஷத்திரீகன் கேட்டான்

விஞ 63.—இவ்வாறு இரக்கமின்றிக் கேட்ட நக்ஷத்திரீகனை எவ்வாறு ஹரிச்சந்திரன் திருப்தி செய்வித்தான்?

விடை.—இந்த ஸங்கதியைக் கேட்டதும் அங்நகரத்தில் மயானம்காக்கும் **வீரபாகு** என்ற பறையனிடம் தான் அடிமைப்பட்டு நக்ஷத்திரீகனுக்கு வேண்டிய பொருளை வாங்கிக்கொடுத்து அவனைக் கௌசிகரிடம் அனுப்பி விட்டான். இதன் பின்பு மஹாராஜனை ஹரிச்சந்திரன் வீரபாகுவுக்காக அன்று முதல்இரவில் சுடலைக் காக்கத் தொடங்கினன்.

விஞ 64.—காலகண்டனிடம் அடிமையான சந்திரமதியின் பாடு என்னமாயிற்று? இது கடைசியில் என்ன விபரீத மாய் முடிந்தது?

விடை.—காலகண்டனும், அவன் பெண்சாதியாகிய காலகண்டியும் ஈவு இரக்கமின்றி சந்திரமதியையும், அவள் பிள்ளையையும் கஷ்டப்படுத்தி வந்தார்கள். இப்படி இருக்கையில் ஒரு நாள் லோகிதாஸனைக் காலகண்டி சில பிள்ளைகளோடு ஸமித்துக் கொய்துவரும்படி அனுப்பினாள். அவன் சென்று காட்டில் ஸமித்து ஒடித்துக் கொண்டிருக்கையில் ஒரு கொடிய ஸர்ப்பம் தீண்டி இறந்தான். இந்த ஸங்கதியைப் பிள்ளைகள் சந்திரமதியிடம் சொல்ல, அவள் தன் பிள்ளையைத் தேடிப்பார்க்கவேண்டுமென்று எவ்வளவோ நயமாய்க் கேட்டும் காலகண்டி

அவளுக்குக் காட்டுக்குப்போக அனுமதி கொடுக்கவில்லை. இரவில் காலகண்டன், காலகண்டி இருவர்களும் நித்திரை செய்யப்போகையில் ஸகல வேலைகளையும் முடித்துவிட்டு அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சந்திரமதி பிள்ளையைக்காணப் பயமின்றி காட்டை நோக்கிப் புறப் பட்டாள்.

வினா 65.—சந்திரமதிபோய்ப் பிள்ளையை எவ்வாறு அடக்கம் செய்யப்பார்த்தாள்? அதற்கு என்ன தடை நேரிட் டது?

விடை.—பிள்ளைகள் சொன்னவிடத்தைக் குறிப்பாய் வைத் துக் கொண்டுபோய் அன்று நடு இராத்திரியில் சந்திர மதி பாம்பு கடித்து இறந்துகிடக்கும் தன் சிறுவனைக் கண்டு மனம் பதைத்து கொஞ்சகாலம் வாய்விட்டலறி னாள். அதன் பின்பு வழியில் அகப்பட்ட சுள்ளிகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு சுடலை அடைந்து ஒரு சிதை உண்டாக்கித் தனது அருமைக் குழந்தையை அதில் வைத்து நெருப்பை மூட்டினாள். உடனே அங்குக் காவல்காத்திருந்த ஹரிச்சந்திரன் ஓடிவந்து 'எங்களுக் குச் சேரவேண்டிய பணமும், ஒரு முழத் துண்டும் எங்கே? அதைக் கொடுக்காது யார் இராத்திரியில் பிணம் எரிப்பது?' என்று அதட்டிக்கொண்டு சிதையைக் கலைத்து குழந்தையின் தேகத்தை வெளியே இழுத்து எறிந்து விட்டான்.

வினா 66.—இந்தத் தடையை நிவர்த்திசெய்யச் சந்திரமதி என்ன ஏற்பாடு செய்தாள்? அதிலிருந்து என்ன விபரீ தம் விளைந்தது?

விடை.—தான் மிகுந்த ஏழை என்றும், தன்னால் பணமும் ஆடையும் கொடுக்க முடியாதென்றும், தனக்கு இனி

மாய்ப் பிணம்சுட அனுமதி யளிக்கவேண்டுமென்றும் சந்திரமதி சுடல்காப்போனே கெஞ்சிக் கேட்டுப்பார்த் தாள். அவன் இவள் கழுத்தில்விளங்கும், பரமசிவனுல் அனுக்கிரகிக்கப்பட்ட தாலி இருப்பதைக் கண்டு, 'உன் கழுத்தில் பிரகாசிக்கும் தாலியை எனக்குக் கொடு. இந் தப் பணம் எனது எஜமானனேச் சேர்ந்தது, ஆகையால் நான் இதை அவசியமாய் வாங்கியே தீரவேண்டும்' என் ருன். சந்திரமதி 'என் கழுத்துத் தாலி ஹரிச்சந்திர ராஜனேத் தவிர வேறெருவரது கண்ணிலும் படமாட் டாதே. இப்பறையன் கண்ணில் ஏன் விழுந்ததென்று வாய்விட்டலற அப்பொழுதுதான் தன்னுடை குழந்தை இறந்தான் என்று அரசனுக்குத் தெரிய வந்தது. அவ னும் வெகு நாழிகை துக்கித்துவிட்டு, சந்திரமதியைக் காலகண்டனிடமிருந்து பணத்தையும் ஒரு முழத் துண்டையும் வாங்கிவர அனுப்பிவிட்டு, தான் குழந்தை யைக் காத்துக்கொண்டிருந்தான். வெகு பரபரப்போடு சந்திரமதி ஓடும்பொழுது திருடர்களால் கொல்லப்பட்ட காசிராஜன் குழந்தையை வழியில் கண்டு தன்குழந்தை என்று எண்ணி வழியிலேயே உட்கார்ந்து துக்கிக்கத் தொடங்கினுள். கொஞ்சநாழிகைக் கெல்லாம் குழந்தை யைத் தேடிக்கொண்டு வந்த அரசன் சேவகர்கள், இங்கு வந்து இவள் தான் பிள்ளையைக் கொன்றவள் என்கிற பெரும்பழி சுமத்தி இவளே அரசனிடம் கொண்டுபோய் விட்டார்கள்.

வினு 67.—அரசன் என்ன தண்டனே இவளுக்கு விதித் தான்? யார் அந்தத் தண்டனேயை நடத்தும்படி நேரிட் டது?

விடை.—அரசனுக்கு இவளைப் பார்த்ததும் இந்தப்பெண் கொலையாளி யல்லவென்று தோன்றியபோதிலும், அடுத்திருந்தவர்களது தூர்ப்போதனைகளால் இவளைக் கொல்லத்துணிந்து, இவளைக் கொல்லும்படி வீரபாகுவினிடம் ஒப்புவித்தான். அவன் இவளை ஹரிச்சந்திரனிடம் ஒப்புவிக்கக் கடைசியாய் ஹரிச்சந்திரனே தனது கபடமற்ற பெண்சாதியைக் கொல்லும்படி நேர்ந்தது.

வினா 68.—ஹரிச்சந்திரனுக்கு என்ன தடை உண்டாயிற்று? அவன் பின்பு என்ன செய்தான்? உடனே என்ன விசித்திரம் நடந்தது?

விடை.—தன் எஜமான் உத்தரவின்படி ஹரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டத் தொடங்குகையில் விசுவாமித்திரர் ஓடிவந்து "இத்தருணத்தில் ஒரு பொய் சொல்லிவிடு, உனக்கு ஸகல ஸுகமும் உண்டாகும்" என்று வேண்ட, அரசன் "என் அருமைப் பெண்சாதியை வெட்டினாலும் வெட்டுவேனே ஒழிய நான் ஒருநாளும் பொய் யுரைக்கமாட்டேன்" என்று மன உறுதியோடு தன் கத்தியை உயர்த்தி சந்திரமதி கழுத்தில் போட்டான். அது உடனே அவள்கழுத்தில் ஒரு பூமாலையாய் விழுந்தது. உடனே ஸகல தேவர்களும் பரமசிவனை முன்னிட்டுக் கொண்டு ஹரிச்சந்திரனுக்குத் தரிசனம் கொடுக்க அம்மயானம் கைலாஸமாகவே மாறியது. லோகிதாஸனும் காசிராஜன் பிள்ளையும் உயிருடன் எழுந்து வந்தார்கள்.

வினா 69.—இதன் பின்பு ஹரிச்சந்திரன் என்ன செய்தான்? அவன் ஸபையில் என்ன நடந்தது?

விடை.—பரமசிவன் உத்திரவின்படி இந்திரனது ஸகாயத்தால் அவன் இராஜ்யத்தில் மறுபடியும் அரசாளத் தொடங்கினான். உடனே விசுவாமித்திரர் வந்து தன் சபதப்

படி ஹரிச்சந்திரனுக்குத் தான் செய்த தவத்திற் பாதியை வெகு ஸந்தோஷத்தோடு தாரைவார்த்துக் கொடுத்தார். இதன் பின்பு அருகிலிருந்த வஸிஷ்டரிடம் சென்று தான்செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் என்று விநயத்துடன் கேட்டுக்கொண்டு விசுவாமித்திரர் தபோவனம் சென்றார்.

விஞ 70.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்த தீர்த்த விசேஷத்திற்குச் சென்றார்கள் ?

விடை.—**உத்தாலகரிஷி** ஆசிரமத்தருகிலிருக்கும் தீர்த்தம் சென்றார்கள். இங்கு, லோமசர் உத்தாலகரது பிள்ளையாகிய சுவேத கேதுவும் அவரது பேரனுகிய அஷ்டாவக்கிரரும் ஜனக ஸபைசென்று அஷ்டாவக்கிரது தகப்பனுரைத் தர்க்கத்தில் வென்று ஸமுத்திரத்துள் அழுத்தி வைத்திருந்த பந்தி என்ற ஜனகஸபை வித்வானைத் தர்க்கத்தில் அஷ்டாவக்கிரர் வென்று தன் தகப்பனுரை அடைந்த விசேஷக் கதையைச் சொன்னர்.

விஞ 71.—இவ்வாறு தீர்த்தயாத்திரையின் கடைசியில் பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள் ?

விடை.—வடக்குத் திக்கிலிருக்கும் **கந்தமாதன** பர்வதத்தை நோக்கிப் பாண்டவர்கள் சென்றார்கள். போகும் வழியில் திரௌபதிக்குக் கஷ்டம் தோன்ற, கடோற்கசனை அவர்கள் வரவழைத்து அவளைத் தூக்கிச்செல்லும்படி ஏவ அவனும் அவ்வாறே செய்தான். மற்றைய பாண்டவர்களைக் கடோற்கசனோடு வந்த இராக்ஷஸர்கள் தூக்கிச்சென்றார்கள். இவர்கள் கந்தமாதன பர்வதம்வந்து சிலநாள் அங்கு வஸித்தார்கள்.

வினா 72.—அங்கு என்ன விசேஷம் நடந்தது? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—அங்கு அர்ஜுனனைக் காணவேண்டும் என்கிற ஆவலோடு பாண்டவர்களும் திரௌபதியும் இருக்கையில் ஒரு இளம் காற்று ஆயிரதளங்கள் அமைந்த ஒரு தாமரைப் புஷ்பத்தைத் திரௌபதிமுன் கொண்டுவந்து போட்டது. அவள் பீமஸேனனிடம் அந்தப் புஷ்பம் வேண்டும் என்கிற தனது இஷ்டத்தைத் தெரிவித்தாள். உடனே பீமன் புஷ்பம் கொண்டு வருவதற்காக அது வந்த திக்கை நோக்கிப் புறப்பட்டான்.

வினா 73.—இவ்வாறு பீமன் புஷ்பம் கொண்டுவரப் போன விடத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—தனது தம்பி பீமன் வருவதையறிந்த கதலீ வனத்திலிருந்த ஹனுமார் அவனுக்கு நன்மைசெய்ய எண்ணி அவன் வரும்வழியை மறித்துக்கொண்டு நின்றார். பீமன் ஹனுமாரிடம் வந்து சிங்கநாதம் செய்ய, அவர் கவனியாதவர்போல் அசிரத்தையாய்க் கண்ணைவிழித்துப் பார்த்து "நீ இதோடு நிற்கவேண்டியது தான். மேலே போக உன்னால் முடியாது. என்னோடு ஸுகமாய்க் கொஞ்சகாலம் இருந்துவிட்டு கீழே திரும்பிப் போ" என்றார். உடனே பீமனுக்கும், ஹனுமாருக்கும் ஒரு தர்க்கம் உண்டாயிற்று.

வினா 74.—இந்தத் தர்க்கம் எப்படி முடிந்தது?

விடை.—இதன் முடிவில் ஹனுமார் தனக்கு எழுந்திருக்க முடியவில்லை என்றும், தன்னை வேண்டுமானால் தாண்டிக் கொண்டு போகலாம் என்றும் சொன்னார். பீமன் இதற்கு இசையவில்லை. அதன்பின்பு அவர் தாம் கிழவர் என்

றும், தமது வாலைத்தூக்கி வேறோரிடத்தில் வைத்து விட்டுப் போகலாம் என்றும் சொல்ல அவன் தனது இடதுகையால் வாலை அசைத்தான். அது அசையாதது கண்டு தனது முழுப் பலத்தோடு தூக்கிப்பார்த்தான். உடனே தனது ஹீனஸ்திதியை அறிந்து "நீர் யார்" என்று மஹா வினயத்தோடும், பக்தியோடும் பீமன் கேட்டான். அதற்கு ஹனுமார் தனது பிறப்பு, தான் இராமருக்காகப் பட்டபாடுகள் முதலியவைகளை ஆதியோடந்தமாகச் சொன்னார். உடனே பீமன் தனது தமயன் காலில் அடியற்ற மரம்போல் விழுந்து மஹா வினயத்தோடு எழுந்து நின்றான்.

வினு 75.—இவ்வாறு நின்ற பீமனுக்கு ஹனுமார் என்ன சொன்னார் ?

விடை.—பீமனுக்கு ஹனுமார் கிருத யுகத்தில் ஜாதி பேதமேஇல்லை என்றும், அவரவர்கள் தமது தர்மத்தைத் தாமே நடத்திவந்தார்கள் என்றும், திரேதா யுகத்தில் தர்மம் கால்வாசி குறைந்தபடியால் யாகாதிக் கிருதுக்கள் ஏற்பட்டன வென்றும், நான்குவர்ணங்கள் ஏற்பட்டு தர்மங்கள் நன்றாய் நடந்து வந்தன வென்றும், துவாபர யுகத்தில் தர்மம் பாதியாய் விட்டது என்றும், வேதங்கள் நான்காய்ப் பிரிந்தன வென்றும், கர்மாக்கள் அதிகரித்தன என்றும் ஸ்மசான வைராக்யாதி ஆபாஸ வைராக்கியங்களால் ஸன்னியாஸ முண்டாயின என்றும், கலியுகத்தில் தர்மத்தில் கால்பாகந்தான் இருக்கும் என்றும், இதனால் ஜனங்களுக்குப் பலம்குறையும் என்றும், ஸகல வியாதிகளும் அவர்களைப் பீடிக்கும்என்றும், கர்மாக்கள் நஷ்டமாகும் என்றும், எடுத்துரைத்தார். பின்பு பீமனுக்கு ஹனுமார் தமது விசுவரூபத்தைக் காட்டினார்.

இதன் பின்பு நான்கு வர்ணத்தாரது தர்மங்களையும் விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லிப் பீமனைக் கட்டிக்கொண்டு அவனது சிரமத்தைத்தீர்த்து வைத்தார். அதன்பின்பு தாம், யுத்த ஸமயங்களில் அர்ஜுனனது கொடியில் வந்திருந்துகொண்டு தமது அட்டஹாஸம் முதலியவைகளால் எதிரி ஸேனையைப் பயப்படுத்துவதாக வாக்களித்தார். கடைசியில் ஹனுமாரிடமிருந்து ஸௌகந்திகத் தாமரை ஓடை இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு பீமன் குபேரனது இருப்பிடம் வந்து சேர்ந்தான்.

வினா 76.—அங்கு வந்து பீமன் என்னசெய்தான்? அங்கு என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—அங்குள்ள புஷ்பங்களைப் பறிக்க யத்தனிக்கையில் அவ்வோடையைக் காத்துவந்த இராக்ஷஸர்களிடம் தனது காரியத்தைப் பீமன் சொல்லிவிட்டு நிர்ப்பயமாய் தாமரைகளைப் பறிக்கத் தொடங்கினன். அப்பொழுது இராக்ஷஸர்களுக்கும் பீமனுக்கும் பிரமாத யுத்தமுண்டாயிற்று. அதில் குபேரனது ஸேவகர் தோல்வியடைந்து எஜமானனிடம் ஸமாசாரத்தைத் தெரிவிக்க அவர் பீமனுக்குப் புஷ்பம் பறிக்க அனுமதி கொடுத்து விட்டார்.

வினா 77.—இங்கு இவ்வாறிருக்க தர்மபுத்திராதிகள் என்ன செய்தார்கள்?

விடை.—தர்மபுத்திரர் இருக்குமிடத்தில் அனேக அபசகுனங்கள் உண்டாகத் திரௌபதியினிடமிருந்து பீமன் போன விடத்தை அறிந்துகொண்டு எல்லோரும் கடோற்கசன் முதலிய இராக்ஷஸரது ஸகாயத்தால் ஸௌகந்திகத் தாமரை ஓடைவந்து, பீமன்செய்த கோரயுத்தத்தைக் கண்டு மகிழ்ந்து குபேரனது உத்திரவின்பேரில்

அங்கேயே இவர்கள் அர்ஜுனன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

விஞ 78.—இங்கிருந்து பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கு என்ன விபரீத முண்டாய் என்னமாய் முடிந்தது?

விடை.—பாண்டவர்கள் **பதரிகாசிரமம்** சென்று வஸிக்குங் கால் ஒருநாள் பீமன் வெளியில் போயிருக்கும் தருணத்தில் தர்மபுத்திரர், நகுலன், ஸகாதேவன், திரௌபதி இவர்களை ஒரு இராக்ஷஸன் தூக்கிக்கொண்டுபோய் விட்டான். இவன் பெயர் **ஜடாஸுரன்**. இவன், வெகு நாளாகப் பிராம்மண உருவத்தோடு பாண்டவர்களது ஆயுதம் முதலியவைகளை ஸமயம்பார்த்துக் கொள்ளை கொள்ள வெண்டும் என்கிற எண்ணத்தோடு, கூடவே வந்து கொண்டிருந்தான். இப்பொழுது ஸமயம் வாய்த்தும் இவ்வாறு செய்யக் கொஞ்ச நாழிகையில் பீமன் வந்து சேர்ந்தான். தனது ஸஹோதரர் முதலியவர்களைக் காணுது பீமன் அட்டஹாஸம் செய்ய இராக்ஷஸன் பயத்தால் தான் எடுத்துப் பொனவர்களை கீழேவிட்டு விட்டான். உடனே பீமனுக்கும் ஜடாஸுரனுக்கும் பெரிய யுத்தம் உண்டாக கடைசியில் ஜடாஸுரன் பீமனல் ஸம்ஹரிக்கப் பட்டான்.

விஞ 79.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்த ஸ்தலங்களுக்குச் சென்றார்கள்? பின்பு என்ன நடந்தது?

விடை.—நரநாராயணர் ஆசிரமத்தைவிட்டு வடக்கேயுள்ள கைலாஸம், மைநாகம் முதலிய மலைகளைப்பார்த்துக் கொண்டு மறுபடியும் கந்தமாதனம் வந்து ஹரிஷ்டஸேனர் என்ற ரிஷியின் ஆசிரமத்தில் வஸித்தார்கள். அங்கு சில சிறந்த புஷ்பங்கள் வர திரௌபதி பீமனை அவை

களைப்போன்ற புஷ்பங்களைக் கொண்டுவரும்படி ஏவினாள். உடனே பீமன் குபேரனது அரண்மனை அருகில் சென்று தனது சங்கத்தை ஊத அங்குக் காவலாய் இருந்த யக்ஷ ராக்ஷஸ கந்தர்வர்கள் சண்டைக்கு வந்தார்கள். அவர்கள் தோல்வியடைந்தவுடன் மணிமான் என்ற குபேரனது ஸ்நேகிதனுகிய இராக்ஷஸாதிபதி யுத்தத்திற்குவர, கோரயுத்தம் ஆரம்பித்தது. இதையறிந்த பாண்டவர்கள் ஆயுதபாணிகளாக திரௌபதியை ஹரிஷ்டஸேனரிடம் விட்டுவிட்டு பீமனுக்கு ஸஹாயமாக வந்தார்கள். இதில் மணிமான் இறந்தான். தர்மபுத்திரர் சண்டையை நிறுத்திவிடும்படி சொல்லிக்கொண்டிருக்கையில் குபேரனுக்கு யுத்தத்தில் அனேகம் பேர் மாண்டு போனது தெரியவர, அதிக கோபத்தோடு தனது இரதத்திலேறிக்கொண்டு வந்தான். பாண்டவர்களைக் கண்டதும் அவனுக்குக் கோபந்தணிய பீமனைப் புகழ்ந்து பேசினான்.

வினா 80.—இவ்வளவு கஷ்டம் வந்தும் தன் கோபத்தைப் பாராட்டாது இருந்ததற்குக் குபேரன் என்ன காரணம் சொன்னான்? கடைசியில் அவன் என்ன சொன்னான்?

விடை.—'ஒருகாலத்தில் குசாவதியில் ஒரு தேவ ஸபை கூடியது. அதற்கு எனது இராக்ஷஸர் முதலிய பரிவாரங்களோடு நான் போனேன். வழியில் யமுனைக்கரையில் அகஸ்தியர் தபஸு செய்துகொண்டிருந்தார். அப்பொழுது என்னுடன் ஆகாயத்தில் வந்துகொண்டிருந்த இராக்ஷஸாதிபதியாகிய மணிமான் என்ற என் ஸ்நேகிதன் அகஸ்தியர்மேல் உமிழ்ந்தான். உடனே அகஸ்தியர் மிகுந்தகோபத்தோடு மணிமானுக்கு மனிதனல் சாவு வரட்டும் என்றும், இவ்வாறு மணிமானது பரிவாரங்கள்

இறப்பதைக்கண்டதும் என் பாபம் நீங்கும் என்றும், மணிமான் முதலிய இராக்ஷஸர்களது ஸந்ததிகளை இச் சாபம் தொடராது என்றும் எடுத்துரைத்தார்' என்று குபேரன் சொன்னான். கடைசியில் பீமன் செய்தது மாத்திரம் அநியாயம் என்றும் அதற்காகத் தர்மபுத்திரர் பீமனைக் கண்டிக்கவேண்டும் என்றும் அவன் சொல்லி முடித்தான்.

வினா 81.—இவ்வாறு பாண்டவர்கள் ஸுகமாய் கந்தமாதன பர்வதத்தில் வஸித்துக்கொண்டிருக்கையில் யார் வந்து சேர்ந்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—மாதலியால் நடத்தப்பட்ட இந்திரனது இரதத்தில் அர்ஜுனன் இந்திரலோகத்திலிருந்து பாண்டவரிடம் வந்து சேர்ந்தான். எல்லாருக்கும் தகுந்தபடி மரியாதைகள் செய்த பின்பு, தான் பரமசிவன் முதலிய தேவர்களிடமிருந்து அஸ்திர விசேஷங்களைப் பெற்றுக்கொண்ட மாதிரியை எடுத்துச் சொன்னான்.

வினா 82.—இவ்வாறு அர்ஜுனன் சொல்லி முடித்ததும் பாண்டவர்களிடம் யார் வந்து என்ன சொன்னார்கள்? அதன்மேல் என்ன நடந்தது?

விடை.—இந்திரன் தனது இரதத்தில் ஏறிக்கொண்டு வந்து தன்லோகத்தில் அர்ஜுனனல் நடத்தப்பட்ட திவ்யகாரியங்களை ஒருவாறு சுறுக்கிச் சொல்லிவிட்டுத் தனது லோகம் சென்றான். பின்பு தர்மபுத்திரர் அர்ஜுனனிடமிருந்து நிவாதகவச காலகேயாளோடு அவன் செய்த யுத்தத்தை விஸ்தாரமாகத் தெரிந்துகொண்டார். அதன் பின்பு அர்ஜுனன் தான் தேவதைகளிடமிருந்து பெற்ற அஸ்திரங்களை எல்லாருக்கும் காண்பித்து, அவைகளை

உபயோகிக்கும் விதம் தேவர்களிடம் இருந்து தான் அறிந்தபடி அவர்களுககு எடுத்துரைத்தான்.

வினா 83.—அர்ஜுனன் இவ்வாறு வந்து சேர்ந்த பின்பு பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—நான்குவருஷம் அர்ஜுனனோடு பாண்டவர்கள் குபேரனது உத்தியான வனங்களில் கிரீடித்துக்கொண்டு வந்தார்கள். இதன் பின்பு பாண்டவர்கள் கந்தமாதன பர்வதத்தைவிட்டுக் கீழே இறங்க யத்தனிக்கையில் லோமசர் அவர்களுக்கு வேண்டிய புத்தி மதிகளைச் சொல்லிவிட்டு ஸ்வர்க்கத்தை நோக்கிச்சென்றனர். வருகிற வழியில் அனேக இடங்களைத் தரிசித்துக்கொண்டு பாண்டவர்கள் யமுனாநதிக் கரையில் உள்ள ஒரு மலையருகில் வந்து சேர்ந்தார்கள்.

வினா 84.—அங்கு என்ன விசேஷம் நடந்தது? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—அங்கு பீமன் காட்டுவழியாய் விளையாடிக்கொண்டு வெகு உல்லாஸமாய் வருகையில் ஒரு பெரிய மலைப்பாம்பைக் கண்டு அதைப் பிடிக்க அருகே போனான். அப்பொழுது அந்தப் பாம்பிற்கு முன்னமே இருந்த அனுக்கிரஹப்படி, இவன் அதன் சுற்றில் அகப்பட்டு உடனே மூர்ச்சைபோய் தனது பலம் முழுவதையும் இழந்துவிட்டான்.

வினா 85.—இந்தப் பாம்பு யார்? இவர் ஏன் பாம்பானார்? யார் இவருக்கு இவ்வாறு அநுக்கிரஹித்தது?

விடை.—இந்தப் பாம்புதான் பாண்டவரது மூதாதைகளுள் ஒருவராகிய நகுஷராஜா. இவர் 100-அசுவமேதயாகம் செய்து இந்திரபதவிக்குத் தகுந்தவராக, இவருக்கு இந்

திரப்பட்டம் கிடைத்தது. அங்கு சென்றும் இவருக்குக் காமம் தீராதிருந்ததால் உடனே இந்திராணியைப் பெண்டாளவேண்டும் என்ற கெட்ட எண்ணம்வர, வழக்கப்படி ஸ்பரிவஷிகள் சிவிகைதூக்க நகுஷன் இந்திராணி வீடு நோக்கிச் சென்றான். போகும்பொழுது அவன் "ஸர்ப்ப ஸர்ப்ப" (வேகமாய்ப் போகட்டும்) என்று ஸ்பரிவஷிகளை மதியாது அதட்ட, அவர்களுள் அகஸ்தியருக்குக் கோபம் வந்தது. அவர் "நீ மலைப்பாம்பாய்ப் போகக்கடவாய்" என்று சபித்தார். அப்பொழுது நகுஷன் அகஸ்தியருக்குத் தயவு வரும்படியாய் நடந்து கொண்டபடியால் அவர் "நீ இந்த மலைப்பாம்புருவில் எதைப் பிடித்த போதிலும் அதற்கு உள்ள பலம் எல்லாம் போய்விடட்டும். கடைசியில் ஒரு மஹானிடமிருந்து ஆத்மஞான விஷயங்களை நீ அறிந்து சாபத்தினின்றும் நீங்குவாய்" என்று அனுக்கிரஹித்தார்.

வினு 86.—இவ்வாறு பலமிழந்து தத்தளிக்கும் பீமனை யார் எவ்வாறு விடுவித்தது? பாம்பின் கதி என்னவாயிற்று?

விடை.—இவ்வாறு கஷ்டப்படும் பீமனை தர்மபுத்திரர் தாம் தேடிக் கொண்டுவரும் வழியில் கண்டார். உடனே பாம்பை நோக்கிப் பீமனை விட்டுவிடவேண்டும் என்று கேட்க அது ஆத்மஞான விஷயமாய் அனேகம் கேள்விகள் கேட்டது. அப்பொழுது தர்மபுத்திரர் எல்லாவற்றிற்கும் தகுந்த விடைகொடுக்க உடனேபாம்பு பீமனை விட்டுவிட்டு நகுஷரூபந்தரித்து ஸ்வர்க்க லோகம் சென்றது.

வினு 87.—நகுஷனாகிய மலைப்பாம்பு தர்மபுத்திரரைக் கேட்ட முக்கிய கேள்விகளும் அதற்கு அவர் கொடுத்த விடைகளும் என்ன? அதன் பின்பு என்ன நடந்தது?

விடை.—பிராம்மணன் யார்? ஸத்யம், தர்மம், தயை, தபஸ் முதலிய நற்குணங்கள் வாய்ந்தவன் சூத்திரனாகிலும், அவனே பிராமணன். நாம் அவசியம் அறியவேண்டிய தென்ன? ஸுகதுக்க ரகிதமாய்தம்மை அடைந்தவருக்குத் துக்கநிவர்த்திசெய்யும் தன்மைவாய்ந்த பரம்பொருளேநாம் அவசியம் அறியவேண்டிய வஸ்து. இதன்பின்பு தர்மபுத்திரர் நகுஷனை அநேக கேள்விகள் கேட்டு தனக்கிருந்த ஸந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டார். இதன் பின்பு பாண்டவர்கள் துவைத வனத்தை அடைந்து அங்கு சிலகாலம் வஸித்துக் கடைசியில் காம்யக வனத்தில் பிரவேசித்தார்கள்.

வினா 88.—அங்கு யார் பாண்டவர்களைப்பார்க்க வந்தது? அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது?

விடை.—கிருஷ்ணபகவான் தமது பட்டஸ்திரீகள், ஸுபத்திரை, அபிமன்யு ஆகிய இவர்களோடு பாண்டவர்களைப் பார்க்க வந்தார். அதன் பின்பு மார்க்கண்டேய மஹாமுனியும் அங்கு தற்செயலாய் வந்து சேர, அவரை அரிய விஷயங்களைப்பற்றிப் பேசும்படியாக யாவரும் வேண்டிக்கொண்டார்கள்.

வினா 89.—மார்க்கண்டேயர் முதலில் எவ்வெவ் விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாய் எடுத்துரைத்தார்?

விடை.—ஸுகம் மனிதனது புத்தியை மயக்கி உண்மை அதில் படாதவண்ணம் செய்யும் தன்மை உடையது, துக்கமோ அவ்வாறின்றி மனிதனது அஞ்ஞானம், துரபிமானம் முதலிய கெட்டகுணங்களை வேரோடு அறுத்து மனத்தைத் சுத்தி செய்யும் தன்மையையுடையது. உள்ளத்துறவுடையவர்களுக்கு அஸாத்தியமானது ஒன்று

மில்லை. வைவஸ்வதமனுவின் சரித்திரம், யுகங்களின் ஸ்வபாவங்கள், யுகப்பிரளயம், அதில் தாம் வடபத்திர சாயியான பகவானது வயிற்றில் 14 லோகங்களையும் கண்ட அற்புதக் காட்சி, அப்பொழுது பகவான் தமது ஸ்வரூபத்தை வெளியிட்ட வைபவம், கலியுக தர்மம், அதன்பின் கிருத யுகம் வரும்விதம், இராஜதர்மம் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றி மார்க்கண்டேய மஹாமுனி விஸ்தாரமாய்த் தர்மபுத்திரருக்கு எடுத்துரைத்தார்.

வினா 90.—இதன் பின்பு எந்த அரிய விஷயத்தைப்பற்றி மார்க்கண்டேயர் எவ்வாறு பேசினார்?

விடை.—உள்ளபடி தானம் செய்தல் எவ்வாறிருக்கவேண்டும் என்பதை நாரதருக்கும் யயாதியின் பேரர்களாகிய **அஷ்டகர்** முதலியவருக்கும் நடந்த ஸம்வாதமூலமாய் நன்கு விளக்கினார்.

வினா 91.—எந்த ஸந்தர்ப்பத்தில் நாரதருக்கும் யயாதி பேரர்களுக்கும் ஸம்வாதம் ஏற்பட்டது?

விடை.—விசுவாமித்திர வம்சத்தில் பிறந்த யயாதி பேரனாகிய அஷ்டகன் ஒரு அசுவமேதயாகம் செய்தான். அதைப் பார்க்கயயாதியின் மற்றப்பேரப்பிள்ளைகளாகிய பிரதர்த்தனன், வஸுமனஸ், சிபி என்பவர்கள் வந்திருந்தார்கள். யாகத்தின் முடிவில் நால்வரும் ஒரு இரதத்தில் ஏறிக்கொண்டு போகையில் எதிரே நாரதர்வரக்கண்டு அவரையும் தமது இரதத்தில் ஏற்றிக்கொண்டார்கள். இக்காலத்தில்தான் நாரதருக்கும், இவர்களுக்கும் ஸம்வாதம் உண்டாயிற்று.

வினா 92.—"நாங்கள் நால்வரும் புண்ணிய விசேஷத்தால் ஸ்வர்க்க மடையப்போகிறோம். யார் எங்களுள் புண்யம்

குறைந்து முதலில் பூமியில் விழப்போகிறார்கள்?" என்று கேட்ட யயாதி பேரனுக்கு நாரதர் என்ன மறுமொழி சொன்னார்? இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—'அஷ்டகன் முதலில் விழுவான். ஏனெனில், இவன் ஒரு காலத்தில் என்னை ஊருக்கு வெளியில் இரதத்தில் ஏற்றிக்கொண்டு போகையில் நான் அனேகவர்ண பேதங்களையுடைய பசுக்களைக் கண்டேன். அப்பொழுது இவன், இவைகள் தான் தானங்கொடுத்த பசுக்கள் என்று பெருமை பாராட்டினான். ஆகையால் இவன்முதலில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுவான்' என்றார். இதனால், நாம் தானம் செய்யுங்கால் அதைப்பற்றிக் கர்வமடையாதிருக்கவேண்டும் என்பது விளங்கும்.

வினா 93.—'மீதி இருக்கும் மூவரில் எவன் முதலில் கீழே விழுவான்' என்ற பேரனுக்கு நாரதர் என்ன மறுமொழி சொன்னார்? இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—''பிரதர்த்தனன் முதலில் விழுவான். ஏனெனில் இவன் வீட்டில் நான் சிலநாள் வஸித்துக்கொண்டிருக்கையில் நாங்களிருவரும் ஒருநாள் இரதத்தில் ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டோம். போகும்வழியில் ஒரு பிராமணன் வந்து அரசனை ஒரு குதிரை வேண்டும் என்று யாசித்தான். அரசன் அரண்மனைக்குப்போனதும் குதிரையைத் தருவதாகச் சொல்லிப்பார்த்தான். பிராமணன் கேளாது தனக்கு அப்பொழுதே ஒரு குதிரை அவசியம் வேண்டுமென்று கேட்க, தேரில் கட்டியிருந்த ஒரு குதிரையை அவிழ்த்துக்கொடுத்தான். இதே மாதிரியாக வேறு மூன்று பிராமணர்கள் வர, அவர்களும் பிடி

வாதமாய் இருந்தது கண்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குதிரையைக்கொடுத்து விட்டு அவன் தான்னே இரதத்தை இழுக்கத் தொடங்கினன். இழுக்கும்பொழுது 'பிராமணர்கள் கேட்கத்தகுந்த வஸ்து இனிஎன்னிடம் ஒன்றுமில்லை' என்று சொல்லி அரசன் தனது அசிரத்தையைக் காட்டினன். இதனால்தான் அவன் இரண்டாவதாகப் பூமியில் விழுவான்" என்று நாரதர் சொன்னர். **எவ்வளவு சிறந்ததானத்தைச் செய்தபோதிலும் கொஞ்சம் அசிரத்தை இருக்குமாயின் அது கெட்டுப்போகும் என்பது இதனால் விளங்கும்.**

வினு 94.—"மீதி இருக்கும் இருவரில் எவன் முதலில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுவான்" என்று கேட்ட பேரனுக்கு நாரதர் என்ன பதில்சொன்னர்? இதனால் நாம் எனன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—'வஸுமனஸ் கீழே விழுவான். ஏனெனில், இவன் ஒருகாலத்தில் யாகம் செய்து ஒரு அழகிய இரதத்தை வரவழைத்தான்; அதை நான் புகழ்ந்து பேசினேன். அப்போழுது இவன், 'இது தங்களுதே' என்றான். இவ்வாறு நான் வேறு மூன்று ஸமயங்களில் அந்த இரதத்தைப் புகழ்ந்து பேசியும், அரசன் 'இது தங்களுதே' என்று வாய்வார்த்தையாய்ச் சொன்னானே ஒழிய இரதத்தை எனக்குக் கொடுக்கவில்லை. இதனால்தான் இவன் மூன்றுவதாக விழுவான்' என்று நாரதர் மறுமொழி சொன்னர். **இதனால், யாசிப்போர் நோக்க மறிந்து செய்யாத தானம் பிரயோஜனமில்லை என்பது விளங்கும்.**

வினு 95.—'நாரதர், சிபி ஆகிய இருவருள் யார் முதலில் கீழே விழுவார்கள்?' என்று கேட்க குபேரனுக்கு நார

தர் என்ன மறுமொழி சொன்னார்? இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—'நான் முதலில் கீழேவிழுவேன், சிபி ஸ்வர்க்கத்தில் நெடுங்காலம் வாழ்வான், ஏனெனில், சிபி வீட்டிற்கு ஒரு நாள் ஒரு பிராம்மணன் போஜனம் வேண்டும் என்று வந்தான். சிபி தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டதற்கு, பிராமணன் 'உன் பிள்ளையைக்கொன்று கறி சமைத்து எனக்குச் சோறிட வேண்டும்' என்று கேட்டான். உடனே சிபி அவ்வாறே செய்து ஸாமான்களை எடுத்துக்கொண்டு அதிதியைத் தேடப்புறப்பட்டான். போகும் வழியில் அந்த அதிதி அரண்மனையுட் புகுந்து தனது ஸொத்துக்கள் எல்லாவற்றையும் கொளுத்தி நாசம் செய்வதாகச் சிபி கேள்விப்பட்டான். இப்படி செய்துகொண்டிருக்கும் பிராமணனிடம் சென்று கோபங்கொள்ளாது சிபி 'சாப்பாடு தயாராய் இருக்கிறது' என்று மஹாவிநயத்துடன் சொல்ல, அவர் 'நீயே அதைப் புஜி' என, அரசன் மனங்கலங்காது அதைப் புஜிக்கத் தொடங்கினன். உடனே பிராம்மணர் அரசனதுகையைப் பிடித்துக்கொண்டு அவனது பொறுமையைக் கொண்டாடி அவனை வெகு மரியாதைசெய்து மறைந்தார். பிரம்மாவே அரசனது குணத்தைப் பரிசோதிக்க இவ்வுருக் கொண்டு வந்தது. இம்மாதிரிச் சிறந்த தானத்தைச் செய்ததால் சிபி நெடுங்காலம் ஸ்வர்க்கத்தில் வாழ்வான்' என்று நாரதர் சொன்னார். **இதனால், தானம் செய்யுங்கால் எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் மனங்கலங்காது பொறுமையோடு தைரியமாய்த் தானம் செய்தல் வேண்டும் என்பது விளங்கும்.**

வினு 96.—இதன் பின்பு என்ன அரிய விஷயத்தைப்பற்றி மார்க்கண்டேயர் என்ன கதை சொன்னார்?

விடை.—'ஒவ்வொருவனும் அவனவனது தர்மத்தை ஒழுங்காய் நடத்தவேண்டியது. ஒருவனது தர்மம் தாழ்ந்த தாய் இருந்ததினால் அவனுக்கு ஒரு தாழ்வுமில்லை. அதை நன்றாய் நடத்தாமல் போனால்தான் அவனுக்குத் தாழ்வு, மேலான தனது தர்மத்தை அரைகுறையாய்ச் செய்பவனிடத் தாழ்ந்த தனது தர்மத்தை ஸரியாய்ச் செய்பவன் சிறந்தவன்' என்கிற விஷயத்தைபற்றி கௌசிக பிரம்மசாரி தர்மவ்யாதனிடம் உபதேசம் பெற்ற கதையைச் சொன்னார்.

வினு 97.—கௌசிகப் பிரம்மசாரி யார்? இவன் ஸ்வபாவம் என்ன? அது எவ்வாறு வெளிவந்தது?

விடை.—அவன் காட்டில் சென்று ஹடயோகாதிகள் பழகிக் கொண்டு தவம்செய்து வந்த ஒரு பிரம்மசாரி; அவன் மகா கோபமும் கர்வமும் நிறைந்தவன். அவன் ஒருநாள் மரத்தடியில் யோகாப்யாஸம் செய்துகொண்டு இருக்கையில் அவனுக்கு நேரே, மேலே இருந்த கொக்கு ஒன்று அவன் தலையில் எச்சமிட்டது. இதனால் அவனுக்கு அடங்காக் கோபம் உண்டாக அந்தக் கொக்கைக் கண்விழித்து அண்ணாந்து பார்த்தான். உடனே கொக்கு சாம்பலாய் விழுந்தது. இதைக்கண்டதும் கௌசிகப் பிரம்மசாரிக்கு அநியாயமாய் ஒரு உயிர்ப் பிராணியைக் கொன்றுவிட்டோமே என்ற துக்கம் ஒரு பக்கமும், தனது தபஸ் இவ்வளவாவது பலித்ததே என்ற கர்வமொருபக்கமும் பாதிக்கத் தொடங்கின.

வினு 98.—இந்தக் கர்வம் எவ்வாறு வெளிவந்து எவ்வாறு பங்க மடைந்தது?

விடை.—இப்படிக் கொக்கை எரித்துவிட்டு மத்தியான ஸமயத்தில் அருகிலிருந்த கிராமத்துள் பிக்ஷைக்குச்சென்று ஒரு வீட்டு வாசலில் 'பவதீ பிக்ஷாந்தேஹி' (தாயே பிக்ஷையை யாசிக்கிறேன்) என்று சொல்லிக்கொண்டு நின்றான். அங்கு வெகு நாழிகை கௌசிகன் காத்திருக்க வேண்டி வந்தது. அதன் பின்பு அந்த வீட்டு எஜமானியம்மாள் இவனுக்குப் பிக்ஷை கொண்டுவந்து போட்டாள். அவளை இவன் வெகு கோபமாய்க் கண்விழித்துப் பார்த்தான். அதற்கு அவள் 'என் கணவனே எனக்குச் சிறந்த தெய்வம். அவர் பசியோடிருப்பதைக் கண்டு அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துவிட்டுப் பின்பு உமக்குப் பிக்ஷை கொண்டு வந்தேன். பிராமணர்களை நான் அவமதிப்பவள் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. என்னை மன்னிக்கவேண்டும்' என்று நயமாய்ச்சொன்னாள். இப்படிச் சொல்லியும் கோபம் தணியாது கௌசிகன் மறுபடியும் அந்தப் பதிவிருதையை வெருட்டி நோக்கினான். அப்பொழுது அவள் 'நான் கொக்கல்ல ஐயா. என்னை ஏன் இப்படி எரிப்பவர்போல் நோக்குகிறீர். எனக்கு உமது யோகமும் தெரியாது, உமது தபஸும் தெரியாது. நான் ஆராதிக்கும் தெய்வம் எனது கணவனே. இந்த ஆராதனையால்தான் நீர் காட்டில் செய்த காரியம் எனக்குத் தெரியவந்தது. கோபம் சண்டாளம். இவ்வாறு இதை நீர் விட்டுவிடாது வைத்து வளர்ப்பீராகில், உமக்கு கேடுண்டாகிக் கடைசியில் உமது தபஸாயாவும் கெட்டுப்போகும்' என்று புத்திமதி கூறினாள்.

வினா 99.—இந்தப் புத்திமதியைக் கேட்டதும் கௌசிகன் ஸ்திதி என்னமாயிற்று? பதிவிருதை என்ன சொன்னாள்?

விடை.—கௌசிகனுக்குத் தனது அறியாமை விளங்கியதும் வெட்க முண்டாகித் தலைகுனிந்துவிட்டான். கேவலம் இந்தப் பதிவிருதைக்கு உள்ள ஞானதிருஷ்டியும், சாந்தமும், தான் தபஸ்வியாயினும் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற எண்ணம் அவன் மனதைப் பாதிக்கத்தொடங்கியது. உடனே மஹா வினயத்துடன் 'அம்மணீ, இன்னும் உனக்கு இந்த விஷயத்தில் தெரிந்தவைகளை நான் கேட்டு நல்லவழிக்கு வரும்படி வெளியிடு' என்று கௌசிகன் கேட்டான். பதிவிருதை 'ஐயா எனக்கு இவ்விஷயங்களைப் பற்றி அதிகமாய்த் தெரியாது. உமக்கு மேல் தெரியவேண்டுமானால் மிதிலா நகரத்தில் தர்மவியாதன் என்ற ஒரு கசாப்புக் காரனிருக்கிறான்; அவனை அடுத்துக்கேட்டால் அவன் உமக்குத் தகுந்தபடி விடைகொடுப்பான்' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றுள்.

வினு 100.—இதன் பின்பு கௌசிகன் என்ன செய்தான்? அங்கு என்ன விசித்திரத்தைக் கண்டான்?

விடை.—பதிவிருதா ஸ்திரீயினது மேன்மையை அறிந்த கௌசிகன் தர்மரகஸியங்களை நன்கு உணர மிதிலா நகரம் தர்ம வியாதனிடம் போவதாக எண்ணித் தனது கர்வம் முதலியவைகளை அடக்கத் தீர்மானித்தான். அப்படியே இவன் மிதிலா நகரம் செல்ல, அங்கு ஒரு கசாப்புக்கடையில் வியாதன் வியாபாரம் செய்துகொண்டிருப்பதை ஜனங்கள் மூலமாய்க் கேட்டறிந்து கௌசிகன் அங்கு போய் ஒதுங்கி ஓரிடத்தில் நின்றான். இதை யறிந்த தர்மவியாதன் தனது இடம்விட்டு எழுந்து பிராம்மணனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்துவிட்டு 'நீர் ஒரு பதிவிருதா ஸ்திரீயிடமிருந்து வருகிறவர். நீர் என்ன எண்ணத்தோடு இங்கு வந்திருக்கிறீர் என்பதும் எனக்குத்

தெரியும்' என்று சொல்லிவிட்டு, அவரை ஒரு ஆஸனத்தில் உட்காருவித்தான். அதன் பின்பு தர்மவியாதன் தன் வேலையைப் பார்க்கப் புகுந்தான். பிராம்மணன் இந்த பாபத்தொழிலைச் செய்யும் வியாதனுக்கு இந்த ஞான திருஷ்டி எவ்வாறு வந்ததென்று வியந்துகொண்டிருந்தான்.

வினா 101.—பின்பு தர்மவியாதன் எவ்வாறு என்ன விஷயங்களைக் கௌசிகனுக்கு உபதேசித்தான்?

விடை.—தன் வேலை முடிந்த பின்னர் பிராம்மணரை தன் வீட்டிற்கு அழைத்துப்போய் கௌசிகனுக்கு, ஸ்வதர்மாசரண ரகஸியம், தர்மம் ஸ்வரூபம் அதிஸூக்ஷமம், ஆகையால் தர்மா தர்ம விவேகம் வருதல் மிகக் கஷ்டம், மாம்ஸ பக்ஷணத்தின் உண்மையான நிலை, கர்மம், மறு பிறப்பு, தேவாஸுரஸம்பத், மனோநிரோதம், திரிகுண ஸ்வரூபம் ஆகிய அரிய விஷயங்களை எடுத்துச் சொன்னன். இதன் பின்பு தனது குலதர்மமாகிய கசாப்புத் தொழிலை ஸரியாய்ப்பார்ப்பதும், தனது தாய் தந்தையரைப் பேணலுமே தான் செய்யும் தபஸ். இதனால்தான் பதிவிரதை சொன்னதை அறியும்படியான சக்தி தனக்குவந்தது என்று வியாதன் சொல்லி தனது கிழவரான தாய்தந்தையரைக் கௌசிகனுக்குக் காட்டினன். இந்த உபதேசத்திற்கே ஆர்ண்ய பர்வத்தில் **வியாதகீதை** என்றுபெயர்.

வினா 102.—இந்த திவ்ய கதையைச் சொன்னதும் மார்க்கண்டேயர் மற்றெந்த திவ்ய கதையைச் சொன்னார்?

விடை.—ஸ்கந்தர் எவ்வாறு பரமசிவனிடம் உண்டாகி அக்கினியில் ஸம்பந்தப்பட்டு கங்கையில் முளைத்திருந்த சரவணத்தில் கிருத்திகா நக்ஷத்திரங்களால் வளர்ந்தார் என்

றும், அவர் எவ்வாறு தேவ்ஸேனுதிபதிபட்டம் பெற்று சூரபத்மா முதலிய அஸுரசிரேஷ்டர்களை ஸம்ஹரித்தார் என்றும், பின்பு அவருக்கு எவ்வாறு விவாஹம் நடந்தது என்றும் சொல்லி மார்க்கண்டேயர் கடைசியில் ஸ்கந்த ஸ்தோத்திரத்தைச் சொல்ல, ஸகலரும் எழுந்து அது முடிந்ததும் தமது ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள்.

வினு 103.—இதன் பின்பு என்ன விசேஷம் நடந்தது? பின்பு பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்?

விடை.—இவ்வாறு புருஷர்கள் எல்லாரும் ஸத்கதா சிரவணம் செய்து வருகையில் மஹாகர்வங்கொண்ட ஸத்யபாமை திரௌபதியை நோக்கி "அம்மா, நீ எவ்வாறு உனது ஐந்து புருஷர்களையும் திருப்திப்படுத்தி அவர்களை வசப்படுத்தியிருக்கிறாய். என்னால் ஆனமட்டும் கிருஷ்ணனை வசப்படுத்தப் பார்த்தும், என்னால் முடியவில்லை. சில ஸமயங்களில் நான் வசப்படுத்திவிட்டேன் என்று எண்ணிக் கர்வப்பட்டால் அதற்குப் பங்கம் உடனே வந்து விடுகிறதே" என்று கேட்டாள். அதற்கு திரௌபதி பதிவிருதா ஸ்திரீகள் எவ்வாறு வீடு முதலியவைகளை மேல்பார்வை பார்த்துக்கொண்டு, கணவன் யாருக்கிட்ட வேலையையும் தாமே செய்துகொண்டு வந்தால் அவர்களுக்குப் புருஷர்கள் அனுகூலமாய் இருப்பார்கள் என்றும், மருந்து, மாயம், ஜகை போட்டுக்கொண்டு அழகுகாட்டி மயக்கல், கோபம் முதலிய அமார்க்கங்களால் கணவனை வசப்படுத்த எண்ணுதல் தீராத் துக்கத்திற்கு இடமாகும் என்றும், விஸ்தாரமாக ஸ்திரீ தர்மத்தை ஸத்யபாமைக்கு எடுத்து வெளியிட்டுத் தனது மனை தர்மத்தை ஸத்யபாமா நன்றாய் அறியும்படி திரௌபதி காட்டினாள். இதன்

பின்பு பாண்டவர்கள் காம்யகவனம் விட்டுத் துவைதவனம் சென்று அங்கு ஒரு ஏரிக்கரையில் வஸிக்கத் தொடங்கினர்கள்.

வினா 104.—இவர்கள் இருக்கும் நிலை திருதிராஷ்டிரனுக்கு எவ்வாறு தெரியவந்தது? அவன் என்னசெய்தான்?

விடை.—பாண்டவர்கள் துவைதவனத்தில் வஸிக்குங்கால் அவர்கள்காற்று, மழை, வெயில் முதலியவைகளில் அடிபட்டு மெலிந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதை அங்கு வந்திருந்த சில பிராம்மணர்கள் அறிந்து தாம்போகும்வழியில் திருதிராஷ்டிரராஜனிடம் தெரிவித்தார்கள். அவன் இதைக்கேட்டு ஸபையில்மிகுந்த வருத்தமடைந்து பிரலாபித்தான்.

வினா 105.—இதைத் துர்யோதனதிபர் கேட்டதும் என்ன செய்தார்கள்?

விடை.—பாண்டவர்களது நிலையைக் கேள்விப்பட்டதும் துர்யோதனதியருக்கு மிகுந்த ஸந்தோஷ முண்டாயிற்று. அவர்களது துக்கத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வர, எல்லாரும் அவ்வாறு செய்யத்தக்க உபாயத்தை ஆலோசித்தார்கள். கடைசியில் தாம் எல்லாரும் தமது பெண்சாதிகளோடு துவைதவனத்திலிருக்கும் ஏரிக்குப்போய் அங்கு ஜலக்கிரீடை முதலியவைகளைச் செய்து விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து ஸுகமாயிருந்தால் அருகிலிருக்கும் பாண்டவர்களுக்குக் கஷ்டமதிகமாகும் என்றும், அங்குபோவதற்கு அங்கு அப்பொழுது மேய்ந்துகொண்டிருக்கும் தமது பசுக்கூட்டங்களை மேல்பார்வையிடப் போகிறோம் என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு புறப்பட்டால் அரசன் சீக்கிரத்தில் அனுமதிகொடுப்பான்

என்றும் தீர்மானித்தார்கள். இதன்படி அரசனிடம் விடைபெற்று யாவரும் துவைத வனம் வந்து ஸுகிக்கத் தொடங்கினர்கள்.

விஞ 106.—கெட்ட எண்ணத்தோடு வனம் வந்த துர்யோதனதியருக்கு யாது காரணத்தால் என்னகேடு விளைந்தது?

விடை.—இவர்கள் பசுக்கூட்டங்களை நன்முய்ப்பார்த்து ஆனந்தித்து விட்டு பாண்டவர்கள் தங்கி இருக்கும் ஏரிக்கரையண்டை வந்து ஜலக்கிரீடை முதலியவைகள் செய்து காலங்கழித்துப் பாண்டவர்களது துக்கத்தை அதிகப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்துடன் வர, அங்கு இவர்களுக்கு முன்னமேயே குபேர பட்டணத்திலிருந்து **சித்திரஸேனன்** என்ற ஒரு கந்தர்வராஜன் ஜலக்கிரீடைக்காக வந்திருந்தான். இதனல் கந்தர்வர்களுக்கும் துர்யோதனதியருக்கும் யுத்தம்நேரிட, அதில் கந்தர்வர்கள் துர்யோதனதியர்களை தோல்வியடையும்படி செய்து அவர்களோடு வந்த பெண்களையும் ஒழுங்கின்றிப் பரபுருஷர்களோடு வரிந்துகட்டி, அவர்கள் எல்லாரையும் சிறை பிடித்துக்கொண்டு போனர்கள்.

விஞ 107.—இவர்களை யார் இந்நிலையிலிருந்து எவ்வாறு காப்பாற்றியது? பின்பு இவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இவ்வாறு முக்கியமானவர்களைச் சித்திரஸேனன் சிறைப்படுத்திக்கொண்டுபோனதும், துர்யோதனதியரது ஸேவகர்கள் அருகிலிருந்த தர்மபுத்திரரிடம்வந்து முறையிட, அவர் கருணைநிதியாகையால் துர்யோதனதியரைச் சிறைமீட்டு அழைத்துவரும்படி பீமார்ச்சுனர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள்முதலில் துர்யோதனதியருக்கு ஸகாயம் செய்ய இசையாததுகண்டு தர்மபுத்திரர்

"நம்முள் சண்டைவருமாயின் நாம் ஐந்துபேரும் 100-பேர்களுமாகப் பிரியலாம், வெளியிலிருந்து ஒருவன் நம்மோடு சண்டைக்கு வருவானுயின் நாம் 105-பேர்களாகத்தான் இருக்கவேண்டும்" என்று புத்திமதி கூறினர். உடனே பீமார்ஜுனர்கள் சீக்கிரத்தில் சென்று கந்தர்வர்களோடு சண்டையிட்டு துர்யோதனுதியரை விடுவித்து தர்மபுத்திரர் முன்பு கொண்டுவந்து நிறுத்தினர்கள். அவர்கள் வெட்கத்தால் தலைகுனிந்தவராய் தர்மபுத்திரரது ஆயவாக்கியங்களைக் கேட்டுக்கொண்டு மிகுந்த துக்கத்தோடும் அவமானத்தோடும் ஹஸ்தினபுரியை அடைந்தனர்.

வினா 108.—ஹஸ்தினபுரம் சென்றதும் துர்யோதனன் நிலை என்னமாய் இருந்தது? அதை எவ்வாறு அவனது ஸ்நேகிதர்கள்மாற்றத் தலைப்பட்டார்கள்?

விடை.—துர்யோதனனுக்கு அடங்காத் துக்கம்வர, அவன் சாப்பிடாது ஆகாரமின்றி இறப்பதாகத் தீர்மானித்து வெகு துக்கத்தோடு ஓர் இடத்தில் உட்கார்ந்தான். உடனே கர்ணன், தான் ஸகல இராஜாக்களையும் ஜயித்து வருவதாகவும், அதன்பின்பு அவனுக்கு இராஜஸூய யாகத்தை நடத்திவைப்பதாகவும் சொல்லி, திக்கு விஜயத்திற்குப் புறப்பட்டு ஸகல இராஜாக்களையும் வென்று, கர்ணன் துர்யோதனனிடம் திரும்பி வந்தான். இந்த வேலைகளாலும் இராஜஸூய யாகம் செய்யப் போகிறோம் என்ற எண்ணத்தாலும் துர்யோதனன் ஒருவாறு தனது துக்கத்தை மறந்திருந்தான்.

வினா 109.—இராஜஸூய யஜ்ஞம் நடந்ததா இல்லையா? வேறு என்ன நடந்தது?

விடை.—துர்யோதனன் பிராமணர்களைக் கூப்பிட்டு யோஜிக்குங் கால் அவர்கள், தகப்பனுராவது, தமையனுராவது இருக்கிற அரசர்கள் அதைச் செய்யக்கூடாதென்று சொல்லி அதற்கு ஸமான மாகிய வைஷ்ணவ யாகம் ஒன்றைச்செய்யும்படி சொல்ல, இந்த யாகம்தான் நடந்தது. இதற்குத் துர்யோதனன் பாண்டவர்களை அழைக்கத் தூதனை அனுப்புவித்திருந்தான். பாண்டவர்கள் தமது பிரதிக்கினையைக் காப்பாற்றுவதற்காக யாகத்திற்கு வரவில்லை. யாகம் நன்றாய் நடந்தது.

வினு 110.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? ஏன் ?

விடை.—துவைத வனத்திலிருந்து பாண்டவர்கள் காம்யக வனத்திற்குப் போனார்கள். இதற்குக் காரணம் பின்வருமாறு : ஒரு நாள் தர்மபுத்திரர் தூங்கிக்கொண்டிருக்கையில் துவைத வனத்து மான்களில் சில அவரது ஸ்வப்னத்தில் வந்து தமது குடும்பம் குறுகிப்போய் விட்டதென்றும், அதற்காகத் தம்மை வேட்டையாடாது வேறு காட்டிற்குப் பாண்டவர்கள் சென்றால் நலம் என்றும் பிரார்த்தித்தன. தர்மபுத்திரர் எழுந்தவுடன் கூடிய சீக்கிரத்தில் காம்யகவனத்திற்குப் போகப் புறப்பட்டார்.

வினு 111.—இங்கு யார் பாண்டவர்களைப் பார்க்க வந்து எந்த அரிய விஷயத்தைப்பற்றி எவ்வாறு பேசினார்கள் ?

விடை.—இராஜ்யமிழந்து 11-வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தர்மபுத்திரரைக் காம்யகவனத்தில் வியாஸர் பார்க்க வந்தார். வந்தவர் தர்மபுத்திரைத் தேற்றுவதற்காகச் சுத்த மனதோடு தானம் செய்தால் சிறந்த

பதவி கிடைக்குமென்ற விஷயத்தில், முத்கலரிஷி உஞ்ச விருத்தியி லிருந்தபோதிலும் அதிதிகளை ஒழுங்காய் சுத்த மனதோடு பூஜித்து வந்தார் என்றும், அவரைத் தூர்வாஸ மஹரிஷி அநேகம்தரம் திடீரென்று அதிதியாக வந்து பரிசோதித்து அவரது சாந்த நிலையை வெளிப் படுத்தினர் என்றும், அவரை ஸ்வர்க்கம் அழைத்துப் போவதற்கு வந்த தேவ தூதரிடமிருந்து ஸ்வர்க்க ஸுகங் கள், அங்கிருந்து புண்யம் குறைந்த காலத்தில் கீழே விழுதல், ஆகிய ஸ்வர்க்கத்தின் நிஜஸ்வரூபத்தை அறிந்து, அவர் அதை வேண்டாது மேலான மோக்ஷ மாகிய பரமபதத்தை அடைந்தார் என்றும், கதையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார். அதன் பின்பு கூடிய சீக்கிரத்தில் இராஜ்யம் வந்து அவர்கள் ஸுகமடைவார் கள் என்று பாண்டவர்களைத் தேற்றிவிட்டு, வியாஸர் தமது இருப்பிடம் சென்றார்.

வினா 112.—இதன் பின்பு என்ன காரியமாக யார் பாண்டவர் களைப் பார்க்கவந்தது? ஏன்?

விடை.—தூர்வாஸ மஹரிஷி தமது சிஷ்யக் கூட்டங்களோடு, திரௌபதி சாப்பிட்டுவிட்டு அக்ஷயபாத்திரத்தைக் கவி ழ்த்த பின்பு, போஜனார்த்தம் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார். இவர் ஒருநாள் துர்யோதனன் வீட்டிற்குப் போக, அங்கு துர்யோதனனைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தினர். துர்யோதனன் பொறுமையோடு அவருக்கு மரியாதை செய்து வர அவர் திருப்தி யடைந்து, துர் யோதனனுக்கு வேண்டிய வரனைக் கொடுப்பதாகச் சொன்னர். துர்யோதனனுக்குப் பாண்டவர்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணமிருந்ததால் முன் காட்டியபடி பாண்டவரிடம் அதிதியாகப் போகவேண்டும் என்று

அவன் கேட்டுக்கொள்ள துர்வாஸ மஹரிஷியும் அவ வாறே செய்தார்.

வினு 113.—பாண்டவர்கள் எவ்வாறு அந்த அகாலவேளையில் இவர்களுக்குப் போஜனமிட்டார்கள்?

விடை.—ரிஷியையும், சிஷ்யக் கூட்டங்களையும் கண்டதும் தர்மபுத்திரர் அவர்களை அருகிலிருந்த நதியில் நீராடி வரும்படி அனுப்பிவிட்டார். திரௌபதிக்கு இவர்களுக் குச் சோறிடும் வகை தோன்றவில்லை. அப்பொழுது கிருஷ்ணபரமாத்மாவாகிய பரம்பொருளைத் தியானித் தாள். உடனே அவர் வெகு பசியோடு வருவதுபோல் அங்குவந்து, தமக்குப் புஜிக்க அன்னம் வேண்டுமென்று திரௌபதியைக் கேட்டார். சோறுண்டாக்கும் வகை யறியாத திரௌபதி மனங்கலங்கித் தான் இருக்கும் கஷ் டஸ்திதியைச் சொல்ல, பகவான் அக்ஷய பாத்திரத்தை உடனே கொண்டு வரச்சொல்லி அதில் ஒரு கீரையும், சோறும் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு அவைகளை எடுத்துக் கொஞ்சம் ஜலத்தோடு சேர்த்து 'ஸர்வாந்தர் யாமியாகிய கடவுள் திருப்தியடையட்டும்' என்று சொல் லிக்கொண்டு குடித்துவிட்டார். உடனே ஆற்றில் நீராடி எழுந்திருக்கும் ரிஷியும், ரிஷி சிஷ்யர்களும், பூர்ண திருப் தியை அடைய, வயிறு நிறம்பி யிருந்ததால் நடந்து கரை யேற முடியாது தத்தளித்தனர்.

வினு 114.—இந்த ரிஷி முதலியவர்களது கதி என்னமாயிற்று பாண்டவர்கள் பின்பு என்ன செய்தார்கள்?

விடை.—இப்படித் திடீரென்று தமது வயிறு நிறம்பி இருப் பதைக் கண்ணுற்ற ரிஷிக்கு 'அநியாயமாய்த் தர்மபுத்தி ரரைப் போஜனம் சித்தம் செய்யும்படி சொல்லி வந்து

விட்டோமே. இவர் நமக்காக எவ்வளவு நஷ்டத்தை யடையப்போகிறார்' என்று வருத்தமுற்று யோஜனை செய்தார். அதன் பின்பு தர்மபுத்திரர் கிருஷ்ண பக்தர் என்ற ஞாபகம்வர, மிகவும் பயந்து தமது சிஷ்யர்களோடு ஓடிப்போய்விட்டார். ஆகையால் கிருஷ்ண பகவானது வேண்டு கோளின்படி இவர்களை அழைக்க வந்த **ஸகாதேவன்**, இவர்களை எங்குதேடியும் காணுது திரும்பி வந்து தர்மபுத்திரரிடம் ஸங்கதியைச் சொல்லிவிட்டான். பாண்டவர்கள் தூர்வாஸரால் கேடுவருமே என்ற பயம் நீங்கி ஸுகமாய் அங்கு வஸித்திருந்தார்கள்.

வினா 115.—இங்கு ஸுகமாய் வஸிக்குங்கால் இவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது ?

விடை.—பாண்டவர்கள் ரிஷிகளது காவலில் திரௌபதியை வைத்துவிட்டு வேட்டையாடி பிராமணர்களுக்கு வேண்டிய ஆகாரங்களைத் தினம் கொண்டுவரப்போவது வழக்கம். அப்படிப் போயிருக்கும் ஒருநாளில் அங்கு பாண்டவர்களது தங்கை **துச்சலை**யின் புருஷனாகிய **ஜயத்ரதன்** என்ற ஸிந்துதேசாதிபதி வர, தனியே யிருக்கும் திரௌபதியைக் கண்டு அவன் மோஹித்தான். தன்னுடையன்றமட்டும் திரௌபதியைத் தன்பெண்சாதியாகும்படி கேட்டுக்கொண்ட போதிலும், அவள் இசையாதது கண்டு, அவளை ஜயத்ரதன் பலவந்தமாய் தனது இரதத்தில் ஏற்றிவைத்துக்கொண்டு தன் இராஜ்யத்தை நோக்கிச் சென்றான். இவனைத் தடுக்க முடியாமல் **தௌம்யர்** முதலிய பிராம்மணர்கள் தத்தளித்தார்கள்.

வினா 116.—திரௌபதியை யார் எவ்வாறு மீட்டுக்கொண்டு வந்தது ? ஜயத்ரதன் கதி என்னமாயிற்று ?

விடை.—பாண்டவர்கள் வந்ததும் தௌம்யர் முதலியவர்கள் நடந்த ஸங்கதியைச் சொல்ல, அவர்கள் உடனே ஜயத்ரதன் போனவழியை நோக்கிப்போனர்கள். அங்கு ஜயத்ரதன் திரௌபதியைக் கொண்டுபோவதைக் கண்டு, அவனைத்தோற்கடிக்க, அவன் ஓடத்தலைப்பட்டான். உடனே அவனைப் பீமன் சென்று பிடித்துவந்து மூர்ச்சை போகும்படி அடித்து, ஐந்து குடுமி வைத்துப் பாண்டவர்களது அடிமையென்று அவனைச் சொல்லும்படி செய்து, தர்மபுத்திரரது காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும்படி செய்தான். தர்மபுத்திரர் சுத்த மனதோடு அவனை உடனே விடுவித்து "இம்மாதிரி காரியம் இனிமேல் செய்யாதே" என்று புத்திமதிகூறி அனுப்பிவிட்டார்.

வினு 117.—அவமானப்பட்ட ஜயத்ரதன் என்ன செய்தான்?

விடை.—விடுபட்டதும் இவன் **கங்கோத்தரை** சென்று பரமசிவனைக்குறித்துத் தபஸ்செய்தான். அவர் பிரத்யக்ஷமாகி "என்னவரம்வேண்டும்" என்று கேட்க, இவன் "எனக்குப் பாண்டவர்களை ஜயிக்கும் சக்தி வேண்டும்" என, பரமசிவன் அந்தச்சக்தி ஒருவருக்கும் வராது என்றும், அவர்கள் பரம்பொருளாகி லோகபாலனுர்த்தம் அநேக திவ்ய அவதாரங்கள் செய்தருளிய கிருஷ்ணபகவானது அருள் பெற்றவர்கள் என்றும் எடுத்துக்காட்டி, "உனக்கு அவர்களை ஒருநாள் தடுக்கும் சக்தி வரட்டும்" என்று அனுக்கிரஹித்துப் போனர். இதைப் பெற்றுக் கொண்டு இக்கொடியவன் தனது இராஜ்யத்தை அடைந்தான்.

வினு 118.—திரௌபதிக்கு வந்த ஆபத்தால் துக்கமடைந்திருந்த பாண்டவர்களை யார் எவ்வாறு தேற்றினர்.

விடை.—அப்பொழுது தர்மபுத்திரரைப் பார்க்க மார்க்கண்டேயமஹாமுனி வர, அவரிடம் தமக்குவந்த ஆபத்தை எடுத்துரைத்து வெகுவாகத் தர்மபுத்திரர் துக்கித்தார். அவர் இராமர் ஸீதையைஇழந்து, பட்டபாடுகள் அடங்கிய இராமாயணக் கதையைச்சுருக்கி சொல்லி, தர்மபுத்திரரது துக்கத்தை மாற்றினர்.

வினா 119.—இராமாயண கதையின் சுருக்க மென்ன ?

விடை.—ஸூர்யவம்சத்தரசராகிய தசரதர்செய்த புத்திரகாமேஷ்டிமூலமாய் பரம்பொருள் இராம, பரத, லக்ஷ்மண, சத்ருக்கினராய் அவதரித்ததும், இராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்திரர் பின்சென்று வில்வித்தை கற்று, தாடகை முதலிய இராக்ஷஸ குலத்தவரைக்கொன்றதும், இராமர் சிவதனுஸை ஒடித்து ஸீதையைக் கல்யாணம் செய்து கொண்டதும், பிதிர்வாக்கிய பரிபாலனத்திற்காக அவர் ஆரண்யம் சென்றதும், ஸஹோதர வாஞ்சையோடுவந்த பரதனுக்கு அவர் தமது பாதுகைகளைக் கொடுத்ததும், பின்பு பஞ்சவடியில் இருக்குங்கால் அவர் மாயமாய் வந்த மானைப்பிடிக்கப் போய்ஸீதையை இழந்து பரிதபித்ததும், குற்றுயிராய் இருந்த ஜடாயுவிடமிருந்து அவர் ஸீதைபோன வழியை அறிந்து ஸுக்ரீவனோடுஸ்நேகம் செய்து வாலியை மறைந்து பாணம் விட்டுக் கொன்றதும், பின்பு ஹனுமார் விஸ்தாரமான ஸமுத்திரத்தைத் தாண்டிஸீதை இராவணனது அசோகவனத்தில் கஷ்டப்படுவதை அறிந்துவந்து ஸ்ரீராமரிடம் சொன்னதும், வானர ஸைன்யோடு இராமர்ஸேதுக்கரை வந்ததும், இராவணன் தம்பியாகிய விபீஷணர் என்கிற பகவத்பக்தர் இராமரைச் சரணமடைந்ததும், நளன் என்ற வானரம் இராமரது ஏற்பாட்டின்பேரில் ஸேதுபந்தம்

செய்ய வானரர்கள் இலங்கை சேர்ந்ததும், அங்கதன் இராவணனிடம் தூதுசென்றதும், இராவண ஸேனை யோடு வானரஸேனைகள் விசித்திரயுத்தம் செய்ததும், லக்ஷ்மணர் இந்திரஜித்தையும், இராமர் இராவணனையும் கொன்ற விசித்திரமும், ஸீதை தனது பரிசுத்த நிலையைப் பலர் அறிய அக்கினிப் பிரவேசம் செய்ததும், யுத்தத்திலிறந்த வானரர்கள் பிழைத்தெழுந்ததும், விபீஷணருக்கு இலங்கையைக் கொடுத்ததும், இராமர் அயோத்திக்குத் திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டதுமே இராமாயண கதையின் சுருக்கம். (இக் கதையின் விஸ்தாரத்தை இராமாயண வினா விடையில் காண்க.)

வினா 120.—இந்த இராமாயணத்தைச் சொல்லிய பின்னர் மார்க்கண்டேயர் எந்த விஷயத்தைக் குறித்து என்ன சொன்னார்?

விடை.—திரௌபதியைப் போன்ற கஷ்டகாலங்களிலும் தப்பிவந்து மேன்மை யடைந்த பதிவிருதைகள் யாரை யாவது கேட்டதுண்டா என்று கேட்ட யுதிஷ்டிரருக்கு மார்க்கண்டேயர், **ஸாவித்திரி** தனது கணவனை **ஸத்ய வானை** யமனிடம் இருந்து மீட்டுவந்து எவ்வாறு மேன்மை யடைந்தாள் என்ற விஷயத்தை விஸ்தார மாய்ச் சொன்னார்.

வினா 121.—இந்த ஸாவித்திரி யார்? இவள் கல்யாண விஷயத்தில் என்ன தடை ஏற்பட்டது? அப்பொழுது இவள் என்ன செய்தாள்?

விடை.—மத்திர ஸேனாதிபதியாகிய **அசுவபதி** என்பவருக்கு இவள் ஸரஸ்வதியின் அனுக்கிரகத்தால் பிறந்த பெண். இவளுக்குப் பருவம் வந்து தகுந்த நாயகன் அகப்படா

தைக்கண்டு, அவளைச்சில பரிவாரங்களோடு நாயகனைத் தேடிவரும்படி அரசன் அனுப்பினன். இவள் போய்த் திரும்பி வந்ததும், அரசன் ஸபைக்கு நாரதர் வந்து ஸாவித்திரிக்குத் தக்க நாயகன் யார் என்று விசாரித்தார். அப்பொழுது ஸாவித்திரி, தான் காட்டில் இராஜ்யமு மிழந்து, கண்களுமிழந்து கஷ்டப்படும் **துயமத்ஸேனர்** என்ற ஓர் அரசனிருக்கிறார் என்றும், அவரது புத்திர ராகிய ஸத்யவானே தனக்குத் தகுந்த நாயகன் என்றும் மறுமொழி கூறினள். நாரதர் "ஸத்யவானுக்குக் காலம் சீக்கிரத்தில் முடியப்போகிறது, ஆகையால் வேறு நாய கனைத் தேடிக்கொள்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ஸாவித்ரி மனம் மாறவில்லை. இதைக்கண்டு நாரதர் ஸாவித்ரியின் மன உறுதியை மெச்சிக்கொண்டு விவாஹத்திற்கு உத்தரவு கொடுத்து மறைந்தார். உடனே கூடிய சீக்கிரத்தில் விவாஹமும் நடந்தேறியது.

வினா 122.—ஸத்யவானுக்கு முடிவுகாலம் எவ்வாறு வந்தது? ஸாவித்ரி இதற்கு என்ன ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தாள்?

விடை.—கல்யாணம் முடிந்ததும் ஸாவித்ரியும் ஸத்யவானும் கொஞ்சகாலம் ஸுகித்து வருகையில் ஸத்யவானது முடிவுநாள் வந்து விட்டது. அதற்குமுன் நான்கு நாள் முதல்கொண்டே, ஸாவித்திரிபட்டினி இருந்து மஹா சுத்தியாய் இருந்தாள். அந்த முடிவு நாள் இரவு தனது விருதத்தை முடிப்பதாக இவள் எல்லாரிடத்தும் சொல் லியிருந்தாள். அன்றுமாலை ஸத்யவான் வழக்கம்போலவே கைக் கோடரியை எடுத்துக்கொண்டு ஸமித்து வெட்டக் காட்டிற்குப் புறப்பட்டான். ஸாவித்ரியும் தனது புரு ஷன் மாமனார் மாமியார் முதலியவர்களிடம் விடை

பெற்று, ஸத்யவானோடு அன்று காட்டிற்குப் போனாள். காட்டிற்சென்று வெகுநாழிகை வேலைசெய்த பின்னர் ஸத்யவானுக்கு ஒரு மாதிரியான தலைவலி வர, அவன் வந்து ஸாவித்ரியின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ஒரு கறுத்த மேனியையும், சிவந்த கண்ணையும், கையில் பாசக் கயிற்றையும் உடையவனுக ஒரு புருஷன் ஸாவித்ரி கண்ணில்பட, அவள் எழுந்து அவனுக்கு வந்தனம் செய்து நின்றாள். வந்தவன், தான் யமன் என்று சொல்லி ஸத்யவானது உயிரைக் கவர்ந்துகொண்டு ஸாவித்ரிக்குத் தேறுதல்சொல்லித் திரும்பிப்போகச் சொல்லிவிட்டு தான் யமபட்டணம் நோக்கிப் புறப்பட்டான்.

வினா 123.—இவ்வாறு தனது கணவனது உயிரைக் கவர்ந்து சென்றயமன் செல்ல ஸாவித்ரி என்ன செய்தாள்? இவள் பிரயத்தனம் எவ்வாறு முடிவு பெற்றது?

விடை.—ஸாவித்திரி யமனை விடாது தொடர்ந்து செல்ல, அவளது பாதிவிருத்தியத்திற்கு மகிழ்ந்து, கணவனது உயிரைத் தவிரவேறு எதையும் கேட்டுக்கொள்ள யமன் அனுமதிகொடுத்தான். உடனே அவள் வரிசையாய் தன் மாமனார் குருட்டுத்தனம் நீங்கி இராஜ்யம் பெறவேண்டும் என்பதுபோன்ற ஸாதாரணமான வரங்களை முதலில் கேட்டாள். யமன் இவைகளைக் கொடுத்தபோதிலும், ஸாவித்ரி அவனைப் பின்னும் தொடர்ந்து சென்று தனது பிதாவுக்கு அனேகம் பிள்ளை உண்டாக வேண்டுமென்று கேட்டாள். தனக்குத் தன் கணவன் அருகிலிருக்கிறவரை கஷ்டம் தோன்றாது என்று சொல்லிக்கொண்டே யமனை விடாது பின் தொடர்ந்து, அவனைத் துதித்து, அரிய

சாஸ்திர விஷயங்களை எடுத்துச்சொல்லி கடைசியில் தனக்கு அனேகம் பிள்ளைகள் உண்டாக வேண்டுமென்றும் ஸாவித்ரி கேட்க, யமன் தான் கொடுக்கும் வரத்தின் ஸ்வரூபத்தை அறியாது கொடுத்துவிட்டான். பின்பு ஸாவித்ரி ஸத்யவானது உயிரை யாஜித்து, அதை யுக்தி பூர்வகமாய்த்தர்க்கித்து யமனிடம் இருந்து பெற்றுக் கொண்டு ஸத்யவான்தேகம் இருக்கும் இடம்வரவே, அவன் உயிர்த்து எழுந்தான். ஸத்யவானைக் கூட்டிக் கொண்டு வெகு மெதுவாய் ஸாவித்ரி தன் ஆசிரமம் வந்து சேர்ந்தாள்.

வினா **124**.—ஆசிரமம் வந்ததும் அவள் அங்கு என்ன விநோதத்தைக் கண்டாள்? எல்லாரும் என்ன செய்தார்கள்?

விடை.—இவள் வந்ததும் மாமனாருக்குக் கண் தெரிவதைக் கண்டாள். அங்குள்ள ரிஷிகள் இந்த விசித்திரங்களுக்கு என்ன காரணம் என்று ஸாவித்ரியைக் கேட்க அவள் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சொன்னாள். இந்த ஸ்திரீ தனது நாயகன், மாமனார், தகப்பனார் ஆகிய இவர்களுக்கு ஏககாலத்தில் செய்த உபகாரத்தைக்கண்டு ஸகல ரிஷிகளும் அவளை வியந்து பேசினர்.

வினா **125**.—இவ்விரு கதைகளையும் சொல்லி முடித்த பின்பு மார்க் கண்டேயர் எவ்வாறு பாண்டவர்களைத் தேற்றினார்?

விடை.—இராமருக்கு ஆபத்து வந்து அது எவ்வாறு மங்களமாய் முடிவுபெற்றதோ, அதுபோலப் பாண்டவர்களுக்கு வந்த ஆபத்து அவர்களுக்கு நன்மையாகவே முடியும் என்றும், திரௌபதியைப் போன்ற பதிவிரதா சிரோமணிகளது மேன்மை (ஸீதையின் மேன்மைபோல்) எந்

காலும் மாறுதிருக்கும் என்றும், அவர்கள் தமது நாயகன் முதலிய தம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஸாவித்ரியைப் போல் நன்மை புரிவார்கள் என்றும் சொல்லிப் பாண்டவர்களை மார்க்கண்டேயர் தேற்றினர்.

வினு 126.—இவ்வாறு காம்யகவனத்தில் வஸிக்கையில் தர்மபுத்திரர் மனதில் என்ன கஷ்டம் உண்டாயிற்று? இதை யார் எவ்வாறு நிவர்த்தி செய்ய ஒப்புக்கொண்டது?

விடை.—கர்ணன் அர்ஜுனனைக் கொன்றுவிடுவானே என்ற பயம் அடிமுதல் தர்மபுத்திரர் மனதில் இருந்தது. இதை யறிந்து இந்திரன் தனது பிள்ளையாகிய அர்ஜுனனைக் காப்பாற்றுவதற்காக கர்ணனிடம், அவனோடு பிறந்த கவசம், கர்ணகுண்டலம் ஆகிய இவைகளை, யாசித்துப் பெற்றுக்கொள்வதாகத் தீர்மானித்தான்.

வினு 127.—இவ்விஷயம் கர்ணனுக்குத் தெரியவந்ததா? எப்படி? கர்ணன் என்ன தீர்மானம் செய்தான்?

விடை.—கர்ணன் தகப்பனாராகிய ஸூர்ய பகவான் பிராமண உருக்கொண்டு கர்ணனுக்கு இந்திரனது தீர்மானத்தைத் தெரிவித்து அவன் உடன்பிறந்து அவனுக்குத் தோல்வி வராதிருக்கும்படி செய்யும் கவச கர்ணகுண்டலங்களை இந்திரனுக்குக் கொடுக்கக்கூடாது என்ற புத்திமதி கூறினர். கொடையில் சிறந்த கர்ணன் இதற்கு ஒப்பவில்லை. உடனே ஸூர்யன் 'நீ இந்திரனிடம் இருந்து சத்ருக்களைக் கொல்லும்படியான ஒரு சக்தி ஆயுதத்தை வாங்கிக் கொண்டு இவைகளைக்கொடு' என்று சொல்லி மறைய, கர்ணன் அவ்வாறு செய்வதாய்த் தீர்மானித்தான்.

வினு 128.—இந்திரன் எவ்வாறு வந்து என்ன செய்தான்?

விடை.—இந்திரன் ஒருகிழப்பிராமணன் உருக்கொண்டு கர்ணனிடம் வந்து கவசம், கர்ணகுண்டலம் ஆகிய இவைகளைத் தனக்குத் தரவேண்டுமென்று கேட்டான். உடனே இவைகளால் தனக்கு உள்ள மேன்மைகளையும், இவைகளைக் கொடுத்துவிட்டால் தனக்கு உண்டாகும் தீங்குகளையும் எடுத்துக் கர்ணன் சொல்லி, இந்திரனைத் தனது தானத்திற்குப் பதில் ஒரு பெரிய விரோதியைக் கொல்லத்தக்க ஒரு ஆயுதம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். இந்திரன் அவ்வாறே ஒருசிறந்த பகைவனைமாத்திரம் கொல்லத்தக்க இந்திரசக்தியைக் கர்ணனுக்குக் கொடுத்துவிட்டு கர்ணனது கவசத்தையும், குண்டலங்களையும் வாங்கிக்கொண்டான். இந்திரனது அனுக்கிரகத்தால் கர்ணன் இவைகளை இழந்தும் முன்போலவே விளங்கினன்.

வினா 129.—முன் சொல்லியபடி திரௌபதிக்கு வந்த கஷ்டம் நிவர்த்தியானதும் பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் காம்யகவனம் விட்டு துவைதவனம் சென்றார்கள். அங்கு ஒரு ரிஷியின் நெருப்புண்டாக்கும் கருவியாகிய அரணீக்கட்டைகள் ஒரு மானின் கொம்புகளில் அகப்பட்டுக் கொள்ள அது அவைகளைக்கொண்டு ஓடிப்போய்விட்டது. ரிஷிவந்து இதைப் பாண்டவர்களிடம் சொல்ல அவர்கள் அந்த மான் போனவழியே வெகுவிரைவாய்ச் சென்றார்கள். மான் சில காலம் கண்ணில் பட்டும் சில காலம் மறைந்தும் இவர்களைக் காட்டில் வெகுதூரம் அலைத்து இழுத்துப்போக, இவர்களுக்குத் தாகம் அதிகரித்துவிட்டது. உடனே நகுலன் ஒரு மரத்தில் ஏறிச் சுற்றுமுற்றும்பார்க்க, தூரத்தில் ஒரு செழிப்பான

சோலையைக் கண்டான்; அங்கு இருக்கும் தண்ணீரைக் கொண்டுவருவதற்காக நகுலன் புறப்பட்டுச் சென்றான்.

வினு 130.—அந்தச் சோலையில் பாண்டவர்களுக்கு என்ன ஆபத்து நேரிட்டது? ஏன்?

விடை.—போன நகுலன் அங்குத் தண்ணீர் இருப்பதைக் கண்டு குடிக்க யத்தனிக்க அக்குளத்தைக் காத்துவரும் கொக்குரூபமான யக்ஷன் ஒருவன் அசரீரிபோல் 'நான் கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்த பதில் சொல்லிய பின்புதான் இந்தக் குளத்து நீரை நீ குடிக்கவாவது வெளியே எடுத்துப்போகவாவது செய்யலாம். அதற்கு முன் நீ யதைத் தொடாதே' என்று சொன்னான். நகுலன் இதைக் கவனியாது தண்ணீரைக் குடிக்க, உடனே கரையிலவந்து இறந்துவிழுந்தான். நகுலன் வராதது கண்டு தர்மபுத்திரர் ஸஹாதேவனை அனுப்ப அவனும் யக்ஷனது சொல்லைக்கவனியாது தண்ணீர் குடித்தமையால் கரையில் இறந்து விழுந்தான். இதுபோலவே அர்ஜுனனும் பீமனும் முறையே அக்குளக்கரைக்குப்போய் இறந்து விழுந்தார்கள்.

வினு 131.—இவ்வாறு போன தம்பிமார் ஒருவரும் திரும்பி வராததுகண்டு யுதிஷ்டிரர் என்ன செய்தார்?

விடை.—இவர் மனங்கலங்கிக் குளக்கரைவர, அங்குத் தமது தம்பிகளிருக்கும் நிலையைக்கண்டார். முதலில் துக்க மேலிட்டதால் கொஞ்சம் பிரலாபித்துவிட்டு, இவர்கள் இறக்கக் காரணம் என்ன இருக்கலாம் என்றும் யோசித்தார். தண்ணீர் காரணமாயிருக்கும் என்று அவருக்குத் தோற்றவில்லை. அவர் உடனே தாமும் இறப்போம் என்று தண்ணீரில் விழுந்தார். அப்பொழுது வழக்கப்படி அசரீரி

வாக்குண்டாகத் தர்மபுத்திரர் கொக்காகிய யக்ஷனைக் கண்டார். அவன் அவரது தம்பிமார் தனது கேள்விக்குப் பதில் சொல்லாது தண்ணீரைக் குடித்ததால்தான் தானே அவர்களைக் கொன்றுவிட்டதாகச் சொன்னன். இதைக்கேட்டதும் தர்மபுத்திரர் யக்ஷனைக் கேள்விகளைக் கேட்கும்படிசொல்ல, அவன் கேட்ட கேள்விகள் எல்லாவற்றிற்கும் மனக்கலக்கமின்றி விடை கொடுத்தார்.

வினா 132.—யக்ஷன் கேட்ட சில கேள்விகளும் அதற்குத் தர்மபுத்திரர் கொடுத்த விடைகளும் எவை ?

யக்ஷன்:—எதனால் ஒருவன் படித்தவனாகிறான் ?

தர்மபுத்திரர்:—வேதங்களைப் படித்தலால்.

ய:—எதனால் ஒருவன் மேன்மையை அடைகிறான் ?

த:—ஸ்ருதியாஸத்தால்.

ய:—எதனால் ஒருவன் புத்திமானாகிறான் ?

த:—பெரியோருக்குப் பணிவிடை செய்தலால்.

ய:—பிராமணர்களுக்கு என்ன கெட்டகுணம் இருக்கும்?

த:—பரந்தை.

ய:—வாயுவைவிட வேகமானது எது ?

த:—மனஸ்.

ய:—இறப்பவர்களுக்குத் தகுந்த ஸ்நேகிதர் யார் ?

த:—அவர்கள் செய்த தர்மமே.

ய:—மதங்களின் முடிவான பயன் என்ன ?

த:—மனோ விசாலம்.

ய:—கீர்த்தியைத் தாங்கி நிற்பவை எவை ?

த:—தானமும் தர்மமும்.

ய:—ஸுகம் எதனுல் உண்டாகும்?

த:—நன்னடக்கையால்.

ய:—சிரேஷ்டமான தனம் யாது?

த:—அறிவு.

ய:—சிரேஷ்டமான ஸுகம் யாது?

த:—கிடைத்தவரையில் திருப்தி யடைவதே.

ய:—சிறந்த தர்மம் எது?

த:—அஹிம்ஸை.

ய:—ஸுகம் கொடுக்கும் நிரோதம் யாது?

த:—மனே நிரோதம்.

ய:—ஒருநாளும் நீங்காத ஸங்கம் யாது?

த:—ஸத்ஸங்கம்.

ய:—எதை விட்டால் நம்மை எல்லாரும் விரும்புவார்கள்?

த:—கர்வத்தை.

ய:—எதை விட்டால் துக்க நிவர்த்தி?

த:—கோபத்தை.

ய:—எதை விட்டால் ஒருவன் தனவானுவான்?

த:—ஆசையை.

ய:—எதை விட்டால் ஸுகமுண்டு?

த:—பணத்தாசையை.

யு:—எதனுல் ஸ்நேகிதர்கள் விரோதிகளாவார்கள்?

த:—பணத்தாசையால்.

ய:—ஒருவன் எதன்படி நடக்கவேண்டும்?

த:—சிஷ்டாசாரப்படி.

ய:—ஸ்யாஸத்தின் லக்ஷணம் என்ன?

த:—ஸ்வதர்மாசரணம்.

ய:—மனோநிரோதத்தின் லக்ஷணம் என்ன?

த:—அகக்கரண புரக்கரணத் தண்டம்.

ய:—திதீக்ஷயின் லக்ஷணம் என்ன?

த:—விரோதிகளிடத்திலும் துவேஷமின்மை.

ய:—வெட்கத்தின் லக்ஷணமென்ன?

த:—கெட்டகாரியத்தை மறுபடியும் செய்யாமை.

ய:—அறிவு என்றால் என்ன?

த:—பரம்பொருளை அறிதல்.

ய:—சாந்தம் என்றால் என்ன?

த:—சித்த ஸமாதானம்.

ய:—தயை என்றால் என்ன?

த:—பிராணிகளுக்கு நன்மை செய்ய எண்ணுதல்.

ய:—கபடமற்றதென்றால் என்ன?

த:—மனம் சலியாதிருத்தல்.

ய:—ஜயிக்க முடியாத விரோதி யார்?

த:—கோபம்.

ய:—ஸ்திரமான வியாதி எது?

த:—பிறர் பொருளை விரும்பல்.

ய:—யார் நேர்மையானவர்கள்? யார் திருடர்கள்?

த:—முறையே, பூத தயை உடையோர்; பிராணிகளை வருத்துவோர்.

ய:—அஜ்ஞானமென்றால் என்ன?

த:—சாஸ்திர ஞானமின்மை.

ய:—சோம்பல் என்றால் என்ன?

த:—சாஸ்திரவிஷயத்தில் மனம் செல்லாமை.

ய:—துக்கம் என்றால் என்ன?

த:—அஜ்ஞானம்.

ய:—பொறுமை என்றால் என்ன?

த:—காமக்ரோதாதிகளை அடக்கல்.

ய:—உண்மையான கர்மானுஷ்டானம் எது?

த:—சித்தசுத்தி.

ய:—பிறப்பு, படிப்பு, நன்னடக்கை, வேதாத்தியயனம் இவைகளுள் எது பிராம்மணனுக்கு முக்கியமானது?

த:—நன்னடக்கை.

ய:—எது ஆச்சரியகரமானது?

த:—உலகில் ஒவ்வொருநாளும் ஜனங்கள் இறந்துபோய்க் கொண்டே இருக்கிறார்கள். உயிரோடிருக்கிறவர் இதைப்பார்த்துக் கொண்டிருந்தும் தாம் மாத்திரம் இறவாது இருக்கவேண்டும் என்றும் எண்ணுகிறார்கள். இதுதான் மிகவும் ஆச்சரியமானது.

ய:—எது மோக்ஷத்திற்கு வழி?

த:—வேதங்கள் பலவாறுப் இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்கள் பேதப்பட்டிருக்கின்றன. மதவிஷய உண்மைகளோ இரகஸிய

மாக இருக்கின்றன. ஆகையால் சிஷ்டாசாரமே மோக்ஷமார்க்கம்.

ய:—எது விசேஷமான சங்கதி?

த:—அக்ஞானந்தகாரம் நிறைந்த உலகமாகிய கொப்பரையில், ஸூர்யன் என்கிற நெருப்பை இராப்பகலாகிய விறகுகளால் மூடடி, மாஸங்கள், ருதுக்களாம் கரண்டிகளால், காலன் என்ற சமயற்காரன் பிராணிகளைச் சமைத்துக்கொண்டே இருக்கிறான். இதுதான் விசேஷமான ஸங்கதி.

வினா 133.—இவ்வாறு தர்மபுத்திரர் யக்ஷனது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னதும், யக்ஷன் என்ன செய்தான்?

விடை.—தர்மபுத்திரர் சொன்ன விடைகளைக்கேட்டு யக்ஷன் மகிழ்ந்து, இறந்த தம்பிகளுள் யாராவது ஒருவனை எழுப்பிக்கொண்டு போகும்படி தர்மபுத்திரருக்கு உத்தரவு கொடுத்தான்.

வினா 134.—தர்மபுத்திரர் யாரை எழுப்பிக்கொள்ள விரும்பினர்? ஏன்? அவர் எப்படித் தமது உறுதியைக் காட்டினர்?

விடை.—நகுலனை அவர் எழுப்பிக்கொள்ள விரும்பினர். இப்படி நகுலனைத்தேடி எடுத்ததற்குக் காரணம் என்ன வென்று யக்ஷன்கேட்க, தர்மபுத்திரர் "என் தகப்பனருக்கு இரண்டு பெண்சாதிகள். அவர்களுள் நான் ஒருத்திக்கு மூத்தபிள்ளை, நகுலன் மற்றைப் பெண்சாதிக்கு மூத்தபிள்ளை. ஆகையால் நகுலனை நான் தர்மப்படி எழுப்பிக்கொள்ள வேண்டியது" என, யக்ஷன், "பீமனையாவது அர்ஜுனனையாவது எழுப்பிக்கொள்ளும்,

அவர்கள் உமக்கு நேரான தம்பிகள், நகுலன் சிற்றம்மையின் பிள்ளை" என்று எவ்வளவோ சொல்லியும், தர்மபுத்திரர் தர்மத்திலிருந்து விலகாது நகுலனையே எழுப்பி விடவேண்டும் என்று உறுதியாய் இருந்தார்.

விஞ 135.—இப்படி தர்மபுத்திரர் உறுதியாய் இருக்க என்ன விசேஷம் நடந்தது ?

விடை.—இவரது உறுதிக்கு யக்ஷன் மெச்சி, அவர் தம்பிமார் நால்வர்களையும் எழுந்து வரும்படி செய்தான். இதன் பின்பு யக்ஷன்தனது உண்மை ரூபமாகிய யமதர்ம ரூபத்தைக் காட்டிப் பாண்டவர்களை ஆசீர்வதித்து அவர்களது வனவாஸம் 12 வருஷங்களும்முடிந்தன என்று சொல்லி, அவர்களுக்கு அக்ஞாதவாஸம் (மறைந்தவாஸம்) செய்யத் தகுந்த இடம் விராடபட்டணம் என்று தெரிவித்து, அவர்கள் எப்படிப்பட்ட வேஷம் தரித்தாலும் ஸரி, அவர்களை இனி ஒரு வருஷம் வரையில் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கட்டும் என்று அனுக்கிரஹித்துவிட்டு யமதர்மன்மறைந்தான்.

---

4. விராட பர்வம்

அங்கையினேமி சங்குவாடண்டோ
டடற்சராசனந் தரித்தருள்வோன்
சங்கையின்மறைக ளாயிரங்களுக்குஞ்
சாற்றுதற்கரிய தத்துவத்தோன்
கங்கையினறலுங் காளியன்முடியுங்
காளிந்திக்கரையு மேகமழும்
பங்கயமலர்க ளிரவுநற்பகலும்
பணிந்துபாடது மவன்புகழே.

வினா 1.—இவ்வாறு யமதர்மராஜன் சொல்லி மறைந்ததும் தர்மபுத்திரர் எவ்வாறு அக்ஞாதவாஸம் செய்வதாக ஒப்புக்கொண்டார்?

விடை.—தாம் பிராம்மண வேஷம் பூண்டு **கங்கபட்டர்** எனப்பெயர் வைத்துக்கொண்டு விராடராஜனிடம் சூதாடி இனிமையான வார்த்தைசொல்லி அவனைச் சந்தோஷப் படுத்துவதாகவும், அவ்வரசன் அதிக சந்தோஷப்பட்டு "நீர் இதற்கு முன்பு எங்கிருந்தீர்" என்று கேட்டால் "நான் யுதிஷ்டிரரது ராஜஸபையில் இருந்தேன். அவருக்கும் எனக்கும் அதிக பேதம் இருப்பதாக எண்ணி ஒருவரும் சரிவர அங்கு நடந்து கொள்ளவில்லை. நாங்கள் இருவரும் அவ்வளவு பிராண ஸ்நேகிதராய் இருந்தோம் என்று சொல்லுவேன்" என, தர்மபுத்திரர் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

வினா 2.—பீமன் எவ்வாறு காலங்கழிப்பதாகச் சொன்னான்?

விடை.—"வல்லபன் என்கிற சமயற்கார வேஷம் பூண்டு, அரசன் பாகசாலையில் வேலைக்கமர்ந்து எனது திறமையை நன்றாய்க்காட்டிப் பாகசாலைக் கதிபதியாவேன். மேலும் எனது தேகபலத்தால் சமையலுக்கு வேண்டிய விறகு முதலியவைகளை நான் சுமந்து வருவேன். காட்டிலுள்ள புலி, கரடி, முதலிய கொடிய மிருகங்களோடும் அரசன் முன்பு சண்டையாடி, அவனைச் சந்தோஷப்படுத்துவேன். மல்லகஜட்டிகளோடு மல்ல யுத்தம் செய்து ஜெயம்பெறுவேன். "நீ முன்பு எங்கு இருந்தாய்" என்று அரசன்கேட்டால் "நான் இத்தொழில்களைச் செய்துகொண்டு யுதிஷ்டிரரிடம் இருந்தேன்" என்று சொல்லுவேன். "என் விஷயத்தில் நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று பீமன் சொன்னான்.

வினா 3.—அர்ஜுனன் எவ்வேஷம் பூண்டு அக்ஞாதவாஸம் செய்வதாகச் சொன்னான்?

விடை.—இந்தச்சமயத்தில் இந்திரலோகத்தில் ஊர்வசி தனக்குக்கொடுத்த சாபம் அர்ஜுனனுக்கு ஞாபகம்வர, "நான் பிரகந்நளை என்கிற பெயரோடு கூடிய ஒரு பேடி உருக்கொண்டு விராடராஜன் அந்தப்புரத்திலுள்ள பெண்களுக்குக் கதை சொல்லுதல், பாட்டுக்கற்பித்தல், நாட்டியங் கற்பித்தல் முதலிய தொழில்களால் அரசனையும், அவன் பெண்சாதி முதலியவர்களையும் திருப்திப்படுத்துவேன். "நீ முன்பு எங்கு இருந்தாய்" என்று யாராவது கேட்டால் "திரௌபதியிடம் வேலைக்காரியாய் இருந்தேன் என்று சொல்லி ஒருவரும் அறியாத வண்ணம் நான் மறைந்து வாஸம் பண்ணுவேன்" என்று அர்ஜுனன் எடுத்துரைத்தான்.

வினா 4.—நகுலன் எப்படி ஒருவரும் அறியாதபடி விராட நகரத்தில் ஒருவருஷம் வாஸம் செய்யப்போகிறதாகச் சொன்னான்?

விடை.—"நான் **தாமக்கிரந்தி** எனப்பெயர் வைத்துக்கொண்டு விராடராஜனது குதிரைகளை நன்றாய்ப் பாதுகாத்துக் கொண்டு ஒருவருஷ காலத்தைத் தள்ளிவருவேன். அப் பொழுது யாராவது என்னைப்பற்றி விசாரித்தால் நான் தர்மபுத்திரரது குதிரைகளை மேற்பார்வை யிட்டுக்கொண் டிருந்தவன் என்று சொல்லி என்னை எவராலும் கண்டு பிடிக்க முடியாதபடி ஜாக்கிரதையாய் ஒருவருஷம் முடி கிறவரையில் இருப்பேன்" என்றான்.

வினா 5.—ஸகாதேவன் எவ்வாறு காலங்கழிக்கப் போகிறதா கச் சொன்னான்?

விடை.—"நான் **தந்திரபாலன்** என்கிற பெயரோடு விராட ராஜனது பசுக்கூட்டங்களை ஒழுங்காய்ப் பாதுகாத்து வருவேன். அப்பொழுது என்னைப்பற்றி யாராவது விசா ரித்தால், நான் தர்மபுத்திரரது கோதனத்தை ரக்ஷித்து வந்த கோபாலத் தலைவன் என்று மறுமொழி சொல்லி என்னை ஒருவரும் அறியாத வண்ணம் ஒரு வருஷத்தை எளிதில் கழிப்பேன்" என்று எடுத்துரைத்தான்.

வினா 6.—திரௌபதி எவ்வாறு தனது உண்மை உருவைக் காட்டாது ஒரு வருஷம் காலங்கழிக்கப் போகிறதாகச் சொன்னாள்?

விடை.—"அந்தப்புரத்தில் பூமுடித்தல், சந்தனம் கரைத்தல், தலைபின்னல் முதலிய தொழிலைச் செய்யும் தாதிப் பெண்ணாக வேஷம்தரித்து, நான் **ஸைரந்திரி** என்னும் பெயர் பூண்டு விராடராஜன் பெண்சாதியாகிய ஸுதே

கிருஷ்ணதேவி இடம் வேலைக்கு அமருவேன். என்னைப் பற்றி அவள் கேள்விகள் கேட்டால், நான் திரௌபதியின் தாதி என்று சொல்லுவேன். இவ்வொரு வருஷம் என் பாதிவிருத்தியத்திற்குப் பங்கம் வாராது இருப்பதற்காக நான் இராஜபத்தினியிடம் எனக்கு பர்த்தாக்கள் ஐந்து கந்தர்வர்கள் என்றும், அவர்கள் எங்கும் உலாவிக் கொண்டிருப்பார்கள் என்றும். என்னைத் துராசையோடு பார்த்தவர்களை உடனே தவறாது கொல்லுவார்கள் என்றும் சொல்லி பயப்படுத்துவித்து, ஸுகமாய் ஒரு வருஷம் ஒருவருக்கும் தெரியாது விராட பட்டணத்தில் வாழ்வேன்" என்று திரௌபதி கூறினாள்.

விஞ 7.—இவ்வாறு பாண்டவர்கள் ஒரு வழியாய்த் தீர்மானித்த பிறகு யார் எவ்வாறு இவர்களுக்குப் புத்திமதி கூறினது ? பின்பு என்ன நடந்தது ?

விடை.—பாண்டவர்களது குருவாகிய தௌம்யர் இராஜ ஸேவை செய்யவேண்டிய விதத்தை நன்றாய் எடுத்துச் சொல்லி, "அகலாது அணுகாது தீக்காய்வார்போல, மன்னரைச் சேர்ந்தொழுகுவார்" என்ற பொருளை, நன்கு விளக்கிக் காட்டினார். அதன் பின்பு தௌம்யர் பாண்டவர்களை விராட நகரத்திற்கு அனுப்பிவிட்டு அவர்களது அக்னிஹோத்ராக்னியை துருபதராஜனது பட்டணத்திற்கு எடுத்துச்சென்றார்.

விஞ 8.—இவ்வாறு தௌம்யர் சென்றதும், விராடநகரப் பிரவேசம் செய்யுமுன் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—தௌம்யர் சென்றதும், பாண்டவர்கள் தமது ஆயுதங்கள் எல்லாவற்றையும் விராட பட்டணத்தின் வெளியில் மயானத்திலிருக்கும் வன்னிமரத்தில் வைத்துக் கட்டி அதன் முன்பு ஒரு பிணத்தையும் கட்டிவிட்டார்

கள். இதனால் ஒருவரும் ஆயுதங்களைத் தொடமாட்டார்கள் என்கிற தைரியம் அவர்களுக்கு வந்து விட்டது. அதன் பின்பு பிறர் அறியாது தங்களை ஒருவரை ஒருவர் விராட பட்டணத்தில் அழைத்துக்கொள்ள முறையே தமக்கு ஜயன், ஜயந்தன், விஜயன், ஜயத்ஸேனன், ஜயத்பாலன் என்ற ரஹஸ்கேதப் பெயர்களையும் அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். இது முடிந்ததும் விராடபட்டணம் புகுமுன் யுதிஷ்டிரர் ஜகத் மாயையாகிய துர்க்காதேவியைத் துதிக்க அவள் பிரத்யக்ஷமாகிப் பாண்டவர்களுக்கு ஜயம் கூடிய சீக்கிரத்தில் வரும் என்று அனுக்கிரகித்து மறைந்தாள்.

வினா 9.—பாண்டவர்கள் விராட நகரத்தில் எவ்வாறு பிரவேசித்தனர்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பாண்டவர்கள், தர்மபுத்திரர் முதல் வரிசையாய்க் கொஞ்ச நாழிகைக்கு ஒவ்வொருவராக விராடநகரத்துள் பிரவேசித்தார்கள். கடைசியாய்த் திரௌபதி விராடநகரத்தில் பிரவேசித்தாள். இவர்களைக் கண்டதும் அரசனும், அவன் மனைவியும் வெகுமரியாதை செய்து அவரவர்கள் மனத்தின்படி அவரவர்களை வேலை செய்து கொண்டு தம்மிடத்தில் இருக்கும்படி உத்தரவு கொடுத்தார்கள். பாண்டவர்கள் தாம் எண்ணியபடி விராடநகரத்தில் ஸுகமாய் வஸிக்கத் தொடங்கினர். ஸைரந்திரியை, அவளுக்குக் கந்தர்வரது காவல் இருக்கிறது என்று உணர்ந்து, அரசன்கூடக் கண்ணெடுத்துப் பார்க்கப் பயந்திருந்தான். திரௌபதி தனது கற்புக்குக் குறைவுவராது அங்கு வாழ்ந்து வந்தாள். பாண்டவர்கள் தத்தமக்குக் கிடைத்தவைகளை மற்றவர்களுக்கும் இரகஸியமாய்க் கொடுத்து ஸுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

வினு10.—இப்படிப் பாண்டவர்கள் வாழ்ந்து வருகையில் விராட பட்டணத்தில் என்ன விசேஷம் நடந்தது? அதில் யாருடைய சக்தி வெளிவந்தது?

விடை.—நான்காவது மாதம் விராடநகரத்துச்சிவன்கோயிலில் உத்ஸவம் வந்தது. அக்காலத்தில் ஜீமூதன் என்கிற மல்லனது அதிகாரத்துக்குட்பட்டு அனேக மல்லர்கள் இராஜஸபைக்கு வந்தார்கள். ஜீமூதனோடு எதிர்த்து மல்ல யுத்தம்பண்ண ஒருவருக்கும் மனம் துணியவில்லை. அப்பொழுது விராடராஜன் வேண்டு கோளின்படி வல்லபன் (பீமன்) என்கிற மடைப்பள்ளி அதிகாரி ஜீமூதனை எதிர்த்தான். வல்லபன் வெகு விசித்திரமான யுத்த வரிசைகளை எல்லாம் ஸபையார் மகிழும்படி காட்டிவிட்டு கடைசியில் ஜீமூதனைக் கொன்றான். இதனால் பீமனது பலம் எல்லாருக்கும் தெரிய வந்தது.

வினு 11.—பீமன் அன்று முதல் என்ன செய்யவேண்டி வந்தது? மற்றையவர்கள் பின்பு என்ன செய்தார்கள்?

விடை.—இவனுக்குப் பலத்தில் நிகர் ஒருவரும் இல்லை என்று அரசன் இவனைக் காட்டிலிருந்து பிடித்துவந்த யானை, புலி, சிங்கம் முதலியவைகளோடு, சண்டை செய்யும்படி ஏவ, பீமன் அவ்வாறே அவைகளோடு விசித்திர யுத்தம் செய்து, அரசனை ஸந்தோஷப் படுத்தினான். இதுபோலவே தம்மால் கூடியவரையில் மற்றையவர்களும் தமது வேலைகளை ஒழுங்காய்ச் செய்து தமது எஜமானர்களைத் திருப்திப்படுத்தினர்கள். இவைகளைப் பார்த்திருந்த திரௌபதிக்கு மிகுந்த துக்கமுண்டாக அதை அவள் வெளியில் காட்டிக்கொள்ளாது பெருமூச்சு மாத்திரம் விட்டுக் கொண்டிருந்தாள்.

வினா 12.—இவ்வாறு பாண்டவர்கள் வாழ்ந்து வருங்கால் அவர்களுக்கு எப்படி கஷ்டம் யாரால் வந்தது?

விடை.—இவ்வாறு பாண்டவர்கள் 10 மாஸம் விராட நகரத்தில் கஷ்டமின்றிக் காலங்கழித்து விட்டார்கள். இந்த ஸமயத்தில் ஸுதேக்ஷணாதேவியின் ஸஹோதரனும், விராடராஜன் ஸைனதி பதியாயும் இருந்த கீசகன் என்ற துராத்மா தற்செயலாய் திரௌபதியைக் கண்டுவிட்டான். உடனே அவனுக்கு அவளிடம் ஆசை உண்டாக அவளருகே சென்று தனது ஆசையை வெளியிட்டான்.

வினா 13.—திரௌபதிக்கு வந்த இந்தக் கஷ்டத்தை யார் எவ்வாறு ஏன் அதிகப்படுத்திவிட்டார்கள்?

விடை.—திரௌபதி தன்னில் இயன்றமட்டும் நயமாயும், பயமாயும் தன் வார்த்தைகளால் கீசகனைத் தடுக்க, அவன் தனது ஸகோதரியான ஸுதேக்ஷணையிடம் சென்று தன் ஆசையைத் தெரிவித்தான். அவள் ஸைரந்திரியின் புருஷர்களாகிய கந்தர்வர்களின் மஹத்வத்தை எடுத்துச்சொல்லிக் கீசகனைத் தனது ஆசையை அடக்கும்படி சொன்னாள். கீசகன் மாறுதலுகண்டு அவனிடம் ஸைரந்திரியைத் தான் தனிமையாய் அனுப்புவதாகச் சொல்லி, ஸகோதர வாஞ்சையால் ஸுதேக்ஷணாதேவி ஸைரந்திரியை அழைத்துக் கீசகன் வீடுசென்று மதுவாங்கிவரும்படி ஏவினாள். அவள் எவ்வளவோ காரணங்களோடு மறுத்துச்சொல்லியும் இராஜபத்தினி கேட்காது பிடிவாதமாய் இருக்க, கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு மதுவாங்கிவரப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கீசகன் வீட்டை நோக்கித் திரௌபதி புறப்பட்டாள். இவ்வாறு ஸுதேக்ஷணாதேவி ஸகோதர வாஞ்

சையால் திரௌபதியின் கஷ்டத்தை அதிகப்படுத்தினாள்.

வினா 14.—மதுவாங்கிவரப்போன திரௌபதியின் கதி என்னமாயிற்று? அங்கு என்னென்ன நடந்தது?

விடை.—கீசகன் வீட்டை நோக்கிப் புறப்பட்ட திரௌபதி, போகும் வழியில் ஸூர்யபகவானைத்துதிக்க அவர் ஒரு இராக்ஷஸனைத் திரௌபதியைக் காபாற்றும்படி ஏவினார். அவன் மறைந்து கொண்டே திரௌபதியின் பின்னே புறப்பட்டான். திரௌபதி கீசகன் வீடுசென்றதும், தான் வந்த காரியத்தைத் தெரிவித்து சீக்கிரம் மதுவைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள். கீசகன் திரௌபதியை நயமாய் முதலில் தன் வசம் செய்யப்பார்த்து முடியாததுகண்டு, அவளது வலதுகையைப் பிடித்தான். அவள் அதைத் தனது கற்பின் பலத்தால் திமிறிக் கொண்டு வெளியே ஓட ஆரம்பிக்கக் கீசகன் அவளது மேல்துணியின் நுனியைப் பிடித்துக்கொண்டான். உடனே தன் கற்பின் மகிமையால் கீசகனைக் திரௌபதி கீழே தள்ளிவிட்டு தனக்கு வந்த ஆபத்தைத் தெரிவித்துக்கொள்ள தர்மபுத்திரர் வீற்றிருக்கும் விராடராஜன் ஸபையை நோக்கி வெகு பதட்டத்தோடு ஓடி வந்தாள். பின்னே வெறி கொண்டு ஓடிவந்த கீசகன் இராஜஸபை வாயிலில் ஸகலரும் பார்த்துக்கொண்டிருக்கையில் திரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுத்து அவளைக் காலால் உதைக்க, அவள் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தாள்.

வினா 15.—இப்படிச்செய்த கீசகனுக்கு என்ன ஆபத்து வந்தது?

விடை.—ஸூர்ய பகவானால் அனுப்பப்பட்ட இராக்ஷஸன் கீசகன் திரும்புகையில் அவனைக் காற்றின் பலத்தைப்

போன்ற பலத்தை வைத்து இடிக்க ஸபையிலிருந்தோர் ஸகலரும் மகிழ்ச்சி அடையும்படி கீசகன் அடியற்ற மரம் போல்விழுந்து மூர்ச்சை போனன். கொஞ்ச நாழிகை யானதும் கீசகன் எழுந்து மிகுந்த வெட்கத்தோடு தனது அரண்மனைக்கு ஓடிப்போனன்.

வினா 16.—மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், திரௌபதி என்ன செய்தாள்? ஸபையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவ்வாறு கீசகன் செய்ததைக் கண்டதும் ஸபையில் அப்பொழுது இருந்த பீமனுக்குக் கோபம் அதிகரிக்க, அவன் அருகிலிருந்த பச்சை மரத்தைப் பார்த்தான். இந்தக் குறிப்பை அறிந்த யுதிஷ்டிரர் பீமனைக் கையமர்த்திவிட்டு 'விறகுக்காக இராஜஸபையிலிருக்கும் பச்சை மரத்தை ஏன் பார்க்கிறாய்? உனக்கு வேண்டுமானால் ஊருக்கு வெளியிலிருக்கும் மரங்களைப் பார்த்துக்கொள்' என்று இரண்டு பொருள்படும்படி சொன்னர். இதன் இரகஸியத்தை அறிந்துகொண்டு பீமன் கோபத்தை அப்பொழுது அடக்கிக்கொண்டான். உடனே திரௌபதி தனக்கு வந்த கேட்டையும் தனது பர்த்தாக்களது வைபவத்தையும், அவர்கள் அப்பொழுது அசட்டையாய் இருப்பதையும், விராடராஜனது ஆண்மையற்ற குணத்தையும்பற்றி வெகுவாக இராஜஸபையில் விஸ்தரிக்கத் தொடங்கினள். இவைகளைக் கண்ட யுதிஷ்டிரர், அதிகமாய்ப் பேசுவது பெண்களுக்கு அழகல்ல என்றும் அவளது பர்த்தாக்கள் ஏதாவது செய்யத்தக்க ஸமயம் இன்னும் வரவில்லை என்றும், ஆதலால் அந்தப்புரம் உடனே அவள் செல்லவேண்டும் என்றும் சொல்ல, திரௌ

பதி தனது பர்த்தாக்களை கொண்டுகொண்டு அந்தப்புரம் சென்றனள்.

விஞ 17.—இதன் பின்பு கீசகன் விஷயத்தில் திரௌபதி என்ன பிரயத்தினம் செய்தாள் ?

விடை.—கீசகனை உயிரோடு வைத்திருந்தால் தனது கற்பிற் குக் கேடுவரும் என்கிற பயம் திரௌபதியின் மனதில் குடிகொண்டது. வெகு நாழிகை யோசனை செய்த பிறகு இக்காரியத்தை முடிக்க வல்லவன் பீமன் என்று அவ ளுக்குத் தீர்மானித்தது. இரவில் ஸகலரும் தூங்கிக் கொண்டிருக்கையில் திரௌபதிமடைப்பள்ளியில் புகுந்து தூங்கிக்கொண்டிருந்த பீமனை எழுப்பித் தனக்கு வந்த கஷ்டங்களையும், அப்பொழுது வந்திருக்கும் கஷ்டத்தை யும் வெகுவாக எடுத்துச் சொன்னள். பீமன் உடனே கீசகனைக் கூடியசீக்கிரத்தில் கொல்லுவதாகத் தீர்மா னித்தான்.

விஞ 18.—கீசகனைக் கொல்லும் விஷயத்தில் பீமன் திரௌ பதிக்கு என்ன உபாயம் சொன்னன் ?

விடை.—திரௌபதி கீசகனது ஆசையைப் பூர்த்தி செய்து வைப்பதாக ஒப்புக்கொண்டு, அதற்குத் தகுந்த இடம் இராஜகுமாரிகள் நாட்டியம் பழகும் ஊருக்கு வெளியில் இருக்கும் நாடகசாலையே என்று சொல்லி, அங்கு கீச கனை இரவில் வரவழைத்தால், அப்பொழுது தான் திரௌ பதிக்கு பதிலாக நாடகசாலையில் இருந்து வரும் கீசகனை அன்றிரவே கொல்லுவதாகத் திரௌபதிக்குப் பீமன் தனது எண்ணத்தை வெளியிட்டான். திரௌபதியும் அப்படியே செய்வதாக ஒப்புக்கெண்டாள்.

விஞ 19.—திரௌபதி பின்பு என்ன செய்தாள் ?

விடை.—பீமன் சொல்லியவாறே திரௌபதி கீசகனைத் தன் வசம் செய்ய, அவன் அன்றிரவே ஊருக்கு வெளியிலிருக்கும் நாடகசாலையண்டை வருவதாகச் சொல்லிப் போனான். நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் திரௌபதி பீமனிடம் சொல்ல, அவன் அன்றிரவு திரௌபதியையும் கூட அழைத்துக்கொண்டு நாடகசாலை வந்து திரௌபதியை முன் கதவின் ஓரத்தில் நிறுத்திவிட்டு, தான் அங்கு போட்டிருக்கும் கட்டிலில் படுத்துக்கொண்டு கீசகனது வரவை எதிர்பார்த்திருந்தான்.

வினா 20.—கீசகன் அங்கு எவ்வாறு வந்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை.—இரவு எப்பொழுது வரப்போகிறதென்று எதிர் பார்த்திருந்த கீசகன், மிகுந்த ஆவலோடு நாடகசாலை வந்து அங்கு இருட்டாயிருப்பதுகண்டு மெதுவாய் கட்டிலருகில்சென்று திரௌபதியை அழைத்தான். உடனே பீமன் திரௌபதியினது குரலை வகித்து பதில்கொடுக்க, கீசகனுக்கு ஆசை அதிகரித்தது. உடனே கீசகன், படுத்திருக்கும் பீமனது கையை மிகுந்த ஆவலோடு பிடிக்க அது மிகக்கடினமாய் இருப்பதைக்கண்டு திகைத்தான். இது தான் ஸமயம் என்று பீமன் கட்டிலைவிட்டெழுந்து கீசகனோடு யுத்தம் செய்யத்தொடங்கினான். இருவரும் வெளியில் சப்தம் கேட்காது சண்டையிடக் கடைசியில் பீமன் கீசகனைக் கொன்றான். உடனே அவனது தலையையும் கைகால்களையும், முறித்து அவனது வயிற்றில் அடைத்து அவனது தேகத்தை ஒரு பிண்டமாக்கிச் சாலையிலிருந்த ஒருவிளக்கைக் கொண்டுவந்து பீமன் திரௌபதிக்குக் கீசகனது நிலையைக் காட்டினான்.

வினா 21.—இவ்வாறு கீசகன் இறந்ததும் என்ன நடந்தது?

விடை.—பீமன் திரௌபதியை இவ்வாறு திருப்திப்படுத்தி விட்டு தன் மடைப்பள்ளிக்குச் சென்றான். திரௌபதி அருகிலிருந்த காவலாளர்களை அழைத்துத் தனது கற்பைக் கெடுக்க வந்த கீசகன் தனது பர்த்தாக்களான கந்தர்வர்களால் பட்டபாட்டைக் காண்பித்தாள். அவர்களும் ஸைரந்திரி சொல்லுவது உண்மை என்று நம்பினர்கள். இந்த ஸங்கதியை உடனே உபகீசகர்கள் என்ற கீசகன் தம்பிமார்கள் கேள்விப்பட்டு நாடகசாலை வந்து தமது தமயன் நிலையைக்கண்டு பரிதபித்தனர்.

வினு 22.—இவர்கள் வந்ததும் அருகே இருந்த திரௌபதிக்கு என்ன கஷ்டம் வந்தது?

விடை.—உபகீசகர்கள், அருகே ஒரு தூணில் சாய்ந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த திரௌபதியைக் கண்ட உடனே அவர்களுக்கு அவளை அவமானப்படுத்த வேண்டுமென்று தோன்றிற்று. விராட ராஜன் பலமற்ற அரசனுகையால் அவனிட மிருந்து ஸைரந்திரியையும், கீசகனது தேகத்தோடு கட்டி எரித்து விட அனுமதியைப் பெற்றுக்கொண்டு வந்து, உபகீசகர்கள் ஸைரந்திரியின் தலைமயிரை இழுத்து கீசகனது பாடைக் கொம்பில் கட்டி அவளையும் மயானத்திற்கு இழுத்துச் சென்றனர்.

வினு 23.—இந்தக் கஷ்டம் திரௌபதிக்கு எவ்வாறு நீங்கியது?

விடை.—மயானத்திற்குப்போகும் வழியில் திரௌபதி "ஏ ஜயா, ஜயந்தா, விஜயா, ஜயத்ஸேனு, ஜயத்பாலா! என்னை இத்தருணத்தில் கைவிட்டுவிடக்கூடாது" என்று கந்தர்வர்களை அழைப்பதுபோலப் பாண்டவர்களை அவர்களது ஸங்கேதப் பெயர்களைச் சொல்லி அழைத்தாள்.

இதை மடைப்பள்ளியில் இருக்கும் பீமன்கேட்டதும் அவன் தனது உருவை ஒருவாறு மாற்றிக்கொண்டு தேகந்தெரியாது எழுந்து விரைவில் கோட்டை மதில் முதலிய தடைகளைத்தாண்டிக் குதித்து சீக்கிரத்தில் மயானம் வந்தான். அவன் வரும்பொழுது வழியிலிருந்த ஒரு பனைமரத்தைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு விரைவாய் வருவதைக் கண்ட உபகீசகர்கள் பயந்து ஸைரந்திரியை விட்டுவிட்டு நாலாபக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டனர். பீமன், உபகீசகர்கள் 105 பேர்களில் ஒருவரையும் ஊருக்குள் போகவிடாமல் தனது பனைமரத்தால் ஒங்கி அடித்து யமபுரம் அனுப்பி, திரௌபதியைத் தேற்றி அவளை அந்தப்புரம்போகச் சொல்லிவிட்டுத் தான் மடைப்பள்ளியை அடைந்தான்.

வினா 24.—இவ்வாறு ஸகல கஷ்டங்களும் நீங்கித் திரௌபதி அரண்மனைக்கு வந்ததும் அங்கு என்ன நடந்தது?

விடை.—இப்படி கீசகனும், உபகீசகர்களும் மாண்ட ஸங்கதி அரசனுக்குத் தெரியவர, அவனுக்கு ஸைரந்திரியை இனிமேல் இங்குவைத்திருக்கக் கூடாது என்ற எண்ணம் வந்தது. அதை ஸுதேக்ஷணையிடம் தெரிவித்தான். இதற்குள் திரௌபதி அரண்மனையில் புகுந்தாள். அப்பொழுது மடைப்பள்ளி வாயிலில் இருக்கும் பீமனைக் கண்டதும் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு, சற்று நேரம் கந்தர்வர்களை வாயாரத் துதித்தாள். உள்ளே போகும்பொழுது பிரகந்நளையும், இராஜ குமாரிகளும் இவளது க்ஷேமத்தை விசாரித்தார்கள். அந்தப்புரம் சென்றதும் அரசனது எண்ணத்தை ஸைரந்திரியிடம் ஸுதேக்ஷணாதேவி வெளியிட்டாள். இதைக்கேட்டதும் திரௌபதி தான் இன்னும் 13-நாள் தான் அங்கு இருக்

கப்போகிறதாகவும், அதன் பின்பு தன் பர்த்தாக்கள் தன்னை அழைத்துப்போவார்கள் என்பதாகவும், அது வரையில் பொறுத்திருந்தால் அவர்களுக்குக் கந்தர்வர்கள் நன்மையையே செய்வார்கள் என்பதாகவும் சொல்லி விராடராஜன அந்தப்புரத்தில் திரௌபதி ஸுகமாய் வாழ்ந்திருந்தாள்.

வினு 25.—இப்படிப் பாண்டவர்கள் மறைந்து வாஸம் செய்யுங்கால் அவர்களைத் துர்யோதனாதியர் எவ்வாறு கண்டு பிடிக்க முயன்றனர்? அவரது பிரயத்தனம் என்னமாயிற்று?

விடை.—துர்யோதனாதியர்கள் 13-வது வருஷாரம்பமுதல் எவ்வளவோ தூதரையும், வேவுகாரரையும் அனுப்பிப் பாண்டவர்களைக்கண்டுபிடிக்க முயன்றனர். என்ன செய்தும் பாண்டவர்களையாவது பாண்டவர்கள் மறைந்து வாஸம் செய்யும் இடத்தையாவது அவர்களால் கண்டு பிடிக்கமுடியாமல் போய்விட்டது. இவர்களில் விராட பட்டணம் போய்வந்த வேவுகாரர்கள் மாத்திரம் பாண்டவர்கள் இருக்கும் இடத்தை அறியமுடியாத போதிலும், கீசகன் ஒரு ஸ்திரீ நிமித்தமாய் தனது தம்பிமார் 105-பேர்களோடுமாண்ட அதிசய ஸமாசாரத்தை மாத்திரம் கொண்டுவந்தார்கள்.

வினு 26.—இவ்வாறு வேவுகாரரை அனுப்புவித்த செய்தி முடிந்ததும் துர்யோதன ஸபையில் என்ன விஷயத்தைப்பற்றி யார் யார் என்னென்ன பேசினர்கள்?

விடை.—கர்ணனும் சகுனியும் "இன்னும் அதிக ஸாமர்த்தியமுடைய வேவுகாரர் மூலமாய் பாண்டவர்களைக் கூடிய சீக்கிரத்தில் கண்டுபிடிக்கவேண்டும்" என்றனர். "வேவு

காரர் நன்முய்த்தேடட்டும். ஆனலும் கஷ்டங்கள் அறியாத பாண்டவர்கள் வனவாஸ அக்ஞாதவாஸ பாதைகளால் அவசியம் இறந்தே யிருப்பார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று துராத்மாவான துச்சாஸனன் சொன்னன். "பாண்டவர்கள் இறந்திருக்கமாட்டார்கள். அவர்கள் இருக்கும் இடத்தை பிராம்மண தூதர்கள் ஸித்தாள் மூலமாய் சீக்கிரம் கண்டுபிடிக்க முயலவேண்டும்" என்முர் துரோணர். பீஷ்மர் "பாண்டவர் மஹாத்மாக்களாகையால் அவர்கள் இறந்திருக்கவேமாட்டார்கள். அவர்கள் சூதாட்டத்தில் ஏற்பட்ட நிபந்தனைப்படி நடந்தாய்விட்டது. இனிமேல் அவர்களைக் கண்டுபிடித்துக் காட்டுக்கனுப்புவது ஸரியன்று. அவர்கள் இருக்கும் தேசத்தில் ஸகல சுபக்குறிகளும் காணப்படும், அசுபக்குறியே இருக்கமாட்டாது. அப்பட்டணத்திலுள்ளவர்கள் தமது தர்மத்தைவிட்டு விலகாது, ஸன்மார்க்கத்தைப் பின்பற்றுபவராய் சண்டை சச்சரவு, வியாதி, அகாலமிருத்யு முதலியவைகளால் வருந்தாது எப்பொழுதும் ஸுகமாய் வாழ்வார்கள். ஆகையால் அவர்கள் விஷயத்தில் நீ சீக்கிரமாக நியாயமாய் நடந்து கொண்டால்தான் உனக்கு நலம்" என்று புத்திமதி கூறினர். கிருபாசாரியர், பீஷ்மர் சொல்லியது யாவும் ஸரி என அங்கீகரித்தார். இவர்கள் இவ்வாறு பாண்டவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க திரிகர்த்த தேசாதிபதியாகிய ஸுசர்மா என்பவன் தான் அதுவரையில் கீசகனல் அனேகங் தரம் தோல்வி யடைந்திருப்பதாகவும் இப்பொழுது கீசகன் இறந்துவிட்டதால், தான் மறுபடியும் விராட நகரத்தை நோக்கிப் படையெடுத்துப்போய் அதைப் பிடித்து துர்யோதனது இராஜ்யத்தை விஸ்தாரப்படுத்துவதாகவும் சொன்னன். இதைக் கேட்ட

தும் துர்யோதனனுக்கு முன்னமேயே பீஷ்மர் பாண்டவர்களிருக்கும் இராஜ்யத்தை வர்ணித்ததற்கும், விராட நகரத்தின் செழிப்பிற்கும், ஏதோ பொருத்தம் இருக்கிறதாகத் தோன்றினமையால் அங்கு ஒருவேளை படையெடுத்துச்சென்றால் பாண்டவர்களையும் கண்டு பிடிக்கலாம் என்று தோன்ற அவன் ஸுசர்மா சொன்னதை ஒப்புக்கொண்டு, விராடநகரத்தின்மேல் படையெடுத்துச் செல்லுவதாகத் தீர்மானித்தான்.

வினா 27.—விராட நகரத்தின் மீது துர்யோதனதியர் எவ்வாறு படையெடுத்துச்சென்று எவ்வாறு விராடராஜனைப் போருக்கழைத்தனர்?

விடை.—திரிகர்த்த தேசாதிபதிகள் தமது படைகளோடு முதலில் விராட நகரத்தின் தெற்கே சென்று அங்குள்ள பசுக்கூட்டங்களைக் கவர்ந்து விராட நகரத்தவரை வலுவில் சண்டைக்கு இழுத்தனர். துர்யோதனதியர், பீஷ்மர் முதலியோர் தாம் செய்துகொண்டுவந்த ஏற்பாட்டின்படி மறுநாள் விராடபட்டணத்தின் வடபக்கத்திலிருந்த பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சண்டை உண்டாக்கினர்.

வினா 28.—தெற்கே வந்த திரிகர்த்த தேசாதிபதிகளை எதிர்த்து யார் போருக்குச் சென்றது? இந்த யுத்தம் எவ்வாறு முடிந்தது? ஏன்?

விடை.—தெற்குதிக்கை நோக்கி விராடராஜன், கங்கபட்டர், வல்லபன், தாமக்கிரந்தி, தந்திரபாலன் முதலியவர்களது ஸகாயத்தோடு, போருக்குப் புறப்பட்டான். அங்கு சண்டை இரவிலும் அகோரமாய் நடந்தது. அதில் கடைசிக் காலத்தில் திரிகர்த்த தேசாதிபதிகள் விராடராஜனை

ஓடிவந்து பிடித்துக்கொண்டு போய் தமது தேர்க்காலோடு கட்டிவிட, விராடராஜன் ஸைனியவெருண்டோடத் தொடங்கியது. இதைக்கண்ட கங்கபட்டர், வல்லபன், தாமக்கிரந்தி, தந்திரபாலன் ஆகிய மூவரையும் அரசனுக்கு ஸகாயமாய்ப் போர் செய்யச்சொல்ல, அவர்கள் வெகு அடக்கமாய்ச் சண்டைசெய்து விராடராஜனை விடுவித்து திரிகர்த்த தேசாதிபதியாகிய ஸுசர்மாவைச் சிறைபிடித்து வர, ஸுசர்மாவினது சேனை சின்னபின்னமாகி நான்கு பக்கங்களிலும் சிதறி ஓடிப்போயிற்று. கொஞ்சநாழிகைக்குப் பின்பு கங்கபட்டரது வேண்டுகோளின்படி, வல்லபன் ஸுசர்மாவைக் கட்டவிழ்த்து விட, அவன் வெட்கி ஓடிப்போனான். விராடராஜன் அன்றிரவையும் மறுநாட்காலையையும் அங்கு சோலைகளில் கழித்து விட்டு, மறுநாள் நடுப்பகலில் தன் பட்டணத்திற்குப் போவதாகத் தீர்மானித்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் பாண்டவர்களது ஒரு வருஷ அக்ஞாதவாஸம் முடிவுபெற்றது.

வினா 29.—இவ்வாறு இவர்கள் யாவரும் தெற்குப் பாகத்தில் ஸந்தோஷமாய் இருக்கையில் பட்டணத்துள் நடந்த விஷயம் என்ன ?

விடை.—மறுநாட் காலையில் துர்யோதனாதியர் விராடபட்டணத்திற்கு வடக்கு பக்கத்திலிருக்கும் பசுக்கூட்டங்களைக் கவர்ந்தனர். உடனே கோபாலர்கள் ஓடிவந்து, ஊரிலிருந்த விராடராஜன்குமாரனாகிய உத்தரனிடம் முறையிட்டார்கள். அப்பொழுது உத்தரன் ஸ்திரீகள் மத்தியில் இருந்ததால், அவனுக்கு அதிகக்கர்வமுண்டாக "எனக்கு ஒரு தகுந்த ஸாரதிமாத்திரம் இருந்தால், கௌரவஸைனியமுழுவதையும் ஒரு நொடிப்பொழுதில் தோல்வியடையும்

படி செய்து, பசுக்களை மீட்டுக்கொண்டு வருவேன்" என, இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸைரந்திரி உத்தரையை அழைத்து பிரகந்நளைக்கு ஸாரத்யம் தெரியும் என்று சொன்னாள். இதை உத்தரை தனது தமயன் உத்தரனுக்குச்சொல்ல, அவன் இதற்கு இசைந்து பிரகந்நளையை ஸாரதியாகக்கொண்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டான்.

வினா 30.—கௌரவ ஸேனையைக் கண்டதும் உத்தரன் நிலை என்னமாயிற்று ? பிரகந்நளை என்ன செய்தாள் ?

விடை.—அலைமோதிக் கொண்டிருக்கும் ஸமுத்திரத்தைப் போலத்தோன்றிய கௌரவ ஸேனையைக் கண்டதும், உத்தரனுக்கு அதிகபயம் உண்டாக, அவனுக்கு "சண்டையில் சென்று வீணுய் உயிரிழப்பதை விட, உயிர் பிழைத்து ஸுகமாய் வாழலாம்" என்றுதோன்றியது. பிரகந்நளை இதைக் கவனியாது "க்ஷத்திரியனுக்கு இது தகாது" என்று சொல்லிக்கொண்டே தேரை யுத்த களத்தருகில் கொண்டு போனுள். உடனே உத்தரனுக்குப்பயம் அதிகரிக்க, அவன் தேரிலிருந்து குதித்துப் பட்டணம் நோக்கி ஓடஆரம்பித்தான்.

வினா 31.—இவ்வாறு உத்தரன் ஓடஆரம்பித்ததும் பிரகந்நளை அவனை எவ்வாறு தேற்றி என்ன செய்தாள் ?

விடை.—அவனைப் பிரகந்நளை பின்தொடர்ந்து சென்று, பிடித்துதேர்த்தட்டில் கொண்டுவந்து உட்காரவைத்துப் பலவாருகத் தேற்றப்பார்த்தாள். அவன் அதிக பயத்தோடிருப்பதைக்கண்டு, தேரை மயானத்திலிருந்த வன்னிமரத்திற்கு அருகில் கொண்டுபோய், உத்தரனை மரத்தின்மேலுள்ள ஆயுதங்களிருந்த காண்டீவதனுஸை எடுத்

துத் தன்னிடம் கொடுக்கும்படி பிரகந்நளை கேட்டாள். உத்தரன் பின்னும் தேறுது பயந்து நடுங்குவதைக் கண்டு, தமக்கு அக்ஞாதவாஸகாலம் அன்றோடு தீர்ந்தது என்று தெரிந்துகொண்டவனுய், தான் பாண்டவர்களுள் அர்ஜுனனென்றும், தனது ஸகோதரர்களும் திரௌபதியும் விராடநகரத்தில் பலவேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லி தனது பத்துப்பேர்களையும், அவைகள் தனக்கு வந்ததற்குக் காரணத்தையும் பிரகந்நளையாகிய அர்ஜுனன் எடுத்துக்கூற, உத்தரனுக்கு ஒருவாறு தைரியம் வந்தது. உடனே உத்தரனை ஸாரதியாக வைத்துக்கொண்டு அர்ஜுனன் பசுக்கூட்டங்களை மீட்கப்புறப்பட்டான்.

வினு 32.—இவ்வாறு அர்ஜுனன் செய்துகொண்டிருக்கையில் துர்யோதனுதியர் கூட்டத்தில் என்ன நடந்தது?

விடை.—கர்ணன், பிரகந்நளை உத்தரனைப் பிடிக்க ஓடுகையில் அவள் அர்ஜுனன் என்று தெரிந்து துர்யோதனனிடம் சொல்ல, அவன் தான்வந்த காரியம் முடிந்தது, பாண்டவர்களுள் ஒருவனை 13-வதுவருஷம் முடிவதற்குமுன் கண்டுபிடித்தாய்விட்டது. ஆகையால் பாண்டவர்களை மறுபடியும் முன் ஏற்பாட்டின்படி காட்டிற்கு அனுப்பிவிடலாம் என்று ஸந்தோஷித்தான். இதைக்கேட்ட பீஷ்மதுரோண கிருபர்களாகிய மஹாத்மாக்கள் யாவரும் கணக்கிட்டுப்பார்த்து, அன்று ஸூர்ய உதயத்தோடு 13-வருஷங்கள் முடிந்துவிட்டன என்று சொல்ல, துர்யோதனன் ஒன்றும் பேசமுடியாமல் தத்தளித்தான். அதற்குள் அர்ஜுனன் உத்தரனை ஸாரதியாக வைத்துக்கொண்டு சண்டைக்கு வர யாவரும் யுத்தத்திற்கு ஸித்தமானுர்கள்.

வினு 33.—யுத்தம் எவ்வாறு நடந்தது எவ்வாறு முடிவு பெற்றது ?

விடை.—அர்ஜுனன், பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமன் முதலியவர்களை எதிர்த்து, முறையே சண்டைக் காரம்பித்து ஒவ்வொருவரையும் தோல்வி அடையும்படி செய்து வருகையில், துர்யோதனன் பயந்து பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு, ஹஸ்தினபுரியை நோக்கிச்சென்றான். அர்ஜுனன் கர்ணனை இரண்டுதரம் தோல்வியடையும்படி செய்து, பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா ஆகிய இவர்களையும் வென்று, பசுக்களைத் தேடிப் பார்த்தான். பின்பு பசுக்களைத் துர்யோதனன் வெகு தூரத்தில் ஓட்டிப்போவதாகக் கேள்வியுற்று அவனைத் தொடர்ந்துசென்று ஜயித்து பசுக்களைத் திருப்பிவருகையில் துர்யோதனனுடைய ஸேனைகள் அர்ஜுனனை எதிர்த்து சண்டையிடவந்தன. அர்ஜுனன், பசுக்களது இருபக்கங்களில் ஊர்வரையில் சரக்கூடுபோட்டு மறைக்க, பசுக்கூட்டங்கள் அதனுள் விளையாடிக்கொண்டு ஊர் போய்ச்சேர்ந்தன. துர்யோதனாதியர்கள், அர்ஜுனனும் பசுக்களும் போவதைப் பார்த்திருந்தபோதிலும் சரக்கூட்டைச் சின்னபின்னமாக்க முடியாது தயங்கி நின்றனர். பசுக்கள் ஊரை நோக்கிச்சென்றதும், அர்ஜுனன் மறுபடியும் கௌரவ வீரர்களோடு சண்டை செய்து, அவர்களைத் தோல்வியடையும்படி செய்தான். இவ்வாறு கௌரவ ஸேனையைச் சின்னபின்னப்படுத்திவிட்டு, இருவரும் ஒருசோலையில் வந்து தங்கினார்கள்.

வினு 34.—நகரப் பிரவேசம் செய்யவேண்டியதற்கு இவர்கள் என்ன ஏற்பாடு செய்தார்கள் ? பின் என்ன நடந்தது ?

விடை.—அர்ஜுனன் உத்தரனை நோக்கி 'நீயே கௌரவர்களை வென்றதாக ஊருக்குத் தூதரிடம் சொல்லி அனுப்பிவிடு. நான் வென்றதாகச் சொல்லவேண்டாம்' என, உத்தரனுக்கு இவ்வாறு செய்ய மனம் வராதபோதிலும், அர்ஜுனனது வேண்டுகோளிற்கு இசைந்து, தூதரை அனுப்பி விராடராஜனுக்கு ஸங்கதியைத் தெரிவித்தான். உடனே, பட்டணம் அலங்காரமாக, யாவரும் உத்தரனது வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

வினா 35.—இவ்வாறு ராஜன் தனது அருமைக் குமாரனை எதிர் பார்த்திருக்கையில் ஸபையில் ஏன் என்ன விபரீதம் நடந்தது?

விடை.—அரசனுக்கு ஸந்தோஷம் அதிகரித்ததால், சொக்கட்டானைக் கொண்டுவரச்சொல்லி, கங்கபட்டரைச் சூதாடவரும்படி அழைத்தான். கங்கபட்டர், அதிக சந்தோஷத்தோடு கூடியவன், சூதாடினால் ஏதாவது விபரீதம் விளையும் ஆகையால் தாம் சூதாட வருவதில்லை என்றார். பின்பு அரசன் கட்டாயப்படுத்த, இருவரும் உட்கார்ந்தனர். சூதாடிவருகையில் அரசன் 'என் பிள்ளை கௌரவர்களை வென்றுவிட்டானே' என்று சொல்லிக் கொண்டு ஆட, கங்கபட்டர் 'பிரகந்நளையை ஸாரதியாய் வைத்திருக்கும் போது அவனுக்குத் தோல்வி ஏன் உண்டாகும்' என்று சொல்லிக்கொண்டு சொக்கட்டான் காயை உருட்டினார். உடனே 'என்ன இந்தப் பிராம்மணன் என் பிள்ளையையும், ஒரு பேடியையும் ஸமமாய்க் கூறுகிறான்' என்று அரசனுக்குப்பட, அவனுக்குக் கோபமுண்டாயிற்று. அப்பொழுது தன் கையிலிருந்த சொக்கட்டான் காயால் கங்கபட்டரது முகத்தில் வெகு வேகமாய் அரசன் இடித்தான். அது கங்கபட்டரது நெற்றியில் பட, உட

னே இரத்தம் தாரை தாரையாய்ப் பெருகத் தொடங் கிற்று. அதைக்கீழே விழாது, தன்கையில் ஏந்திக்கொண்டு, அருகிலிருந்த ஸைரந்திரியைநோக்க அவள் தனது கணவ னது உட்கருத்தை அறிந்து கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து இரத்தம் கீழே விழாது அதில் ஏந்தினாள்.

வினா 36.—உத்தரன் இராஜ ஸபைக்கு வந்ததும் என்ன நடந்தது? ஏன்?

விடை.—உத்தரனும், அர்ஜுனனும் ஸபை வாசலில் இருந்து கொண்டு, அரசனுக்குத் தமது வரவைத் தெரிவிக்க, அர சன் இருவரையும் தன் முன் கொண்டுவந்து விடும்படி வேலைக் காரனை ஏவினான். யுதிஷ்டிரர் வாயில் காப்போ னிடம் சென்று உத்தரனை மாத்திரம் உள்ளேவிடும்படி கட்டளையிட, அவனும் அவ்வாறே செய்தான். உத்தரன் வந்து தகப்பனுரை அடி பணிந்துவிட்டு, கங்கபட்டரிடம் போக, அவர் நெற்றியிலிருந்து இரத்தம் வருவதையும், ஸைரந்திரி அவருக்குப் பணிவிடை செய்வதையும் கண்டு, இந்த அபராதம் செய்தவர் தன் தகப்பனர் எனக்கண்டு, கங்கபட்டரைச் சீக்கிரம் ஸமாதானப்படுத்த வெண்டும் என்று தகப்பனுரை மிகக்கடிந்து பேசினான். உடனே கங்கபட்டர் யாரோ பெரியவர் என்று அரசனுக்குத் தோன்ற, அவன் தணிந்துபேசி கங்கபட்டருக்கு ஸந் தோஷமுண்டாக்கினான்.

வினா 37.—பிரகன்னளை எப்பொழுது ஸபைக்கு வந்தாள்? பிர கன்னளையை ஏன் உள்ளே விடக்கூடாது என்று தர்மபுத் திரர் ஏற்பாடு செய்தார்?

விடை.—அர்ஜுனன் முன்னமேயே 'யுத்தகாலங்கள் தவிர மற்றைய காலங்களில் என் தமயனே யார் இரத்தம் வந்து கீழே விழும்படி காயப்படுத்துகிறார்களோ, அவர்களை நான் உடனே கொல்லுவேன்' என்று சபதம் செய்திருக்கிறான். இது விராடராஜன் தம்மைக் காயப்படுத்தியவுடன் கங்கபட்டருக்கு ஞாபகம் வர, பிரகந்நளை ஸபைக்கு வந்து இரத்தம் ஒழுகும் தன்னைப் பார்த்தால் விராடராஜனைக் கொல்லப்போவாள் என்று எண்ணி தன் இரத்தம் அடங்கும் வரையில் அவளை ஸபை வாயிலில் நிறுத்தி வைத்துப் பின்பு உள்ளேவரும்படி செய்தார்.

வினா 38.—அதன் பின்பு என்ன நடந்தது?

விடை.—கங்கபட்டரது இரத்தம் நின்ற உடனே, வாயிலிலிருந்த பிரகந்நளையைக் காவலாளி உள்ளே விட்டான். பிரகந்நளை வந்ததும், உத்தரன் தான் கௌரவ ஸேனையைக் கண்டு பயந்தோடுங்காலத்தில், ஒரு திவ்ய புருஷன் தன்முன் தோன்றி, தன்னைத் தைரியப்படுத்தி தேரில் ஸாரதியாக வைத்துக்கொண்டு கௌரவ ஸேனைகளைச் சின்னபின்னப்படுத்தி பசுக்கூட்டங்களை மீட்டுவந்து மறைந்து போனான் என்று சண்டைக் கதையை விஸ்தாரமாய்ச் சொன்னான்.

வினா 39.—இது முடிந்ததும் பாண்டவர்கள் எவ்வாறு வெளிவந்தனர்?

விடை.—மறுநாட் காலையில் பாண்டவர்கள் ஐவரும், திரௌபதியும், மங்கள ஸ்நானம் செய்து, ஆடையாபரணம் அணிந்து, விராடராஜன் ஸபைக்கு ஸூர்யோதயத்திற்கு முன்னர்வந்து, அங்கிருந்த சிங்காதனங்களில் உட்கார்ந்

தார்கள். விராடராஜன் வந்து, தான் உட்கார இடமில்லாதது க்கண்டு "நீங்கள் யார்?" என்று கேட்க்க, அர்ஜுனன் எழுந்து தங்களது குலகோத்திரம் பெயர் முதலியவைகளை விஸ்தாரமாய்ச் சொன்னான். கீசகனையும், உபகீசகர்களையும் எளிதில் கொன்றது பீமன் என்பதையும், மற்றையவர்கள் இன்ன இன்ன வேஷத்தோடு இவ்வொரு வருஷகாலம் அவனுக்கு இன்ன இன்ன வேலைகள் செய்து வந்தார்கள் என்பதையும் முறையே அரசனுக்கு அர்ஜுனன் வெளியிட்டான். இதன் பின்பு அரசன் தன்னைத் தென்புற மாடுபிடிச்சண்டையில் காப்பாற்றியது பீமன் என்று தெரிந்துகொண்டான்.

வினு 40.—இவ்வாறு பாண்டவர்கள் தன்னிடம் வேலைசெய்தார்கள்என்று தெரிந்ததும் அரசன் என்ன செய்தான்?

விடை.—இந்த விஷயங்களை அரசன் கேட்டதும், தனக்குப் பாண்டவர்களோடு ஸம்பந்தம் ஏற்படவேண்டுமென்று அவனுக்குத்தோன்ற, அர்ஜுனனுக்கு உத்தரையைக் கொடுத்து விவாஹம்நடத்துவதாகச் சொன்னான். ஆனால் அர்ஜுனன் இதை ஒப்புக்கொள்ளவில்லை.

வினு 41.—ஏன் அர்ஜுனன் இதை ஒப்புக்கொள்ளவில்லை? விராடராஜன் மனதை அர்ஜுனன் எவ்வாறு திருப்தி செய்துவைத்தான்?

விடை.—தான் இதுவரை, உத்தரையை தனது பெண்ணாக வேபாவித்து, உபாத்தியாயர் ஸ்தானத்திலிருந்து ஸஹஜமாய் இருந்து விட்டதால், தன்னால் அவளைப் பெணசாதியாகக் கருதல்முடியாது என்று அர்ஜுனன் மறுத்துவிட்

டான். விராடராஜனைத்திருப்தி செய்வதற்காக, தனது பிள்ளை **அபிமன்யு** (ஸுபத்திரையின் பிள்ளை) வுக்கும் உத்தரைக்கும் கல்யாணம் நடத்துவதாக ஒப்புக்கொண் டான். இதைத் தர்மபுத்திரர் ஒப்புக்கொள்ள, உத்தரை யும் ஒப்புக்கொள்ள, உத்தரைக்கும், அபிமன்யுவுக்கும், கிருஷ்ணபரமாத்மாவின் ஸந்நிதானத்தில், விராட பட் டணத்தில் வெகு கோலாஹலமாய் விவாகம் நடந்தது.

வினா 42.—இந்த விவாஹத்தின் முக்கியச் சிறப்பு என்ன?

விடை.—இதனால் அபிமன்யுவுக்கு பரீக்ஷித்து ராஜன் பிறந் தான். இவன் மூலமாய், உலகத்தில் யாவரும் அறிய, **பாகவதம்** என்ற அரியநூல் வெளிவந்தது. இப்பரீக்ஷித் திற்கு **ஜனமேஜய** மஹாராஜன் பிறந்தான். இவன் மூல மாய், **இம்மஹாபாரதமே** வெளிவந்தது. இச் சிறந்த காரியங்கள், இக்கல்யாணத்தால் உண்டானமையால் இக் கல்யாணம் மஹாபாரதத்தில் மிகச் சிறந்தது.

---

5. உத்தியோக பர்வம்

மீனமாகியுங் கமடமதாகியும் மேருவை யெடுக்குந்தா
ளேனமாகியு நரவரியாகியு மெண்ணருங் குரளாயுங்
கூனல்வாய்மழுத் தரித்தகோவாகியு மரக்கரைக்கொலைசெய்த
வானநாயக னெனியுநின்றமான் மலரடிமறவேனே.

வினா 1.—இவ்வாறு பாண்டவர்கள் வெளிவந்ததும், விராட ராஜன் ஸபையில் மேல் நடக்கவேண்டிய காரியத்தைப் பற்றி யார் யார் என்னென்ன சொல்லக் கடைசியில் என்ன தீர்மானம் ஏற்பட்டது.

விடை.—விராடராஜன் ஸபையில், பாண்டவர்கள் வெளி வந்து விளங்குகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், அவர் களது ஸ்நேகிதர்களாகிய யாதவாள் முதலியவர்கள் எல் லோரும் துருபத ராஜனும், அங்குவந்து கூடினர்கள். கிருஷ்ணபகவான், கூடிய சீக்கிரத்தில் துர்யோதன னுக்கு ஒரு தூதனை அனுப்பி, தர்மபுத்திரரது, இராஜ்ய பாகத்தைச் சீக்கிரம் கொடுத்துவிடும்படி தெரிவிக்கவேண் டும் என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பல ராமர், எப்பொழுதும் துர்யோதனனிடம் பக்ஷபாதியாகை யால் அவனைக் கொஞ்சம் தாங்கிச் சில வார்த்தைகள் சொல்ல, உடனே இவர்கள் தம்பியாகிய ஸாத்யகி என் பவன் பலராமரை நடு ஸபையில் கடுமையான வார்த்தை கள் சொல்லி அவமானப்படுத்தினன். உடனே துருபத ராஜன் எழுந்து, "ஒருவேளை சண்டைவந்தால் அதற்கு

நாம் தயாராய் இருக்கவேண்டும். ஆதலால் நமக்கு அதில் ஸகாயம் செய்யச் சீக்கிரத்தில் சிற்றசர்களுக்கு இந்த விஷயங்களைத் தெரிவித்து அவர்களை வெகு துரிதமாய் படைகள்சேர்க்கச் சொல்லவேண்டும்" என்று தனது அபிப்பிராயத்தை வெளியிட்டான். இதைக் கிருஷ்ணபகவானும் அங்கீகரித்தார். இவ்வாறுபடைகள் சேர்ப்பதற்கு, சிற்றரசர்களிடம் சிலதூதரையும், தர்மபுத்திரரது இராஜ்ய பாகத்தைக் கொடுத்துவிடும்படி சொல்லி வருவதற்காகத் துர்யோதனனுக்கு ஒரு தூதனையும் அனுப்புவதாகத்தீர்மான மானவுடன், கிருஷ்ணபகவான் யாதவர்களை அழைத்துக்கொண்டு விராடராஜனிடம் மரியாதைகளைப் பெற்றுத் துவாரகையை நோக்கிச் சென்றார்.

வினு 2.—இப்படி கிருஷ்ண பகவான் சென்றதும், துருபத ராஜன் இந்தத் தீர்மானங்களை எவ்வாறு நடத்தினன்?

விடை.—பரதகண்டத்தில் உள்ள தமக்குத்தெரிந்த அரசர்கள் எல்லோரிடத்தும், பாண்டவர்களுக்கு ஸகாயமாய்ப் படை முதலியவைகளோடு புறப்பட்டு வரவேண்டும் என்று சொல்லி வருவதற்காக பலதூதர்களை அனுப்பினன். துர்யோதனனுக்குத் தனது புரோஹிதர்கள் ஒருவரை அழைத்து, கேட்டவர் மனம் உருகிப்பாண்டவருக்கு இராஜ்ய பாகம் கொடுப்பது நியாயம் என்று சொல்லும்படியாக, வார்த்தை சொல்லும் வழிகளை அவருக்கு எடுத்துக்காட்டி, அவரை ஹஸ்தினபுரத்திற்குத் தூதாக அனுப்பு வித்தான். இதன் பின்பு பாண்டவர்களை விராட ராஜனும் துருபத ராஜனுமாகச் சேர்ந்து உபப்பிலாவ்யம் என்ற கிராமத்தில் குடியேற்றி ஸுகமாய்ப் பாதுகாத்துவந்தனர். அப்பொழுது பாண்டவர்களிடம் அநேக அரசர்கள் தமது படைகளுடன் வந்துசேர்ந்தார்கள்.

வி॥ 3.—பாதவர்களையும் கிருஷ்ணபகவானையும் படைத்துணையாக அழைப்பதற்கு யார் சென்றது? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—அர்ஜுனனே கிருஷ்ண பகவானைப் படைத்துணையாக அழைப்பதற்குப் புறப்பட்டான். அங்கு சென்று கிருஷ்ணபகவான் இருக்குமிடம் போகையில், அங்கு அவர் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதையும் தனக்கு முன்னமே துர்யோதனன் மகா இறுமாப்போடும், அவர் கால்மாட்டில் உட்கார்ந்தால் மானக்குறைவு என்கிற எண்ணத்தோடும், அவர் தலைமாட்டில் உட்கார்ந்திருப்பதையும் கண்டான். உடனே அர்ஜுனன் மஹா விநயம், பக்தி முதலிய நற்குணங்களோடு கிருஷ்ணபரமாத்மாவின் கால்மாட்டில் வந்து நமஸ்கரித்துத் தரையில் உட்கார்ந்தான். அவன் வரவை எதிர்பார்த்திருந்த மாயாவியான பகவான் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பவர்போல் கண்ணைத் தேய்த்துக்கொண்டு உடனே எழுந்தார். அர்ஜுனன் உடனே அவர் கண்ணில் பட, "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்க, அதற்கு அர்ஜுனன் "எனக்கு நீர் போரில் ஸகாயமாய் வரவேண்டும்" என, 'அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டார்.

வி॥ 4.—முன்னமேயே வந்து காத்துக்கிடந்த துர்யோதனன் கதி என்னமாயிற்று?

விடை.—முன் சொல்லியபடி அர்ஜுனனுக்கு வாக்களித்துவிட்டு தற்செயலாய் திரும்புபவர்போல் பகவான் தலையைத் திருப்பத் துர்யோதனனைக் கண்டார். உடனே அவனிடமிருந்து அவன் நோக்கத்தை அறிந்துகொண்டு, "முன் அர்ஜுனனுக்கு ஸகாயம் செய்வதாக நான் வாக்களித்தாய்விட்டது. ஆகையால் கிருதவர்மாவிடம் இருக்

கும் ஒரு அக்ஷோகணி ஸேனையை உனக்கு ஸகாயமாய் அனுப்புகிறேன்" என்று பகவான் சொல்ல, அதைத் துர் யோதனன் ஒப்புக்கொண்டு போய்விட்டான்.

வினு 5.—கிருஷ்ண பகவானை படைத்துணையாக அழைக்கப் போனதுர்யோதனன், எவ்வாறு கிருதவர்மாவினது அக்ஷோகணி ஸேனைகளைப் பெற்று திருப்தி அடைந்து போனான்?

விடை.—துர்யோதனன் தனது எண்ணத்தைத் தெரிவித்த தும், பகவான் "நான் இந்த யுத்தத்தில் படை எடுக்கப் போகிறதில்லை. படை எடுக்காத என் ஸகாயம் வேண்டு மா? அல்லது, படை எடுத்துப் போர் செய்யக்கூடிய தும் கிருதவர்மாவால் நடத்தப்பெற்றது மான ஒரு அக்ஷோகணி ஸேனை வேண்டுமா?" என்று கேட்டார். அப்பொழுது பகவானது குணதிசயங்களை அறியாத துர் யோதனன், கிருதவர்மாவின் ஸேனையை ஸந்தோஷ மாய்ப் பெற்றுக் கொண்டு, ஹஸ்தினபுரி போவதற்கு முன், பலராமரிடம் வந்தான். அவர் "இருதிறத்தாரும் எனக்கு வேண்டியவர்களாகையால், நான் ஒரு பக்கத்தி லும் சேரமாட்டேன்" என்று மறுக்கத் துர்யோதனன் ஹஸ்தினபுரம் சென்றான்.

வினு 6.—பகவான் படை எடாது பாண்டவர்களுக்கு எவ் வாறு ஸகாயம் செய்வதாக ஒப்புக்கொண்டார்?

விடை.—பகவான் அர்ஜுனனது வேண்டுகோளின்படி, அவ னுக்கு ஸாரதியாக இருந்து யுத்தத்தை ஒழுங்குபெற நடத்திவருவதாக ஒப்புக்கொண்டார்.

வினு 7.—அப்பொழுது பாண்டவர்களுக்கு ஸகாயமாக வந்த எந்த அரசனை துர்யோதனதியர் எவ்வாறு வசப்படுத்திக் கொண்டார்கள்?

விடை.—பாண்டவர்களது மாமனுகிய மத்திரதேசாதிபதி சல்லியன் தனது ஏராளமான ஸேனைகளோடு பாண்டவர்கள் இருக்கும் உபப்லாவ்யத்தை நோக்கிப் புறப்பட்டான். இந்தச் செய்தியை துர்யோதனன் தெரிந்துகொண்டு சல்லியன் வரும் வழியில் அனேக அரண்மனைகள், கிணறுகள், தண்ணீர்ப்பந்தல் கூடாரங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி, காரியஸ்தர்கள் மூலமாய் இவைகளை நடத்தி வந்தான். இவைகளால் ஸந்தோஷமடைந்து சல்லியன் 'இதை ஏற்படுத்திய தர்மபுத்திரரது ஆட்கள் எங்கே, அவர்களுக்கு வெகுமதி அளிக்கிறேன்' என்று உறக்கச் சொன்னன். உடனே அங்கு ஒளிந்திருந்த துர்யோதனன் ஓடிவந்து தனக்கு யுத்தத்தில் ஸேனாதிபதியாக வேண்டுமென்று கேட்க, சல்லியன் தான் அடைந்த உபகாரத்திற்குப் பதிலாக துர்யோதனனுக்கு ஸகாயம் செய்வதாக ஒப்புக்கொண்டான். இந்தவிதமாய் சல்லியனை மோசம் செய்து துர்யோதனன் தன் வசப்படுத்திக் கொண்டான்.

வினு 8.—இவ்வாறு துர்யோதனனுக்கு வசப்பட்ட பின்பு சல்லியன் என்ன செய்தான்?

விடை.—பாண்டவர்களிடம் சென்று, அவர்களைப் பார்த்து தன்:ஸேனையோடு ஹஸ்தினபுரம் வருவதாக துர்யோதனனுக்கு வாக்களித்துவிட்டு, உபப்லாவ்யம் சென்று பாண்டவர்களைக் கண்டான். அங்கு, தான் மோசம் போனதை எடுத்துரைக்க, தர்மபுத்திரர் 'அப்படியானால் அர்ஜுனனும், கர்ணனும் சண்டையில் எதிர்க்குங்கால், கர்ணனுக்கு நீ ஸாரதியாக இருந்து, அவனை அதைர்யப்படுத்தி அவன் சீக்கிரத்தில் அர்ஜுனனால் அடிபட்டு விழும்படி செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். சல்லியன்

அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, பெரியவர்களும் கஷ்டகாலங்கள் வருங்கால் கஷ்டப்படவேண்டியதுதான் என்னும் விஷயத்தில், இந்திரன் பட்ட கஷ்டங்களை எடுத்துரைத்தான்.

வினு 9.—இந்திரனுக்குக் கஷ்டம் வரக் காரணம் என்ன ?

விடை.—துவஷ்டா என்ற ஒரு மஹானுக்கு, இந்திராணியிடம் கோப முண்டாக, மூன்று சிரமுடைய ஒரு பிராமணனை சிருஷ்டித்து, அவரை தபஸு முதலியவைகளைச் செய்யச்சொல்லி இந்திர பதவியை விரும்பும்படி துவஷ்டா ஏவினார். இந்தப் பிராமணர் செய்த தபஸை இந்திரன், முதலில் அப்ஸர ஸ்திரீகளால் அழிக்கப் பார்த்து முடியாததுகண்டு, கடைசியில் தான் தனது வச்சிராயுதத்தால் இப்பிராம்மணனைக் கொன்றான். உடனே இந்திரனை பிரம்ம ஹத்தி சூழ்ந்து கொண்டது.

வினு 10.—இதற்காக இந்திரன் என்ன செய்தான் ?

விடை.—இந்திரன் பிரம்மஹத்திக்குப் பயந்து உலகெங்கும் ஓடிப் பார்த்தும் பிரம்மஹத்தி தன்னைத் தொடர்ந்து வருவதைக்கண்டு, கடைசியாய் ஹிமயமலைக்கு வடக்கே தாமரைப் பூக்கள் நிறைந்த ஓர் ஏரியுட்சென்று ஒரு தாமரைத்தண்டுள் ஒளித்துக்கொண்டான். பிரம்மஹத்தி அக்குளத்துள் செல்லமுடியாது கரையிலேயே இருந்தது.

வினு 11.—இந்திரன் இவ்வாறு சென்றதும், யார் இந்திரப் பட்டத்திற்கு வந்தது ? அவன் என்ன செய்தான் ?

விடை.—நகுஷ மஹாராஜன் அக்காலத்தில் 100 அசுவமேதயாகம் செய்திருந்தமையால், அவனுக்கு இந்திரப்பட்டம் கிடைத்தது. அவனுக்கு உடனே இந்திராணியுடன்

ஸுகிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணம் வர, அவன் தன்னிடம் இந்திராணியை வரும்படி தூதனிடம்சொல்லி அனுப்பினன்.

வினா 12.—இந்திராணி கதி என்னமாயிற்று? அவள் என்ன செய்தாள்?

விடை.—இந்திராணி முதலில் நகுஷனிடம் போவதற்கு மயங்க, தேவர்கள் அவளை நகுஷனிடம் போய் கொஞ்ச நாள் கெடுவைத்துப் பின்பு அவனேடேயே வந்து சேருவதாக ஒப்புக்கொண்டு வரும்படி ஏவினர்கள். உடனே இந்திராணி நகுஷனிடம் சென்று, இவ்வாறு சொல்ல, அவன் அதற்கு ஒப்புக்கொண்டான். இதைக் கேட்டுக் கொண்டு, இந்த நாளுள் இந்திரனிருக்குமிடத்தை தேடிக் காண இந்திராணி யத்தனம் செய்து, கடைசியில் இந்திரன் தாமரைத் தண்டுள் ஒளிந்திருப்பதை ஒருதேவதையின் ஸகாயத்தால் கண்டுபிடித்தாள். அப்பொழுது இந்திரன் தான் கூடியசீக்கிரத்தில் வருவதாகச் சொல்ல, அதற்குள் தனக்கு நகுஷனால் அவமானம் வருமே என்று இந்திராணி சொன்னாள்.

வினா 13.—இந்திராணிக்கு இந்திரன் என்ன உபாயம் சொல்லிக் கொடுத்தான்? இது எவ்வாறு முடிந்தது?

விடை.—நகுஷன் கெடுவு முடிந்ததும், உன்னை அழைப்பான் அப்பொழுது நீ, 'இந்திரன் என்னிடம் எப்படி ஸப்தரிஷிகளால் சுமக்கப்பட்ட பல்லக்கில் வருவாரோ அதுபோல நீயும் வந்தால், நான் உன்னுடன் சேருவேன் என்று சொல்லு. இதனால் காமுகனான நகுஷனுக்கு ஆபத்து வரும்' என்று இந்திரன் உபாயம் சொன்னன். இது எவ்வாறு முடிந்தது என்பதை ஆரண்ய பர்வத்தில் 85-ம் விடையில் காண்க.

வினு 14.—இந்திரன் எவ்வாறு பிரம்மஹத்தி நீங்கி விளங்கினன்?

விடை.—பிரகஸ்மதி முதலியவர்கள், அக்கினியின் மூலமாகத் தேடி இந்திரன் இருக்கும் இடத்தை அறிந்து, விஷ்ணுவினிடம் தெரிவிக்க, அவர், தமது உத்தேசமாக ஒரு அசுவமேதயாகம் நடத்தினல் இந்திரனுக்கு பிரம்மஹத்தி நீங்கிவிடும் என, தேவர்கள் அவ்வாறே செய்து இந்திரனைப் புனிதனுக்கினர்கள். உடனே இந்திரன் அமராவதி வந்து, முன்போல அரசுபுரிந்து வந்தான்.

வினு 15.—இக்கதையைச் சொன்ன பின்பு சல்லியன் என்ன செய்தான்?

விடை.—'இந்திரனுக்கு வந்த கஷ்டம் எவ்வாறு நீங்கியதோ, அது போல உங்களுக்கு வந்திருக்கும் கஷ்டமும் நீங்க, நீங்கள் ஸுகமடைவீர்' என்று பாண்டவர்களை ஆசீர்வதித்து விட்டு சல்லியன் துர்யோதனனிடம் சென்றான்

வினு 16.—துர்யோதனனுக்கு அனுப்பிய தூதரான புரோஹிதர் காரியம் என்னமாயிற்று?

விடை.—புரோஹிதர் துர்யோதனன் ஸபைக்குச் சென்று, ஸாமதான பேதமாகிய ராஜோபாயங்களை முன்னிட்டுக் கொண்டு பாண்டவர்களது அபிப்பிராயத்தை வெளியிட, பீஷ்மர் அதை அங்கீகரித்து, தம்மாலியன்றமட்டும் திருதிராஷ்டிர ராஜனைப் போரில்லாது பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும்படி சொல்லிப் பார்த்தார். இதன் மத்தியில் கர்ணன், பீஷ்மர் அர்ஜுனனைப் புகழ்ந்து பேசுங்கால், அவரைத் தடுத்துப்பேச, அவர் கர்ணனை அந்த ஸபையில் நன்றாய் அவமானப் படுத்தினர். திருதிராஷ்டிர ராஜன் புரோஹிதனை நோக்கித் தான் கூடிய சீக்கிரத்தில் பாண்டவர்களுக்குத் தன்

கருத்தை ஸஞ்சயர் மூலமாய்த்தெரிவிப்பதாகச் சொல்லி அனுப்ப, அவரும் பாண்டவர்களிடம் வந்து நடந்த விஷயம் யாவையும் சொல்லிவிட்டார்.

வினா 17.—ஸஞ்சயர் வந்து பாண்டவர்களுக்கு என்ன ஸங்கதி தெரிவித்தார்?

விடை.— முதலில், ஸஞ்சயர் சண்டையிடாது எல்லோரும் ஸமாதானமாகப் போகவேண்டியது என்று திருதிராஷ்டிர மஹாராஜா சொன்னதாகச் சொன்னார். அதற்கு யுதிஷ்டிரர் தாங்கள் சண்டைபோடப் பயப்பட்டவர்களல்ல வென்றும், அப்படிச் சண்டையிடத்தகுந்த காரணங்கள் இருக்கின்றன வென்றும், அப்படி இருந்தபோதிலும், அவருக்காகத் தாங்கள் சண்டையிடாது நிற்பதாகவும், தங்களுக்கு முன் இருந்தபடி இந்திரப்ரஸ்தத்தைத் துர்யோதனுதியர் ஸமாதானமாய்க் கொடுத்து விடட்டும் எனறும் சொன்னர். அப்பொழுது ஸஞ்சயர் 'திருதிராஷ்டிரருக்கு நீங்கள் சொல்லியவாறு கொடுப்பது இஷ்டம் தான். அவரது கொடியபிள்ளைகள் கொடுக்கமாட்டேன் என்று பிடிவாதமாய் இருக்கிறார்கள். அவர்களைத் தடுத்துச்சொல்ல தைர்யம் அவருக்கில்லை. ஆகையால், அவர் உங்களைச் சண்டைக்கு வராது எங்கேயாவது சென்று பிரம்மசாரிகள்போல ஸத்காலக்ஷேபம் செய்து புண்ணியம் ஸம்பாதிக்கச் சொன்னர். அவர் முரட்டுப் பிள்ளைகளோடு சண்டையிடுவதால் பயன் ஒன்றும் இல்லை. அந்தச் சண்டையில் யார் ஜயிப்பார்களோ? யார் தோற்பார்களோ? யார் ஜயித்தாலும் அனேகம் பேர்கள் முதலில் இறக்கவேண்டும். ஏனெனில் இருபக்கத்திலும் மஹா பலவான்கள் சண்டைக்கு வருவார்கள். வேண்டியவர்கள் இறந்தபின் உங்களுக்கு ஜயம் கிடைத்தென்ன பயன்?

தோல்வி அடைந்தால் அவமானம். ஆகையால் உங்களை வேறு எந்தப்பட்டணமாவது போய், சண்டை சச்சர வின்றி ஸுகமாய் நல்ல காலம் கழிக்கச்சொன்னர்' என்று விஸ்தாரமாய்த் திருதிராஷ்டிரன் சொன்னதை, யாவரும் அறிய வெளியிட்டார்.

விஞ 18.—இவ்வாறு நயவஞ்சகமாய் திருதிராஷ்டிரன் சொன் னதற்குத் தர்மபுத்திரர் என்ன பதில் சொன்னர்? அவ் விஷயத்தில் வேறு யார் தமது அபிப்பிராயத்தைச் சொன்னது? கடைசியில் என்ன முடிவுண்டாயிற்று?

விடை.—தர்மபுத்திரர், திருதிராஷ்டிரர் சொல்லியபடி தாம் இராஜ்யம் வாங்காது ஸமாதானத்திற்கு வந்து ஸந்நியாஸி களைப் போல வஸித்தல் க்ஷத்திரிய தர்மமல்ல வென்றும், கிருஷ்ணபகவான் இவ்விஷயத்தில் என்ன சொல்லு கிறாரோ அப்படியே தாம் செய்வதாகவும் ஒப்புக்கொண் டார். இதைக் கேட்டு கிருஷ்ணபகவான் எழுந்து, முதலில், பாண்டவர்கள் துர்யோதனாதியரால் அடைந்த அவமானம், கஷ்டம் இவைகளைக் கேட்போர் மனங்கரை யும்படி எடுத்துரைத்து, கடைசியில் மஹாத்மான பாண் டவர்கள் சண்டைக்குவர சக்தியுடையவராயும் தயாரா யும் இருந்தபோதிலும், நியாயமான ஸமாதானத்திலேயே எண்ணமுடையவர்களாய் இருக்கிறார்கள் என்று ஸஞ்ச யரை திருதிராஷ்டிர ராஜாவிடம் சொல்லும்படி சொன் னர். தர்மபுத்திரரும் இதை அங்கீகரித்தார்.

விஞ 19.—ஸஞ்சயர் இதைக் கேட்டுக்கொண்டு ஹஸ்தினபுரி போகுமுன், தர்மபுத்திரர் என்ன சொல்லி அனுப் பினர்?

விடை.—துர்யோதனாதியருக்கு ஸகாயம் செய்ய வந்திருக் கும் பெரியோர்கள் எல்லோருடைய க்ஷேமத்தைத் தாம்

விசாரித்ததாக அவரவர்களிடம் சொல்லும்படி ஸஞ்சயருக்கு தர்மபுத்திரர் கட்டளையிட்டார். 'இந்திரப்ரஸ்தம் அல்லது வேறு ஏதாவது ஐந்து கிராமங்கள் இவற்றுள் எதையாவது எங்களிடம்கொடு. இல்லாவிட்டால் சண்டைக்குப் புறப்படு' என்று தாம் சொன்னதாக அவர் துர்யோதனனிடம்சொல்லும்படி ஸஞ்சயரிடம் சொல்ல, அவர் தர்மபுத்திரரிடம் விடைபெற்று ஹஸ்தினபுரம் சென்றார்.

வினா 20.—ஹஸ்தினபுரம் சென்று ஸஞ்சயர் என்ன செய்தார்?

விடை.—ஒரு நாள் ஸாயங்காலம் ஸஞ்சயர் ஹஸ்தினபுரம் வந்து, உடனே திருதராஷ்டிரன் இருக்கும் அந்தப்புரம் சென்று, அரசனிடம் தாம் போய்வந்த செய்தியைச் சொன்னார். கடைசியில் 'பாண்டவர்களோடு ஸமாதானமாய் அவர்கள் கேட்டதை நல்லமனதோடு கௌரவர்கள் கொடுக்காது வீண் சண்டைக்குப் போவார்களேயானால், கௌரவர்கள் நிர்மூலமாய் அழிவார்கள் என்பது திண்ணம். அர்ஜுனன் ஒருவனே கௌரவரை ஜயிக்கப் போதும். அவனைவிடச் சிறந்த வீரர்கள் யார் இருக்கிறார்கள். ஆகையால் எப்படியாவது பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்ள வேண்டும்' என்று ஸஞ்சயர் தமது அபிப்பிராயத்தை வேகு உருக்கத்தோடு வெளியிட்டுத் திருதராஷ்டிரன் மனதைக் கலக்கிவிட்டு, மறு நாள் காலை தர்மபுத்திராதிகள் சொன்னவைகள் எல்லாவற்றையும் விடாது இராஜ ஸபையில் சொல்லிவிடுவதாக வாக்குக்கொடுத்து திருதராஷ்டிரனிடம் விடைபெற்று தமது வீடு சேர்ந்தார்.

வினா 21.—அன்றிரவை திருதிராஷ்டிர மஹாராஜா எவ்வாறு கழித்தார் ?

விடை.—திருதிராஷ்டிரன், எவ்வளவுதான் தூங்க முயன்றும், முடியாது அவன் மனம் குழம்பியது. தன் பிள்ளைகள் பாண்டவர்களால் மாண்டுபோகப்போகிறார்களே என்ற ஏக்கத்தால் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. உடனே அவன் விதுரரை அழைப்பித்துத் தன்னிடம் ஸஞ்சயர் வந்து பாண்டவர்கள் சொல்லியனுப்பிய விஷயத்தை மறுநாள் ஸபையில் சொல்லுவதாகச் சொல்லித் தன்னைப் பலவாராக நிந்தித்து பயமுறுத்திப் போய்விட்டதாகவும், அதனால் தனக்கு தூக்கம் வராது மனம் குழம்புகிறதாகவும், ஆதலால் ஏதாவது விஷயத்தைப்பற்றிச் சொல்லி அன்றிரவைக் கழிக்கவேண்டும் என்றான். விதுரர் யுதிஷ்டிரரது மேன்மையையும், ஒற்றுமை யின்மையால் வரும் கேட்டையும், ஒரு முடிவை யடைவதற்கு ஏற்பட்ட நல்லது, மிச்சிரம், கெட்டது ஆகிய மூன்று வழியையும், ஸ்நேகிதர்கள் ஸம்பத் காலத்திலும், ஆபத்காலத்திலும் இவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும், சித்த நிரோத இந்திரிய நிரோதங்களால் வரும் பலன்களையும், எந்தக் கஷ்ட காலத்திலும் பொய் சொல்லக் கூடாது என்பதையும், மேலான குணங்களோடு கூடி இருந்தலே உயர்குடிப்பிறந்ததற்கு அடையாளம், கெட்ட குணங்களோ மனிதனது ஆயுளைக் குறைக்கும் என்பதையும், ஆசிரம தர்மங்களையும்பற்றி வெகு விஸ்தாரமாக எடுத்துரைத்துக் கடைசியில் பாண்டவர்களோடு எப்படியாவது ஸமாதானம் செய்துகொள்ள வேண்டியது என்று வற்புறுத்தினர். திருதிராஷ்டிரன் 'விதியை எவ்வாறு மதியால் வெல்லுவது' என்று சொல்லி சும்மா இருந்

தான். (இப்பாகத்திற்கு **விதுரப்பிரஜாகரம்** என்று பெயர்.)

வினா 22.—இதன் பின்பு யார் திருதிராஷ்டிரனுக்கு எதைச் சொன்னது ? ஏன் விதுரர் இதைப்பற்றிக் கூறவில்லை ?

விடை.—திருதிராஷ்டிரன், விதுரரை ஆத்மஞான விஷயத்தைப்பற்றிச் சொல்லும்படி தூண்ட, தாம் அதைப்பற்றிச் சொல்லத் தகுந்தவரல்லர் என்று சொன்னர். மேலும் திருதிராஷ்டிரன் இதைப்பற்றிக் கேட்கவேண்டும் என்று சொல்ல, விதுரர் தமது தியான விசேஷத்தால் அந்த நடு இரவில் அந்தப்புரத்திற்குப் பிரம்மாவினது மானஸ புத்திரராகிய ஸனத்குமாரரை அழைப்பித்துத் தமது தமயனுக்கு ஆத்மஞானத்தை உபதேசிக்கச் சொன்னர். ஸனத்குமாரர் புண்ணிய பாப ரகஸியம், லோகாந்தரங்களின் ரகஸியம், மௌனநிலையின் ஸ்வரூபம், வேதங்களின் நோக்கம், ஸங்கியாஸதர்ம விசேஷம், ஸங்கியாஸத்திற்கு விரோதமாக இருக்கும் குற்றங்கள், பிரம்மசரியத்தின் ஸ்வரூபம், பிரம்மஸ்வரூப லக்ஷணம் ஆகிய இவைகளை 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' விளக்கி மறைந்தருளினர். இதற்குள் பொழுதுவிடியத் திருதிராஷ்டிரனும் விதுரரும் தமது காலைக்கடனை முடிக்க வெளியிற்சென்றனர்.

வினா 23.—மறுநாட்காலையிற் ஸஞ்சயர் இராஜ ஸபையில் என்ன வெளியிட்டார் ?

விடை.—நான் ஒருவனே கௌரவ ஸேனையை யமலோகத்திற்கு அனுப்பி இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவேன். என்னிடத்தில் அவ்வளவு சிறந்த அஸ்திரங்கள் இருக்கின்றன. மேலும் ஜோதிஷத்தில் சிறந்தவர்கள் எங்களுக்கு ஜயம் வரும் என்றும், கௌரவருக்குத் தோல்வி

வரும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். கிருஷ்ணபகவானும் இதை உண்மை என்று ஒத்துக்கொள்ளுகிறார். ஆகையால் நாங்கள் சண்டைக்குவரத் தயார்தான். எப்படி இருந்தபோதிலும் நாங்கள் இந்த விஷயத்தில் பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய மஹாத்மாக்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படி நடக்கத் தயாராய்க் காத்திருக்கிறோம், என்று அர்ஜுனன் சொல்லிவிட்டதாக ஸஞ்சயர் ஸபையில் சொன்னார்.

வினு 24.—ஸஞ்சயர் இவ்வாறு சொன்னதும் ஸபையில் இதைப்பற்றி என்ன ஆலோசனை நடந்தது ?

விடை.—இதைக்கேட்டதும் பீஷ்மர், அர்ஜுனன், கிருஷ்ண பகவான் ஆகிய இவர்கள் நரநாராயணர்கள் என்றும், இவர்கள் யுகங்கள் தோறும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனார்த்தம் உலகத்தில் அவதரிப்பவர்கள் என்றும், அவர்களோடு ஸமாதானமாக நடக்காவிட்டால், துர்யோதனன் முதலிய கொடியவர்களுக்கும் கேடு இவர்களால் விளையும் என்றும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். துரோணரும் பீஷ்மர் சொல்லியதே நியாயம் என்றார். இதன் பின்பு திருதிராஷ்டிரர் பாண்டவர்கள் எவ்வாறு யுத்தத்திற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்று கேட்க, பாண்டவர்களது கஷ்டம் ஸஞ்சயருக்கு ஞாபகம் வந்தது. உடனே அவர் மூர்ச்சையாய் விழுந்தார். சற்று நாழிகையான பின்பு ஸஞ்சயர் எழுந்து அநேக பலமான ராஜாக்கள் தர்மபுத்திரரது உத்தரவை எதிர் பார்த்திருக்கிறார்கள் என்றும், அவர் யுத்தம் செய்யலாம் என்று சொல்லவேண்டியதுதான், கௌரவ ஸேனையைச் சின்னபின்னப் படுத்துவார்கள் என்றும் எடுத்துரைத்தார். திருதிராஷ்டிரனுக்கு பீமன் முன் சொக்கட்டா

ஞடிய காலத்தில் செய்த சபதம் ஞாபகம்வர, வெகுவாக அவன் துக்கப்படத்தொடங்கினன். இதுதான்ஸமயம் என ஸஞ்சயர் திருதிராஷ்டிர ராஜனே பாண்டவர்களிடம் இதுகாறும் அசட்டையாய் இருந்ததைப்பற்றி மிகவும் நிந்தித்துப்பேசினர்.

வினா 25.—இவ்வாறு ஸமாதான விஷயமாய் எல்லாம் நடந்து வருகையில் யார் இதை எவ்வாறு தடுத்தார்கள்?

விடை.—துர்யோதனனே ஸபையில் வந்து, பீஷ்மர், கர்ணன் முதலிய யுத்தவீரர்கள் தனது பக்கத்திலிருப்பதாகவும், ஆகையால் பாண்டவ பலத்தைக் கண்டு மனமழிய வேண்டியதில்லை என்றும், தன் தகப்பனைத் தேற்றினன். இதன் பின்பு துர்யோதனன் தர்மபுத்திரரது செய்கைகளையும், அர்ஜுனனது குதிரைகளையும் பற்றி ஸஞ்சயரை விசாரித்தான். தர்மபுத்திரருக்கு யுத்தம் வரப்போகிறது என்று தெரிந்தபோதிலும், அவர் வெகு உத்ஸாகத்தோடுதான் இருக்கிறார் என்றும், அர்ஜுனனது குதிரைகளுக்கு ஈடு உலகில் வேறு குதிரைகள் இல்லை என்றும் ஸஞ்சயர் சொன்னர்.

வினா 26.—இதைக் கேட்டதும் திருதிராஷ்டிரன் கதி என்னமாயிற்று? யார் அவனை எவ்வாறு தேற்றியது? மேல் என்ன நடந்தது?

விடை.—திருதிராஷ்டிரனுக்குப் பாண்டவர்களது பலத்தைக் கேள்விப்பட்டதும் பயம் அதிகரிக்க, பித்துப்பிடித்தவன் போலானன். அப்பொழுது துர்யோதனன் மறுபடியும் தனது பக்கத்திலிருந்து போர்செய்ய வந்திருக்கும் அரசர்கள் பலத்தை எடுத்துச்சொல்லி தன் தகப்பன் மனதைத் தேற்றினன். உடனே தகப்பன் பிள்ளையை நோக்கிப்

பாண்டவர்களுக்கு அவர்களது பாகத்தைக்கொடுக்கும் படி தன்னுல் கூடியமட்டும் சொல்லிப்பார்த்தான். அப் பொழுதும் துர்யோதனன், தான் பீஷ்மர் முதலியவர்கள் பலத்தை உத்தேசித்திருக்கவில்லை என்றும், கர்ணனை ஸஹாயமாய் வைத்துக்கொண்டு யுத்தத்தை நடத்துவ தாகப் பெருமை பேசினன். அப்பொழுது திருதிராஷ்டி ரன், கிருஷ்ணார்ஜுனர்கள் இருவரும் என்ன சொன்னர் கள் என்று ஸஞ்சயரைக் கேட்டான். அதற்கு ஸஞ்சயர், அவர்கள் இருந்தவிடம், தான் மஹா பயபக்தியோடு சென்ற பொழுது, அவர்கள் ஸ்நேகிதர்கள் போல வெகு ஸஹஜமாய் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், அப்பொழுது அவர்கள் தன்னை ஒரு தங்க ஆஸனத்தில் உட் காரவைத்து, திருதிராஷ்டிரன் முதலியவர்களை க்ஷேமம் விசாரித்துவிட்டு, அவர்களிடம் அர்ஜுனனை எதிர்க்க வல்லார் ஒருவருமில்லை என்று சொல்லச் சொன்னர்கள் என்றும் பதில் சொன்னர். அர்ஜுனனது பலத்தைக் கேள்விப்பட்டதும் திருதிராஷ்டிரனுக்குப் பழையபடி மனோவியாகூலம் வந்துவிட்டது.

வினு 27.—இதைத் துர்யோதனன் தீர்க்க முயலுங்கால் ஸபையில் என்ன விபரீதம் ஏற்பட்டது?

விடை.—திருதிராஷ்டிரனைத் தேற்றுவதற்காக துர்யோ தனன் தனது பௌருஷத்தை எடுத்துப் பலர் அறியப் பேசினன். அப்பொழுது கர்ணனும் தனது பௌரு ஷத்தைச்சொல்லி தன்னைத்தானே துதித்துக்கொண் டான். இதைக்கேட்டதும் பீஷ்மர், இவர்கள் விராட நகரத்தில் மாடுபிடி சண்டையில் அர்ஜுனன் கையில் அகப்பட்டு பட்டபாடுகளைச் சொல்லி, இவர்களை நிந்தித் துப் பரிஹாஸம் செய்தார். உடனே கர்ணனுக்கு அதிகக்

கோபம் வர, அவன் பீஷ்மர் கீழே விழும் வரை, தான் யுத்தம் செய்வதில்லை என்று சபதம் செய்துகொண்டு அவன் ஸபையைவிட்டு வெகு கோபத்தோடு வெளியே சென்றான்.

வினா 28.—இவ்வாறு கர்ணன் கோபித்துக்கொண்டு சென்றதும், திருதிராஷ்டிரனுக்கு யார் எவ்வாறு புத்திமதி கூறியது?

விடை.—விதுரர் இத்தருணத்தில் முன் வந்து, அரசனுக்குப் புத்திமதி கூறினார். ஒருவனுக்கு ஜயம் முதலியவைகள் வேண்டுமானால், மனோ நிரோதம், சாந்தம், அடக்கம் முதலிய நற்குணங்கள் இருக்கவேண்டும். மேலும் ஒற்றுமை அவசியம் வேண்டும். ஒருவேடன் பட்சிகளைப் பிடிக்க வலையை வீசினான். கொஞ்ச நாழிகையில், அதில் இரண்டு அந்நியோந்நியமான பறவைகள் பிடிபட, அவைகள் ஒற்றுமையாய் வலையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்தன. அப்பொழுது வேடன் அவைகளைப் பின்தொடர்ந்துபோனான். கொஞ்சதூரம் போகையில் பறவைகள் தம்முள் சண்டை வர, அவைகள் வலையோடு கீழே விழுந்து, வேடன்கையில் அகப்பட்டுக் கொண்டன. ஆகையால், துர்யோதனாதியர் சண்டை போட்டுக்கொள்ளுதல் தகாது, கேடே நேரிடும். மேலும், நாங்கள் கந்தமாதன மலைக்குப் போயிருக்கையில், அங்குக் குபேரனுக்கு, பாம்புகளால் காவல் காக்கப்பட்டும், உண்போருக்கு யௌவனம் உண்டாக்கும் திறனுடைய தாயும் வைக்கப்பட்டுள்ள தேன் இருப்பதைக் கண்டோம். அது மலை உச்சியில் இருந்தது. இதன் மேன்மையைக் கேள்விப்பட்டு, இதைக் குடிக்கவேண்டும் என்ற ஆசையோடு, சில வேடர் அங்கே போய்க் கீழே விழுந்து

பாம்புகளால் மாண்டார்கள். அதுபோல துர்யோதனன், ஜயத்தை எண்ணுகிறானே ஒழிய, அர்ஜுனனது பலத்தால் தனக்கு உண்டாகும் அபாயத்தைக் கவனியாதிருக்கிறான். இவனுக்கும் அந்த வேடர்கள் கதிவரும் என்று விதுரர் திருதிராஷ்டிரனுக்கு நல்ல புத்திமதி கூறினர்.

வினு 29.—இவ்வாறு விதுரர் புத்திமதி கூறியதும், திருதிராஷ்டிரன் என்ன செய்தான்? பின் என்ன நடந்தது?

விடை.—இந்தக் கதைகளைக் கேட்டதும், திருதிராஷ்டிரன் துர்யோதனனை பாண்டவர்களோடு ஸமாதானம் செய்து கொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். இதன் பின்பு ஸஞ்சயரைநோக்கி, "கிருஷ்ணபகவான் அர்ஜுனனைப் புகழ்ந்து பேசியதன்பிறகு, உன்னிடம் அர்ஜுனன் என்ன சொல்லி அனுப்பினான்" என்று கேட்க அவர் தம்மிடம் "கௌரவர் பக்கத்தில் ஸகாயம்செய்ய வந்திருக்கும் அரசர்கள் எல்லோருக்கும் முடிவுகாலம் வந்திருக்கிறது. அவர்கள் எல்லோரையும் யுத்தமாகிற அக்கினியில், துர்யோதனனை சேர்த்து ஆகுதி செய்யப்போகிறான்" என்றுசொன்ன வாக்கியத்தை ஒளியாது ஸபையோர் அறியச் சொன்னர். இதைக் கேட்டதும் துர்யோதனன், அசட்டையாய் இருப்பதையும், மற்றையவர் பேசாதிருப்பதையும் கண்டு, ஸபையிலிருந்த அரசர்கள் யாவரும் எழுந்திருக்க, ஸபை கலைந்தது.

வினு 30.—ஸபை கலைந்ததும் திருதிராஷ்டிரன் என்ன செய்தான்? பின் என்ன நடந்தது?

விடை.—ஸபை கலைந்ததும் திருதிராஷ்டிரன் ஸஞ்சயரை நோக்கி தன் ஸைனைக்கும் பாண்டவஸைனைக்கும் உள்ள விசேஷபாகங்களைப்பற்றி வினவினன். அதற்கு ஸஞ்

சயர், திருதிராஷ்டிரனிடம் ரகஸியமாய்த் தாம் ஒன்றும் சொல்வதில்லை ; பலரறியத்தான் எல்லாம் சொல்லுவ தாகச் சொன்னர்.

வினா 31.—அப்பொழுது யார் ஸபைக்கு வந்தது ? அங்கு அப்பொழுது என்ன நடந்தது ?

விடை.—விதுரர், வியாஸரையும் காந்தாரியையும் அங்கு கூட்டிக்கொண்டு வர, வியாஸர் ஸஞ்சயரை நோக்கி, திருதிராஷ்டிரனுக்கு அவசியம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லும்படி கட்டளையிட்டார். உடனே ஸஞ்சயர், கிருஷ்ண பகவானது ஸ்வரூபத்தை திருதிராஷ்டிரன் அறியும்படி சொல்லி, "எங்கே ஸத்யம்முதலிய நற்குணங்கள் இருக்கின்றனவோ, அங்கே கிருஷ்ணபகவான் இருப்பார். அவர்இருக்கும் பக்கத்திற்கே ஜயம் நிச்சயம்" என்று சொல்லி முடித்தார். இதன் பின்பு ஸஞ்சயர் பகவானது குணதிசயங்கள், நாம விசேஷங்களைப்பற்றி விஸ்தரித்தார்.

வினா 32.—இவ்வாறு பகவானது குணதிசயங்களைக் கேட்ட திருதிராஷ்டிரன் என்ன செய்தான் ? கடைசியில் என்ன நடந்தது ?

விடை—திருதிராஷ்டிரன் துர்யோதனனை நோக்கிப் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொண்டு பரம்பொருளாகிய கிருஷ்ணபகவானது கிருபைக்கு ஆளாகும்படி எவ்வளவோ மறுபடியும் சொல்லிப் பார்த்தான். துர்யோதனன், அப்பொழுதும் பிடிவாதமாய ஸமாதானமாக இடங்கொடுப்பதில்லை என்று சொல்லிவிட்டான். அப்பொழுது வெகு கோபத்தோடு காந்தாரி "பீமஸேனனால் நீ அடிபட்டு விழும்போது, எங்கள் புத்திமதியின்

சிறப்பு உனக்குத் தெரியவரும்" என்று சொன்னாள். உடனே அவரவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

வினா 33.—இவ்வாறு ஹஸ்தினபுரியில் காரியங்கள் நடந்து வருகையில், பாண்டவர்கள் உபப்லாவ்யத்தில் என்ன செய்தார்கள் ?

விடை.—தர்மபுத்திரர், கிருஷ்ணபகவானை நோக்கி, "ஸஞ்சயரோ திருதிராஷ்டிரனது எண்ணத்தை தமக்குத் தெரிவித்து விட்டார். நாம் இப்பொழுது சண்டைக்குப் போவதா ? போனால் எல்லோரும் அநியாயமாய் மாண்டு போக வேண்டிவருமே. சண்டையிடாதும் இராஜ்யம் கேட்காதுமிருந்தால், நம்மைக் கௌரவர்கள் பரிஹாஸம் செய்வார்களே. இதற்கு என்ன செய்வது" என்று கேட்டார். அப்பொழுது கிருஷ்ணபகவான் தாமே இந்த ஸமாதான விஷயத்தில் கௌரவர்களிடம் பாண்டவர்களுக்காகத் தூது செல்வதாக ஒப்புக்கொண்டார். அப்பொழுது "எங்களுக்கு நியாயவிரோதமாய் ஐந்து கிராமங்கள் கொடுப்பதாகக் கௌரவர்கள் சொன்னாலும், அதை ஒப்புக்கொண்டு ஸமாதானம் பண்ணிக்கொண்டு வரவேண்டும்" என்று தர்மபுத்திரர் பகவானிடம் சொன்னார்.

வினா 34.—பகவான் தூதுசெல்வதைப்பற்றி மற்றைய பாண்டவர்களுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் என்னென்ன அபிப்பிராயம் ?

விடை.—தர்மபுத்திரர், அர்ஜுனன், நகுலன் ஆகிய இவர்களுக்கு கிருஷ்ணபகவான் துர்யோதனனிடம் போய் எப்படியாவது ஸமாதானம் செய்துகொண்டு வரவேண்டும் என்பதும், போரைத் தடுத்துவரவேண்டும்

என்பதுமே. பீமனுக்கு மனதில் சண்டைசெய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தபோதிலும், வெளிப்படையாய் அவன் ஸமாதானத்தையே விரும்புவதாகச் சொன்னன். ஸஹாதேவன் மாத்திரம் அவசியம் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணிக்கொண்டு பகவான் திரும்பவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டான். ஸாத்யகி (பகவானது தம்பி)யும், திரௌபதியும் ஸஹாதேவன் சொன்னது நியாயம்என்று ஒப்புக்கொண்டார்கள். அர்ஜுனன் கடைசியாகப் பகவானை நோக்கிப் "பாண்டவர்களுக்கும், கௌரவருக்கும் எது ஹிதமோ அதைச் செய்துவரவேண்டும்" என்று சொல்ல அவ்வாறே செய்து வருவதாகப் பகவான் ஒப்புக்கொண்டு புறப்பட்டார்.

வினா 35.—இவ்வாறு கிருஷ்ணபகவான் புறப்பட்டுப் போகையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பகவான் புறப்படும்பொழுது அநேக அபசகுனங்கள் காணப்பட்டன. அனேக ரிஷீச்வரர்கள் பகவான் கண்ணில்பட, அவர் "நீங்கள் யாதுகாரணத்தால் இங்கு வந்தீர்கள்" என, அவர்கள் "பகவானுகிய தாங்கள் இராஜஸபையில் உட்கார்ந்து ஸமாதானத்திற்காகப் பேசும் அழகிய பேச்சுக்களை கேட்கவந்தோம்" என்று மறுமொழி கூறினர்.

வினா 36.—பகவான் தூது வருகிறார் என்று திருதிராஷ்டிரன் முதலியவர்கள் கேட்டதும், இராஜ ஸபையில் அவர்கள் என்ன ஆலோசனை செய்தார்கள்?

விடை.—கிருஷ்ண பகவானுக்குத் தகுந்த மரியாதை செய்து, அவரை வெகுமானப்படுத்தவேண்டும் என்றும் திருதிராஷ்டிரன் சொல்ல, அதை பீஷ்மர் அங்கீகரித்தார்.

விதுரர், உடனேஎழுந்து "பகவான் பாண்டவ ஸகாயர், அவருக்கு மரியாதைசெய்து, அவரை நமக்கு அனுகூல ராக்கவேண்டும் என்ற மோசக்கருத்தோடு ஒரு மரியாதையும் செய்யாது, மனதாரப் பக்தியோடு செய்யவேண்டும்' என்று திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதி கூறினர். இதைக்கேட்ட துர்யோதனன், 'விதுரர் சொல்லியது உண்மை, நமக்கு விரோதியாய் இருக்கும் கிருஷ்ணனை நாம் மரியாதை செய்யலாகாது. சண்டையைத் தொடங்குவதிலேயே நாம் கருத்துடையவராய் இருக்கவேண்டும்' என்றான். உடனே துர்யோதனனை நோக்கிப் பீஷ்மர் 'பகவான் சிறந்தவர். அவர் உனது நன்மையையே எடுத்துக் கூறுவார். ஆகையால் நீ அவர் சொல்லுவதை சிரத்தையோடு கேட்டு, அதின்படி நடக்க முயலவேண்டும்' என்று புத்திமதி கூறினர். துராத்மாவான துர்யோதனனுக்கு நல்ல புத்தி தோன்றுமல், 'கிருஷ்ண பகவானை யான் சிறைபிடிக்கப் போகிறேன். இது ஸித்தித்தால் பாண்டவர்கள் என்னை எதிர்த்து வரமாட்டார்கள். நான் ஸுகமாய் அரசாளலாம்' என்று தனது கெட்ட எண்ணத்தை வெளியிட்டான். இது தர்ம விரோதம் என்று எவ்வளவோ திருதிராஷ்டிரன் சொல்லிப்பார்த்தும் துர்யோதனன் கேட்கவில்லை. இதைக்கண்டு பீஷ்மருக்குக் கோபம் வர 'இந்த மூர்க்கனுடு என்ன பேச்சு?' என்று சொல்லி ஸபையைவிட்டுப் போய்விட்டார்.

வினு 37.—இங்கு இப்படியிருக்க பகவான் வந்து யார் வீட்டில் தங்கினர்?

விடை.—பகவான் ஹஸ்தினபுரிக்கு வரும்பொழுது துர்யோதனனைத் தவிர மற்றைய எல்லோரும் அவரை எதிர்கொண்டு அழைக்கவந்தனர். ஊரிலிருந்தவர்கள் எல்

லோரும், கண்கொட்டாது பகவானது தூத அவஸரத்தை நோக்கி ஆநந்தித்தனர். இப்படி ஸகலரையும் ஸுகப் படுத்திக்கொண்டு, பகவான் இராஜஸபை வர, அங்கு யாவரும் எழுந்து மரியாதை செய்தனர். திருதிராஷ்டிரன் பகவானுக்கு உபசாராதிகள் செய்தான். இதைப் பெற்றுக்கொண்டு பகவான் விதுரர் வீடு சென்றார். தாம் ஹஸ்தினபுரியில் இருந்த வரையில், பகவான் அங்கேயே தங்கியிருந்தார்.

வினா 38.—விதுரர் வீட்டில் இருந்துவிட்டு, பகவான் யாரைப் பார்க்கப் போனார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—அன்று பிற்பகலில் தமது அத்தையாகிய குந்தியைப் பார்க்கப் போனார். கிருஷ்ணனைக் கண்டதும், குந்தி முதலில் தன் பிள்ளைகள் பட்ட கஷ்டங்களை எண்ணிக் கண்ணீர் பெருக்கினாள். பின்பு பிள்ளைகளின் க்ஷேம ஸமாசாரத்தை விசாரித்தாள். கடைசியாய், பீமனும் அர்ஜுனனும் இருக்கையில், போர்க்களத்தி லிருந்து தமது இராஜ்யத்தை மீட்டுக்கொள்ளாது வீட்டுக்குத் திரும்பக்கூடாது என்று பிள்ளைகளிடம் தான் சொன்ன தாகச் சொல்லும்படி பகவானிடம்சொல்லி அனுப்பினாள். பகவான், பாண்டவர்களுக்குத் தான் கடைசியில் ஜயம் வரும் என்று சொல்லிக் குந்தியைத் தேற்ற, குந்திக்கு அஞ்ஞானமும் துக்கமும் நீங்கப் பகவானை மனதாரத் துதித்தாள்.

வினா 39.—ஸாயங்காலம் பகவான் எங்கே போனார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—இதன் பின்பு, பகவான் துர்யோதனன் ஸபைக்குச் சென்றார். அங்கு இவருக்கு மரியாதைகள் ஒருவாறு நடக்க துர்யோதனன், பகவானை சாப்பாட்டிற்கு அழைத்

தான். பகவான் ஒத்துக்கொள்ளவில்லை. இதற்குத் துர்யோதனன் காரணம் கேட்கப், பகவான், 'தூதர்கள் தாங்கள் வந்த காரியத்தைத் தமக்கு அனுகூலமாய் முடித்தால் அல்லது, தாம் வந்திருக்கும் எஜமானன் வீட்டில் சாப்பிடுவதில்லை. ஆகையால் என் மனதை முதலில் திருப்தி செய்துவிட்டுப் பின்பு என் வயிற்றைத் திருப்திசெய்' என்றார். இது துர்யோதனனுக்குத் தகுந்த காரணமாகப் படாதது கண்டு, பகவான் தமது உண்மைக் கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். 'அன்போடு இடாத, அன்னத்தைப் புஜிக்கலாகாது. அதை,ஒருவேளை கஷ்டகாலத்தில் மாத்திரம் புஜிக்கலாம் என்பது சாஸ்திரவிதி. என்னிடம் உனக்கு அன்பும் இல்லை, நானும் இப்பொழுது கஷ்ட ஸ்திதியிலும் இல்லை. பாண்டவர்மேல் உனக்குப் பிறந்த நாள் முதல், ஏன் இவ்வளவு அகாரணமான பொறுமை இருக்கவேண்டும். பாண்டவர்கள் மஹாதர்மாத்மாக்கள். அவர்களைக் குற்றங்கூற ஒருவராலும் முடியாது. இக்குணம் வாய்ந்த பாண்டவர்களை வெறுத்தவர்கள் என்னையும் வெறுத்தவர்கள்தான். தர்மாத்மாக்களைக் கெடுக்க எண்ணுபவன் மஹா பாபி. அவனுக்கு மேலான நிலை நிலைக்காது. நீ கொடுக்கும் வஸ்துக்கள் யாவும் உனது குணங்களால் அசுத்தமாயிருக்கின்றன. இவ்வூரில் எனக்குச் சுத்தபோஜனம் அளிக்க வல்லவன் விதுரன் ஒருவனே' என்று சொல்லிவிட்டுப் பகவான் விதுரர் வீடு சென்றார்.

வினு 40.—விதுரர் வீடு சென்று பகவான் அன்று மிஞ்சிய பகலையும், இரவையும் எவ்வாறு கழித்தார்.

விடை.—விதுரர் வீடு சென்று ஸாயங்காலம் வந்து சேர்ந்தும், பகவானைத் தரிசிக்கப் பீஷ்மர் முதலிய தர்மாத்

மாக்கள் அங்கு வந்து பகவானைத் தமது திவ்ய மாளிகைகளில் வந்து வஸிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். பகவான் அவர்கள்செய்த மரியாதைகளை ஒத்துக்கொண்டு அவர்களைத் தத்தம் இருப்பிடம் போகும்படி அனுப்பி விட்டார். அதன்பின், விதுரர் பக்தியோடு அளித்த போஜனத்தை வயிறார உண்டு, பகவான் ஓரிடத்து வந்து உட்கார்ந்தார். அப்பொழுது விதுரர் 'துர்யோதனன் ஸ்வபாவமாகவே துராத்மா, மேலும் அவனுக்கு பீஷ்மர், துரோணர் முதலியவர்களது ஸகாயமிருக்கையில், தன்னை ஒருவராலும் ஜயிக்க முடியாது என்ற எண்ணமுண்டாயிருக்கிறது. அவனை அநேகம் கொடியவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். இப்படி முரட்டுத்தன முள்ளவனிடம் பேசத் தாங்கள் வருவானேன். ஆனால் தங்களைக் கண்டு நான் கிருதார்த்தனானேன். தாங்கள் வந்தது எனக்கு மாத்திரம்தான் நன்மையாக முடியும்' என்று தன் எண்ணத்தை வெளியிட்டார். அதற்குப் பகவான், 'நீ சொல்லியது உண்மைதான். அப்படி இருந்தபோதிலும், நான் ஸமாதான விஷயத்தில் என்னால் கூடிய வரையிலும் நயமாய்ச் சொல்லிப் பார்க்கிறேன். இது நான் அவசியம் செய்யவேண்டியது தான். இதற்குப் பின்னும், துர்யோதனன் முரட்டுத்தனமாயிருப்பானாயின், அவனை நாசம் செய்யத்தக்க யுத்தத்தைத் தொடங்குவேன்' என்று மறுமொழி கூறினார். இவ்வாறு பேச்சிலேயே அன்றிரவு கழிந்தது ?

வினா 41.—மறுநாட் காலையில் பகவான் என்ன செய்தார் ? அங்கு என்ன நடந்தது ?

விடை.—பகவான் எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, திருதராஷ்டிரனது ஸபைக்குப் போய்ச் சேர்ந்

தார். அங்கு யாவரும் எழுந்து, பகவானுக்கு ஏற்பட்ட ஆஸனத்தில் அவர் உட்கார்ந்ததும், எல்லோரும் உட்கார்ந்தார்கள். பகவானது வாக்சாதுர்யத்தைக் கண்டு ஆனந்திக்க, நாரதரை முன்னிட்டுக்கொண்டு அனேக ரிஷீசுவரர்கள், திருதிராஷ்டிரன் ஸபைக்குவர, அவர்களையும் தகுந்த ஆஸனங்களில் பீஷ்மர் முதலியோர் உட்காருவித்தார்கள். விதுரர், பகவான் பக்கத்தில் உட்கார்ந்தார். ஸபையானது மிக அழகாய் விளங்கியது.

வினா 42.—பகவான் துர்யோதனாதியரை நோக்கி என்ன சொன்னர்?

விடை.—பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஸமாதானம் இருக்கவேண்டும் என்றும், சண்டை நேர்ந்தால் இருதிறத்தாருக்கும் மிகுந்த அபாயம் வரும் என்றும், திருதிராஷ்டிரன் நினைத்தால் சண்டை வராமல் தடுக்கலாம் என்றும், பாண்டவ கௌரவர்கள் ஒற்றுமையாய் இருந்தால் அவர்களை ஒருவராலும் ஜயிக்க முடியாதென்றும், இருதிறத்தாருக்கும் ஸுகமுண்டாகும் என்றும், அத்தருணத்தில் திருதிராஷ்ரனுக்குப் பாண்டவர்கள் தகப்பனை சிறுவயதில் இழந்தவர்கள் என்ற எண்ணம் வந்தால், அன்பு உண்டாகும் அதனால் சண்டை தடைபடும் என்றும், வெகு விஸ்தாரமாக பகவான் ஸமாதான விஷயத்தில் பேசினர். அதன் பின்பு பாண்டவர்கள், 'நாம் உமது கட்டளைப்படி எமது உறவினரோடு கஷ்டங்களை அனுபவித்தாய் விட்டது. ஆகையால் உங்கள் வாக்குப்படி இப்பொழுது நீங்கள் நடந்து எங்களை தர்ம மார்க்கத்தில் நடக்கும்படிச் செய்யவேண்டும். உம்மை நாம் எங்கள் தகப்பனாராகப் பாவிக்கிறோம்' என்று திருதிராஷ்ரனுக்குச் சொல்லிவிட்ட ஸமாசாரத்தைப்

பகவான் ஸபையோர் முன்னிலையில் வெளியிட்டார். தர்மபுத்திரர் மஹாத்மா என்றும், ஆகையால் திருதராஷ்டிரன் தனது பிள்ளைகளை அடக்கி ஆண்டு ஸமாதானத்தையே செய்து கொள்ளவேண்டும் என்றும், தமது அபிப்பிராயத்தைப் பகவான் வெளியிட்டார். இதைக் கேட்டதும் எல்லோரும் இதற்கு விரோதமாய் ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாய் இருந்தனர்.

வினா 43.—இவ்வாறு பகவான் சொல்லி முடித்ததும், யார் ஸபையில் எழுந்திருந்து என்ன சொன்னார்கள்?

விடை.—ஸபையில் மஹரிஷிகளோடு வந்த பரசுராமர் எழுந்து டம்போத்பவராஜன் உலகத்தை ஜயித்து, மேலும் ஜயிக்க ஒருவருமில்லாததைக் கண்டு பிராம்மணர்களிடம் கேட்டு அடிக்கடி கஷ்டப்படுத்தினதையும், அப்பொழுது அவர்கள் நரநாராயண யோகிகள் பதரிகாசிரமத்திலிருக்கிறார்கள், அவர்களைப்போய் ஜயித்துவா என்று அனுப்பியதையும், இந்த அரசன் சென்று யோகிகளது தர்ப்பையில் மந்திரித்து விடப்பட்ட அஸ்திர வேகத்தைத் தாங்கமுடியாது தத்தளித்ததையும் எடுத்துச் சொல்லி, அந்த நரநாராயணரே கிருஷ்ணர்ஜுனர்கள் என்றும் சொன்னர். இந்தக் காரணத்தால் பாண்டவர்களோடு கௌரவர்கள் ஸமாதானம் செய்துகொள்வதே நலம் என்று பரசுராமர் வற்புறுத்தினர்.

வினா 44.—இதன் பின்பு யார் ஸபையில் எழுந்து தமது அபிப்பிராயத்தை எவ்வாறு வெளியிட்டது?

விடை.—கண்வ மஹாரிஷி எவ்வளவு பலவானாயினும், தேகபலம், மனோபலத்தின் முன்பும், நியாயத்தின் முன்பும், நிற்கமாட்டாது. ஆகையால் பாண்டவரோடு ஸமாதானம் செய்தலே நலம் என்று எடுத்துரைத்துக் கருடன்

கர்வ பங்கப்பட்ட கதையைச்சொன்னர். இந்திரனது ஸாரதியான மாதலி தன் பெண்ணுக்குத் தகுந்த நாயகனை, நாரத ஸஹாயத்தால் தேடி வருகையில், நாகலோகத்தில் ஒரு நாகனைக்கண்டு அவனுக்குத் தன் பெண்ணைக் கொடுப்பதாக எண்ணியதையும், அப்பொழுது அந்த நாகன் கூடிய சீக்கிரத்தில் கருடனால் மாளப்போகிறதை அறிந்து, அவனை மாதலி தேவலோகம் அழைத்துப் போய் விஷ்ணுவும் இந்திரனும் இருக்கையில் அவர்களின் அனுமதியின் பேரில் அமிருதம் உண்பித்ததும், இதை அறிந்த கருடன் விஷ்ணுவிடம் சென்று, தன் பலத்தைப்பற்றிப் பெருமை பேசுங்கால், பகவான் தமது கையை அதன்மேல் வைக்க, அதைத் தாங்கமுடியாது கருடன் தத்தளித்து நின்றதையும், விஸ்தாரமாகக் கண்வர் எடுத்துரைத்தார்.

வினு 45.—இதன் பின்பு யார் துர்யோதனனுக்கு இவ்விஷயத்தில் புத்திமதி எவ்வாறு கூறியது?

விடை.—நாரதர், நல்ல விஷயத்திலேயே முரட்டுத்தனம் அதிகமாயிருந்தால் கேடுவிளையும் என்பதைக் காலவரிஷி உபாக்கியானத்தால் வெளியிட்டு, துர்யோதனனை நோக்கி அவன் கெட்ட விஷயத்தில் முரட்டுத்தனமாய் இருந்தால் அதிகக்கேடு உண்டாகும் என்று பயமுறுத்தினர்.

வினு 46.—காலவ ரிஷி யார்? இவர் எந்த நல்லவிஷயத்தில் முரட்டுத்தனமாய் இருந்தார்? என்ன கெடுதி இவருக்கு உண்டாயிற்று?

விடை.—விசுவாமித்திரர் முன்காலத்தில் பிராம்மண்யம் தமக்கு வரவேண்டும் என்று தபஸு செய்தார். இந்த தபஸு பலிக்குங்காலம் வந்தபொழுது இவருக்கு ஒரு கஷ்டம் வந்தது. இந்தக் கஷ்டகாலத்திலே காலவர் என்ற

மஹாரிஷி விசுவாமித்திரர் அருகில் சிஷ்யராய் இருந்து, அவருக்கு வேண்டிய சிசுரூஷை செய்துவந்தார். இவரது பக்திக்கு மெச்சி, விசுவாமித்திரர், 'இனிமேல் உன் இஷ்டமான இடம் வெகு தாராளமாய்ப் போகலாம்' என்று உத்தரவு கொடுத்தார். அப்பொழுது காலவர் ஏதாவது குருதக்ஷிணை கொடுத்துவிட்டு தான் போவதாகச் சொல்ல, விசுவாமித்திரர் வேண்டியதில்லை என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், சிஷ்யன் பின்னும் பிடிவாதமாய் இருக்கக்கண்டு, அவருக்குக் கோபம் வர, 'எனக்கு வெளுப்பாகவும், ஒரு காதுமாத்திரம் கறுப்பாகவும் உள்ள 800 குதிரைகளைக் குருதக்ஷிணையாகக் கொடு,' என்றார். இவைகளைக் கொண்டுவருவதில் காலவர் மிகுந்த கஷ்டப்பட்டுப் போனார்.

வினா 47.—விசுவாமித்திரருக்கு தபஸ்பலிக்குங்காலத்தில் என்ன கஷ்டம் வந்தது?

விடை.—விசுவாமித்திரர் தபஸ்செய்யுங்கால் யமதர்மராஜன் இவரது குணத்தைப் பரீக்ஷித்தறிய எண்ணி, வஸிஷ்டர் உருக்கொண்டு இவரிடம் வந்து போஜனம் பண்ண வேண்டும் என, விசுவாமித்திரர் மனதில் விரோதமின்றி வஸிஷ்டரை இருக்கச் சொல்லிவிட்டு பயபக்தியுடன் போஜனம் தயார் செய்து வஸிஷ்டரைத் தேடிப் பார்த்தார். சோதிக்கவந்த தர்மராஜன் மறையவே, வஸிஷ்டரை எங்கே தேடியும் அகப்படவில்லை. உடனே வஸிஷ்டருக்காகத் தயார்செய்த போஜனத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தூண்போல் அசைவற்றிருந்து வெகு காலம் இவர் வாயுபக்ஷணம் செய்துக்கொண்டிருந்தார். வெகு காலமான பின்பு தர்மராஜன் வஸிஷ்டர் உருவத்

தோடு வந்து அந்த உணவை உண்டு விசுவாமித்திரரை வாழ்த்திச் சென்றான்.

வினா 48.—காலவரிஷி இக்குதிரைகளை ஸம்பாதிக்க முதலில் எப்படிக் கஷ்டப்பட்டார்?

விடை.—காலவரிஷி முதலில் தாமே பரதகண்டம் முழுவதும் திரிந்து பார்த்தார். எங்கும் இம்மாதிரி ஒரு குதிரை கூட அகப்படவில்லை. அதன் பின்பு, இவர் மஹாவிஷ்ணுவைத் துதிக்க, அவர் இவரை நினைத்த இடத்திற்கெல்லாம் எடுத்துச் செல்லும்படி உத்திரவு செய்து, கருடனை அனுப்பினார். கருடனது ஸஹாயத்தால் காலவர் எல்லாதிக்கின் முடிவுவரையில் சென்று தேடிவருகையில் ஸமுத்திரங்களது அக்கரையில் ரிஷப மலையின் சிகரத்தில் வந்து இறங்கினார். அங்கு **சாண்டிலி** என்ற ஸந்நியாஸினியைக் கண்டார். அவளால் கொடுக்கப்பட்ட உணவை உண்டு இருவரும் தூங்கினார்கள். கருடன் தூங்கி விழித்து, பறக்க யத்தனிக்கையில் தனக்குச் சிறகுகளே இல்லாதிருப்பதைக் கண்டு மிகுந்த கஷ்டத்தை அடைந்தான். காலவரிஷி இதன் காரணம் என்னவென்று கேட்க கருடன், 'இந்த ஸந்நியாஸினியைக் கண்டதும் இவளைத் தூக்கிப்போய் மகாவிஷ்ணுவினிடம் விடவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இதனால் தான் எனக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்கும். ஆகையால் நான் இப்பொழுது அந்தச் சிறந்தவளை மனதார மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று பச்சாத்தாபத்துடன் மறுமொழி சொன்னான். இதைக் கேட்டதும் சாண்டிலி கருடனுக்கு இறகு உண்டாகும்படி செய்து, பறந்துபோகும்படி அனுப்பினாள். இவ்வளவு கஷ்டப்பட்டும் காலவருக்குக் குதிரைகள் அகப்படவில்லை,

வேறு இடம் நோக்கிப்போகையில் வழியில் விசுவாமித்திரர் காலவரைக்கண்டு, 'குருதக்ஷிணை கொடுக்கும் காலம் வந்துவிட்டது. ஆனாலும் நான் இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுகிறேன்' என்று காலவருக்கு குருதக்ஷிணையை ஞாபகப்படுத்த, அவர் மிகுந்த கஷ்டத்தை அடைந்தார்.

வினா 49.—காலவரிஷி இதன்பின்பு எப்படி பிரயத்தனப்பட்டார்? இதன் பலன் என்ன?

விடை.—இவ்வளவு தேடியும் காணுததுகண்டு, கருடன் காலவரிஷியை எவ்விதத்திலாவது குதிரைகளை வாங்கப் பணம் முதலில் ஸம்பாதிக்கச் சொன்னன். இதன்படி கருடனும், காலவரும் சந்திர வம்சத்தில் பிறந்த யயாதி ராஜனிடம் செல்ல காலவர், தமது கோரிக்கையைத் தெரிவித்தார். கருடன் காலவருக்கு நல்ல சிபாரிசை செய்தான். அப்போழுது யயாதி நன்றாய் ஆலோசித்துப் பார்த்து காலவருக்கு அனுகூலமாக சீக்கிரத்தில் 800 குதிரை கிடைப்பதற்குத் தனது பெண் மாதவியை அவருக்குக் கொடுத்தான்.

வினா 50.—இதனால் காலவர் எண்ணம் எப்படி நிறைவேற இட முண்டாயிற்று?

விடை.—இந்த மாதவிக்கு நான்கு கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றும், ஒவ்வொரு கல்யாணத்தின் பிறகு மறுபடியும் இவளுக்குக் கன்யாப்பருவம் வந்துவிடும் என்றும், ஒரு ரிஷியின் வரம் இருந்தது. இதை உத்தேசித்து இவளை நான்கு இராஜாக்களுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தால் காலவருக்கு 800 குதிரைகள் கிடைக்கலாம் என்று எண்ணியே யயாதி இவளை காலவருக்குக்

கொடுத்தான். காலவரும் இந்தக் குறிப்பை கன்றாய் அறிந்து கொண்டு, திருப்தியோடு பெண்ணை வாங்கிக் கொண்டார்.

விஞ 51.—இதன் பின்பு காலவர் எவ்வாறு 800 குதிரைகளை மாதவியின் மூலமாய் ஸம்பாதித்தார் ?

விடை.—இத்தருணத்தில் கருடன் காலவரிடம் விடைபெற்றுப்போக முதலில் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து அயோத்தியில் அரசாண்டு வந்து பிள்ளையில்லாது தவித்துக்கொண்டிருந்த **ஹரியசுவராஜனுக்கு** மாதவியைக் கல்யாணம் செய்விக்க, அதற்கு விலையாக 200 குதிரைகள், வேண்டிய மாதிரியில் காலவருக்கு அரசன் கொடுத்தான். இவ்வரசனுக்கு மாதவியினிடம் **வஸுமனஸ்** என்ற பிள்ளை பிறந்தது. உடனே மாதவிக்குக் கன்யாப்பருவம் வந்துவிட்டது. காலவர் தாம் மாதவியை உபயோகப்படுத்தும் எண்ணத்தை இவ்வரசனுக்கு வெளியிட, அரசன் அதை ஒப்புக்கொண்டான். உடனே மாதவியை அழைத்துக் கொண்டும் காசிதேசத்தில் பிள்ளை வேண்டும் என்ற ஆவலோடிருந்த **திவோதாஸ** ராஜனிடம் செல்ல முன்போல மாதவியின் மூலமாய் 200 குதிரைகள் இவருக்குக் கிடைத்தன. இவ்வரசனுக்கு மாதவியிடம் **பிரதர்த்தனன்** என்ற பிள்ளை பிறந்ததும், முன்போல அவளுக்கு கன்யாப்பருவம் வந்தது. முன்போலவே காலவர் மாதவியைப் பெற்று அரசன் அனுமதியின்பேரில் போஜர்களுக்கு அரசரான **உசீனரிடம்** போய் இப்பெண்ணைக் கொடுக்க அங்கு அவருக்கு 200 குதிரைகள் அகப்பட்டன. உசீனருக்கு மாதவியிடம் **சிபி** என்ற மஹாத்மா பிறந்தார். இதன் பின்பு காலவர், கன்னிகையாகி யிருக்கும் மாதவியை அழைத்துக்கொண்டு, இன்னுரிடம்

போவது என்று அறியாமல் தத்தளித்துக்கொண்டிருந் தார்.

வினா 52.—இவ்வாறு இன்னும் 200 குதிரைகள் கிடைக்கா மல் வருந்தும் காலவரை யார் எவ்வாறு காப்பாற்றியது? குருதக்ஷிணையை காலவர் எவ்வாறு கொடுத்தார்?

விடை.—இப்படி காலவர் தத்தளித்துக்கொண்டிருக்கையில் வழியில் இவர் கருடனைச் சந்தித்தார். கருடன் 60 குதிரை கள்தான் அகப்படும் என்றும், இனிமேல் ஒன்றும் அகப் படாதென்றும் சொல்ல, காலவருக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. அப்பொழுது கருடன் 'விசுவாமித்திர ருக்கே இப்பெண்ணைக் கொடுத்து 200 குதிரைக்குப் பதிலாக இவளிடமிருந்து ஒரு பிள்ளையை அடைந்து கொள்ளும்படி செய்து உம்முடைய பிரதிக்ஞையை நிறைவேற்றலாம்' என்று உபாயம் சொல்லிக்கொடுக்க, காலவர் அவ்வாறே செய்தார். விசுவாமித்திரருக்கு, தனது முரட்டுத்தனத்துக்காக சிஷ்யன் பட்டபாடு போதும் என்ற கருணைவர, மாதவியிடம் தனக்கு உண் டான அஷ்டகன் என்ற பிள்ளையை 200 குதிரைக்குப் பதிலாக வைத்துக்கொண்டு மற்ற 600 குதிரைகளைப் பெற்று தனக்கு குருதக்ஷிணை பூர்த்தியாக கொடுத்து ஆய்விட்டதாக ஸந்தோஷத்துடன் சிஷ்யனை ஆசீர்வதித் தார்.

வினா 53.—200 குதிரைகள் கிடைக்காமலே போகக்காரணம் என்ன?

விடை.—முன்காலத்தில், யுசீகர் என்ற மஹாரிஷி விசுவாமித் திரரது பாட்டனரான காசிராஜனது பெண்ணாகிய ஸத்ய வதியை தனக்கு பெண்சாதியாய் வரிக்க, அரசன் கன்யா

சுல்கமாக சந்திரனைப்போல் வெளுத்ததும், ஒரு காது மாத்திரம் கறுத்ததுமாக இருக்கும் 1000 குதிரைகள் வேண்டும் என்றார். உடனே ரிஷி வருணனிடம் இதைச் சொல்ல, அவன் தனது அசுவதீர்த்தத்திலிருந்து குதிரைகளை எழுப்பிக்கொடுத்தான். இதை அரசனிடம் ரிஷி கொண்டுவந்து கொடுத்து ஸத்தியவதியைக் கல்யாணம் செய்துகொண்டார். அந்த 1000 குதிரைகளில் 400 - ஐ ஒரு ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட, உலகில் 600 குதிரைகள்தான் மிஞ்சின. அதைக் காலவர் முதலில் ஸம்பாதித்துவிட்டார். இதனால்தான் கருடன் 200 குதிரைகள் அகப்படமாட்டாது என்றான்.

விஞ 54.—அஷ்டகன் பிறந்தபின்பு மாதவி என்ன செய்தாள்?

விடை.—மாதவி ரிஷி காரியத்தை முடித்துவிட்டு, திரும்பி கன்னிகையாகவே யயாதியிடம் செல்ல, அரசன் இவளுக்கு ஸ்வயம்வரம் ஏற்படுத்தினான். இதைக் கவனியாது மாதவி ஸந்நியாஸினி யாகிக் காட்டில் மான்களைப்போல் ஜீவித்துக்கொண்டு பகவத்தியானம் செய்ய எண்ணி, காட்டிற்குச் சென்றாள். இதுமுதல் தன்காலம் முடியும் வரையில் இப்படியே இருந்து காலக்கிரமத்தில் மாதவி பரமபதம் அடைந்தாள். இவ்வாறு மாதவி துறவியாக, யயாதிக்கு உலக இன்பங்களில் ஒருவாறு வைராக்கிய முண்டானது.

விஞ 55.—இதன் பின்பு எப்பொழுதாவது மாதவி யயாதியை ஸந்தித்தாளா?

விடை.—யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து கர்வ பங்கமாய்க் கீழே விழுங்கால் அஷ்டகர் முதலிய பேரப்பிள்ளைகள் செய்யும்

யாகப் புகையால் ஆகாசத்தில் நிறுத்தப்பட்டதாகவும், அப்பொழுது அவர்கள் தமது பாட்டனார் என்று அறியாமலே தமது புண்ணியங்களின் பாகங்களை அவர்கள் கொடுத்ததாகவும் ஆதிபர்வத்தில் சொல்லியிருக்கிறோம். அப்பொழுதுதான் க்ஷத்திரியன் என்றும் தனக்கு பிறர் கொடுப்பதை வாங்க அதிகாரமில்லை என்றும் யயாதி சொல்லிக்கொண்டிருக்கையில், மாதவி காட்டில் உலாவிக் கொண்டு அவ்விடம் தற்செயலாய் வந்து, தன் தகப்பனது கஷ்டத்தைக்கண்டு அவருக்கு யாகம் செய்பவர்கள் தன்வயிற்றில் பிறந்த பேரப்பிள்ளைகள் என்று எடுத்துரைத்தாள். இவள்செய்த இந்த ஸகாயத்தால் யயாதி இவர்களது புண்ணியத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்வர்க்கத்தை மறுபடியும் அடைந்து ஸுகமாய் வாழ்ந்திருந்தான்.

வினா 56.—இவ்விசித்திரமான காலவரிஷி கதையைச் சொன்ன நாரதர் துர்யோதனனுக்கு என்ன புத்திமதி கூறினார்?

விடை.—நாரதர் துர்யோதனனை நோக்கி, "இம்மாதிரி யயாதி கர்வத்தால் என்ன பாடுபட்டான் பார். காலவர் (நல்ல விஷயத்தில்) பிடிவாதமாய் இருந்ததினாலேயே என்ன பாடுபட்டார் பார். ஆகையால் நீ உன் முரட்டுத்தனத்தை அவசியம் விடவேண்டும். மேலும் நீயோ கெட்டவிஷயத்தில் பிடிவாதம் பிடிக்கிறாய். ஆகையால், அதை நீ உடனே விட்டால்தான் நலம். நீ க்ஷேமம் அடைய வேண்டுமானால் சீக்கிரத்தில், பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்" என்று மிகுந்த ஆதரவுடன் சொன்னார்.

வினு 57.—இதைக்கேட்டதும் திருதிராஷ்டிரன் என்ன செய்தான்? மேல் என்ன நடந்து என்னமாய் முடிந்தது?

விடை.—திருதிராஷ்டிரன் கிருஷ்ணபகவானை நோக்கி, "பகவானே! நான் விதுரர் பீஷ்மர் முதலிய எல்லோரும் துர்யோதனனுக்கு எவ்வளவோ இந்த விஷயத்தில் சொல்லிப் பார்த்தோம்; அவன் கேட்கவில்லை. இனி மேல் கடைசியாய்த் தாங்களே சொல்லிப் பார்க்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்தான். உடனே பகவானும், துர்யோதனனை நோக்கி, எவ்வளவோ நயமாய் ஸமாதானம் செய்துகொள்ளுவது நலம் என்று சொல்லிப் பார்த்தார்; அப்பொழுது பீஷ்மர், துரோணர், விதுரர், திருதிராஷ்டிரர், இவர்கள் மறுபடியும் தம்மாலியன்ற மட்டும் நயமாயும், கோபமாயும், துக்ககரமாயும் சொல்லிப் பார்த்தார்கள். அப்பொழுது துர்யோதனன், "ஊசி குத்தும் இடங்கூட இனி நான் பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன்" என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான். அப்பொழுது பகவான் "யுத்தத்தில் முன்வைத்த கால் பின்வாங்காமல் சண்டைசெய்து மாண்டால் கீர்த்தியும், வீரஸ்வர்க்கமும் வருமென்று எண்ணுகிறாயோ? அவை இம்மாதிரியான அநியாயமாயும், பெரியோர்களது வாக்கிற்கு விரோதமாயும் ஏற்படும் சண்டையால் உனக்கு ஒரு நாளும்கிடையா. உனக்கு அபகீர்த்தியும் நரகமுமே கிடைக்கும்" என்று கோபத்துடன் சொன்னார். அப்பொழுது துச்சாஸனன் மஹாகர்வத்தோடு சிலவார்த்தைகள் சொல்ல, துர்யோதனன் மிகுந்த கோபத்தோடு ஸபையை விட்டு எழுந்து வெளியேபோய்விட்டான்.

வினா 58.—இவ்வாறு துர்யோதனன் மஹா கோபத்துடன் ஸபையைவிட்டு வெளியே சென்றதும், என்ன நடந்தது? எவ்வாறு முடிந்தது?

விடை.—இவ்வாறு துர்யோதனன் வெளியே சென்றதும் திருதிராஷ்டிரன் காந்தாரியை அழைத்துவரும்படி சொல்லி அனுப்பிவிட்டு, விதுரரை அழைத்து, வெளியே சென்ற துர்யோதனனைத் திரும்பவும் ஸபைக்கு அழைத்து வரும்படி ஏவினன். இதற்குள் பகவான், முன்பு விதுரர் சொல்லிவந்தபடி "துர்யோதனனை சிறைச்சாலையில் அடைத்து வைத்துவிட்டு, மற்றையவர்கள் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்ளுங்கள்" என்று திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதி கூறினர். இப்படி யிருக்கையில், காந்தாரியும் துர்யோதனனும் ஸபைக்குவர, காந்தாரி, பிள்ளையைநோக்கி, தன்னால் கூடிய வரையில் ஸமாதானம் செய்துகொள்ளுதலே நலம் என்று சொல்லிப் பார்த்தாள். இதை அலட்சியம் செய்துவிட்டு, துர்யோதனன் ஸபையைவிட்டு மறுபடியும் வெளியே சென்றான்.

வினா 59.—இரண்டாந்தரம் வெளியே சென்ற துர்யோதனனுக்கு என்ன விபரீத புத்தி உண்டாயிற்று? இதனால் என்ன விளைந்தது?

விடை.—வெளியே போன துர்யோதனன், சகுனி முதலிய துஷ்டர்களோடு ஆலோசனை செய்து, பகவானை எப்படியாவது சீக்கிரத்தில் சிறைபிடித்துக் கட்டிவிட்டால் தமது காரியம் ஜயமாகும் என்று தீர்மானித்தான். இந்த ஸமாசாரம் ஸாத்யகிக்குத் தெரிந்தது. உடனே கிருதவர்மாவிடம் சென்று, பகவான் ஸஹாயத்திற்காகப் படைகளை தயார் செய்துவைக்கச் சொல்லிவிட்டு, பகவானுக்கு

இதைத் தெரிவித்தான். உடனே திருதிராஷ்டிரன் துர் யோதனனை ஸபையில் அழைத்துவரும்படி செய்து, அவனைப் பலவாறு நிந்தித்துப் பேசினான். விதுரர் அப் பொழுது பகவானது பல விசேஷங்களை எடுத்துச் சொன்னார். இவ்வளவு சொல்லியும் துர்யோதனன் கேட் காது, பகவானைக் கட்டிப்பிடிக்க யத்தனிக்க எண்ணுகை யில், பகவான் அந்த ஸபையில் யாவரும் பார்க்கும்படி தமது விசுவரூபத்தைக் காட்டினார். உலகங்கள் யாவும் பகவானிடம் சிறு அணுக்களைப்போல் அடங்கி இருப் பதை யாவரும் கண்டார்கள். பீஷ்மர், விதுரர், ஸஞ்சயர் முதலிய மஹாத்மாக்கள் இந்த ஆனந்தஸைவையைக் கண்டு களித்துத் துதித்தார்கள். தேவதுந்துபி ஆர்த்தன. ஆகாயத்திலிருந்து பூமாரி பொழிந்தது. அப்பொழுது பகவானது அனுக்கிரகத்தால் திருதிராஷ்டிரனுக்குக்கூட கண்உண்டாக, அவன் பகவானைத் தரிசித்து கிருதார்த் தனானான். துர்யோதனன் முதலிய துராத்மாக்களுக்கு இந்த உருவத்தைக் கண்டதும் பயமுண்டாக, கண்ணை மூடிக்கொண்டார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் பக வான் தன் விசுவரூபத்தை ஒடுக்கிக்கொண்டு ரிஷி களிடம் விடைபெற்று வெளியே புறப்பட்டார்: ரிஷி களும் விடைபெற்று உடனே மறைந்தருளினர்.

விஞ 60.—பகவான் இதன் பின்பு எங்கே சென்றார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பகவான் குந்தி வீடு சென்று ஸபையில் அன்று நடந் தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொல்ல, குந்தி, யுதிஷ் டிரருக்கு க்ஷத்திரியர்போல் நடக்கவேண்டும் என்றும், விதுரர், தோல்வி யடைந்து துக்கப்படும் தன் பிள்ளையை நோக்கிச்சொன்ன வீரிய வாக்கியங்கள் இன்னவை

என்றும் சொல்லி அனுப்பினள். அர்ஜுனனுக்கு, "திரௌபதி சொல்லுவதுபோல் நட" என்று குந்தி சொல்லி அனுப்பினள்.

வினா 61.—கிருஷ்ணன் உபப்லாவ்யம் நோக்கிப் போகையில் என்ன செய்தார்?

விடை.—கர்ணனைத் தனது தேரில் ஏற்றிக்கொண்டு, வெகு தூரம் பகவான்போய், அங்கு அவன் இவ்வாறு குந்தியின் கன்னியாப்பருவத்தில் அவளுக்கு ஸூர்யானுக்கிரகத்தால் பிறந்தான் என்றும், ஆகையால் அவன் தர்மபுத்திரருக்கும் தமயனாக வேண்டுமென்றும், அவன் பாண்டவர்கள் பக்கத்திற்கு அப்பொழுதுவந்தால் அவனுக்கு இராஜ்யம் கிடைக்கும் என்றும், உண்மையை உள்ளபடி எடுத்துச் சொன்னார்.

வினா 62.—இதற்குக் கர்ணன் என்ன பதில் சொன்னான்?

விடை.—'நான் குந்திக்குப் பிறந்தவனாய் இருந்தும், என்னைக் குந்தி கவனிக்கவே இல்லை. நான் ஒரு ஸூதன் வீட்டில் வளர்ந்து துர்யோதனனால் மேன்மை அடைந்தேன். நல்ல காலங்களில் அவனிடம் இருந்துவிட்டு, இந்த அபாயகாலத்தில் நான் பிரிந்து வருவது நியாயமன்று. மேலும், எனக்கு இராஜ்யம் வரும் என்ற எண்ணத்துடன் நான் வருவது இன்னும் கேவலமான விஷயம். இப்பொழுது நான் பாண்டவர்கள் பக்கம் போனால் அர்ஜுனனோடு சண்டை செய்யப் பயந்து போனதாகப் பலரும் பழிப்பார்கள். நான் பாண்டவர்களை நிந்தித்தது யாவும் துர்யோதனனைத் திருப்தி செய்வதற்காகவே. அந்தப் பாபச் செயலை நான் நினைத்தால் எனக்கு மிகுந்த துக்கமுண்டாகிறது. நான் அவசியம் அர்ஜுனனால் இறக்கப்

போகிறேன். கௌரவர்களும் அவர்களுக்கு ஸகாயமாக வந்திருக்கும் அரசர்களும் இந்தச் சண்டையில் மாண்டு போவார்கள். இவ்வாறு நடக்கவேண்டி இருப்பதால் எனது உறவைப் பாண்டவர்களுக்கு வெளியிடாது, அவர்களை யுத்தத்திற்கு அழைத்து வாருங்கள்' என்று கர்ணன் மறு மொழி சொன்னான்.

வினா 63.—பகவான் இதற்கு என்ன பதில் சொன்னார்? கடைசியில் இவர்கள் எவ்வாறு பிரிந்தனர்?

விடை.—'நான் சொல்லியபடி ஒன்றும் நடக்காததால், இந்த யுத்தத்தில் எல்லோரும் மாண்டு போவார்கள். இவர்கள் மாண்டதும், கலியுகம் ஆரம்பித்து விடும். சீக்கிரம் பீஷ்மாதிகளிடம் போய், இந்த மாஸம் எங்கும் செழிப்பாய் இருக்கிறது, ஆகையால் இன்னும் ஏழுநாளைக்குள் வரும் அமாவாஸை யன்றையதினம், யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்று சொல்லிவிடு' என்று பகவான் சொன்னார். இதைக் கேட்டதும் கர்ணன், 'இதை அறிந்திருந்தும் நீர் ஏன் என்னைப் பாண்டவர்கள் பக்கம் வாவென்று ஆசைகாட்டினீர். மேலும் நான் தர்மபுத்திரருக்கு ஜயம் வரப்போகிறது என்று குறிப்பிச்சும் ஒரு ஸ்வப்பனம் கண்டேன். ஆகையால் நான் உயிரோடிருந்தால், உம்மை யுத்தம் முடிந்ததும் பார்த்துக்கொள்ளுகிறேன், இல்லாவிடில் நான் உம்மை ஸ்வர்க்கத்தில் பார்க்கிறேன்' என்று மறு மொழி கூற, இருவரும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு பிரிந்தார்கள். பகவான் பாண்டவர்களிருக்கு மிடம் சென்றார்.

வினா 64.—குந்தி கிருஷ்ணனோடு சொல்லிவிட்டதையும், பகவான் கர்ணனோடு சொன்னதையும், யார் திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்தது?

விடை.—குந்தி சொன்ன விஷயங்களை பீஷ்மரும் துரோணரும், திருதராஷ்டிரனுக்கும் துர்யோதனனுக்கும் தெரிவித்து, பறுபடியும் ஸமாதானம் செய்யவேண்டியது அவசியம் என்று வற்புறுத்தினர்கள். ஸஞ்சயர் கர்ணனுக்கும் பகவானுக்கும் நடந்த ஸம்பாஷணையை ஆதியோடந்தமாகச் சொன்னர்.

வினா 65.—பகவான் பாண்டவரிடம் சென்றதும், கர்ணனுக்கு வேறு யார் புத்திமதி கூறியது? அதற்குக் கர்ணன் என்ன பதில் சொன்னன்?

விடை.—விதுரரால் ஏவப்பட்டுக் குந்தி, கர்ணனுக்குப் புத்தி கூறச் சென்றாள். கர்ணனை நோக்கி 'நீயும் அர்ஜுனனும் சேர வேண்டியது அவசியம். நீ இப்படிச் செய்தால் உன்னைப் பாண்டவர்கள் மரியாதை செய்வார்கள்' என்று சொன்னாள். இவ்வாறு குந்தி சொன்னதும், ஸூர்யனும் குந்தி சொல்லியபடி அவசியம் செய்யவேண்டும் என்று வற்புறுத்தினன். கர்ணன், குந்தியை நோக்கித், 'துர்யோதனதியரை இந்தக் கஷ்டகாலத்தில் நான் விட்டுப் பிரியமாட்டேன். நீ என்னிடம் வந்ததற்காக நான் ஒரு உபகாரம் உனக்குச் செய்கிறேன். அர்ஜுனனைத் தவிர நான் மற்றைய தம்பிகளைக் கொல்லமாட்டேன். என் கையில் அவர்கள் அகப்பட்டபோதிலும், அவர்களை உயிரோடு விட்டு விடுகிறேன்' என்று சொல்லத் தாயும் பிள்ளையும் பிரிந்து போனர்கள்.

வினா 66.—பகவான் உபப்லாவ்யம் சென்றதும் அங்கு என்ன நடந்தது?

விடை.—பீஷ்ம துரோணாதிகளும், தாமும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் துர்யோதனன் கேட்காததையும், அங்கு இன்னும் நடந்த விசேஷங்களையும் பகவான்

யுதிஷ்டிரரிடம் ஆதியோடந்தமாக எடுத்துச் சொல்லி, இனிமேல் தாமதியாமல் யுத்தத்திற்குத் தயாராக வேண்டும் என்று உத்தரவு கொடுத்துவிட்டார்.

வினு 67.—இப்படிப் பகவான் யுத்தத்திற்கு ஸந்நாகமாகும் படி உத்திரவு கொடுத்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—யுதிஷ்டிரர் தமது 7 அக்ஷோகினி ஸைனிகளையும், வியூகங்களாகப் பிரிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, ஸைந்திபதிப் பட்டம் யாருக்குக் கொடுப்பதென்று, தம்பிமார், பகவான், முதலானவர்களோடு ஆலோசித்தார். அப்பொழுது ஸஹாதேவன் விராட்ராஜனையும், நகுலன் துருபத ராஜனையும், அர்ஜுனன் திருஷ்டத்யும்னனையும், பீமன் சிகண்டியையும் ஸைந்திபதியாக விருக்கத் தகுந்தவர்கள் என்று சொன்னார்கள். கடைசியில் யுதிஷ்டிரர் பகவானைக் கேட்க, அவர் திருஷடத்யும்னனே தகுந்தவன் என்று சொல்ல, அவனுக்கே இந்தப் பட்டங் கொடுத்தார்கள். இதற்குள் பாண்டவஸைன, அணிவகுக்கப்பட்டுத் தயாராய் நிற்க, பாண்டவர்கள் தமது படைகளை அழைத்துக்கொண்டு குருக்ஷேத்திர பூமி வந்து அங்குத் தண்டிறங்கினார்கள்.

வினு 68.—பகவான் யுத்தம் தொடங்கவேண்டும் என்ற தீர்மானத்துடன் உபப்லாவ்யம் சென்றதும், யுத்த விஷயமாய் ஹஸ்தினபுரியில் என்ன யத்தனங்கள் நடந்தன? தர்மபுத்திரர் இதற்கேற்ற ஏற்பாடு என்ன செய்தார்?

விடை.—துர் மந்திரிகளாகிய கர்ண துச்சாஸன சகுனிகளால் தூண்டப்பட்டத் துர்யோதனன் யுத்ததிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினன். பீஷ்மருக்கே

அவன் தன் பக்கத்தில் யௌவராஜ்யபட்டம் கொடுக்க அவரும் அதை ஒப்புக்கொண்டு விளங்கினர். இதன் பின்பு துர்யோதனனது 11 அக்ஷௌஹிணி ஸைன்யங்களும் யுத்தத்திற்குத் தயாராயின. தர்மபுத்திரரும் இதை அறிந்து, தமது 7 அக்ஷௌஹிணி ஸைன்யத்திற்கும் 7 ஸைன்யத் தலைவர்களை ஏற்படுத்தி, அர்ஜுனனை இவ்வேழுபேருக்கும்மேல் அதிபதியாக்கினர். அதன்பின்பு பகவானுக்குப் பொதுவான ஆதிபத்தியம் கொடுத்தார்.

வினா 69.—இவ்வாறு பாண்டவர்கள் யத்தனம் செய்துகொண்டிருக்கையில் அவர்களைப்பார்க்க யார்வந்து என்ன சொன்னார்? பின் அவர் என்ன செய்தார்?

விடை.—குருக்ஷேத்திரத்தில் பலராமர் பாண்டவர்களிடம் வந்தார். அப்பொழுது யாவரும் எழுந்து பலராமருக்கு வந்தனம் செய்தார்கள். அப்பொழுது பலராமர், தான் ஒருவர் பக்கத்திலும் சேருவதில்லை என்றும், இந்த யுத்தத்தில் எல்லா க்ஷத்திரியர்களும் இறக்கப்போகிறார்கள் என்றும், கடைசியில் ஜயம் பாண்டவர்களுக்கு வருமென்றும் எடுத்துரைத்த பின்பு தீர்த்த யாத்திரைக்காகச் சென்றார்.

வினா 70.—வேறு யார் பலராமரைப்போல நடந்து கொண்டது? ஏன்?

விடை.—விதுரரும் ஒரு பக்கத்திலும் சேராது, இத்தருணத்தில் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். பகவான் தூது வந்து சென்றதும், ஒருநாள் இரவில், விதுரர் திருதிராஷ்டிரனோடு வெகு நாழிகை துர்யோதனன் முரட்டுத்தனத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அவனை மாத்திரம் சிறையிலடைத்துப் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொண்டால்தான் கௌரவர்கள் பிழைப்-

பார்கள், இல்லாவிடில் எல்லோரும் யுத்தத்தில் மாண்டு போக வேண்டியதுதான் என்று சொல்லிமுடித்தார். இவைகள் எல்லாவற்றையும் ஒளிந்து கேட்டுக்கொண்டிருந்த துர்யோதனன் கோபாவேசத்தோடு வெளியில் வந்து, விதுரரை வாயில் ஈரம்பில்லாது திட்டி தன் ஊரைவிட்டே போய்விடும்படி கட்டளையிட்டான். இந்தத் தருணம் வரவேண்டும், துராத்மாவான துர்யோதனனிடமிருந்து பிரியவேண்டும் என்று காத்திருந்த விதுரர் தமது அம்பறாத் தூணியையும், வில்லையும் அங்கேயே வைத்துவிட்டு பாண்டவர்கள் பக்கம் தனக்குச் சோறிட்டவனுக்கு விரோதமாய் அந்த ஆபத்காலத்தில் போக மனம்வராதவராய், பலராமர்போலத் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார்.

வினு 71.—பலராமர் இவ்வாறு தீர்த்தயாத்திரை சென்றதும், குருக்ஷேத்திரத்தில் என்ன நடந்தது ?

விடை.—கிருஷ்ண பகவானது மைத்துனனான **ருக்மி** என்பவன், பாண்டவர்களுக்கு ஸகாயம் செய்யவந்து தன் பலத்தைப்பற்றி பெருமை பாராட்டினான். அப்பொழுது அர்ஜுனனுக்குக் கோபம்வர, அவன் ஸகாயம் தன் பக்கத்தில் வேண்டுவது அவ்வளவு அவசியமில்லை என்றான். உடனே ருக்மி கோபத்தோடு துர்யோதனன் பக்கம்சேரலாம் என்று போய் அங்கும் முன்போல பெருமை பேசினான். இதைக்கேட்டதும், துர்யோதனனுக்குப் கோபம் வர தனக்கும் அவன் ஸகாயம் வேண்டுவதில்லை என்று தள்ளிவிட, ஒரு பக்கத்திலும் சேராது ருக்மி தன்னூருக்குப் போனான்.

வினு 72.—இதன் பின்பு துர்யோதனன் என்ன செய்தான் ?

விடை.—துர்யோதனன் உலூகன் என்ற ஒருவனை அழைத்து தர்மபுத்திரர், பகவான், திருஷ்டத்யும்னன், சிகண்டி முதலிய பிரதான மனுஷ்யர்களுக்கு மனதில் தைக்கும் படியான சில தகாதவாக்கியங்களைத் தூதாகச் சொல்லி அனுப்ப, இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுக்காகச் சொல்லி அனுப்பிய வாக்கியங்களுக்குத் தகுந்தபடி வீரத்தனமான மறுமொழிகளைச் சொல்ல அவைகள் எல்லாவற்றையும் உலூகன் துர்யோதனனிடம் வந்துசொன்னன். உடனே துர்யோதனன் படையை அணி வகுத்து நிற்கும்படி ஏற்பாடுசெய்ய, யுதிஷ்டிரரும் தமது ஸேனையை அணி வகுத்து, அப்பாகங்களை நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தினர். அப்பொழுது திருஷ்டத்யும்னன் கௌரவர்களில் சிறந்தவர்களோடு இன்ன இன்னர் யுத்தம் செய்வது என்று ஏற்படுத்திச் சண்டைக்கு எதிர் பார்த்திருந்தான்.

வினா 73.—இப்படிப் பாண்டவர்கள் யுத்த ஸந்நாகமாய் இருக்கையில் துர்யோதனாதிகள் பக்கத்தில் என்ன நடந்தது?

விடை.—பீஷ்மர் தனது பக்கத்திலும் பாண்டவர்கள் பக்கத்திலும் உள்ள ரதர், அதிரதர் முதலிய வீரச்சிரேஷ்டர்களைச் சொல்லிக்கொண்டு வருகையில், கர்ணனை அர்த்தரதன் என்று சொன்னர். அப்பொழுது கர்ணனுக்கு அதிக கோபம்வர, பீஷ்மர் உயிரோடிருக்கும் வரையில், தான் சண்டை செய்வதில்லை என்று மறுபடியும் சபதம் செய்தான். அப்பொழுது பீஷ்மருக்கு வந்த கோபத்தை துர்யோதனன் அடங்கும்படி செய்தான். பின்பு துருபத ராஜன் பிள்ளை சிகண்டியைப்பற்றிச் சொல்லுங்கால் பீஷ்மர் அவன் தம்மை அடிக்க எண்ணி எதிரே வந்த

போதிலும், அவனைத்தாம் கொல்லப்போகிறதில்லை என்றார்.

வினு 74.—சிகண்டி விஷயத்தில் பீஷ்மர் இப்படி இருக்கக் காரணம்என்ன ?

விடை.—இந்த சிகண்டி துருபதராஜனுக்குக் குழந்தையாகப் பிறந்ததும், இவன் முதலில் பெண்ணாக இருந்து பின்பு ஆண்பிள்ளையாக மாறியவன். ஆகையால் இவனோடு சண்டைசெய்ய பீஷ்மருக்கு மனம் வரவில்லை.

வினு 75.—சிகண்டி முதலில் பெண்ணாய் இருந்து எதற்காக ஆணாக மாறினான் ? எவ்வாறு ?

விடை.—துருபதராஜனுக்குப் பெண்பிறந்ததும், அதைப் பிள்ளை என்று அவர் எல்லோருக்கும் சொல்லிவிட்டார். இது உண்மை எனப் பலரும் நம்பிவிட, இச்சிகண்டிக்கு கல்யாணமாயிற்று. இவன் பெண்சாதிக்கு, உடனே, தனது நாயகன் ஒரு பெண் என்று தெரிந்துவிட, தனது தகப்பனிடம் சொல்லியனுப்பினாள். உடனே இவள் தகப்பன் துருபதனைத் தண்டிக்கப் படை எடுத்து வந்தான். அப்பொழுது தன்னால் தன் தகப்பனுக்கு கேடுவந்தது என்று மனம் நொந்து சிகண்டி தற்கொலை செய்துகொள்ளக் காட்டிற்குச் செல்ல, அங்கு குபேரனது வேலைக்காரனாகிய **ஸ்தூணாகர்ணன்** என்ற யக்ஷனைக் கண்டான். அவன், இவனுக்குத் தன் ஆண்தன்மையை கொடுத்துவிட, சிகண்டி கூடிய சீக்கிரத்தில் தன் பெண் தன்மையை வாங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டுத் தன் ஊர் போய்ச் சேர்ந்தான்.

வினு 76.—துருபதன் கதி என்னமாயிற்று ? சிகண்டி என்றன் வாழ்நாள் முழுதும் ஆணாகவே இருந்து விட்டான் ?

விடை.—சிகண்டியின் மாமனார், ஊருக்கு வெளியில் வந்து தண்டிறங்கி, சிகண்டியின் தன்மையை அறிந்துவர ஆள்களை அனுப்பினன். அவர்கள் சிகண்டி, ஆண்பிள்ளை தான் என்று வந்து கூற தனது ஸேனையை அழைத்துக் கொண்டு தண்டிக்கவந்த அரசன் தன் ஊரை நோக்கிச் சென்றான். இதற்குள் குபேரன் தன் வேலைக் காரனது செய்கையை அறிந்து, சிகண்டி சாகிறவரையில் அவன் ஆணாகவும் தன் வேலைக்காரன் பெண்ணாகவும் இருக்கும் படி சபித்தான். இதனால் சிகண்டிக்கு ஆண்தன்மை உயிருள்ளவரையில் நிலைத்தது.

வினா 77.—இம்மாதிரி சிகண்டி பீஷ்மருக்கு விரோதியாய் வருவானேன்?

விடை.—சிகண்டி பூர்வஜன்மத்தில் காசிராஜன் புதல்வியாகிய அம்பாவாக இருந்தான். அம்பா பட்டபாட்டை ஆதிபர்வத்தில் ஒருவாறு சொல்லி இருக்கிறது. கடைசியாய் பீஷ்மரைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று இவளுக்கு ஆசை வந்தது. இதன்படி பீஷ்மர் நடக்கமுடியாது என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்ல, முதலில் அம்பாவுக்கு பீஷ்மரிடம் விரோதம் பிறந்தது.

வினா 78.—இந்த விரோதம் பிறந்ததும் அம்பா என்ன செய்தாள்?

விடை.—அம்பா பீஷ்மர்மேல் கோபத்துடன் ஸந்நியாஸினியாய் மிகுதியான காலத்தைத்தள்ளித் தான் மறுஜன்மத்திலாவது பீஷ்மரைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் காடுகளில் திரிந்துவருகையில் பரசுராமரிடம் வந்து தனது கஷ்டகாலத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

வினா 79.—பரசுராமர் அம்பாவுக்காக என்ன செய்தார்? அது எப்படி முடிந்தது?

விடை.—பரசுராமர் அம்பாவை அழைத்துக்கொண்டு பீஷ்மரிடம் சென்று, அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். பீஷ்மர் எவ்வளவோ விநயமாய் தமது பிரம்மசரிய விரதத்திற்குக் கேடுவரும், ஆகையால் தம்மால் யாரையும் கல்யாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லியும் பரசுராமருக்குக் கோபம்வர, பீஷ்மரைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்து அவரைப் பரசுராமர் சண்டைக்கழைத்தார். குருவானபோதிலும் சண்டைக்கு அவரே முன்பு அழைத்தவுடன் க்ஷத்திரிய தர்மப்படி பீஷ்மர் யுத்தத்திற்குத் தயாரானார். இருவரும் குருக்ஷேத்திரத்திற்கு வந்து சண்டைக்காக எதிர்த்தார்கள். அப்பொழுது கங்கை வந்து தனது பிள்ளையைச் சண்டைக்குப் போகக் கூடாது என்று தன்னாலானமட்டும் தடுத்துப் பார்த்தாள். பீஷ்மர் தன் தாயின் வாக்கியத்தைக் கவனியாது க்ஷத்திரிய தர்மப்படி யுத்தத்திற்கு ஆரம்பித்துவிட்டார்.

வினா 80.—சண்டையில் நடந்த விசேஷங்கள் என்ன? அது என்னமாக முடிந்தது?

விடை.—முதலில் பீஷ்மர் தமது பாணங்களால் பரசுராமரை பிரஜ்ஞை தவறும்படி செய்தார். உடனே தமது குருவை இவ்வாறு செய்ததால் பீஷ்மருக்கு மனவருத்தம் வந்துவிட்டது. கொஞ்ச நாழிகையில் பரசுராமர் எழுந்து பீஷ்மரை மூர்ச்சை அடையும்படி செய்ய, அவரது ஸாரதி தேரை ஓதுக்கிக்கொண்டு போனான். உடனே பீஷ்மர் எழுந்து சண்டைக்குத் தயாரானார். பரசுராமர் பீஷ்மரது ஸாரதியைக் கொன்றுவிட, அஷ்டவஸுக்கள் பீஷ்

மர் முன் தோன்றி அவரைத்தைரியப் படுத்தினர்கள். கங்காதேவிவந்து தன் பிள்ளைக்கு ஸாரத்யம் செய்யத் தொடங்கினள். பீஷ்மர் கங்கையைப் போகச்சொல்லி விட்டுப் பரசுராமரோடு சண்டைக்குத் தொடங்கினர். அப்பொழுது பரசுராமர் கண்ணில் துற்சகுணங்கள் பட்டன. அஷ்டவஸுக்கள் பீஷ்மருக்கு பிரஸ்வபாஸ்திரத்தை ஞாபகப்படுத்த, அவர் இதை பரசுராமர்மேல் பிரயோகிக்கத் தொடங்கினர். அப்பொழுது நாரதர் வந்து இதை விடக்கூடாது என்று தடுக்க பீஷ்மர் நிறுத்தி விட்டார். உடனே பரசுராமரது பிதிர்க்கள் பீஷ்மரிடத்தில் போய் சண்டையை நிறுத்தச்சொல்ல, அவர் நிறுத்த முடியாது என்று சொல்லிவிட்டார். மறுபடியும் இவர்கள் பரசுராமரிடம் வந்து சண்டையை எப்படியாவது நிறுத்த வேண்டுமென, அவர் தாம் அபஜயம் அடைந்ததாகச் சொல்லி இனிமேல் க்ஷத்திரியனை சிஷ்யனாகக் கொள்ளுவதில்லை என்று சபதம் செய்துவிட்டு தமது இருப்பிடம் சென்றார்.

வினா 81.—இதன் பின்பு அம்பாவின் கதி என்னமாயிற்று?

விடை.—அம்பா கதியற்றவளாய்ப் போக, அவளுக்குப் பீஷ்மரிடம் இருந்த வெறுப்பு அதிகமாய் விட்டது. உடனே மஹாதேவரைக் குறித்துத் தபஸு செய்ய அவர் பிரத்யக்ஷமாக, அவரை நோக்கி 'நான் எப்படி பீஷ்மரைக் கொல்லதக்க நிலையை அடைய வேண்டும்' என்று கேட்க அவர், 'அடுத்த ஜன்மத்தில் நீ, புருஷனாகி பீஷ்மரைக் கொலலப் போகிறாய்' என்று சொல்லி மறைந்தார். உடனே அம்பா அக்கினிப் பிரவேசம் செய்ய துருபதராஜனுக்குப் பெண்ணாக வந்து பிறந்தாள்.

வினா 82.—இவ்வாறு பீஷ்மர் சிகண்டியைத் தான் கொல்லாதிருப்பதற்குக் காரணம் சொல்லத் துர்யோதனன் ஸபையில் என்ன நடந்தது?

விடை.—துர்யோதனன் தனது பக்கத்திலிருக்கும் ஸேனைத் தலைவர்களது வீரியத்தை அதிகப்படுத்த, 'உங்களைத் தனியே சண்டைக்கு விட்டால் எவ்வளவு காலத்தில் பாண்டவ ஸேனைகளை அழிப்பீர்கள்' என்று கேட்டான். அப்பொழுது பீஷ்மர் தமக்கு ஒருமாதம் வேண்டும் என்றும், கிருபர் தமக்கு இரண்டு மாதம் வேண்டுமென்றும், அசுவத்தாமா தனக்குப் பத்து நாள் வேண்டும் என்றும், கர்ணன் ஐந்து நாள் வேண்டும் என்றும் சொல்லப் பீஷ்மர் கர்ணனது தற்புகழ்ச்சியை நிந்தித்துப் பேசினர்.

வினா 83.—பாண்டவ ஸேனையிலும் இம்மாதிரியான விஷயம் நடந்ததா? பின்பு என்ன நடந்தது?

விடை.—யுதிஷ்டிரர் தமது ஸேனைத்தலைவர்களை இம்மாதிரி கேட்க அர்ஜுனன் தனக்கு ஒருக்ஷணம் போதுமென்று சொன்னான். இவ்வாறு காரியங்கள் நடந்ததும் இருதிறத்தாரது படைகளும் யுத்த பூமியை நோக்கிப்போய் அணிவகுத்து நின்றன.

அனுபந்தம்

தமிழ்ப் பாரதத்தில் காணப்படும் புதிய கதைகள்

பாரதத்தின் வரலாறு:—(பீடிகை விஞ 5.)

ஸர்ப்பயாகச் சருக்கம் :—ஸர்ப்பயாகம் அஸ்தீகரால் நின்றதும், வியாஸர் ஜனமேஜய ஸபையை நோக்கி வந்தார். அவரைக் கண்டு அரசன் 'நீர் ஞானியாய் இருந்தும் என்மூதாதைகளுக்குள் சண்டைவர வொட்டாது தடுத்து அவர்களுள் ஸமாதானம் செய்துவிடுவதை விட்டு அவர்கள் சண்டையிட்டு மாளும்படி ஏன் பார்த்திருந்தீர்?' என்று கேட்டான். அதற்கு அவர், 'நமக்கு என்ன தெரிந்தபோதிலும் என்ன? அவசியம் நடக்கவேண்டியதை யாரால்தடுக்கமுடியும்' என்று சொல்ல, 'நீர் நினைத்தால் முடியாதா? அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிருக்கும்படி செய்துவிட்டீரே!' என்று அரசன் மறுபடியும் வியாஸரைக் குற்றங்கூறினான். வியாஸர் தமது வார்த்தையின் உண்மையை அரசனுக்குக் காட்ட, தமது ஞானதிருஷ்டியால் பார்த்து 'ராஜனே! உனக்கு இன்றைக்குச் சரியாய்ப் பத்தாம்நாள் ஒரு பிரம்மஹத்தி தோஷம் ஸம்பவிக்கப்போகிறது. எங்கே! உன் பிரயத்தனங்களால் அதைத் தடுத்துவிடு பார்ப்போம். நான் பத்தாம்நாள் உன்னிடம் வருகிறேன்' என்று சொல்லி தமது இருப்பிடம் சென்றார். உடனே அரசன் அநேகபிராம்மணர்களை அழைத்து, வரப்போகிற பிரம்மஹத்தியைத் தடுப்பதற்கு உபாயத்தை ஆலோசித்தான். பிராம்மணர்கள் எல்லோரும் 'இன்று முதல் யாராவது ஒரு பிராம்மணனை நியமித்து அகோராத்திரம் தண்ணீர்கூடக் குடியாமல் அக்னியில் வேதமந்திரங்களால் ஹோமம் செய்தால், பிரம்ம ஹத்தியைத் தடுத்துவிடலாம்'

என்று அரசனுக்கு உபாயம் கூறினர். இதை சரிவர நடத்த வல்லவர் யாராவது வந்து நடத்திவித்தால், அவர்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பதாக அரசன் சொல்ல ஒருவரும் தைரியமாய் முன் வரவில்லை. அப்பொழுது தரித்திரத்தால் பீடிக்கப்பட்ட ஒரு கிழட்டு பிராம்மணர் அந்த வேலையை ஒப்புக்கொண்டு ஊண் உறக்கமின்றி ஒன்பதுநாள் ஹோமத்தை ஸரிவர நடத்திவிட்டார். ஒன்பதாம் நாள் பின் இரவில் நாலாம ஜாமத்தில் அந்தப் பிராம்மணன் கொஞ்சம் கண்ணயர்ந்தார். அருகில் மந்திரம் சொல்லிக்கொண்டிருந்த அரசன், உவரை எழுப்பத் தர்ப்பை நுனியால் அவரைத் தொட்டான். உடனே அலறிக்கொண்டு அவர் நெருப்பில் விழுந்து இறந்தார். உடனே பத்தாம் நாள் காலையில், வியாஸர் சொல்லிப்போன பிரம்மஹத்தியும் அரசனை வந்து பிடித்துக் கொண்டது. அந்த ஸமயத்தில் வியாஸர் தமதுசிஷ்யர்களோடு அங்குவந்து 'வருவன தாமேவரும். நாம் தடுத்தால் நிற்கா. நமது புத்தியைக் கொண்டு அவைகளைத் தடுக்க முயன்றால், அம்முயற்சியே வருவன வற்றிற்கு ஸஹாயமாக ஏற்படும். இப்பொழுதாவது நான் முன் சொல்லிய வாக்கின்பொருள் நன்றாய் விளங்கியதா?' என்று கேட்டார். அப்பொழுது அரசன் தான் செய்த அபராதத்திற்குத் தகுந்த தண்டனை ஸம்பவித்ததாகச்சொல்லி மஹாவிநயத்துடன் அதை நீக்க உபாயம் சொல்லவேண்டும் என்று வியாஸரைக் கேட்டான். அதற்கு அவர் 'என் சிஷ்யர் வைசம்பாயனரைக் கொண்டு உனக்கு பாரதத்தைச் சொல்லுவிக்கிறேன். அதனாலே உனக்கு பிரம்மஹத்தி போவதும் அன்றி உன் மூதாதைகள் விஷயமாக என்னிடம் வந்த அவநம்பிக்கையும் உனக்குத் தீரும். இந்தக் கரியவஸ்திரத்தை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொள். நீ பாரதம் கேட்கக்கேட்க, அந்த கரியவஸ்திரம் வெள்ளையாய்க்கொண்டே வரும். இதுதான் உன் பிரம்மஹத்தி

போவதற்கு அடையாளம்' என்று கூறி வைசம்பாயனரை நோக்கி ஜனமேஜயனுக்குப் பாரதம் சொல்லும்படி கட்டளை யிட்டுத் தமது ஆசிரமம் சென்றார். இதுதான் வைசம்பாயனர் ஜனமேஜயருக்குப் பாரதம் சொல்லிய காரணம்.

1-வது ஆதிபர்வம்

1. அரக்குமாளிகைக் கதை:— (விஞ 122—126.) துர்யோதனன் **கனகன்** என்ற சிற்பியினிடம் அரக்குமாளிகை கட்டும்படி சொல்லி அது எரியும்படி தீவைக்க புரோசனனுக்கு ஏற்பாடு செய்தான். அப்பொழுது வாரணவதத்தில் கனகன் அரக்குமாளிகைகட்டி வருகையில் புரோசன் தப்பிப்பிழைத் தோட அவன் வேண்டுகோளின்படி ஒரு ஐந்துகால் மண்டபம் இயற்றி ஐந்தாம் காலின் அருகிலிருந்து இடும்பவனம் வரை ஒரு சுரங்கம்செய்து அந்தத் துவாரத்தை ஒரு கல்லால் மூடி விட்டுத் துர்யோதனனிடம் வந்து, தான் அரக்குமாளிகை கட்டிவிட்டதாகத் தெரிவித்தான். இதன் பின்பு கனகன் வீட்டிற்குப் போகையில் விதுரர் அவனைஸ்துதித்து அவனிட மிருந்து நடந்த ஸங்கதியை அறிந்துகொண்டு மிகுந்த துக் கத்தை உடையப் பாண்டவர்களுக்கு ஸஹாயம் செய்ய எண்ணி ஐங்கால்மண்டப ரகஸ்யத்தை விதுரருக்கு மாத்திரம் அவன் தெரிவித்தான். உடனே விதுரர் வேண்டுகோளின் படி, அந்த ஸங்கதியை பீமஸேனனிடம் அவன் தெரிவித் தான். கனகன் சொல்லிய தினத்தில் அந்த நாழிகையில் பீமன் எழுந்து அரக்குமாளிகை வர்த்தியைப் பற்றவைத்துத் தன் ஸஹோதரர்களையும் குந்திதேவியையும் தூக்கிக்கொண்டு சுரங்கக்கல்லை காலால் உதைத்துத் தள்ளி சுரங்கத்தின் வழி யாக இடும்பவனம் வந்து சேர்ந்தான்.

2. மத்ஸ்ய யந்திரம் :— (வினு 150.) 70 அடி உயர முள்ள இரண்டு கம்பத்தை 70 அடி இடை வெளியில் நாட்டி, அதற்குமேல் வட்டம் பூட்டி அதற்குமேல் 70 அடிக்கம்பங்கள் இரண்டு நாட்டி அதன்மேல் ஓயாதுசுழன்றுவரும் சக்கிரத்தை வைத்து அதன்மத்தியில் மேலே மத்ஸ்யக்குறியை வேலைக் காரர்கள் வைத்தார்கள். அதன் பிறகு வட்டங்களில் மும் மூன்று துளையுண்டாக்கி அதன்கீழே வெள்ளிக்கொப்பரையில் மஞ்சள் நீர் நிறைத்து மனிதர் உள்ளே நோக்குங்கால் மூன்று துளைகள் அவர்கள் தலைகளில் மறையும்படி அதை வைத்தனர். அப்பொழுது ஒரு கனத்த வில்லையும் அம்பறுத்தூணியும் தயார் செய்வித்து அம்பறுத்தூணியைத் தோளில் ஏந்தி, வில்லை நாண்பூட்டி மஞ்சள் நீரில் தோன்றும் மூன்று துளைகள் வழியாக மூன்று அம்பு எய்து, மேல் சுழலும் சக்கிரத்தின் உள்ளாலே மத்ஸ்யக் குறியை அடித்து அது சக்கிரத்திற்குச் சரியாய்வந்ததும் சக்கிரத்தை அறுத்து அவை இரண்டும் கீழே விழாவண்ணம் பாணங்களை விட்டு அவைகளைத் தனது கையில் ஏந்தும் வீரனுக்கே திரௌபதியைக் கொடுப்பது என்று துருபதராஜன் புரோஹிதர்கள் யோசனை கூறியவாறு ஏற்பாடு செய்திருந்தான்.

3. நளாயினி கதை:—(வினு 157.) நளமகாராஜனுக்கு நளாயினி என்றொரு பெண் இருந்தாள். அவளைக் கல்யாணம் கொள்ள வேண்டும் என்று மௌத்கல்யர் என்ற கிழட்டுமுனி அரசனிடம் வந்து யாசித்தார். அதற்கு அவன் "என் பெண் ஸம்மதத்தைக் காட்டும்படி அவளது முத்திரை மோதிரத்தை நீர் வாங்கிவரு வீராயின் நான் கல்யாணம் செய்து கொடுக்கி றேன்" என்று வாக்குக்கொடுத்தான். நளாயினியிடம் புறப்பட் டுப் போகையில் மன்மதனது ஸுந்தரரூபத்தை எடுத்துக் கொண்டுபோய் அவளிடம் தமது எண்ணத்தை வெளியிட, அவள் மிகுந்தவெட்கத்தோடு தனது முத்திரை மோதிரத்தை

அந்த ஸுந்தர புருஷனிடம் கொடுத்துவிட்டாள். உடனே அவர் அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் தமது கிழ ரூபத்தைத் தாங்கி அரசனிடம் வந்து மோதிரத்தைக்கொடுக்க, அவன் பெண்ணை அழைத்து அவரைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி சொன்னன். தன்னிடமிருந்த மோதிரம் வாங்கி யவர் கிழவர் அல்ல என்று தோன்றியபோதிலும், அவரிடம் மோதிரம் இருப்பதால் அவரையே கல்யாணம் செய்துகொண்டு காட்டில் தனக்கு வந்த கஷ்டங்களைக் கவனியாது அவரையே பின்தொடர்ந்து சென்றாள். வெகுகாலம் அவர் தபஸிலேயே இருந்தார். அப்பொழுது கொஞ்சமேனும் மனவருத்தமின்றி, நளாயினி அவருக்கு நல்ல மனத்துடன் தொண்டுகள் செய்து வந்தாள். இப்படி இருக்கையில் அவளது கற்பை முற்றிலும் பரிசோதிக்க ரிஷி பெருவியாதியை வரவழைத்துக் கொள்ள, அவர் அங்கங்கள் எல்லாம் அழுகிச் சொட்டின. அப்பொழு தும் நளாயினி கொஞ்சமேனும் அருவருப்பின்றி முனிவருக்கு முன்போலத் தொண்டுசெய்து வந்தனள். அப்பொழுது முனிவர் 'உன்னைக் கல்யாணம் செய்த துர்ப்பாக்கியத்தால் எனக்கு இந்தக் கர்மவியாதி வந்துவிட்டது. உன்னால் என் தீர்த்தயாத்திரை முதலியவைகள் எல்லாம் தடைப்பட்டு விட்டனவே' என்று கஷ்டப்படுவர்போல் நடித்து நளாயினி யைப் புண்படுத்தினர். கணவனது நன்மையைக்கருதி இருந்த நளாயினி, உடனே அவரைக் கூடையில் வைத்துத் தன் தலைமேல் ஏற்றிக்கொண்டு அநேகம் தீர்த்தங்களுக்குக் கொண்டு போய் நன்றாக ஸ்நானம் செய்வித்தாள். இப்படி இருக்கையில் ஓர் பட்டணத்துள் இவர்கள் போனார்கள். அங்கு முனிவர் நளாயினியின் கற்பை இன்னும் பரிசோதிக்க எண்ணி 'பெண் ணே! நான் இந்த ஊர் வேசை ஒருத்தியிடம் ஆசை கொண் டிருக்கிறேன். நீ எப்படியாவது என்னையும் அவளையும் சேர்த்து விக்க வேண்டும்' என்றார். உடனே நளாயினி, சற்று நாழிகை

ஆலோசித்துவிட்டு அன்றுமுதல் அவர் குறிப்பிட்ட வேசை வீட்டு வாயிலை அதிகாலையில் எழுந்து விளக்கிக் கோலமிட்டு வரத் தெடங்கினுள். ஒருநாள் வேசை அவளைக் கண்டு 'யாது காரணத்தால் இவ்வாறு செய்கிறுய்' என்று கேட்க, அவள் குஷ்டரோகியாகிய என் நாயகன் உன்மேல் ஆசைகொண் டிருக்கிறூர். நீ அவரைத் திருப்தி செய்யவேண்டும்' என, மிகுந்த தயையோடு அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண் டாள். அன்று முதல் நளாயினி ஒவ்வொரு இரவும் தனது நாயகனை வேசைவீட்டிற்குக் கொண்டுபோய் வைப்பதும், வாயிலில் காத்திருந்து நாயகனை மறுபடியும் கூடையில் தாம் இறங்கியிருக்குமிடம் கொண்டுவருவதுமாக இருந்தாள். முனி யோ, வேசைவீடுபோய் நளாயினி தன்னை விட்டகன்றதும் மன்மதரூபம் தரித்து வேசையோடு இருப்பது வழக்கம். தாம் ஒரு காரணத்திற்காக நளாயினிக்குக் கோரரூபத்தைக் காட்டுவதாகவும் ஆதலால் தமது உண்மைரூபத்தை அவளுக்கு வெளியிடக் கூடாதென்றும் வேசைக்கு அம்முனி கட்டளை யிட்டிருந்தார். நளாயினி இந்த விஷயத்தை அறியாது, ஒரு நாள் இருண்ட இரவில் தன் கணவனைத் தலைமேல் வைத்துக் கொண்டுபோகையில் வழியில் இராஜாவின் உத்தரவால் கழு வேற்றப்பட்ட மாண்டவ்ய ரிஷியின் காலில் கூடைதட்ட, அவருக்கு வேதனை அதிகரித்தது. உடனே அவர் 'ஸூர்யோ தயமானதும் நீ மாங்கல்யம் இழப்பாய்' என்று அவளைச் சபிக்க, 'அவள் ஸூர்யஉதயம் ஆகாதிருக்கட்டும்' என்று மறு மொழி கூறினுள். எட்டுநாள் ஸூர்யஉதயமாகாமல்போக, உலகமுழுவதும் தபிக்கத் தொடங்கியது. தேவதைகள் மாண் டவ்யரிடம் வர, அவர் நளாயினி நினைத்தால் தான் அதை மாற்ற முடியும் என, அவர்கள் நளாயினியைப் பிரார்த்திக்க அவள் என் கணவனைக் கேளுங்களென, மௌத்கல்யரும் நளா யினி நினைத்தால்தான் முடியும் என்று சொல்ல, எல்லாரும்

எவ்வளவோ நியாயம் சொல்லி நளாயினியிடம் மன்றாடினர். முடிவில் அவள் தேவதைகளை நோக்கி 'மாண்டவ்ய ரிஷி சாபத்தை மாற்றினால், நான் என் வார்த்தையை மாற்றுகிறேன்' என்றாள். அப்பொழுது தேவதைகளின் கட்டாயத்தின் பேரில் மாண்டவ்யர் 'தீர்க்க ஸுமங்கலீபவா' என்று நளாயினியை ஆசீர்வதிக்க, அவள் ஸூர்யன் உதயமாகட்டும் என்று சொல்லி உலகத்தை ரக்ஷித்தாள். இவைகளைக் கண்ட மௌத்கல்யர் தமது பரீக்ஷையை நிறுத்தி கோடிமன்மதரூபத்துடன் அவளிடம் ஸுகங்களை அனுபவித்து அவளைத் திருப்தி செய்வித்தார். அப்பொழுது ரிஷியின் உத்தரவின்பேரில் நளாயினி 'நீங்கள் என்னை மறுஜன்மத்திலும் கல்யாணம் செய்துகொண்டு என்னைப் படுத்திய கஷ்டங்கள் முற்றிலும் தீர எனக்கு ஸுகம் தந்தருளவேண்டும்' என்று வரம் கேட்டாள். அடுத்த ஜன்மத்தில் இவள் இந்திரஸேனையாகப் பிறந்தாள். அப்பொழுது நடந்த கதையை **ஆதிபர்வத்தில்** சொல்லியிருக்கிறது.

குறிப்பு:—மணிபுரம் என்பதற்கு மதுரை என்ற பெயர் தமிழ் பாரதங்களில் காணப்படுகிறது.

2-வது ஸபாபர்வம்

1. கம்ஸன் கதை:—ஜராஸந்தன் பட்டணம் போகுங்கால், அவன் மாப்பிளையாகிய கம்ஸனது அரசாட்சி, முடிவு முதலியவைகளைச் சொல்லும் கதை காணப்படுகிறது. **(பாகவத வினு விடையில் 10-வது ஸ்கந்தம் பார்க்க.)**

2. ஜராஸந்தன் கதை:—ஜராஸந்தனோடு பீமன் யுத்தம்செய்து அவனை அநேகம்தரம் காலைப்பிடித்துக் கிழித்தெறிந்தும் அவன் தேகம் மறுபடியும் சேர்ந்துகொண்டது. அவன் பிறந்தகாலத்தில் ஜரை என்ற கிராமதேவதையால் அவன் தேகத்தின் இருபாதியும் சேர்க்கப்பட்டதால் இவ்வாறு

கிழித்தெறிந்தும் அவன் தேகம் முன்போலச் சேர்ந்துகொண் டது. இதை அறிந்த பகவான் தம் கையில் ஒரு துரும்பை எடுத்து பீமன்முன் சென்று அதை இரண்டாகக் கிழித்து ஒன்றைத் தலைமாற்றி எறிந்தார். இதை பீமன் அறிந்து கொண்டு ஜராஸந்தனைக் கிழித்து அவன் தேகத்தின் ஒரு பாதியைத் தலைமாற்றி எறிந்தான். உடனே அவன் தேகம் சேராமல் போக அவன் இறந்தான்.

3. தசாவதாரக் கதை:—இராஜஸூயயாகத்தில் தர்ம புத்திரர் பீஷ்மரைநோக்கி, யார் முதல் அர்க்கியத்தை வாங்கிக் கொள்ளத் தகுந்தவர்கள் என்று கேட்க, அவர் கிருஷ்ணபர மாத்மே என்று சொல்லி அவரது அவதாரங்களின் கதைகளை எடுத்துரைத்தார். (பாகவத விஞவிடையைப் பார்க்க.)

3-வது ஆரண்ய பர்வம்

1. அர்ஜுனனுக்குப் பரமசிவன் பிரத்யக்ஷமாதல்:—(விஞ 20.) அர்ஜுனனுக்கும் பரமசிவத்திற்கும் வெகுகாலம் மல்லயுத்தம் நடக்க அதன் முடிவில் பரமசிவன் அர்ஜுனனைத் தமது காலால் எற்றிவிட அவன் ஸூர்யமண்டலம் வரையில் போய் மிகுந்த வேகமாகக் கீழே விழுந்தான். பார்வதியின் வேண்டுகோளின்படி வேடனுகிய பரமசிவன் அர்ஜுனன் அடி படாது கீழே விழும்படி செய்தனர். அர்ஜுனன் மறுபடியும் வேடனோடு யுத்தம் செய்யச் சித்தமாக, திடீரென்று வேடன் வேடச்சி முதலியவர்கள் மறைந்தனர். அர்ஜுனன் திகைத்து நிற்கையில், ஆகாயத்தில் ஸகல தேவதைகளோடும் பரமசிவம் விருஷபாரூடராக அர்ஜுனனுக்குத் தரிசனம் கொடுத்தார்.

குறிப்பு:—பாண்டவர்கள் தீர்த்தயாத்திரைச் சமயத்தில் ஹரிச்சந்திரன் கதை இல்லை. துர்வாஸர் பாண்டவர்களைப் பார்க்க வந்தகதை ஸாவித்ரி உபாக்யானத்தின் பின் வைக்கப் பட்டிருக்கிறது.

2. நெல்லிப்பழம் பொருந்திய கதை:—துர்வாஸமுனி வேனதிருப்தி செய்துவிட்டு பகவான் துவாரகை போன பின்பு ஒருநாள் ஸாயங்காலம் அர்ஜுனனும் திரௌபதியும் உல்லாஸமாய் விளையாடிக்கொண்டு ஒரு ரிஷி தபஸு செய்துகொண்டிருந்த நெல்லிமரத்தடியில் வந்தார்கள். அங்கு வந்ததும், மரத்தின்மேல் இருந்த அழகிய நெல்லிக்கனியைத் திரௌபதி கண்டு அதைத் தனக்குப் பறித்துத் தரவேண்டுமென்று கேட்க அர்ஜுனன் அவ்வாறே செய்தான். அதைக்கண்ட அருகிலிருந்த முனிகள் அர்ஜுனனை நோக்கி "இம்மரத்தடியில் தவம் செய்யும்முனிவர் ஆகாரத்திற்காக இந்த நெல்லிமரம் சிவஸங்கல்பத்தால் உண்டாயிருக்கிறது. இதில் பன்னிரண்டு வருஷத்திற்குஒருதரம்தான் பழம்பழுத்து இந்த முனிவர் கையில் விழும்; அவர் அதை அருகிலிருப்பவர்களுக்குக் கொடுத்துத் தாமும்புசித்து தவம்செய்யத் தொடங்குவார். பழம் நாளைக்கு விழவேண்டியது. நீ இன்று இவ்வாறு செய்துவிட்டபடியால் உனக்கு ரிஷிசாபம் வரும்" என்று தெரிவித்தனர். இதை அர்ஜுனன் தர்மபுத்திரரிடம் சொல்லப் பாண்டவர்கள் எல்லோருக்கும் மிகுந்த துக்கம்வந்தது. அவர்கள் கிருஷ்ணபகவானைத் தியானித்தனர். உடனே அவர் வந்து அவர்களை நெல்லிமரத்தடிக்கு அழைத்துப்போய், "உண்மையால் ஆகாதகாரியம் ஒன்றும் இல்லை. உங்கள் மனத்திற்குள் அந்தரங்கமாக இருக்கும் ரகஸிய எண்ணத்தை வெளியிடுவீராயின், இந்தப்பழம் மரத்தை நோக்கி மெதுவாக ஏறி முன்போல ஒட்டிக்கொள்ளும்" என்றார். அப்பொது தர்மபுத்திரர், "தர்மமும், பொறுமையும், கிருஷ்ணபகவானுமே, என் மனத்துள் ஸதா ஊறிக்கொண்டிருப்பன. பாபம் முதலியவைகள் என் மனத்துள் நுழைய நான் இடங் கொடுப்பதில்லை" என பழம் இரண்டுமுழம் ஏறியது. பீமன் "பிறன்பெண்சாதியை ஸஹோதரி என்று பாவிக்கவேண்டும்; பிறன்பொருளை வெறுக்க வேண்

டும்; பரநிந்தை கூடாது; பிறர்துக்கத்தைத் தன் துக்கமாகப் பாவிக்கவேண்டும் என்பதுமே நான் எண்ணும் எண்ணங்கள்" என, பழம் பின்னும் இரண்டு முழம் ஏறியது. அர்ஜுனன் "உயிரைவிட மானம் மேல், ஆதலால் மானத்தைக் காபாற்ற வேண்டும்; மானமே உயர்ந்த குலத்திற்கு ஸமானம்" என்று தன்கருத்தை வெளியிட்டான். உடனே பழம் இரண்டுமுழம் உயர்ந்தது. அப்பொழுது நகுலன் முன்வந்து "ஞானமும்கல் வியும் இல்லாதவர்கள் பதருக்கு ஸமானம்" என்று சொல்லக் கனி இரண்டு முழம் உயர்ந்தது. அப்பொழுது ஸஹாதேவன், "ஸத்யமே என்தாய், ஞானமே தந்தை, தர்மமே துணைவன், கருணையே ஸ்நேஹிதன், சாந்தமே பெண்சாதி, பொறுமையே எனக்குப்பிள்ளை" என்றதும் கனி இரண்டு முழம் ஏறியது. பின்பு திரௌபதி வந்து மிகுந்த வெட்கத்துடன் "எனக்கு ஐந்து கணவர் இருந்தும் என்மனம் என்னை ஓர் ஓர் ஸமயங் களில் மோசம் செய்து வேறுபுருஷனை நாடிப்போகும். ஆகையால் இதை நோக்கில் ஒரு புருஷர் யாராவது இருக்கிற வரையில் பதிவ்ருதாஸ்திரீகளே உலகில்இல்லை என்று எனக் குத் தோற்றுகிறது" என்று சொல்லவும் பழம்மரத்தில் முன்னிருந்த விடத்தில் ஒட்டிக்கொண்டது. எல்லோரும் வியப்படைந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

3. யக்ஷப்பிரச்னம்:—(வினு 129-131) பாண்டவர் களுக்கு வனவாஸகாலம் முடிந்துவிடுவதற்குள் அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்றகெட்ட எண்ணத்துடன் துர் யோதனன் 12-ம்வருஷம் முடிவில் சகுனியினது துர் ஆலோ சனையின்பேரில் சிவபக்திவாய்ந்த **காளமாமுனியை** அழைத்து ஒரு ஆபிசாரக்கிரியை செய்து அதன் மூலமாகப் பாண்டவர் களைக் கொன்றுவிடும்படி அவரை நயந்து கேட்டுக்கொண் டான். முதலில் அவர் பாண்டவர்களைக் கொல்ல முடியா தென்று எவ்வளவோமன்றாடியும் முடிவில் காளமாமுனியை

அதற்கு இசையும்படி செய்ய அவர் தமது ஆச்சிரமம் சென்று வேண்டியதைச் செய்வதாகச் சொல்லிப் போயினர். தமது இருப்பிடம் சென்றதும் முனிவர் ஒரு கொடிய ஹோமம் செய்து ஒரு பூதத்தை உண்டாக்கி பாண்டவர்களைக் கொன்று வரும்படி அதை ஏவினர். அது போகும்பொழுது, "நான் போகுங்கால் பாண்டவர்கள் உயிரோடிருந்தால் ஸரி, இல்லாவிடில் உம்மை வந்து கொல்லுவேன்" என்று சொல்லிப் போயிற்று. இதற்குள் துர்யோதனன் மோசக் கருத்தை அறிந்த யமதர்மராஜன் ஒரு பிரம்மசாரி உருக்கொண்டு பாண்டவர்களிடம் வந்து "நான் வெகுகாலம் கஷ்டப்பட்டு குருவுபதேசம் பெறுவதற்காக ஸம்பாதித்த அருமையான கிருஷ்ணஜினம் ஒன்றை ஒருமான் எடுத்துப்போய்விட்டது. அதை எனக்கு ஸம்பாதித்துக் கொடுக்கவேண்டும்" என்று விண்ணப்பம்செய்ய, பாண்டவர் ஐவரும்மானைத் துரத்திக்கொண்டு புறப்பட்டனர். முடிவில் பீமன் முதலியநால்வரும் விஷக்குளத்தின் கரையில் மாண்டுவிழ தர்மபுத்திரர் தம்பிமாரைக் காணுது தேடிவரும் வழியில் சோர்ந்து இறந்தவர்போலப் பிரக்ஞையின்றி ஒரு செடி மறைவில் சாய்ந்தனர். அந்த ஸமயத்தில் காளமாமுனிவனுல் ஏவப்பட்ட பூதம் வந்து பாண்டவர் இருக்கும் நிலையைக் கண்டு அதிக கோபத்தோடு சென்று முனிவனைக் கொன்றுதின்றுவிட்டு அக்னியில் மறைந்ததும், உடனே யமதர்மன் அருளால் தாமபுத்திரருக்கு ஞாபகம் வர, அவர் எழுந்து விஷக்குளக்கரையில் வர பீமன் மணலில் "நாங்கள் இக்குளத்துத் தண்ணீரால் இறந்தோம். நீங்கள் இதைக் குடியாதேயுங்கள்" என்று எழுதியிருந்ததைக்கண்டு, மிகுந்த துக்கத்தோடு அந்தத் தண்ணீரைக் குடிக்க குளத்துள் அவர் இறங்கினர். பின்பு வினுக்களுக்கு விடைகள் கூறப்பட்டன.

4-வது விராடபர்வம்

1. கீசகன் வரலாறு:—(வினை 16) கேகயராஜன் கல்யாணம் செய்துகொண்ட ஒருஸ்திரீயிடம் ஸுதேஷ்ணை தேவி உண்டானாள். அதன் பின்பு தனக்குப் பிள்ளையில்லாதது கண்டு அரசன் வேறு பெண்சாதியைக் கல்யாணம் செய்து கொள்ள, அவளிடம் கீசகனும் 105 பேர் உபகீசகர்களும் பிறந்தார்கள். கீசகனுக்குச் சிங்கபலன் என்றொரு பெயரும் உண்டு. விராடராஜனுக்கு முதல் பெண்சாதி சுவேதன் முதலிய நான்கு பிள்ளைகளைப் பெற்றுவைத்து விட்டுஇறக்க, அவன் இந்த ஸுதேஷ்ணைதேவியைக் கல்யாணம் செய்து கொண்டான். அவளிடம் உத்தரன், உத்தரை ஆகிய குழந்தைகள் உண்டாயின. விராடராஜன் தம்பிமார் ஒருவரும்தகுந்த பலவான்களாக இல்லாமையால் அவன் கீசகனை அழைத்து தன்ஸைந்திபதி யாக்கிக்கொள்ள, அவனே கூடியசீக்கிரத்தில் தன் திக்குஜயங்களால் விராடராஜ்யத்தை ஆண்டுவந்தான். கீசகர்கள் பூர்வஜன்மத்தில் காலகேயர் என்ற அஸுரர்கள். பாணனே கீசகனாகப் பிறந்தான்.

2. பதிவிருதைக்கு வரும்துக்கம் எளிதில் நீங்கும்:—(வினை 23)உபகீசகர்களைக் கொன்று சிதற அடித்துவிட்டு பீமன் திரௌபதிக்கு மயானத்தில் இந்த விஷயத்தைப்பற்றி ஒரு கதை சொன்னான். பார்வதியிடம் வேலை செய்துகொண்டிருந்த ஜயை என்பவள் உலகத்தில் நடக்கும் இல்லறதர்மம் எவ்வாறிருக்கும் என்று பரமேசுவரனைக்கேட்க, அவள், "நீயே பூமியிற் பிறந்து அதை நன்றாய் அறிந்துவா" என்று அநுக்கிரஹித்தாள். அவ்வாறே இவள் பூமியில்பிறந்து கன்னிகைப் பருவம் அடைந்தாள். அப்பொழுது தமக்குத்தர்மபத்னி ஒருத்திவேண்டும் என்று உலகெல்லாம் தேடிவந்த தேவராதர் என்ற ரிஷி இவளைக்கண்டு, இவளது கற்பைப்பரிசோதிக்க

